

இல்லந்தோறும் இன்பம் பொங்கட்டும்

குமுதம் புத்தகம்



ஜோதிட சக்ரவர்த்தி
ஏ.எம். ராஜகோபாலன்



கடல் கடந்து காட்சி அளிக்கும் கருணைக் கடல் ஸ்ரீ வல்லப கணபதி, நியூயார்க் (U.S.A

இல்லந்தோறும் இன்பம் பொங்கட்டும்

ஏ.எம். ராஜகோபாலன்



குமுதம் பு(து)த்தகம்

முதல் பதிப்பு : ஜனவரி 2004
டிசைன்ஸ் & லே-அவுட் : P. வேதா, T. ராஜா
உதவி : K. ஜெயராமன்
அட்டைப்படம் : நன்றி iskcon
விலை : ரூ.99/-

குமுதம் பு(து)த்தகம் வெளியீடு
பழைய எண். 151 புதிய எண்.306, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-10 போன் : 2642 2146 / 47 / 49
ஃபேக்ஸ் எண் : 26425041 இ-மெயில் : kumudam@vsnl.com

 6-1

வாசகர்களுக்கு...

சென்ற 52 ஆண்டுகளுக்கும் மேலாக, பரந்து விரிந்து கிடக்கும் இவ்வுலகத் தமிழ் மக்களின் இதயங்களில் நிரந்தர இடம்பிடித்துள்ள 'குமுதம்' பத்திரிகை, தனது சீரிய பணியை மேலும் சிறப்பாகச் செய்ய ஒரு ஜோதிடப் பத்திரிகை தொடங்க வேண்டுமென்ற தீவிர அவா என்னுள் வளர்ந்துகொண்டே வந்தது.

ஆனால், அது மற்றொரு சாதாரண ஜோதிடப் பத்திரிகையாக இருக்கக்கூடாது; மக்களின் நன்மதிப்பையும், முழுமையான நம்பிக்கையையும் பெறுமளவிற்கு விஞ்ஞானபூர்வமானதாகவும், அறிவியல்பூர்வமானதாகவும் விளங்கவேண்டுமென்று நான் விரும்பினேன். ஆனால், அதற்கேற்றாற்போல் தகுந்த ஓர் ஆசிரியரிடம்தான் இத்தெய்வீகப் பொறுப்பை ஒப்படைக்க விரும்பினேன். பலன் கூறுபவர்கள் ஓரளவாவது தியாக மனப்பான்மை உடையவராகவும், தூய்மையான உள்ளம் கொண்டவராகவும், ஜோதிடத்தை ஒரு வியாபாரச் சரக்காக மாற்றாதவராகவும் இருக்கவேண்டுமென்பதில் உறுதியுடனிருந்தேன். அப்போதுதான், நான் தினமும் வணங்கும் இறைவனின் கருணையினால் எனக்கு ஏ.எம்.ஆர். என்று இன்று அன்புடன் அனைவரும் அழைக்கும் திரு. ஏ.எம். ராஜகோபாலன் அவர்கள் நினைவு வந்தது. எங்கள் இருவரிடையே அன்பும், பாசப்பிணைப்பும் மலர்ந்ததற்கும், பின்பு பல ஆண்டுகளாக அவை வளர்ந்ததற்கும், எங்கள் இருவரிடையேயும் இருந்த கருத்து ஒற்றுமையும் ஆன்மிக சிந்தனைகளுமே காரணமாகும். இருவருமே மக்கள் நலனையே பிரதானமாகக் கருதினோம். சென்ற சுமார் 60 ஆண்டுகளாக ஜோதிடப் பலன்களைத் துன்பப்படும் மக்களுக்காகவே இலவசமாகக் கூறி உதவிவரும் அவரது பரந்த மனப்பான்மை என்னைக் கவர்ந்தது.

அதன் பலனே... இன்று உங்கள் கையில் தவழும் 1½ வயதுக் குழந்தையான 'குமுதம் ஜோதிடம்'. இதன்மீது நீங்கள் அனைவரும் வைத்துள்ள அன்பும், பாசமும் எத்தகையது என்பதை நான் அறிவேன்.

மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு உன்னத வழிகாட்டிவரும் 'குமுதம் ஜோதிட'த்தில் பிரசுரிக்கப்பட்ட விசேஷக் கட்டுரைகளைத் தனிப் புத்தகமாக வெளியிட வேண்டுமென்று, ஏராளமான வாசக அன்பர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதால், அவற்றை புத்தகமாக வெளியிடுவதில் அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது பாசத்திற்கும், பக்திக்கும் உரிய எனது அன்புத் தந்தை அமரர் திரு. எஸ்.ஏ.பி. அவ ர்கள் உள்ளத்திலும் இத்தகைய பத்திரிகையை 'குமுதம்' கொண்டுவர வேண்டுமென்ற தணியாத ஆசை இருந்து வந்தது. இப்பத்திரிகையை வெளிக்கொண்டு வந்ததன் மூலம் அவரது ஆசையை நிறைவேற்றி, அதன்மூலம் அவரது ஆசியையும் பெற்றேன்.

என் அன்பிற்குரிய தமிழக மக்களுக்கு இப்புத்தகம் உங்கள் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுமென உறுதியாக நம்புகிறேன்.

- டாக்டர் எஸ்.ஏ.பி.ஜவஹர் பழனியப்பன்

கௌரவ ஆசிரியர், குமுதம்

என்னுரை

மனித வாழ்க்கையில் மிக நெருக்கமாகப் பின்னிப் பிணைந்த கலைகள் இரண்டு.

ஒன்று மருத்துவம். மற்றொன்று ஜோதிடம். மருத்துவம் உடற்பிணியை மட்டுமே தீர்க்கும். ஆனால் ஜோதிடமோ உடற்பிணியை மட்டுமல்லாமல் மனநோய்க்கும் மருந்தாகும். அன்றாட வாழ்க்கைக்கு எவ்விதம் மருத்துவம் அவசியமோ அதைவிடச் சற்று அதிகமாகவே அவசியப்படுகிறது ஜோதிடம் என்ற ஈடிணையற்ற வானியல் கலை.

சூரிய மண்டலத்தில் எங்கோ சதா சுழன்றுகொண்டிருக்கும் கிரகங்கள் நமது வாழ்க்கைக்கு எவ்விதம் உதவுகின்றன அல்லது அந்த வாழ்க்கையை எவ்விதம் பாதிக்கின்றன என்பதை அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து, தாங்கள் கண்டுபிடித்த உண்மைகளை நமது நன்மைக்காக விட்டுச்சென்றுள்ளனர், இந்தியா என்ற நமது புண்ணிய பூமியை அலங்கரித்த மகா ரிஷிகளும், மகா புருஷர்களும்.

அவர்களிடமிருந்து நமக்குக் கிடைத்த அரிய நூல்களே 'சூரிய சித்தாந்தம்,' 'பிருஹத் சம்ஹிதை,' 'பூர்வ பாராசர்யம்,' 'ஆயுள் நிர்ணய பிராகாரம்,' 'ஜோதிட ரத்னாகரம்,' 'பிரசன்ன சாஸ்திரம்' (மலையாளம்) போன்ற இணையற்ற தெய்வீக நூல்களாகும்.

துன்பங்களுக்குக் காரணம் கிரக தோஷங்கள். கிரக தோஷங்களுக்குக் காரணம், நாம் முற்பிறவியில் செய்துள்ள தவறுகளும் அதனால் ஏற்படும் பாவங்களும். இவை அனைத்தையும் அடியோடு நீக்கி, நல்வாழ்வு பெற நமது ஆன்றோர்கள் இரு வழிகளை அருளியுள்ளனர்.

1. பரிகாரங்கள் - (மந்திரங்கள், மந்திரப் பிரயோகங்கள்)

2. ஆயுர்வேதம் - ஔஷதங்கள் (மருந்துகள்)

ஜோதிடமும் மருத்துவமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புள்ளவையாகும். பரிகாரங்கள் மிகப் புராதன ஜோதிட நூல்களிலிருந்து நமக்குக் கிடைத்தவையாகும். மருத்துவம், மருந்து ஆகியவை ஆயுர்வேதத்திலிருந்து கிடைத்தவையாகும். இவை இரண்டுமே அதர்வண வேதத்திலிருந்து நமக்குக் கிடைத்துள்ளன. ஒப்புயர்வற்ற இந்த நூல்களின் அடிப்படையில்தான் குமுதம்

ஜோதிடத்தில் அனைத்து ஜோதிட, ஆன்மிகக் கட்டுரைகளும் எழுதப்பட்டு வருகின்றன. தமிழக மக்கள் அனைவரும் இதனை உணர்ந்தே 'குமுதம் ஜோதிடம்' இதழைப் போற்றி வருகின்றனர்.

எமது ஜோதிடக் கணிப்புகள் அனைத்தும் மிகச் சரியாக இருப்பதற்குக் காரணம், உயர்ந்த இந்நூல்களின் கணித விதிகளிலிருந்து சிறிதளவும் நாங்கள் வழுவுவதில்லை என்பதே.

உலகளாவிய தமிழ்மக்கள் அனைவருக்கும் இத்தகைய விஞ்ஞானபூர்வமான ஒப்புயர்வற்ற கலைமூலம் இலவசப் பணி செய்யும் நோக்கத்துடன்தான் எனது அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய கௌரவ ஆசிரியர் டாக்டர் திரு. எஸ்.ஏ.பி. ஜவஹர் பழனியப்பன் அவர்களும், பதிப்பாளர் திரு. பி. வரதராசன் அவர்களும் குமுதம் ஜோதிடத்தின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புக்கட்டளை இட்டபோது, அதனை ஒரு பெரும் பாக்கியமாக நான் ஏற்றுக்கொண்டேன்.

இன்று 'குமுதம் ஜோதிடம்' ஒவ்வோர் இல்லத்திலும் தங்கக் குத்துவிளக்காக இன்ப ஒளிவீசித் திகழ்கிறது.

இன்று 'குமுதம் ஜோதிடம்' ஒவ்வோர் இல்லத்திலும் இணைபிரியாத ஒன்றாக இணைந்திருப்பதற்கு எனக்கு இரு கண்கள் போன்று உறுதுணையாக இருப்பவர்கள் மூத்த பத்திரிகையாளரான திரு. ஆ. செல்லப்பா அவர்களும், மற்றொரு பத்திரிகையாளரான திருமதி எம். ஜெயஸ்ரீ அவர்களும் ஆவர். இவர்களது பத்திரிகைத் துறை அனுபவமும், தங்கள் பொறுப்புகளை அலுப்பில்லாமல் ஆர்வத்துடன் செய்துவரும் மனப்பாங்கும் எனக்குப் பெருந் துணையாக நிற்கின்றன.

இதில் வெளிவந்துள்ள கட்டுரைகளின் தொகுப்பை தமிழக மக்களின் இதயபூர்வமான அன்பிற்கு அர்ப்பணிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அன்புடன்
என்றும் உங்கள்
- ஏ.எம்.ஆர்.

என்னைப் பற்றி...

பிறந்தது நாகைக்கு அருகில் உள்ள வெளிப்பாளையத்தில், ஆகஸ்ட் 8, 1924ல். அளவற்ற தெய்வ பக்தி மிகுந்த குடும்பத்தில் பிறந்தேன்.

சிறுவயதிலிருந்தே, அரங்கன் அழகு செய்யும் அரங்கமா நகரில் வளர்ந்தேன். தெய்வீகச் சூழ்நிலையில் வாழ்க்கை. படித்துச் சிறப்பாகப் பட்டம் பெற்றது திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில். தாய்வழி மாமன் சிறந்த ஜோதிட நிபுணர். ஆசார சீலர். எனது பத்தாவது வயதிலேயே ஜோதிடத்தில் ஆர்வம் என்ற தீபத்தை என் உள்ளத்தில் ஏற்றி வைத்தவர் அவர்தான். அந்த ஜோதிட தீபம்தான் இன்று, குமுதம் ஜோதிடமாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது.

எனக்குச் சிறுவயதிலிருந்தே புனித நதியான கங்கை மீது தணியாத பக்தி. இத்தகைய எனது பக்திக்கு 'என் மீது அளவற்ற பாசத்தைக் காட்டி, வழிநடத்திய எனது தந்தை, அமரர் திரு. ஏ.எம். ஸ்ரீநிவாஸ ஐயங்காரும், தாய் திருமதி ராஜாத்தி அம்மாளும் காரணமாக இருந்தனர். என் தாயின் 98வது வயது வரை அவரது அன்பும், பாசமும் எனக்குக் கிடைக்கும் பேறு பெற்றேன். நேரம் கிடைத்தபோதெல்லாம் ஹரித்வார், ரிஷிகேஷ் சென்று விடுவேன். அத்தகைய தருணங்களிலெல்லாம் வடமொழியில் நிபுணத்துவம் பெற்ற பல பெரியோர்களையும், மகான்களையும் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவர்களிடமிருந்து எளிதில் பெறுவதற்கரிய ஏராளமான ஜோதிட சூட்சுமங்களைக் கற்றறிந்தேன்.

இருமுறை எனது 75-வது வயதிலும், மீண்டும் 77-வது வயதிலும் இறைவன் என்னைத் திருக்கயிலை, மானஸசரோவரம் அழைத்து தரிசனம் தந்தருளினான். மக்கள் சேவையில் தணியாத ஆர்வம் இருந்தும், குடும்பப் பொறுப்புகள் குறுக்கே நின்றன.

எனது 71-வது வயதில் குடும்பப் பொறுப்புகளிலிருந்து இறைவன் 'வி.ஆர்.எஸ்.' கொடுத்துவிட்டார்.

அன்றிலிருந்து இன்றுவரை எனக்கு உங்கள் கவலைதான். இனியும் உங்கள் கவலைகள் தீர தொடர்ந்து பாடுபட்டு வருவேன்.

இன்று உங்கள் அனைவரின் நலன் ஒன்றையே கருதி இந்த இலவசப் பணியை நான் கவலையின்றிச் செய்து வருவதற்கு உறுதுணையாக இருப்பது என் மனைவியும், சிறந்த எழுத்தாளருமான திருமதி பத்மா ராஜகோபாலனும் எனது ஐந்து புதல்வர்களும் ஒரே மகளுமே காரணமாகும்.

குடும்பப் பொறுப்புகள் இந்த இலவசப் பணிக்குக் குறுக்கே இல்லாமல் இவர்கள் பார்த்துக்கொள்கிறார்கள்.

மருமகளாக இல்லத்தில் புகுந்தும் அன்புகாட்டுவதில் மகளாக எனக்கு உதவி வரும் திருமதி. லட்சுமி வாசுதேவனும் எனது சீரிய பணியில் உதவி வருகிறார்.

உள்ளே

1. இறைவன் எங்கிருக்கிறான்? 9
2. எதைத் தேடி அலைகின்றாய் என் மனமே? 14
3. பிறந்த நாட்டை நினைத்துப் பார்த்துப் புறப்பட்டு வாருங்கள் 19
4. நிரந்தர செல்வம் எது? 24
5. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஒரு வேண்டுகோள் 29
6. தூயவன் பாதத்தில் துவளாத பக்தி வேண்டும் 34
7. வாழ்வை மலர வைக்கும் விரதங்கள்! 39
8. இசையும் இறைவனும் 44
9. குடியைக் கெடுக்கும் குடி! 49
10. பெற்றோருக்குப் பெண்களால் பிரச்சினையா? தவிர்ப்பதில் ஜோதிடம் உதவி 54
11. அவன் அணைத்தால் அழிப்பவர் யார்? அவன் சினந்தால் காப்பவர் யார்? 59
12. உயர்ந்தவன் யார்? தாழ்ந்தவன் யார்? 64
13. நாளும் கோளும் நன்மையே செய்யும் - நாம் நாடினால்! 69
14. வாழ்க்கையில் சுகமும் சோகமும்! 74
15. நவீன விஞ்ஞானம் நம்மை எங்கே அழைத்துச் செல்கிறது? 79
16. வெல்லலாம் வயோதிகத்தை 84
17. எவர்க்கு எது தர்மம்? 89
18. நல்ல மனைவியின் நெஞ்சத்தையும் நஞ்சாக்கும் களத்திர தோஷம்! 94
19. உலகமே கைவிட்டாலும் அவன் கைவிட மாட்டான்! 99

உள்ளே


20. விளையும் பயிர் முளையிலே! 104
21. இறைவனை நாம் எவ்விதம் தரிசிக்க வேண்டும்? 109
22. கோடை விடுமுறை கொடுக்கும் அரிய வாய்ப்பு! 114
23. சரும நோய்களுக்குப் புஷ்ப கைங்கர்யம்! 119
24. எளிமையாக வாழ்ந்தால் இன்பம் காணலாம்! 124
25. பாவிகள் என்று எவரும் இல்லை பரமனுக்கு! 129
26. திருக்கோயில்களும் உலக அதிசயங்களே! 134
27. இதற்கு ஜோதிடம் பொறுப்பல்ல! 139
28. தெரியாமல் செய்யும் தவறும்,
அறியாமல் செய்யும் பிழையும்! 144
29. எப்படி வாழ்ந்தால் நிம்மதி பெறலாம்? 149
30. தீராத கடனா? தவிர்க்கலாம் -
ஜோதிடம் மூலம் 154
31. நோய்க்கு ஏற்ற மருந்தும்
தோஷத்திற்கு ஏற்ற பரிகாரமும் 159
32. திருடியவர்களுக்கா சொந்தம்
திருக்கோயில் சொத்துகள்? 164
33. பெற்றோர் பெருமை அளவிடற்கு அரியது! 169
34. கிரக தோஷங்களைப் போக்குவதில்
இணையற்ற ராமநாமம்! 174
35. பூஜைக்கு உரிய மலர் வாடி
வதங்கத்தான் வேண்டுமா? 179
36. பாண்டம் அமைவது குயவன் கையில் 184
37. ஆபத்தில் உதவுவது யார்? 189
38. போக பூமியில் செழித்து வளரும் பாரத தர்மம்! 194
39. வாழ்விற்கு ஒளி தரும் தீபம் எது? 199
40. புண்ணிய நதிகளைப் பூஜிப்பது ஏன்? 204

1

இறைவன் எங்கிருக்கிறான்?

பண்டரீபுரம்!

பக்தர்களின் மனத்தில் பரமானந்தத்தைத் தரும் ஈடிணையற்ற திருத்தலம் இது. மகாராஷ்டிரத்தில் உள்ள சந்திரபாகா நதிக்கரையில் விளங்கும் பக்தித் தலம் இது.



இங்குதான் எழுந்தருளி, பக்தர்களைக் காத்து அருள்புரிகிறான் கண்ணன். இங்கு இவனது திருநாமம் பாண்டுரங்கன். விட்டலன் என்றும், விட்டோபா என்றும் பக்தர்களால், ப்ரேமையுடன் அழைக்கப்படும் இந்தக் கண்ணன், பக்தர்களுக்கு அடிமையாக இருப்பதையே தன் திருவுள்ளத்தில் விரும்புகிறான். இவனது திருவிளையாடல்களை பக்த விஜயம் என்ற அரிய, தெய்வீக நூல் போற்றிப் புகழ்ந்துள்ளது.

பகவான் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறான்? யார் உண்மையான பக்தன்? இறைவனது கணிப்பில் யார் உயர்ந்தவன்? - இவற்றிற்கு விடை காணலாம், பக்த விஜயம் என்ற மகத்தான புண்ணிய புராண நூலில்.

சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இது.

வித்யானந்த போஸ்லே, பண்டரீபுரத்தில் வசித்து வந்த பண்டிதர். அவர் கற்காத கல்வி இல்லை. படிக்காத நூல்கள் இல்லை. அவரிடம் அனைத்துத் தகுதிகளும் இருந்தன, ஒன்றைத் தவிர! அவரிடம் இல்லாத அந்த ஒன்று, “அடக்கம்” மட்டுமே.

கல்வியிலும், அறிவிலும் தனக்கு எவரும் நிகரில்லை என்ற அகம்பாவம் அவரிடம் சற்று அதிகமாகவே இருந்தது. ஆனால், அதே சமயத்தில் பாண்டுரங்கனிடம் பக்தியும் இருந்தது அவருக்கு. தினமும் காலையில் சந்திரபாகா நதியில் நீராடி, ஆச்சார - அனுஷ்டானங்களுடன் கோயிலுக்குச் செல்வார். அங்கு பாண்டுரங்கனைத் தரிசித்துவிட்டு, வீடு திரும்பி, அதன் பின்னரே அன்றைய அலுவல்களைக் கவனிப்பார். பாண்டுரங்கன்மீது தான் வைத்திருந்த பக்தி பற்றியும், அவருக்குச் சற்று கர்வம்தான்.

அதே ஊரில் சந்திரபாகா நதிக்கரையில் ஒரு தொழுநோயாளி குடிசை போட்டுக் கொண்டு வாழ்ந்து வந்தான். அவனும் வித்யானந்த போஸ்லேயைப் போலவே பாண்டுரங்கனிடம் அளவற்ற பக்தி பூண்டவன். தினமும் சந்திரபாகா நதியில் நீராடி, அதன் கரையில் நின்றுகொண்டே திருக்கோயிலை நோக்கிச் சாஷ்டாங்கமாகத் தரையில் வீழ்ந்து, அந்த எம்பெருமானை வணங்குவது வழக்கம்.

அவனது தொழுநோயினால் அவனது முகம் விகாரமடைந்திருந்தது. அவனுக்கு ஒரே ஓர் ஆசை....! ஆர்வம்...! என்றாவது ஒருநாள் திருச்சந்நிதியுள் சென்று, எழில் கொஞ்சும் அந்தப் பாண்டுரங்கனைத் தரிசித்துவிட வேண்டும் என்பதே. ஆனால், அவனது நோயினைக் கண்டு,

அதிகாரிகள் அவனைத் திருக்கோயிலினுள் அனுமதிக்க வில்லை.

நோயினால் பாதிக்கப்பட்ட அவன், தனது வாழ்நாட்கள் குறுகிக்கொண்டிருப்பதை உணர்ந்து, இப்பிறவியில் தெய்வீகப் பேரழகனான அந்த விட்டலனை எங்கே தரிசிக்க முடியாமல் போய் விடுமோ என்று அஞ்சினான். எவ்விதமாவது ஒரு நாள் உள்ளே சென்று தரிசனம் செய்தே ஆகவேண்டும் என்ற அவனது ஆர்வம், வெறியாக மாறியது.

ஆஷாட ஏகாதசி

மாதந்தோறும் வரும் ஏகாதசி அன்று விரதம் இருப்பதன் ஆன்மிகப் பெருமை அளவற்றது. கொடிய பாவங்களையும் போக்கும் சக்தி ஏகாதசி விரதத்திற்கு உண்டு. ஏகாதசி அன்று பகவானே உபவாசமிருக்கிறான் என்று புராதன நூல்கள் விளக்கியுள்ளன. இந்திராதி தேவர்களும், ஏகாதசி அன்று உபவாசம் இருக்கிறார்கள் என்றால், அந்த விரதத்தின் மாபெரும் சக்தியை மேலும் விளக்க வேண்டுமோ?

இவ்விதம் ஏற்படும் ஒவ்வோர் ஏகாதசிக்கும், ஒவ்வொரு தனித்தனி விசேஷச் சிறப்பும், சக்தியும் உள்ளன. அனைத்து ஏகாதசியிலும் கார்த்திகை மாதம், சுக்லபட்சத்தில் (வளர்பிறை) வரும் ஏகாதசியும், மார்கழி மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசியும் பிரத்யேகத் தனிச் சிறப்பைப் பெற்றவையாகும்.

இந்த இரண்டிலும் கார்த்திகை மாதம் வரும் ஆஷாட ஏகாதசி மகத்தான தெய்வீகச் சக்தி பெற்றதாகும். அன்று நாம் உபவாசமிருந்து மறுநாள் துவாதசி அன்று சூரிய உதயத்திற்கு முன்பு துளசி தீர்த்தத்தை அருந்தி, அதன்பின்பு உணவு உண்பது ஒரு கோடி அஸ்வமேத யாகங்களைச் செய்த புண்ணியத்தை உடனடியாகக் கொடுக்கும். ஆஷாட ஏகாதசி அன்று பட்டினி இருந்து, துவாதசி அன்று நாம் சாப்பிடும்போது, பகவானான ஸ்ரீபாண்டுரங்கனே, முதல் நாள் உபவாசமிருந்து, பின்பு துவாதசியன்று நம் ஒவ்வொருவருடனும் உடனிருந்து உணவை ஏற்பதாக மிகப் புராதன நூல்களும், பக்தவிஜயமும், பண்டரீபுர மகாத்மியமும் விளக்கியுள்ளன.

"ஏழை, ஏதலன், நோயுற்றவன் என்பது எனக்குக் கிடையாது!"

அந்த ஒரு குறிப்பிட்ட ஆண்டும் ஆஷாட ஏகாதசி வந்தது. தினமும் போல் அந்தத் தொழுநோயாளி சந்திரபாகா

நதியில் நீராடி, அந்த நதியைக் கடந்து வந்து, திருக்கோயிலினுள் செல்ல முயன்றான். அப்போதுதான் பாண்டுரங்கனைத் தரிசித்துவிட்டு வித்யானந்த போஸ்லே தன் நண்பர்கள் சூழ திரும்ப வந்து கொண்டிருந்தார். அந்தத் தொழுநோயாளியைப் பார்த்தவுடன், முகத்தைச் சுளித்துக்கொண்டார் போஸ்லே. அவனைப் பார்ப்பதற்கே அருவருப்பு அவருக்கு. தன்னுடன் வந்த ஆட்களை ஏவி, வெளியே துரத்தினார். பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட அந்த பக்தன், பாண்டுரங்கனின் தரிசனம் கிடைக்காமல் போய்விட்டதே என்று மனம் வருந்தி, அந்த இரவு முழுவதும் அழுதுகொண்டே இருந்தான்.

பொழுதும் விடிந்தது; மறுநாள் காலையில், அன்று ஆஷாட துவாதசி அல்லவா? ஒருவருக்கு உணவளித்தால், பாண்டுரங்கனுக்கே உணவளித்த புண்ணிய பலன் கிடைக்கும் (இன்றும் பண்டரீபுரத்தில் இது அனுஷ்டிக்கப்படுகிறது).

வித்யானந்த போஸ்லே, சந்திரபாகா நதியில் நீராடிவிட்டு, உணவளிப்பதற்காக ஒருவரைத் தேடினார். ஆனால், அவருக்கு எவருமே கிடைக்கவில்லை. எவ்வளவோ முயன்றும், நெடுநேரம் தேடியும், எவரும் அவருக்குக் கிடைக்கவில்லை. அவர் சந்தித்துக் கேட்டவர்கள் எல்லோருமே, தாங்கள் சாப்பிட்டு விட்டதாகவும், அல்லது வேறு காரணங்களையும் கூறி விலகிவிட்டனர். மிகவும் மனம் வருந்தி அவர் தனியாகவே துவாதசி உணவு உட்கொண்டு, தனது ஏகாதசி விரதத்தை முடித்துக்கொண்டு தன் வீடு திரும்பினார்.

வரும் வழியில் ஒரு மரத்தடியில் அந்தத் தொழுநோயாளி உணவு உட்கொண்டிருப்பதையும், அவனது பக்கத்தில் மற்றொருவர் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதையும் பார்த்தார் போஸ்லே. அந்தத் தொழுநோயாளிக்குக்கூட ஓர் அதிதி கிடைத்தும், தனக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்திலும், வருத்தத்திலும் வெறுப்போடும் அருவருப்போடும் அந்த நோயாளியுடன் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தவரை மீண்டும் உற்றுப் பார்த்தார் போஸ்லே.

என்ன ஆச்சரியம்! போஸ்லேயின் கண்களால் அவர் கண்டதை நம்ப முடியவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு மீண்டும் ஒருமுறை அவனை உற்று நோக்கினார். கண்டதைக் கண்டு மெய்சிலிர்த்து, சிந்தை தளர்ந்து, சிலையெனச் செயலற்று நின்றார்.

ஆம்! அந்தத் தொழுநோயாளியின் பக்கத்தில் பாண்டுரங்கனே அமர்ந்து துவாதசி உணவை உட்கொண்டிருந்தான்.

அகிலமனைத்தும் உண்டு உமிழ்ந்தவனும், இந்திராதி தேவர்களுக் கும் எளிதில் கிட்டாதவனும், சப்த ரிஷிகளின் சிந்தனைக்கு அப்பாற்பட்டவனும், ஈரேழு பதினாலு உலகங்களுக்கும் நாயகனுமான எம்பெருமானான அந்தக் கண்ணன், பார்ப்பதற்கு அருவருப்பை ஏற்படுத்தும் ஒரு சாதாரண தொழுநோயாளிக்கு ஆஷாட துவாதசி விருந்தின னாக வந்து, அமர்ந்து, உணவு உண்பதைக் கண்டு தன்னையே மறந்து நின்றார் போஸ்லே. கல்வியினாலும், பக்தியினாலும், செல்வத்தினாலும் குறைவில்லாது உயர்ந்த தன்னை, ஏன் பாண்டுரங்கன் ஒதுக்கினான்?

“என்னைவிட இந்தத் தொழுநோயாளி எவ்விதம் உயர்ந்த வன்?” என்று பாண்டுரங்கன் மீதே அவருக்குக் கோபம் வந்தது. அன்றிரவு போஸ்லே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, அவரது கனவில் பாண்டுரங்கன் தோன்றினான்.

“போஸ்லே, உன்னுடைய ஆழ்ந்த கல்வி, அறிவுத்திறன், நீ என்னிடம் வைத்த பக்தி ஆகிய அனைத்தும் உன் அகங்காரத்தினால் பயனில்லாமல் போயின. நீ எது செய்தாலும், அதில் ‘தான்’ என்ற அகங்காரமே நிறைந்திருந் தது. உன்னிடமிருந்த ஆசாரம், அனுஷ்டானங்கள், ஏராளமான நூல்கள் உனக்களித்த விசேஷ அறிவுத்திறன் எதுவுமில்லாத அந்த நோயாளியிடம் நான் எதிர்பார்க்கும் எளிமையான, அடக்கமான, தூய்மையான பக்தி இருந்ததால், ஆஷாட துவாதசிக்கு அவனது அதிதியாக அவனது பக்திக்கு அடிமையாக நான் சென்றேன். என்னிடம் வருபவர்கள் எவராக இருந்தாலும், நான் அவர்களிடம் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான். அதுதான் அவர்களது ஆழ்ந்த, பரிசுத்தமான பக்தியாகும். என்றும் நான் என் பக்தனுக்கு அடிமை! அவனது பக்திக்கு அடிமை. அவனது எளிமைக்கு அடிமை. அவனது அடக்கத்திற்கு அடிமை” என்று கூறி மறைந்தான் பாண்டுரங்க விட்டலன்.

அன்றிலிருந்து, தன் அகங்காரத்தை அடியோடு விட்டு விட்டார் வித்யானந்த போஸ்லே. ஆச்சார, அனுஷ்டானங் களில் மட்டுமே இறைவன் இருப்பதில்லை. அந்தரங்க பக்தி உள்ள இடத்தில், அது எளிய ஏழையின் கூரை இல்லாத குடிசையானாலும் அவன் தேடி வருவான்.

ஆதலால், இறைவன் மீது உள்ளன்புடன் பக்தி செலுத்துங்கள். அவன் என்றும், எப்பொழுதும் உங்களுடன் இருப்பான். நள்ளிரவானாலும், நடுப்பகல் ஆனாலும் உங்களை விட்டு அகலான் அவன்.

2

எதைத் தேடி அலைகின்றாய் என் மனமே?

சேலத்தை அடுத்த மலைக்காடு. ஆனால் இது எத்தனை புனிதத்தன்மை வாய்ந்தது என்ற உண்மை பலருக்கும் தெரியாமலேயே இருந்து வருகிறது. பல சித்த புருஷர்கள் பதித்த புனித அடிச்சுவடுகள் காலத்தினால் மறைந்து விட்டாலும் அவர்களது திருவடி ஸ்பரிசம் பட்ட புனிதம் நீங்கவில்லை. காலத்தினால் அழிக்கமுடியாத தூய்மை அது.



அங்குதான் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒருநாள்...! சித்திரை மாதக் கோடையில் சூரியன் வெப்பத்தை வீசிக் கொண்டிருந்த உச்சி வேளை அது. ஒரு பாறையின் மேல் உஷ்ணத்தையும் பொருட்படுத்தாமல் அதன்மேல் வீற்றிருந் தார் மகத்தான சித்த புருஷர் ஒருவர். அவர்தான் பாம்பாட்டிச் சித்தர்.

பாம்பாட்டிச் சித்தர் என்றால் ஏதோ பாம்புகளுடன் பயமில்லாமல் சித்து விளையாடும் சக்தி பெற்றவர் என்று நினைத்து விடாதீர்கள். பாம்பு என்று அவர் கூறியது மனம் என்னும் பாம்பைத்தான்! 'பாம்பாட்டி' பாம்புடன்தான் இருக்கவேண்டியுள்ளது. ஆனால் அந்தப் பாம்பாட்டி ஒவ்வொரு விநாடியும் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எந்த விநாடியும் கொடிய விஷப் பாம்பினால் அந்தப் பாம்பாட்டிக்கு மரணம் ஏற்படக்கூடும். அந்தப் பாம்பைப் போன்றுதான் மனித மனமும். அதனைக் கட்டுப்படுத்தி நம் பிடியில் வைத்திருக்கும்வரை ஆபத்தில்லை. ஆனால் ஒரு விநாடி அஜாக்கிரதையாக இருந்தாலும், நாம் உறுதி தளர்ந்தாலும் அந்த விநாடியே அது தவறான வழியில் நம்மை இழுத்துச் சென்று, நமது நல்வாழ்க்கையில் இருந்து நம்மை வீழ்த்திவிடும்.

இத்தகைய மனம் என்ற நச்சுப்பாம்பைத் தன் இஷ்டப்படி கட்டுப்படுத்தி, ஆட்டிவைத்ததால், அம்மகாபுருஷருக்குப் பாம்பாட்டிச் சித்தர் என்ற சிறப்புக் காரணப் பெயர் ஏற்பட்டது. அந்த மகான்தான் நாம் மேலே கூறியபடி ஒரு கற்பாறையின் மீது அமர்ந்திருந்தார் - அனல்காற்றையும், கொடிய வெயிலையும் பொருட்படுத்தாமல்.

அப்போது எதிரில் ஓர் இளைஞன் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்ததை அந்தச் சித்த மகாபுருஷர் பார்த்தார். கையைத் தட்டி அவனைக் கூப்பிட்டார். ஓடிக்கொண்டே யிருந்த அவனது வேகம் தளர்ந்தது. சிறிது தூரம் சென்று நின்றான். திரும்பிப் பார்த்தான். தன்னை நோக்கி அந்தச் சித்த மகாபுருஷர் வேகமாக ஓடிவருவது தெரிந்தது. அருகில் வந்ததும் தன்னையுமறியாமல் அவரை வணங்கினான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. அவன் ஏதோ வேதனையில் இருக்கிறான் என்பது அந்தச் சித்தருக்கு நன்றாகத் தெரியும். சிரித்த முகத்துடன் அன்பாக அவன் தலைமீது கைவைத்து, "குறை என்ன சொல், மகனே!" என்று

வினவினார். அவர் கேட்டதும் அழத் தொடங்கினான் அந்த இளைஞன். மீண்டும் பேசினார் பாம்பாட்டிச் சித்தர், "எங்குதான் செல்கிறாய்? அதையாவது சொல்!" என்று சற்று உரத்த குரலிலேயே அதட்டினார்.

"எனக்கு வாழப்பிடிக்கவில்லை!" என்றான் அவன்.

"அப்படியென்றால்...?" மீண்டும் அவனைக் கனிந்த பார்வையுடன், ஆதரவுடன் கேட்டார்.


"அதோ தெரிகிறதே! அந்த மலை உச்சியிலிருந்து விழுந்து, உயிரை விட்டுவிடப் போகிறேன்!" என்று கூறிவிட்டு, மீண்டும் அழத் தொடங்கினான் அந்த இளைஞன்.

அருகிலிருந்த மரநிழலில் அமர்ந்து, அவனையும் உட்காரச் சொன்னார் பாம்பாட்டிச் சித்தர்.

"ஏன்? எதற்காக இந்த முடிவு?" என்று கேட்டார். மீண்டும் ஒருமுறை கனிவான அவரது முகத்தை உற்றுப் பார்த்தான் அந்த இளைஞன். அதிலிருந்த திட்சண்யமான பார்வை அவன் நெஞ்சில் ஊடுருவிப் பாய்ந்து, அவனை உலுக்கியது. அந்தப் பார்வையில் அளவற்ற அன்பும், இரக்கமும் பொங்கி வருவதைக் கண்டான். நம்பிக்கை பிறந்தது. மடைதிறந்த வெள்ளம்போல் வார்த்தைகள் பீறிட்டு வந்தன. சித்தரது கால்களைப் பற்றிக்கொண்டு அழுதவாறே கூறினான்.

மனம் திறந்து தன் சென்ற கால வாழ்க்கையை அவருக்குப் படம் பிடித்துக் காட்டினான், தன் வார்த்தைகளால். ஏழ்மையில் பிறந்து, ஏழ்மையில் வளர்ந்து அதிர்ஷ்ட தேவதை கண் திறந்ததனால் சிறு வியாபாரத்தை ஆரம்பித்துப் பெரும் வணிகனானான். செல்வம் சேர்ந்தது. சேர்த்த செல்வம் ஆசைகளைப் பெருக்கியது. வயிற்றுப் பசியைப் போக்க அறுசுவை உணவு கிடைத்தபோது அவனது உடற்பசி அதிகமாகியது. இரவு, பகல் பாராது வேசிகளின் வீடே கதியென்று கிடந்தான். ஐம்பது ஆண்டுகளில் சிறுகச் சிறுக அடைய வேண்டிய சுகங்களை ஐந்து ஆண்டுகளிலேயே அனுபவித்து முடித்துவிட்டான்.

'அளவிற்கு மீறினால் அமுதமும் விஷம்.' அவசர அவசரமாக அனுபவித்த இன்பங்களுக்கு அவன் கொடுத்த விலை அவனது ஆரோக்கியம். கன்னியரின் சுகமே நிரந்தர சுகம் என்று அவர்கள் கையைப் பற்றி உல்லாசமாகத் திரிந்த



பார்த்தனுக்கு சாரதியாய் தர்ம ரதத்தை ஓட்டிய எம்பெருமான்
ஸ்ரீ ருக்மணி ஸமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமான் - திருவல்லிக்கேணி

அவனது உடலை நோய் பற்றிக்கொண்டது. நோய் என்றால் நோய், மிகக் கொடிய நோய் அது.

இரவு-பகல் பாராது இதுவே இன்பம், இதுவே சுகம், இதுவே நிரந்தரம் என்று குதூகலித்த அவனை அதே இரவும், பகலும் உடலைச் சீரழித்து வாட்டின. வைத்தியரும் கூறிவிட்டார், அந்நோய்க்குச் சிகிச்சை இல்லையென்று! ஆதலால்தான் முடிவெடுத்துவிட்டான் இந்தத் துன்ப வாழ்க்கை இனி வேண்டாம் என்று. அதற்காகத்தான் ஓடிக் கொண்டிருந்தான் தன் வாழ்வின் முடிவைத் தேடி! மௌனமாக, கனிந்த பார்வையுடன் அவன் கூறியவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த பாம்பாட்டிச் சித்தர், வாய் திறந்தார். பேசினார்.

"அன்பு மகனே, பாம்பு கடித்துவிட்டதா?" என்று கேட்டு அவனை உற்று நோக்கினார். அவர் குறிப்பிட்டது, சபல புத்திக்கு ஆளான அவனது மனத்தையே! பதில் கூறமுடியாமல் கேவிக் கேவி அழுதான் அவன்.

பரியாசம் போலவே கடித்த பாம்பு
பலபேர் அறியவே மெத்த வீங்கிப்
பரியாரம் ஒருமாது பார்த்தபோது
பையோட கழன்றதென்று ஆடுபாம்பே

"பித்தனின்பாலில் ஏமாந்து போனாயோ?" என்றார் சித்தபுருஷர்.

(பித்தன்: சிவபெருமான். பால்: இறைவன் அளித்த செல்வம்)

(செல்வத்தினால் மதி இழந்தான் அந்த இளைஞன் என்பது பொருள்.)

"இறைவன் தந்த வாழ்க்கையை இத்தனை விளையாட்டாக வீணடித்துவிட்டாயே!" என்று கேட்பதுபோல் அவனை ஊடுருவிப் பார்த்தார். தவறு செய்யாதவரும் தரணியில் உண்டோ என்று ஆதுரத்துடன் அவனைத் தூக்கி நிறுத்தி கஞ்சமலையின் ஒரு பகுதிக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்த மூலிகைகளை எடுத்து அவன் வாயில் பிழிந்தார். தன்னுடனேயே வைத்துக்கொண்டு தக்க சிகிச்சை அளித்ததால் மரணப்பிடியிலிருந்து மீண்டான் அவன்.

"நோய் என்ற பேய் உன்னை விட்டுவிட்டது. சென்றுவா" என்றார் பாம்பாட்டிச் சித்தர் ஒருநாள். "எங்கு செல்வேன்

இனி என் ஐயனே?" என்று அவரது இரு கால்களையும் பற்றிக்கொண்டு கதறினான்.

"தங்களை விட்டுப் பிரியேன். வாழ்வு அலுத்துவிட்டது" என்றான். பாம்பாட்டிச் சித்தரின் முகத்தில் அர்த்தம் பொதிந்த புன்னகை! வாழவேண்டிய ஓர் உயிர், மனத்தைக் கட்டுப்படுத்தாதனால் தன்னைத்தானே அழித்துக்கொள்ள முயன்றதை நினைத்தபோது, அவர் உள்ளத்தில் கருணை ஊற்றுப் பெருக்கெடுத்தது. அந்த இளைஞனைத் தன்னுடனேயே வைத்துக்கொண்டார். காலப்போக்கில் அவனும் ஒரு சித்த புருஷனாகிவிட்டான்.

மனித வாழ்க்கையில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உண்மையான காரணம் மனத்தை நம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளாததேயாகும். மனம் என்னும் விளைநிலத்தில் ஆசை என்னும் விஷச்செடி வேரூன்றிப் பேராசையாக வளர்ந்துவிடுகிறது. நம் கட்டுப்பாட்டிலிருந்த மனம் நம்மைக் கட்டுப்படுத்த ஆரம்பித்துவிடுகிறது. எதிலும் பேராசை! எப்போதும் பேராசை! தான் ஆசைப்பட்டதை அடைய எதை வேண்டுமானாலும் செய்யலாம். எப்படி வேண்டுமானாலும் செய்யலாம். எப்போது வேண்டுமானாலும் செய்யலாம் என்று மனம் வெறியாட்டம் போடுகிறது. இது நம்மை அழிவிலும் அவமானத்திலும் ஆழ்த்திவிடுகிறது. எந்த அளவிற்கு இறைவன் பரம கருணையுடன் நம்மை உயர்த்தி வைக்கிறானோ அந்த அளவிற்கு நமக்கு அடியும் பலமாக விழும் - நாம் தவறு செய்தால்.

ஆதலால் சிறு வயதிலிருந்தே மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் தான் இப்படித்தான் வாழ வேண்டும் என்று உறுதிகொள்ள வேண்டும். மனம் போன போக்கிலெல்லாம் போனால் மரணமும் நமக்குக் கைகொடுக்காத அளவிற்குக் கொடிய அனுபவங்களை அனுபவிக்க நேரிடும்.

நம் வாழ்க்கையில் இன்பம் வேண்டுமா அல்லது துன்பம் வேண்டுமா என்பதை நிர்ணயிப்பது நமது நன்னடத்தையும் தீய நடத்தைகளுமே ஆகும். இதற்குச் சரியான வழிகாட்டுவது ஆன்மிகம் ஒன்றே!

3

பிறந்த நாட்டை நினைத்துப் பார்த்துப் புறப்பட்டு வாருங்கள்!

இரண்டாவது மகாயுத்தம் முடியப் போகும் தருணம் அது.

யுத்த அரக்கனின் கோரப் பிடியில் சிக்கித் தினமும் ஏராளமானோர் உயிரிழந்த வண்ணம் உலகமே ரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது. அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளப் போராடிக்



கொண்டிருந்தது பாரதப் புண்ணிய பூமி. மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, அபுல்கலாம் ஆசாத், சர்தார் வல்லபபாய் படேல், ராஜாஜி, சத்தியமூர்த்தி போன்ற பல தியாக புருஷர்கள் சுதந்திரப் போராட்டம் என்ற வேள்வித் தீயில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருந்த சமயம் அது. பாரதத் தாயின் ஒப்பற்ற தவப்புதல்வரான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், சிங்கப்பூரில் தன் தலைமைச் செயலகத்தை நிறுவி, இந்திய தேசிய ராணுவத்தை அமைத்து வீரப் போரை முன்னின்று நடத்திக்கொண்டிருந்த, இந்திய நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் அந்த வேளையும் நெருங்கிக் கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் தமிழகத்தின் கிராமியப் பாடல்களைப் புனைவதில் புகழ்பெற்றவரும் தேசபக்தி நிறைந்தவருமான திரு.கொத்தமங்கலம் சுப்பு அவர்கள், என்றும் நெஞ்சில் நினைவிருக்கும் ஓர் அற்புதப் பாடலை எழுதியிருந்தார். அது பிரிட்டிஷாரிடம் பணியாற்றி வந்த இந்திய ராணுவத்தி னருக்குத் தங்கள் தாய்நாட்டை நினைத்துப் பார்க்கும்படி அறைகூவி அழைத்த பாடலாகும். மிகவும் எளிய தமிழில், நெஞ்சின் ஆழத்தை ஊடுருவி, அதில் உறங்கிக்கொண்டிருந்த தேசபக்தியைத் தூண்டிவிடும் அரிய பாடல் அது.

இந்திய ராணுவத்தினரைப் பார்த்து,

"வேட்டை முடிஞ்சு போச்சு, வீட்டுக்கு வாங்க" என்று தொடங்கும் அந்தப் பாடலின் கடைசி நான்கு வரிகளைக் கீழே தந்திருக்கிறேன்.

(பிரான்ஸ், போலந்து, இத்தாலி, ஆகிய நாடுகளை நேச நாடுகள் ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்தபோது, இந்திய ராணுவம் அவற்றில் பங்கேற்றது).

"பிராஞ்சு நாட்டுச் சுதந்திரத்தைப் பிடிச்சுத் தந்தீங்க!
போன மானம் போலந்துக்குத் திரும்பத் தந்தீங்க!
போய் மிதிச்ச நாட்டையெல்லாம் பொழைக்க வச்சீங்க!
நீங்க பொறந்த நாட்டை நினைச்சுப் பார்த்துப்
புறப்பட்டு வாங்க...!"

மிகவும் எளிய நடையில் எழுதப்பட்ட இந்தக் கிராமியப் பாடலின் பின்னணியில் தீவிர தேசபக்தி இருப்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

இவ்விதம் இந்திய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, தீவிர ஆன்மிகப் போராட்டத்தில் தங்கள் வாழ்வின் சுகங்கள்

அனைத்தையும் தியாகம் செய்து, அதன் பயனாகப் பெற்றதே சுதந்திரமாகும். ஏதோ பிரிட்டிஷார் மனமிரங்கி நம்மை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கவில்லை. இனி இந்திய மக்களின் சுதந்திர ஆர்வத்தை அடக்க முடியாது என்பதை உணர்ந்தே ஆங்கிலேயர்கள் நம் பாரதத் திருநாட்டை விட்டு விலகிச் சென்றார்கள். அப்போதும் அவர்கள் நம் நாடும், நம் மக்களும் எதிர்காலத்தில் நன்றாக இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் செயல்படவில்லை. அவர்களது ஆட்சியில் இந்தியாவை, பர்மா, பாகிஸ்தான், இலங்கை, திபெத் ஆகியவை அடங்கிய ஒரே நாடாக வைத்திருந்த ஆங்கிலேயர்கள், நம் நாட்டையே பிளவுபடுத்தி, மக்களிடையேயும் பகைமை உணர்ச்சியை ஏற்படுத்திய பின்னரே நம் நாட்டை விட்டு அகன்றார்கள்.

ஆட்கொண்டது அந்நிய நாகரிகம்

சுதந்திரம் பெற்ற பின்பு நமது பாரதப் புண்ணிய பூமியை ஆண்ட அரசியல் கட்சிகளும், தலைவர்களும் தீவிர தேசப் பற்று என்ற உணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்துவதற்குத் தவறிவிட்டார்கள். இந்திய நாட்டின் முந்தைய சரித்திரம் இளைஞர்களுக்குக் கிடைக்காமலேயே செய்துவிட்டனர். இந்தியத் திருநாடு ஏதோ தங்கள் சொந்த சொத்தைப்போல் அரசியல் கட்சியினர் அனுபவிக்கத் தொடங்கினர்.

'அரசன் எவ்விதமோ, அவ்விதமே மக்களும்' என்கிறது மனுதர்ம நீதி நூல். ஆதலால் இந்திய மக்கள் மனங்களிலும் தமது நாடு, தாம் அதன் மக்கள் என்ற உணர்வு இல்லா மலேயே போயிற்று. முக்கியமாக, நமது இளைஞர்களிடமும், பெண்களிடமும் அந்நிய நாடுகளின் நாகரிகம், கலாசாரம் ஆகியவை காட்டுத்தீயெனப் பரவலாயிற்று. அறிவாற்றலில் மிகுந்திருந்த பாரதத் திருநாடு கல்வி, தொழில், பொருளா தாரம், விஞ்ஞானம் ஆகியவற்றில் சிறந்த முன்னேற்றம் அடைய ஆரம்பித்தது. இந்த முன்னேற்றத்துடன், தேசபக்தி வளர்வதற்குப் பதிலாக, அனைவர் மனங்களிலும் சுயநலமே அதிகமாக ஏற்பட்டது.

ஆதலால் படிப்பு முடிந்தவுடன் அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர் போன்ற அந்நிய நாடுகளுக்குச் சென்று சுகமாக வாழ வேண்டும் என்ற நோக்கத்திலேயே இளைஞர்கள் உயர்கல்வி பயில ஆரம்பித்தனர். இதற்காக, பல லட்சம்வரை பணம் கொடுத்து கல்லூரிகளில் இடத்தை வாங்க ஆரம்பித்தனர். ஆதலால், கல்வி ஒரு வியாபாரமாக மாறியது.

படிப்பு முடிந்தவுடன் அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள் - நம் இளைஞர்களும், பெண்களும். அங்கு சென்றவுடன் அந்தந்த நாடுகளின் கலாசாரம் நம் குழந்தைகளை அடியோடு மாற்றிவிடுகிறது. ‘உண்ணும் உணவும், பருகும் நீரும் கண்ணனே’ என்று உண்பதிலிருந்து உறங்கும் வரை ஆன்மிகம், தெய்வபக்தி, தூய்மை ஆகியவற்றி லேயே வளர்ந்த நம் குழந்தைகளை மேல்நாட்டுச் சூழ்நிலை யும், நாகரிகமும் (அநாகரிகம்?) விஷமாக மாற்றிவிடுகிறது.

இந்தியாவில் இருந்தவரை அடக்கம், பண்பு, அமைதி, தெய்வபக்தி ஆகியவற்றுடன் இணைந்து வாழ்ந்த தங்கள் குழந்தைகள் ஏன் இவ்விதம் மாறினார்கள் என்பது அவர் களை வளர்த்து ஆளாக்கிய தாய், தந்தையருக்கே வியப்பாக உள்ளது.

ஆம்! புத்தரையும் பித்தராக்கும் சக்தி அமெரிக்க நாகரிகத் திற்கு உள்ளது. நம்நாட்டில் பிறந்து, வளர்ந்து, படித்து அந்தக் கல்வித் தகுதியால் மேலைநாடுகளில் நல்ல பதவிகள் அமர்ந்திருக்கும் பாரதப் புதல்வர்களும், புதல்விகளும் ஏராளம். தாங்கள் தவழ்ந்து விளையாடிய வீடுகளையும், மகிழ்ச்சியுடன் ஓடித் திரிந்துக் குதூகலித்த திருவிழாக்களை யும், தினமும் தரிசித்த திருக்கோயில்களையும் அங்கு சென்றபிறகு மறந்து விடுகின்றனர் அவர்கள்.

இவர்கள் தாங்கள் பிறந்து, வளர்ந்த கிராமங்களையும், ஊர்களையும் மறக்காமல் உதவிகள் செய்திருந்தால் அந்தக் கிராமங்கள், ஊர்கள், திருக்கோயில்கள் இந்த அளவிற்கு க்ஷீணம் அடைந்திருக்க முடியாது.

உதாரணமாக, பிரசித்திபெற்ற ஸ்ரீராமபிரானின் திருக்கோயில் உள்ள வடுவூரைச் சேர்ந்த (தஞ்சை ஜில்லா) சுமார் 270 இளைஞர்கள் இன்று அமெரிக்காவில் மிகப்பெரிய பதவிகளில் உள்ளனர். இவர்களில் ஒருசிலரே ஆண்டுதோறும் வடுவூரில் நடைபெறும் திருவிழாவின்போது வந்து தங்கியிருந்து, தரிசித்துவிட்டுச் செல்கின்றனர்.

பெரும்பான்மையானவர்கள் தங்கள் ஊர்களையே மறந்துவிட்டனர். இதுபோன்றே திருவஹீந்திரபுரம், சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில், நாகப்பட்டினம், திருவாரூர், நன்னிலம், காஞ்சிபுரத்துக்கு அருகில் உள்ள கூரம் ஆகிய ஊர்களில் பிறந்து, வளர்ந்த ஏராளமானோர், இன்று அமெரிக்கா மற்றும் பல நாடுகளில் மிக உயர்ந்த பதவிகளில் உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் வசதியான வாழ்க்கையைத் தங்களுக்கு அளித்த தங்கள் ஊர்களையும், திருக்கோயில்களையும் அடியோடு மறந்து விட்டனர். முடிந்த போதெல்லாம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது தங்கள் ஊர்களுக்கு அவர்கள் வருவதும், மாதா மாதம் வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் திருக்கோயில்களின் தினசரி பூஜைகள், பராமரிப்பு ஆகியவற்றிற்காகப் பொருள் உதவி செய்வதும் மிகவும் அவசியமாகும். இல்லாவிடில், பெற்ற தாயை, மகன் புறக்கணிப்பதற்குச் சமமான பாவம் ஏற்படும். நமது முன்னோர்கள் நமக்கு அளித்துள்ள அழியாத சொத்து நமது திருக்கோயில்கள்.


முக்காலத்தையும் உணர்ந்த அவர்கள் என்றாவது ஒருநாள் நாம் இத்திருக்கோயில்களை மறந்துவிடக்கூடும் என்பதை முன்கூட்டியே உணர்ந்து அவற்றின் அன்றாட பூஜைகள், பராமரிப்பு ஆகியவற்றிற்காக ஏராளமான மான்யங்களை விட்டுச்சென்றுள்ளனர். ஆனால் அவை அனைத்தும் இன்று எவர் எவர் கைகளுக்கோ சென்றுவிட்டதால், பல திருக்கோயில்கள் வறுமையில் வாடி வதங்குகின்றன. ஆதலால் மக்களின் துயர்போக்கி நல்வாழ்வளிக்கும் தெய்வ சக்தியும் குறைந்து வருகிறது. எனவே பாரதத்தின் தவப் புதல்வர்களே, நீங்கள் எங்கிருந்தாலும், எந்நாட்டிலிருந்தாலும் நீங்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த கிராமங்களையும், ஊர்களையும் திருக்கோயில்களையும் இங்குள்ள எளிய மக்களையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை இவற்றின் வளர்ச்சிக்காகச் சேமித்து வையுங்கள். உங்கள் ஊரில் நடக்கும் முக்கிய திருவிழாவில் நீங்கள் வந்து கலந்துகொள்ள வேண்டும். உங்கள் குழந்தைகளுக்குப் பாரதப் புண்ணிய பூமியின் பெருமைகளை எடுத்துக் கூறுங்கள். இந்நாடு அவர்களுடையது என்பதை அவ்ர்கள் உள்ளங்களில் ஊன்றிவிடுங்கள். அந்நிய நாடுகள் அளிக்கும் வசதியான வாழ்க்கையில் நீங்கள் இத்தனை சுகங்களையும் பெறுவதற்குக் காரணமாக இருந்தவை உங்கள் ஊர்களும், திருக்கோயில்களும், நம் பாரத புண்ணிய பூமியின் ஆன்மிக சக்தியுமே என்பதை மறந்துவிடாதீர்கள்.

எங்கிருந்தாலும் என்றும் நீங்கள் பாரதத் தாயின் தவப்புதல்வர்களே! - இதனை மறவாதீர்கள்.

4

நிரந்தர செல்வம் எது?

துவாபர யுகத்தில் ஆரம்பித்த மிகப் பெரிய குருக்ஷேத்திர மகாயுத்தம் கலியுக தொடக்கத்தில் முடிந்தது. தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் ஏற்பட்ட மிகப்பெரிய யுத்தம் அது. பாரதத் திருநாட்டை பல பல, சிறு சிறு ராஜ்யங்களாக ஆண்டு வந்த மன்னர்களில் ஒருவரைத் தவிர மற்ற மன்னர்கள்



அனைவருமே பாண்டவர்கள் கட்சியிலோ அல்லது கௌரவர்கள் கட்சியிலோ சேர்ந்து அந்தப் போரில் பங்கு கொண்டனர்.

ஆயுதங்களிலும், அஸ்திரங்களிலும் மகத்தான சக்திபெற்ற அனைத்தையும் இருதரப்பினரும் உபயோகித்ததால் உயிர்ச்சேதம் கற்பனைக்கும் எட்டாத அளவிற்கு ஏற்பட்டது. குருக்ஷேத்திர புண்ணிய பூமியே ரத்தக்காடாக, காலனே அஞ்சும்படியான மயானமாகக் காட்சியளித்தது.

குருக்ஷேத்திர பூமியிலிருந்து தொலைவில் இருந்த ஒரு காட்டில் ஆலமரம் ஒன்றின் கீழ் தனது சீடர்களுடன் அமர்ந்திருந்த மகாத்மாவான வியாசர் இத்தகைய கோர அழிவு ஏற்பட்டதை நினைத்து மனம் கலங்கினார். எத்தனை எத்தனை இல்லங்களில் எத்தனை எத்தனை இளம்பெண்கள் இந்தக் கோர யுத்தத்தினால் விதவைகளாயினர்! எத்தனை எத்தனைக் குழந்தைகளுக்குத் தந்தை இல்லை என்ற நிலை ஏற்பட்டது! எத்தனைப் பொருட்சேதம், எத்தனை உயிர்ச்சேதம்! யானைகளும், குதிரைகளும், போர்வீரர்களும் உடல் வேறு, தலைவேறாகச் சிதறிக் கிடந்த சோகக் காட்சியைத் தனது ஞானதிருஷ்டியால் தன் மனக்கண் முன்நிறுத்திப் பார்த்தார் வியாசர். கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

இத்தகைய அழிவு எதைக் குறிக்கிறது என்பதைத் தன் ஆத்மசக்தியால் ஆராய்ந்து, உணர்ந்துகொண்டார். இத்தகைய பேரழிவிற்குக் காரணம் என்ன என்பது அவருக்குப் புலப்பட்டுவிட்டது. ஆம்! கலியுகம் பிறந்துவிட்டது! அதற்கான அறிகுறியே இது என்பதை உணர்ந்தார் அம்மகாபுருஷர்.

கலியுகம் செல்லச் செல்ல மக்களின் நிலை என்னவாகும் என்பதை முக்காலத்தையும் உணரும் தனது தவசக்தியினால் அவர் அறிந்துகொண்டார். கலியில் அதர்மமே தர்மமாகும். தர்மம் பொலிவிழந்து, சக்தியற்று இருக்கும்! அப்போது சாதுக்களும் நல்லவர்களும் துன்புறுத்தப்படுவார்கள். மக்கள் பணத்திற்கும், உடல்ரீதியான சுகங்களுக்குமே முன்னுரிமை அளிப்பார்கள் என்பதையும் முன்கூட்டியே அந்த மகாபுருஷர் அறிந்துகொண்டார். நடக்கப் போவதை எண்ணி அவர் மனம் நடுங்கியது. மக்கள் கலியுகத்தில் தர்மத்தையும் தெய்வபக்தியையும் இழப்பதனால் மிகக் கொடிய

துன்பங்களுக்கு ஆளாகப் போவதை எண்ணியதும் அவரது கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகி ஒடியது. எவ்விதமாவது மக்களுக்கு நேரப்போகும் ஆபத்தையும் துன்பங்களையும் தடுத்து நிறுத்தவேண்டும் என்று மனத்தில் உறுதிபூண்டார். அதன் விளைவாக அவர் தனது ஆத்மசக்தி முழுவதையும் ஒன்று திரட்டி, இமயத்தின் ஆழ்ந்த உட்பகுதியில், ஒரு குகையில் ஏகாந்தமாக (தனிமையாக) அமர்ந்துகொண்டு தனது மற்றொரு அற்புத கிரந்தமாகிய 'பவிஷ்ய புராணம்' என்ற ஈடிணையற்ற நூலை இயற்றினார்.

அதுமட்டுமல்லாமல் அப்போது பாரதப் புண்ணிய பூமியை அரசாண்டு வந்த ஜெனமேஜெயன் என்ற மன்னனிடம் சென்று கலி காலத்தில் மக்கள் மனம், வாழ்க்கை ஆகியவை எவ்விதம் இருக்கப் போகிறது என்பதை விளக்கி, அதன்மூலம் மக்கள் திருந்தி வாழவும் வழிவகுத்தார். என்றோ தனது ஞானசக்தியால் அறிந்து அந்த மாமுனிவர் பவிஷ்ய புராணத்தில் திருவாய்மலர்ந்தருளிய (கூறிய) அனைத்தும் இன்று நடைமுறையில் நடந்துவருவதைக் கண்டு ஆச்சரியமாக உள்ளது. அவர் கூறியுள்ளவற்றைச் சுருக்கமாகக் கீழே அளித்திருக்கிறோம்.

ஸ்ரீ வியாஸர்

"மக்கள் அனைவருக்கும் தெய்வபக்தியிலும், ஆன்மிகத்திலும் நம்பிக்கை குறையும். பொய்யை மெய்போல் பேசி, மக்களை ஆள்பவர்கள் ஏமாற்றி, சுயநலத்துடன் வாழ்வார்கள். மது, மாமிசம், மங்கை, பணம் ஆகியவற்றில் ஈடுபட்டு, தங்கள் ஆன்மிகக் கடமைகளை மக்கள் விட்டுவிடுவார்கள். தகுதியற்றவர்கள் உயர்ந்த பதவிகளை அடைவார்கள்.

முதல்நாள் ஏழையாக இருப்பவன், மறுநாள் காலை திடீர் பணக்காரனாக ஆகிவிடுவான். இந்த மாறுதல் அவனிடம் எப்படி ஏற்பட்டது என்பது ரகசியமாகவே இருக்கும். பணமே அனைத்தையும் தீர்மானிக்கும்! பல பிராணிகளை அவை குட்டிகளாக இருக்கும்போதே மக்கள் புசிப்பதற்காகக் கொடூரமாகக் கொல்வதால் மக்கள் அந்தப் பாவத்தினால் பலவித நோய்களுக்கும், ஆத்மஹத்தி (தற்கொலை)க்கும், மனோவியாதிகளுக்கும் ஆளாவர்ர்கள்! வயதிற்கு வரும் முன்பே சிறுவர்கள் காம இச்சையினால் உடல்உறவில் ஈடுபடுவார்கள்.

நாட்டை ஆட்சி செய்பவர்கள் வரி என்ற பெயரில் இரக்கமின்றி மக்களைக் கொள்ளையடிப்பார்கள்! அதனால் பலர் குழந்தைகளுடன் காடுகளில் தஞ்சம் புகுவார்கள். மக்கள் பித்ருக்களுக்குச் செய்யவேண்டிய திதி, தர்ப்பணம் ஆகிய பூஜைகளை விட்டுவிடுவதால் அங்கஹீனமான (உடல்குறையுள்ள) குழந்தைகளைப் பெற்று வாழ்வு முழுவதும் துன்பப்படுவார்கள். வணங்குவதற்குரிய, நமது தாய்க்குச் சமமான பசுக்கள் குரூர வழிகளில் கொல்லப்படும். அதனால், புதுப்புது நோய்கள் தலையெடுக்கும்.

குலப்பெண்கள் தங்கள் கற்பைக் காப்பாற்றிக்கொள்ள அரும்பாடுபட வேண்டியிருக்கும். தெய்வம் ஒன்று உண்டு. அதர்மத்தை விட்டுத் தர்மத்தைக் கடைப்பிடித்தால் மட்டுமே நல்வாழ்வு கிட்டும் என்ற நம்பிக்கையை மக்கள் இழந்து விடுவார்கள். பெற்றோர்கள், பெரியோர்கள், அருளாளர்கள், ஆச்சாரியன் (குரு) ஆகியோர் அலட்சியப்படுத்தப்படுவார்கள். தெய்வத்தின் பெயரால் பிராணிகள் வதை செய்யப்படும். தாங்கள் செய்யும் தவறுகளுக்குத் தெய்வத்தின் மேல் பொறுப்பைப் போடுவார்கள் பலர். பாவிகளின் பிடியில் சாதுக்களும், அபலைப்பெண்களும் சிக்கி, சொல்லமுடியாத துன்பங்களை அனுபவிப்பார்கள்.

அரசாங்கம் அக்கிரமக்காரர்களின் கைகளுக்குச் சென்று விடும்! புனித நதிகள் மாசுபடுத்தப்பட்டு அதனால் அவை வற்றிவிடும். திருக்கோயில்களின் சொத்துகள் கொள்ளையடிக்கப்பட்டு அவற்றின் அன்றாட பூஜைகள் நின்றுபோகும். அதனால் மக்களைக் காப்பாற்றி வரும் தெய்வசக்தி மக்களிடையே இல்லாமல் போகும்.

இனியும் பொறுக்கமுடியாது என்ற நிலை ஏற்படும்போது மக்களுக்கு மீண்டும் தர்மத்தின் மீதும், சாதுக்கள் மீதும், தெய்வத்தின் மீதும் நம்பிக்கை ஏற்படும். தர்மத்தையும், தெய்வத்தையும் நமக்குக் காட்டிக் காப்பாற்ற எவராவது வரமாட்டார்களா என்று மகான்களையும், சாதுக்களையும் மக்கள் தேடி அலைவார்கள். இத்தகைய நிலையில்தான் இருண்ட வானில் பூர்ண சந்திரன் உதயமாவதைப்போல் மீண்டும் களங்கமற்ற முகத்துடன் சாதுக்களும், மகான்களும் அவதரிப்பார்கள்.

இவர்களை நாடி மக்கள் அடைக்கலம் புகுவார்கள். அப்போது அதர்மத்திலேயே ஈடுபட்டுள்ள பாவிகள் தங்கள்

படைபலத்தாலும், உடல் வலிமையினாலும், செல்வாக்கினாலும் இந்தச் சாதுக்களையும், மகான்களையும் இவர்களிடம் அடைக்கலம் புகுந்த மக்களையும் அழிக்க முயல்வார்கள்.

இத்தகைய தருணத்தில்தான் சர்வலோக சரண்யனும், எங்கும் நிறைந்தவனுமான ஸ்ரீமந் நாராயணன் மகத்தான வலிமைவாய்ந்த தனது ஐந்து ஆயுதங்களுடனும், கல்கியாக அவதாரமெடுத்து, பாவிகள் அனைவரையும் அடியோடு அழித்து, சாதுக்களையும், மகான்களையும், அவர்களை அண்டியுள்ள மக்களையும் காப்பாற்றித் திருவருள்புரிவார். மீண்டும் பூவுலகில் தர்ம வாழ்க்கை ஏற்படும்.

- வியாசர்

வியாசரைப் போன்ற ஒரு மகரிஷியே கலியுகத்தின் கொடுமைகளைப் பற்றிக் கண்ணீர் விட்டார் என்றால் கலியுகத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் நமது நிலை என்னவென்பதைப் புரிந்துகொள்ளலாம். என்றோ ஸ்ரீ வியாசர் அருளிய அனைத்தும் இன்று நடைமுறையில் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை நாம் அனுபவத்தில் கண்டு வருகிறோம். அவர் பவிஷ்ய புராணத்தில் எழுதியுள்ள ஒவ்வொரு வரியும் இன்று நடைபெற்று வருகிறது.

ஆதலால் இக்கலியில் நமது உண்மையான, நிரந்தர செல்வம், தெய்வபக்தி, ஆன்மிகம், ஒழுக்கம், நேர்மை, சத்தியம் ஆகியவை மட்டுமே. இவையே நமக்கு உற்ற துணையாகும். இம்மை, மறுமை ஆகிய இரு இன்பங்களையும் பெற்றுத் தருவது இவை மட்டுமே! இந்த நிரந்தர செல்வத்தைப் பாதுகாத்து, நிரந்தர இன்பத்தை நாம் அனைவரும் பெறவேண்டும்.


5

பள்ளி,கல்லூரி மாணவர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

சென்ற வாரம் ஒரு நாள்.

மாலை நேரம். சுமார் 4.30 மணி.

சென்னையை அடுத்த கிண்டியிலிருந்து எனது வீட்டிற்குப் பேருந்து மூலம் வந்து கொண்டிருந்தேன். மாலை நேரமாத லால் பேருந்தில் நல்ல கூட்டம். பெரும்பாலும் பள்ளி,



கல்லூரி மாணவ, மாணவியர், இளைஞர்கள் - அதுவும் மாணவர்கள் என்றால் குதூகலத்திற்குக் கேட்கவா வேண்டும்? பாட்டும், கும்மாளமும்தான். நிரம்பிவழியும் கூட்டத்தினால் அந்தப் பேருந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு, சற்று சிரமத்துடன்தான் முன்னேறிக்கொண்டிருந்தது. பேருந்தில் இருந்த பெரியவர்கள் மற்றும் இதர பிரயாணிகள் ஆரம் பத்தில் மாணவர்களின் கும்மாளத்தையும், கேலிப்பேச்சுக் களையும் ரசித்தவாறுதான் அவரவரது இருக்கைகளில் அமர்ந்திருந்தனர்.

ஆனால் பேருந்து சிறிது தூரம் சென்ற பிறகு மாணவர் களில் சிலர் மாணவியரைப் பார்த்து ஆபாசப் பாடல்களை யும், இரட்டை அர்த்தமுள்ள திரைப்படப் பாடல்களையும் பாட ஆரம்பித்தனர். சில விநாடிகளில் அவர்களது பாட்டுடன் ஆட்டமும், கூச்சலும் சேர்ந்து உச்சகட்டத்தை அடைந்தன. சில மாணவர்கள் மாணவியரைப் பார்த்து மறைமுகமாக ஆபாசக் கேலிச் சொற்களையும் கூறியபோது மற்ற மாணவர்கள் கைகளைத் தட்டியும், சீழ்க்கை அடித்தும், உற்சாகத்துடன் கூக்குரலிட்டும் அந்தப் பேருந்தின் பக்கங்களில் 'தட்', 'தட்'வென்று தட்டிக்கொண்டும் சிறிதுகூட கட்டுப்பாடின்றியும் நடந்துகொண்டனர். இதைக்கண்ட அந்தப் பேருந்து நடத்துனர் தலையிட்டு அமைதியாக இருக்கும்படியும், இல்லாவிட்டால் அந்தப் பேருந்தைக் காவல் நிலையத்திற்கு ஓட்டிச் செல்லப்போவதாகவும் பயமுறுத்தி னார். உடனே எல்லா மாணவர்களும் ஒன்று சேர்ந்து அந்த நடத்துனரை அடிக்கச் சென்றனர். நானும் பேருந்தின் ஓட்டுநரும், பேருந்தில் இருந்த வேறு சில பெரியவர்களும் தலையிட்டு எவ்வித அசம்பாவிதமும் நடக்காமல் பேருந்து மேலே செல்ல வழிவகுத்துக் கொடுத்தோம்.

ஆனால் அந்த மாணவர்களின் கட்டுப்பாடற்ற நடத்தை கண்டு விவரிக்கமுடியாத, எல்லையற்ற வேதனை அடைந்தேன். நான் மட்டுமல்ல, பேருந்தில் இருந்த பலரும் இவ்விதமே மனத்துயரத்திற்கு ஆளாயினர். சிலர், 'இந்த மாணவர் களுக்குத் தாய் கிடையாதா? சகோதரிகள் கிடையாதா? இவர்களுடைய சகோதரிகள் பேருந்தில் செல்லும்போது அவர்களை இரட்டை அர்த்தமுள்ள பாடல்களாலும், சொற் களாலும் எவராவது கேலி செய்தால் அதை இம்மாணவர்கள்

ஏற்றுக்கொள்வார்களா?' என்று கூறி அந்த மாணவர்களைச் சபித்தார்கள். இதைக் கண்டு என் மனம் மேலும் வேதனையடைந்தது. மாணவ, மாணவியருக்கு, எதிர்காலத்தில் நல்வாழ்வு அமைய வேண்டுமென்றால், பெரியவர்களின் ஆசி அவசியம். பலர் சாபமிடும்போது, அவர்களில் ஒருவர் தூய்மையானவராகவும், தெய்வபக்தி உள்ளவராகவும், ஆன்மிகச் சக்தி படைத்தவராகவும் இருக்கக்கூடும். அத்தகைய பெரியவர் மனம் நொந்து ஏதாவது கூறினால் அல்லது சாபமிட்டால் அது நிச்சயமாகப் பலித்துவிடும். ஒன்றுமறியாத குழந்தை நெருப்பைத் தொட்டால், குழந்தை என்றும் பாராது நெருப்பு அக்குழந்தையைச் சுட்டுவிடும் அல்லவா? வாழ்க்கையில் சில மாணவ, மாணவியர் கல்வியில் உயர்ந்த திறமையிருந்தும் வாழ்க்கையில் தோல்வியும், ஏமாற்றமும் அடைந்து வருவதற்கு அவர்கள் இளம்வயதில் செய்யும் தவறுகளும், பெரியோர்கள், பெற்றோர் ஆகியோர் மனது நொந்து கொள்ளும்படி நடந்துகொள்வதும் முக்கியக் காரணங்களாகும்.

நமது மாணவ, மாணவியரின் மனம் கட்டுப்பாடில்லாமல் தறிகெட்டுப் போவதற்குத் தற்காலத் திரைப்படங்களும், சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும், தரக்குறைவான பத்திரிகைகளுமே காரணமாகும். இளம் வயது செழிப்பான விளைநிலமாகும். பசுமையான விளைநிலத்தில் நல்ல விதைகளை ஊன்றினால் நல்ல காய்கனிகளும், நெல்லும், மணியும் விளையும். விஷ விதைகளை ஊன்றினால், நச்சுச் செடிகள் தான் விளையும்! நமது பாரதப் புண்ணிய பூமியில் ஏராளமான சிறுவர்கள் இளம் வயதிலேயே ஆன்மிகச் செல்வர்களாக விளங்கி, இறைவனின் திருவருளை மட்டுமின்றி அவனுடைய தரிசனத்தையே பெறும் பேறு பெற்றுள்ளனர். சண்டேஸ்வரன், மார்க்கண்டேயன், துருவன், திருஞான சம்பந்தன், பிரகலாதன் போன்ற குழந்தைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம். தன் தாயின் வயிற்றில் இருக்கும்போதே நாரத மகரிஷியினால் அஷ்டாட்சர மந்திர உபதேசம் பெற்றான் பிரகலாதன். எம்பெருமான் நரசிம்மாவதாரமாக அவதரித்து, உலகை அழிவிலிருந்து காப்பாற்றச் செய்தது இச்சிறு குழந்தை பிரகலாதனே.

மாடு மேய்க்கும் குழந்தை சண்டேசன் சாதாரண மண்ணைக் குவித்து, அதுவே சிவலிங்கமென பக்தியுடன்


அபிஷேகம் செய்து, பூஜித்து அதனால் பரமேஸ்வரனின் கிடைத்தற்கரிய தரிசனத்தைப் பெற்றான். குழந்தை மார்க்கண்டேயன் சிவபெருமான் மீது வைத்த பக்தி, நம்பிக்கையினால், யமதர்மராஜனிடமிருந்து உயிர் பிழைத்ததுமல்லாமல், என்றும் மரணமடையாதவனாகச் சிரஞ்சிவிப் பட்டமும் பெற்று உயர்ந்தான்.

ஞானசம்பந்தன் சனகாதி மாமுனிவருக்கும் கிடைக்காத பேறு பெற்றவன். அன்னை சிவகாமியின் திருமுலைப் பால் கிடைத்த மகத்தான புண்ணியக் குழந்தை ஆனான். இக்குழந்தையின் தேவாரத் திருப்பதிகங்கள் தேனினும் தித்திக்கும் சிவபதத்தைப் பெற்றுத்தரும் சக்தி வாய்ந்தவை ஆகும். குழந்தை துருவன் நாரத மகரிஷியிடம் 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்ற அரிய மந்திரத்தை உபதேசம் பெற்று துருவ நட்சத்திரப் பதவியை அடைந்தான்.

நமது பாரதப் புண்ணிய பூமியில் ஒரு தாய், தன் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும்போது அந்தப் பாலில் ஆன்மிகம், தர்மம், ஒழுக்கம், பக்தி ஆகியவற்றையும் சேர்த்தே அப்பாலைத் தன் குழந்தைக்குப் புகட்டுகிறாள். குழந்தையும் அவ்விதமே வளர்ந்து வருகிறது.

ஒரு நாட்டின் எதிர்கால வளம், செல்வம், பலம், புகழ் ஆகியவை அதன் இளைஞர்களிடம்தான் உள்ளன. இதை நாம் கூறவில்லை. இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது அழிவிற்கு மிக அருகில் இங்கிலாந்து இருந்தபோது அதற்குப் பிரதமராகி தான் பிறந்த தாய்நாட்டிற்கு வெற்றி தேடித்தந்த வின்ஸ்டன் சர்ச்சில் கூறியதுதான் அது. 'எந்த அளவிற்கு ஒரு நாட்டின் இளைஞர்களும், பெண்களும் ஒழுக்கம், பண்பு, வீரம், தேசபக்தி ஆகியவற்றுடன் இருக்கிறார்களோ அந்த அளவிற்கு அந்நாடும் பலம் பெற்றுத் திகழும். உலக அரங்கில் செல்வாக்குப் பெருகும். இளைஞர்களும் பெண்களும் சீரழிந்தால், நாடும் கெட்டுவிடும்.'

நற்குணமுள்ள குழந்தைகள் நாட்டிற்குச் செல்வம். குடும்பத்திற்கு அழகு. இன்றைய மாணவர்களே நாட்டின் நாளைய வீரர்கள். தங்களை வளர்த்து ஆளாக்கிவரும் பெற்றோருக்கும் கல்வி புகட்டிவரும் பள்ளி, கல்லூரிக்கும் பெருமை தேடிக்கொடுப்பவர்கள் மாணவ, மாணவியரே.



அஞ்சேல்! அஞ்சேல்!! என்று அபயம் அளிக்கும் அமர்நாத் அழகன்

ஆதலால் தினமும் நம் நாட்டின் சென்றகால உயர்வு பற்றிய நூல்களைப் படியுங்கள். நவீன மேலைநாட்டுக் கலாசாரம் நமக்கு வேண்டாம்! எத்தகைய கொடுமைகளைத் தாங்கி, தியாகங்கள் பல செய்து சுதந்திரம் பெற்றிருக்கிறோம் நாம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். எத்தனை எத்தனை அன்னியர்கள், பகைவர்கள் நம் நாட்டின் மீது படையெடுத்து வந்து நமது கலாசாரத்தையும், பண்பையும், திருக்கோயில்களையும் அழித்து ஆர்ப்பரித்திருக்கிறார்கள் என்ற சரித்திர நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ளுங்கள். தவறான பழக்க வழக்கங்களை உடனே விட்டுவிடுங்கள். பாரத நன்நாட்டின் திலகங்கள் நீங்கள். இதனை மறவாதீர்கள். நீங்கள் பிறர் பார்த்துப் பெருமை அடையும்படி நடந்து கொண்டால், பிற்காலத்தில் உங்களால் நாடே பெருமை அடையும். புண்ணிய பாரதம் என்ற இந்த ஆல விருட்சத் திற்கு நீங்கள்தான் ஆணிவேர். ஆதலால் என் அருமைக் குழந்தைகளே. இன்று என் வயோதிக காலத்தில் ஒன்றை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன் உங்களிடம். உறுதி எடுத்துக்கொள்ளுங்கள் இனிமேல் நமது பண்பாட்டையும் கலாசாரத்தையும் தெய்வபக்தியையும் இழக்கமாட்டோம் என்று!


“என் தாய் பாரதம், என்னிடம் எத்தனையோ எதிர்பார்க் கிறாள் அவள். அவளை நான் ஏமாற்றமாட்டேன். நாங்கள் ஒவ்வொருவரும் பாரத ரத்னாவாக இருப்போம்” என்று இறைவனின் சந்நிதியில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளங்கள். நாடு உயரும் நீங்களும் உயர்வீர்கள்.

ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்.

6

தூயவன் பாதத்தில் துவளாத பக்தி வேண்டும்!

எத்தகைய சூழ்நிலையிலும், எத்தகைய துன்பத்திலும், எத்தகைய சோதனையிலும் இறைவன் மீது நமக்குப் பரிபூரணமான நம்பிக்கையும் அவன் காப்பாற்றுவான் தக்க தருணத்தில் என்ற மனஉறுதியும் வேண்டும். உடனடியாக நடந்தால் இறைவனைப் போற்றுவதும், நடக்காவிட்டால் அவனைத் தூற்றுவதும் மிகப்பெரிய தவறாகும். தன்னை முழுமையாக நாம் நம்புகிறோமா இல்லையா என்பதை அவனும் சில சமயங்களில் சோதித்த பின்பு அருள்புரிவான். அத்தகைய சோதனையில் நாம் தோற்கக்கூடாது. நம்மைப் படைத்தவன் அவன். நம்மைக் காப்பவனும் அவனே. ஆதலால்



காப்பது அவனது கடமையாகும். அந்தக் கடமையிலிருந்து ஒருபோதும் தவறமாட்டான். இதனை ஸ்ரீமத் பகவத்கீதையில் கண்ணனே திருவாய் மலர்ந்தருளியுள்ளான்.

"என்னிடம் பொறுப்பை விட்டுச் சரணடைந்துவிடு. காப்பாற்றுவது என் பொறுப்பு!" என்று வாக்களித்திருக்கிறான் அவன்.

சர்வதர்மான் பர்த்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: ॥

சாதாரண படத்தைக்கூட இறைவன் என்று நம்பினால் அந்தப் படமும் இறைவனாகவே அருள் சுரக்கும். பரம ஸ்ரீ ராமபக்தரான தியாகராஜர் ஒரு சமயம் ஸ்ரீராமபிரானே தன்னை நாடி கடும் வெயிலில் வியர்க்க வியர்க்க, மூச்சிரைக்க ஓடி வந்ததாக மனமுருகிக் கண்ணீர் சிந்தி ஸ்ரீராமபிரானின் படத்தை ஆரத்தழுவி ஆனந்தப்பட்டார். ஆதலால் இறைவனிடத்தில் நமக்கு எப்போதும் வாஸ்தல்ய பாவம் - அதாவது அளவற்ற அன்பு வைத்தோமானால் ஒவ்வொரு விநாடியும் நம்முடன் அவன் இருந்து நம்மை ஒவ்வொரு விஷயத்திலும் காத்து அருள்புரிவான்.

பாதி நம்பிக்கை, பாதி அவநம்பிக்கையுடன் அவனைப் பூஜித்தால் அவனது கருணையும் அருளும் முழுமையாகக் கிட்டாது. இதற்குப் புராண உண்மை நிகழ்ச்சி ஒன்று உண்டு.

பாடலிபுத்திரம் என்ற நகரில் ஓர் அந்தணன், தன் மனைவி, குழந்தைகளுடன் வசித்து வந்தான். முற்பிறவிகளில் அவன் செய்துள்ள பாவங்களினால் வறியவனானான். தரித்திரம் அவன் குடும்பத்தை வாட்டியது. அதனால் அவன் மிகவும் மனம் வருந்தி அந்த ஊரிலிருந்த ஒரு மகானிடம் சென்று, தரித்திரம் நீங்க வழிகேட்டான். அவரும் மனமிரங்கி, 'காசித் திருத்தலம் சென்று 180 தினங்கள் காலை, மாலை இரு வேளைகளிலும் கங்கையில் தூய நீராடி, அதே கங்கா ஜலத்தினால் ஸ்ரீ காசி விஸ்வநாதப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து பூஜித்தால் மன்னனாவாய்' என்று கூறினார். நம்பிக்கையும், பக்தியும் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

உற்சாகமடைந்த அந்த அந்தணனும், காசிக்குச் சென்று தினமும் கங்கையில் நீராடி அவிமுக்தேஸ்வரரான அந்தப்

பிரபுவிற்குத் தினமும் கங்கா ஜலத்தினால் அபிஷேகம் செய்து, பூஜித்து வந்தான். இவ்விதமே 150 நாட்கள் கழிந்தன. முதன்முறையாக அந்த அந்தணனுக்கு மனத்தில் சந்தேகம் தோன்றியது. 'அந்த மகான் கூறியது உண்மைதானா? அல்லது நொந்த தனது மனத்திற்கு ஆறுதல் அளிப்பதற்குக் கூறினாரா என்று சிந்திக்க ஆரம்பித்தான் அவன். காரணம் 150 நாட்கள் கழிந்தும், அவன் மன்னனாவதற்கு உரிய எவ்வித அறிகுறியும் அவனால் காணமுடியவில்லை.

இருப்பினும் அந்த அபிஷேக பூஜையை அவன் தொடர்ந்து செய்து வந்தான். நாளாக நாளாக அவனது நம்பிக்கை குறைந்தது. அவநம்பிக்கை அதிகரித்தது. மீதி நாட்கள் செல்லச் செல்ல, அவநம்பிக்கை அதிகரிக்கவே, இறைவன் மீது வெறுப்புத் தோன்றியது. இருப்பினும் அபிஷேகத்தையும் பூஜையையும் விட்டுவிடவில்லை. தொடர்ந்து செய்து வந்தான்.

175-வது நாளும் வந்தது. கைக்குடத்தில் உள்ள கங்கா ஜலத்துடன் சிவலிங்கத்தின் முன் நின்றுகொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். வழக்கம்போல்தான் இருந்தது அந்தத் திருக்கோயில். அந்தணன் யோசித்தான். 'இது என்ன? இத்தனை நாட்கள் அபிஷேகம் செய்தும் அரசர்க்குரிய எவ்வித அடையாளமும் தெரியவில்லையே. சிம்மாசனம் வேண்டுமானால் பின்பு வரட்டும். ஒரு குதிரை, ஒரு யானை அல்லது ஒரு சேவகனாவது தென்படக்கூடாதா?' என்று கூறிக்கொண்டே வேண்டாவெறுப்பாக அன்றைய அபிஷேகத்தைச் செய்து முடித்தான். அவனுக்கு எதிரில் காட்சியளித்த சிவலிங்கத்தை வேண்டா வெறுப்பாகப் பார்த்தான்.

மறுநாளும் 176-வது நாள் வந்தது. இறைவன் மீது வெறுப்பும் கோபமும் அதிகரித்தன. பக்தியுடன் அபிஷேகம் செய்வதை விட்டுவிட்டு சிறிதளவும் பணிவில்லாமல் அந்தச் சிவலிங்கத்தின் மீது கங்கா ஜலத்தைக் கவிழ்த்தான். தான் இருக்குமிடத்திற்குத் திரும்பி வரும்போது, "யாரோ ஒரு சாமியார் சொன்னதைக் கேட்டு இத்தனை நாட்களும் ஏமாந்துபோய் மடையனாகிவிட்டேனே" என்று தன்னைத்தானே நொந்துகொண்டான். எஞ்சியிருந்த பக்தியும், நம்பிக்கையும் அவனை விட்டு விலகிவிட்டன.

மீதியிருந்த நாட்களில் மூன்று நாட்களிலும் வழக்கம் போல் அபிஷேகம் செய்தாலும், அதில் பக்தியில்லை. நம்பிக்கையில்லை. அவற்றிற்குப் பதிலாக வெறுப்பும் கோபமும் போட்டியிட்டன. அப்போதும் அவன் மன்னனாக ஆவதற்குரிய அடையாளம் எதுவும் தெரியவில்லை.

அந்தக் கடைசி நாளும் வந்தது. ஆம்! 180-வது தினம்தான் அது. அவனுடைய கோபம் வெறியாக மாறியது. "இத்தனை நாட்களும் எவனோ சொன்னதை நம்பி இத்தனை பாடுபட்டு ஏமாந்தேனே. இந்தா இந்தக் கடைசி குடம் ஜலத்தையும் தொலைத்துக்கொள்" என்று கூவி, கங்கா ஜலத்துடன் அந்தக் குடத்தைக் கருணையங்கடலான அந்த அம்மையப்பன் மீது போட்டு உடைத்தான்.

சிவலிங்கம் வெடித்தது. பூமி அதிர்ந்தது. கங்கை வணங்கினாள். சிலையாக நின்று பிரமித்துச் செயலற்று நின்றான், செய்வதறியாது திடுக்கிட்ட அந்த அந்தணன்.

இறைவன் திருவாய் மலர்ந்தருளினான். "என் மீது பக்தியும் நம்பிக்கையும் வைத்து அபிஷேகம் செய்ய ஆரம்பித்த உனக்கு என் மீது நிரந்தரமான, முழுமையான பக்தியும் நம்பிக்கையும் ஏற்படவில்லையே.

கோபமும், வெறுப்பும் உன் மதியை மயங்கச் செய்து விட்டன. இருப்பினும் 180 நாட்கள் கங்கா ஜலத்தினால் எனக்கு அபிஷேகம் செய்து வழிபட்டவன் நீ. ஆதலால் நீ விரும்பிய அரச பதவியை அளிக்கிறேன்" என்று அனுக்கிர கித்து மறைந்தான் உமையொருபாகனும்.

அந்தணனும் உடனடியாக அந்தச் சரீரத்தை விட்டு ஹைதராபாத்தில் அப்போது ஆட்சி செய்து வந்த அரச குடும்பத்தில் பிறந்து, பின்பு, அதன் 'நவாப்' ஆனான். முற்பிறவியில் இறைவனின் மீது கோபம் கொண்டு கங்கா ஜலத்தைப் போட்டுடைத்ததால் மறுபிறவியில் மன்னனாகப் பிறந்தும் கோபம், மூர்க்கத்தனம் ஆகிய குணங்களுடன் இருந்தான்.

இருப்பினும் இறைவனை 180 நாட்கள் கங்காஜலத்தினால் அபிஷேகம் செய்து பூஜித்ததால் அவனது கஜானா வரிப் பணம் கோபண்ணா என்ற மகான் மூலமாக பத்ராசலம் என்ற புனித திருத்தலத்தில் ஸ்ரீ ராமபிரானுக்குத் திருக்கோயில்

நிர்மாணத்திற்காகச் செலவழிந்தது. நவாபிற்கும் ஸ்ரீ ராம தரிசனமும், ஸ்ரீ லட்சுமண தரிசனமும் கிடைத்தன.

180 நாட்கள் காசியம்பதிச் செல்வனான ஸ்ரீ விஸ்வநாதப் பெருமானை கங்காஜலம் கொண்டு பூஜை செய்ததன் பலனாக நவாபாகப் பிறந்து, அரச போகங்களை அனுபவித்ததுடன், ஸ்ரீ ராமலட்சுமண திருக்கோலத்தையும் காணும் பேறு பெற்று இறுதியில் முக்தி அடைந்தான்.

வனவாசத்தின்போது ஸ்ரீ ராமன் சீதாபிராட்டியோடும் ஸ்ரீ லட்சுமணனோடும் பர்ணசாலை அமைத்து, தங்கி அருளிய இடமே பத்ராசலம். ஸ்ரீ சீதாதேவியைத் தன் மடியில் வைத்துக்கொண்டு ஏகாந்தமாக இருக்கும் பேரழகையும், அவர்களுக்குக் காவலாக அவர்கள் தனிமையைத் தான் பார்த்துவிடக்கூடாது என்று வேறு பக்கம் திரும்பிய வண்ணம் கையிலேந்திய வில்லுடன் காவல் காக்கும் ஸ்ரீ லட்சுமணன் ஆகியோரின் பேரழகையும் காண கோடிக்கண்கள் போதாது.


இந்த ஸ்ரீ ராமபிரான் மீது பிற்காலத்தில் பத்ராசலம் ராமதாசன் என்று அனைவராலும் போற்றி வணங்கப்பட்ட கோபண்ணா இயற்றிய பக்திப் பாடல்கள் நெஞ்சின் ஆழத்தைத் தொடுபவை ஆகும். வாழ்க்கையில் ஒருமுறையாவது இந்தத் திருக்கோயிலை தரிசிப்பது பிறவியில் எளிதில் கிடைக்காத பேறு ஆகும்.

ஆதலால் எத்தகைய சூழ்நிலையிலும், எத்தகைய துன்பத்திலும் எத்தகைய சோதனையிலும், எத்தகைய ஏமாற்றத்திலும் இறைவனிடத்தில் மாறாத அன்பும், குறையாத நம்பிக்கையும் அவசியமாகும். அவ்விதம் உறுதியுடன் அவனது திருத்தாள்களைப் பற்றிக்கொண்டால் அவன் காப்பது நிச்சயம்.

7

வாழ்வை மலர வைக்கும் விரதங்கள்!

பாரத நன்நாட்டிற்குத் தமது தவவலிமையினால் ஆன்மிகச் சக்தியை ஊட்டி அருளிய மகரிஷிகளும், அவதார மகாபுருஷர்களும் நமது உடல் ஆரோக்கியம், உணவு, மந்திரங்களின் பிரயோக சக்தி ஆகிய மூன்றிற்கும் இடையே உள்ள நெருங்கிய நுணுக்கமான தொடர்பை அறிந்திருந் தார்கள். வாழ்க்கையின் சுக, துக்கங்கள் - மனம், வாக்கு



காயம் (உடல்) ஆகிய மூன்றினுள்ளேயே அடங்கியிருப்பதையும், அதே காரணத்தினால் இம்மூன்றையும் ஒவ்வொருவரும் தங்கள் கண்டிப்பான கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய அவசியத்தையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

கட்டுப்பாட்டில்லாத உணவு, தேவைக்கு அதிகமான உடல் வலிமையைத் தரும். அளவிற்கு அதிகமான உடல்பலம் மனத்தைத் தவறான வழிகளில் கொண்டுசெல்லும் என்ற ரகசியத்தையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். மருத்துவரீதியிலும் நமது உடல் ஓர் இயந்திரம் போன்றதே என்பதையும், அந்த இயந்திரத்திற்கு ஓய்வு கொடுத்து அதை நன்கு பராமரித்து வருதலும் மிகமிக அவசியம் என்பதையும் தங்களது ஆத்மசக்தியினால் அவர்கள் அறிந்திருந்தனர்.

மனம் என்பது கட்டுப்பாடற்ற ஒரு காட்டாறு. அதனை இரு கரைகளினால் கட்டுப்படுத்தப்பட்ட ஓர் ஒழுங்கான ஆறுபோல் செலுத்துவது மிகவும் அவசியம். இவற்றைக் கருத்தில் கொண்டு பல வாழ்க்கை நெறிமுறைகளை நமது ஆரோக்கியத்தையும், நல்வாழ்வையும் எண்ணி அவர்கள் நிர்ணயித்துள்ளனர். இவ்விதம் நமது நன்மைக்காக ஏற்பட்ட நெறிமுறைகளே பலவித விரதங்களும், உபவாசங்களும் ஆகும். இந்த விரதங்களும், உபவாசங்களும் கூட உயிரியல் அடிப்படையிலேயே, உடல், மனோரீதியில் கூறப்பட்டுள்ளன. கிருத்திகை விரதம், சஷ்டி விரதம், சிரவண உபவாசம், ஏகாதசி விரதம், உபவாசம், முன்னோர்களின் திதி தினங்களில் உபவாசம், சூரிய, சந்திர கிரகணங்களின் தோஷகாலத்தில் உண்ணாமலிருப்பது ஆகிய அனைத்துமே வானியல், விஞ்ஞான, மருத்துவ ரீதியில் அமைந்தவையே ஆகும்.

ஏகாதசி விரதம் - மருத்துவ ஆற்றல்

ஒவ்வொரு மாதமும் வரும் ஏகாதசி தினங்களில், நமது ஜோதிட, தர்ம நூல்கள் பூரண உபவாசத்தை வலியுறுத்துகின்றன. ஓர் ஏகாதசி தினத்தில் அனுஷ்டிக்கப்படும் உபவாசம், இதற்கு முந்தைய ஏகாதசி தினத்திலிருந்து அறியாமையினாலும், சந்தர்ப்பவசத்தினாலும் நாம் செய்யும் அனைத்துப் பாவங்களையும் அடியோடு போக்கிவிடும். அதே சமயத்தில் நம் உடல், ஜீரண உறுப்புகள், சிறுநீரகம், இதயம் போன்ற முக்கிய உறுப்புகளுக்கும் ஓய்வும் கிடைக்கிறது. இந்த ஓய்வு, உடல் உறுப்புகள் சதா சர்வமும் வேலை செய்வதால்

ஏற்படும் தேய்மானத்தைத் தவிர்க்க உதவுகிறது. ஏகாதசி விரதத்தையும் உபவாசத்தையும் இந்திரன் உள்ளிட்ட முப்பத்து முக்கோடி தேவர்களும் அனுஷ்டிப்பதாகப் புராதன நூல்கள் கூறுகின்றன. அவ்வளவு ஏன்? பகவானே ஏகாதசி விரதம் இருப்பதாக ஸ்ரீமத் பாகவத புராணம் கூறுகிறது. அந்த அளவிற்கு ஏகாதசி விரதம் மகத்தான புண்ணிய சக்தி கொண்டுள்ளது. இதுபோன்றே சஷ்டி விரதம், கிருத்திகை விரதம் ஆகியவை முருகப் பெருமானையே நம்முன் கொண்டுவந்து நிறுத்திவிடுகின்றன.

மனத்தைக் கட்டுப்படுத்தும் விரதங்கள்

எவ்விதம் உபவாசங்கள் உடலுக்கு ஓய்வை அளித்து அதன் மூலம் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவுகின்றனவோ அதேபோன்று விரதங்கள் மனத்திற்கு ஓய்வளித்து நமது மனநலத்தைப் பாதுகாக்கின்றன.

மனம் சந்திரனின் கட்டுப்பாட்டில் உள்ளது. நமது வானமண்டலத்தில் நவக்கிரகங்களுக்குள் சந்திரனே அதிக வேகத்தை உடைய கிரகமாகும். ஆதலால்தான் நமது மனமும் ஒரே நிலையில் இருக்காமல் ஒவ்வொரு விநாடியும் பலவித சஞ்சலங்களுக்கும் மாறி மாறி வரும் உணர்ச்சிகளுக்கு மிடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறது. விரதங்களின் மூலம் மனம் ஓய்வு மட்டுமில்லாமல், ஒருமையும் அடைந்து இறைவன் மீது மனத்தை முழுமையாக ஈடுபடுத்துவதற்கு உதவுகிறது. கீழ்த்தரமான எண்ணங்கள் மனத்தில் ஏற்படாமல் தடுத்து நிறுத்துகின்றன விரதங்கள். விரத நாட்களில் நாம் கூறும் மந்திரங்கள், தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம் போன்ற பாடல்கள் அதிகச் சக்தியைப் பெறுகின்றன. அவதாரப் புருஷர்களான ஸ்ரீராம, லட்சுமணர்கள், ஸ்ரீ கிருஷ்ண பகவான், ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்ரீமத் ராமானுஜர், ஸ்ரீமத்வர், ஸ்ரீ ராகவேந்திரர், ஸ்ரீ துளசிதாசர், பீஷ்ம பிதாமகர் ஆகியோரும் பல விரதங்களை அனுஷ்டித்து வந்ததாகப் பண்டைய நூல்கள் கூறுகின்றன. ஸ்ரீ ராமபிரான் தனது வனவாச காலத்திலும் உபவாச, விரதங்களைக் கடைப்பிடிக்கத் தவறியதில்லை. மகாபாரத யுத்தம் நடந்தபோதும், ஸ்ரீ கண்ணன், அர்ஜுனன், பீஷ்மர், துரோணாச்சாரியார் மற்றும் சாதாரண வீரர்கள் கூட யுத்தம் நடந்த நாட்களிலேயே உபவாச, விரதங்களைக் கடைப்பிடித்ததாக மகாத்மா வியாசர் ஸ்ரீமத் பாரதத்தில் கூறியிருக்கிறார்.

அமெரிக்க மக்கள் போற்றும் உபவாச, விரதங்கள்

நமது உபவாசங்கள், விரதங்கள் ஆகியவற்றின் மீது அமெரிக்க மக்கள் தற்போது அதிகப் பற்றும், ஆர்வமும் கொண்டுள்ளார்கள். இதற்காகப் பல யோக (Yoga) வகுப்புகள் அமெரிக்கா முழுவதும் ஆரம்பிக்கப்பட்டு ஏராளமான அமெரிக்கர்கள் ஆர்வத்துடன் நமது உபவாச, விரதங்களைக் கடைப்பிடித்து வருகிறார்கள். அதனால் தங்களுக்கு அளவற்ற மனச்சாந்தியும், மனநிறைவும் கிடைப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

மருத்துவச் சிகிச்சையில் யோகம், உபவாசம், விரதம்

பல அமெரிக்கர்கள் நமது யோக, விரத, உபவாச முறைகளை அனுஷ்டித்து, அதனால் உடல், மன நோய்கள் அடியோடு தீர்ந்துள்ளதாக எமக்கு ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன.

உபவாசம், விரதம் எவ்விதம் இருப்பது?

விரதம், உபவாசம் ஆகியவை பலன் தர முக்கியமாக வேண்டியது நம்பிக்கையும், தவறாத மன உறுதியுமே ஆகும். தற்காலத்தில் உபவாசமிருப்பது என்றால் என்ன என்பதைப் பலர் தெரிந்துகொள்வதில்லை. முழுமையாக ஒரு குறிப்பிட்ட தினத்தில் எதையும் சாப்பிடாமல் இருப்பதே உண்மையான உபவாசம் ஆகும். இவ்விதம் இருப்பதற்கு அளவற்ற சக்தி உண்டு. பலவித கிரக தோஷங்களையும் பூரண உபவாசம் போக்கும். தற்காலத்தில் உபவாசமிருப்பது பற்றி பல தவறான கருத்துகள் நிலவி வருகின்றன. வழக்கமாகச் சாப்பிடும் உணவிற்குப் பதிலாகப் பலகாரம் சாப்பிடுவதும் உபவாசமே என்று பலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

முழுமையான உபவாசமே நல்ல பலன் தரும். பெண்கள், வயோதிகர்கள், சிறுவர்கள், நோயுற்றவர்கள் ஆகியோர் மட்டும் உபவாச தினங்களில் உடல்நலன் கருதி, பழம், பால் அல்லது சிற்றுண்டி மட்டும் சாப்பிடலாம். ஆனால் உடல் ஆரோக்கியமாக இருப்பவர்கள் முழுமையான உபவாசமிருப்பதே உண்மையான உபவாசமாகும். மேலும் உபவாச, விரத தினங்களில் இறைவனின் திருநாமத்தைச் சொல்வது, அவனையே நினைப்பது, அவனை வணங்குவது, திருக்கோயில் தரிசனம், திருக்கோயிலில் தீபம் ஏற்றுவது ஆகியவை அளவற்ற புண்ணிய பலன்களைத் தரும்.

உபவாச தினம் முடிந்து மறுநாள் காலையில் நீராடிய பின்பு இறைவனை வணங்கிவிட்டு, துளசி தீர்த்தம் மட்டும் அருந்தி அதன்பிறகு சாப்பிடுவது உபவாச விதியாகும். உபவாச விரத தினங்களில் தவறான சிந்தனைகள், தவறான பழக்க, வழக்கங்கள், மனைவியுடன் உடல் உறவு கொள்வது, தீயோர் சகவாசம், தவறான வார்த்தைகளைப் பேசுவது, ஆபாசத் திரைப்பட, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது ஆகியவற்றை அவசியம் தவிர்த்தல் வேண்டும். அப்போதுதான் விரதம், உபவாசம் ஆகியவற்றின் பூரணபலன் நமக்குக் கிடைக்கும்.

மேலே கூறியபடி அமெரிக்க நகரங்களில் கூட நமது உபவாச, விரத முறைகள் வேகமாக மக்களிடம் பெருகி வருகின்றன. அவர்களுக்கு நமது வாழ்க்கை நெறிமுறைகளின் அருமை, பெருமைகள், ஆன்மிகச் சக்தி ஆகியவை நன்கு தெரிந்துள்ளன.

ஆனால் நாமோ அவற்றை மறந்து வருகிறோம். சிறுநீரகம், இதய சம்பந்தமான கோளாறுகள், ரத்த அழுத்தம், ஆஸ்துமா, வயிறு உபாதைகள், மனநோய்கள் ஆகியவை உபவாச, விரதங்களினால் நல்லபடியாவதை மேலைநாடுகளின் மருத்துவ நிபுணர்களே ஒப்புக்கொண்டுள்ளனர்.

நமது முனிவர்கள் அளித்துள்ள அரும்பெரும் ஆன்மிகத்தின் சக்தியை உணராமல் அவற்றை நாம் இழந்து கொண்டிருக்கிறோமே. இவற்றைக் கடைப்பிடித்தால் உடல் ஆரோக்கியம், மன நலன் ஆகியவற்றுடன் நாமும் நல்வாழ்வு பெறலாமே. நமது மகரிஷிகளின் ஞானச் செல்வத்தினால் மற்றவர்கள் பயன்பெறும்போது நாம் மட்டும் ஏன் அவற்றை இழக்கவேண்டும்?

இனியாவது நம் ஆன்மிகப் பொக்கிஷங்களை நாம் தெரிந்துகொள்வோமா? இனியும் அவற்றை இழக்கலாமா? சிந்தித்துப் பாருங்கள்!

8

இசையும் இறைவனும்!

நமது பாரத புண்ணிய பூமியில் தெய்வீக இசையின் மூலம் எவ்விதம் எளிதில் இறைவனை அடையமுடியும் என்பதை நமது மகான்களும், மகாபுருஷர்களும் தங்களது வாழ்க்கை மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். அக்னியை மூட்டி அதன் மத்தியில் ஒற்றைக் காலினால் நின்றுகொண்டு, இரு கைகளையும் தலைக்கு மேல் குவித்து, இறைவனிடம் மனத்தை ஒன்றுசேர நிலைக்கச் செய்து, கடுந்தவத்தின் மூலம்



அடையக்கூடிய இறைவனைத் தங்களது தெய்வீகப் பாடல்களினால் அடைந்து காட்டியுள்ளார்கள், ஸ்ரீ புரந்தரதாஸர், ஸ்ரீ அன்னமாச்சாரியார், ஸ்ரீ கபிர்தாஸர், ஸ்ரீ சூர்தாஸர், ஸ்ரீ பக்த மீரா, ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துசாமி தீட்சதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள், புதுக்கோட்டை ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாகவதர், வரகூர் ஸ்ரீ நாராயணதீர்த்தர், ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர் போன்ற பெரியோர்கள். இதேபோன்று செந்தமிழிலும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற பாடல்களையும் பாடி இறைவனின் திருவருள் பெற்ற பக்திமான்கள் பலர்.

திருகயிலைபதியான பரமேஸ்வரன், சதாசர்வகாலமும் தெய்வீக இசையைக் கேட்டு திருவுள்ளம் மகிழ்வதற்காக, கானத்தில் சிறந்த இரு கந்தர்வர்களைக் குண்டலங்களாக மாற்றித் தனது காதுகளில் அணிந்துகொண்டிருக்கிறார். சர்வ அந்தர்யாமியான (உள் உறைபவன்) எம்பெருமான், தர்மத்தைக் காக்கும் பொருட்டு கண்ணனாக அவதரித்து கோகுலச் சிறுவனாகத் திருவிளையாடல்கள் நிகழ்த்தியபோது, தனது குழலின்மூலம் வேதங்களையே இசைத்து வந்த அற்புதத்தை மீரா தனது பஜனைப் பாடல்களில் மெய்மறந்து பாடி அனுபவித்துள்ளார். 'திருவரங்கத்து அந்தாதியும் கண்ணன் குழலிசையை "ஆ குவித்தார் குழலால் அரங்கேசர்" என்று வர்ணித்திருக்கிறார்.

'ஆ' என்றால் பசுக்கள் என்று அர்த்தம். காலையில் மாடுகளை மேய்ப்பதற்காக யமுனைக் கரைக்குக் கொண்டு சென்ற கண்ணன், மாலையில் வீடு திரும்புவதற்கு முன்பு குழல் ஊதுவானாம். அந்தக் குழலின் இசையில் மயங்கிய பசுக்களும் இதர மாடுகளும் கண்ணன் இருக்குமிடத்திற்கு ஓடிவந்து நிற்குமாம்.

இத்தகைய தெய்வீக சங்கீதத்திற்கு அபரிமிதமான சக்திகள் உண்டு. சப்த(7) ஸ்வரங்களுக்குள் அடங்கிய நமது சாஸ்திரிய சங்கீதம் தெய்வீகத்தை அடிப்படையாகக் கொண்டது. பட்ட மரத்தையும் துளிர்க்க வைக்கும் சக்தி வாய்ந்தது நமது இசை. இதற்கு ஏராளமான உண்மை நிகழ்ச்சிகள் நமது வரலாற்று நூல்களில் உள்ளன.

உதாரணமாக, உடுப்பி திருத்தலத்தில் எழுந்தருளி உள்ள கண்ணன் கனகதாசர் என்ற இசையில் வல்லுநரான பக்தர், 'கிருஷ்ணா நீ பேகனே பாரோ' (கிருஷ்ணா நீ வேகமாய் ஓடி என்னிடம் வா) என்ற பாடலை மனமுருகிப் பாடியபோது, குழந்தைக் கண்ணனே கால் சலங்கைகள் ஒலிக்க, ஓடிவந்து தரிசனமளித்தானாம்! இதேபோன்று மகாத்மாவான புரந்தரதாசர், தொட்டமளூர் என்ற க்ஷேத்திரத்தில் (தற்காலத்தில் புகழ்பெற்ற) தனது 'ஜகத்தோதாரண' (இவ்வுலகைக் காப்பாற்றுபவனே) என்ற பதத்தைப் பாடியபோது குழந்தைக் கண்ணன் தவழ்ந்து வந்து மந்தகாச முகத்தினனாகத் திவ்ய தரிசனம் தந்தருளினான்.

இதேபோன்று முத்துஸ்வாமி தீட்சதர் தனது 'மீனாட்சி மே முதம் தேஹி' என்ற பூர்விகல்யாணி ராகக் கீர்த்தனையைப் பாடியபோது, அகிலாண்ட நாயகியான ஸ்ரீ மீனாட்சியே நேரில் தரிசனம் தந்து அம்மகானைத் தனது திருவடிகளில் சேர்த்துக்கொண்டாள்.

நமது கர்நாடக இசையின் மகத்துவம் ஈடிணையற்றது. அமைதியான சூழ்நிலையில் இனிமையாகப் பாடினால் நமது உள்ளம், உணர்ச்சிகள் அனைத்தும் அந்த நாதப் பிரம்மத்தில் ஒடுங்கி, நம்மையே நாம் மறந்து விடுவதை இன்றும் அனுபவத்தில் பார்க்கலாம். இறைவனுடன் நம்மை ஒன்றுசேர்க்கும் சக்தி நமது சங்கீதத்திற்கு உள்ளது.

ஆதலால்தான் ஸ்ரீ சரஸ்வதி தேவி சதா சர்வமும் வீணாகானம் செய்து கொண்டிருப்பதாக நமது புராதன நூல்கள் தெரிவிக்கின்றன. தனக்கு அபராதம் செய்த ராவணன் சாமகானத்தைப் பாடியதால், அந்த இசையில் மயங்கி அவனது மாபெரும் குற்றத்தைப் பொறுத்து அருள் செய்தான் அம்பிகை பாகனும். நாரத மகரிஷி தனது புகழ்பெற்ற 'மகதி' என்ற வீணையை மீட்டி சதாகாலமும் 'நாராயண கானம்' செய்து கொண்டிருப்பதைப் பண்டைய நூல்கள் கூறுகின்றன.

இமாலயத்தில் பிரபலமான கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய இரு திருத்தலங்களுக்கும் செல்லும் சந்திப்பான ருத்ரப்பிரயாகை என்ற திருத்தலத்தில் மந்தாகினி கங்கையும்,

அலக்நந்தா கங்கையும் ஒன்று சேருகின்றன. மகத்தான புண்ணியத் தலமான இங்கு இந்த இரண்டு புண்ணிய நதிகளும் சேருமிடத்தில் 'நாரதர் பாறை' என்று ஒரு பாறை உள்ளது. அந்தப் பாறையில் இன்றும் தினமும் நாரத மகரிஷி அமர்ந்துகொண்டு ஆர்ப்பரித்து வரும் கங்கையின் ஓசைக்குச் சரியாகச் சுருதி மீட்டி வீணை வாசிப்பது கேட்பதாக பலர் கூறக் கேட்டிருக்கிறேன்.

தெய்வத்தையே நம்மிடம் கொண்டுவந்து சேர்க்கும் நமது தெய்வீக சங்கீதத்தை அதன் மகிமை அறியாது நமது இளைஞர்களும், பெண்மணிகளும் இன்று புறக்கணித்து வருவது வேதனைக்குரிய விஷயமாகும்.

ஆனால், இன்றைய நிலை என்ன?

நமது இளைஞர்களும், பெண்களும், கர்நாடக இசையின் மகத்துவத்தை அறிந்துகொள்ளாமல் திரைப்படங்களிலும், மேல்நாட்டு இசையிலும் தங்கள் மனத்தைச் செலுத்தி வருவதை இன்று நாம் காணமுடிகிறது.

இரட்டை அர்த்தமுள்ள பாடல்கள், கீழ்;ழீதரமான பாலுணர்ச்சியைத் தூண்டிவிடும் பாடல்கள் ஆகியவையே தற்காலத் திரைப்படங்களிலும், ஒலிநாடாக்களிலும் கேட்க முடிகிறது. போதாக்குறைக்கு 'டிஸ்கோ டான்ஸ்' போன்ற ஆபாச நடனப்பாடல்களும், மேற்கத்திய பாணியில் ஆல்பங்களும் இளைஞர் முதல் வயோதிகர் வரை மக்கள் மனங்களைச் சீரழித்து வருகின்றன.

அவர்கள் மனங்களில் பலவித சஞ்சலங்களை ஏற்படுத்தி-உள்ளத்தையும், ஆரோக்கியத்தையும், மனத்தூய்மையையும் சீரழித்து வருகின்றன. இதற்கு வீட்டிலுள்ள பெற்றோரும் ஒரு வகையில் காரணமாவார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை குழந்தைகளுக்கு - குறிப்பாக நம் இளம் பெண்களுக்குச் சிறுவயது முதற்கொண்டே கர்நாடக இசையைப் புகட்டி வந்தார்கள். தற்போது பெற்றோர்களே தெய்வீகப் பாடல்களைப் புறக்கணித்து வருகிறார்கள். பலரும் இன்று, 'படிப்பதற்கே

நேரமில்லை. பாட்டிற்கு ஏது நேரம்?' என்று குழந்தைகளுக்கு இந்தத் தெய்வீகப் பாடல்களைச் சொல்லித் தருவதில்லை.


இறைவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பை மேம்படுத்தும் தெய்வீகப் பாடல்கள் நமக்கு உள்ளத் தூய்மையை அளிக்கின்றன. அவற்றையா நாம் புறக்கணிப்பது?

கர்நாடக இசையின் சக்தி

வேதகாலத்திலேயே நமது தெய்வீக சங்கீதத்திற்கு மகத்துவம் இருந்து வந்துள்ளது. வாய்ப்பாட்டினைக் 'கீதம்' என்றும், வாத்தியக் கருவிகள் மூலம் இசைக்கப்படுவதை 'வாதித்ரம்' என்று வேத நூல்கள் கூறுகின்றன.

கொடிய விஷம் கொண்ட பாம்பு மகுடிக்கு வசப்படுகிறது. தூளியில் இட்ட குழந்தை தூங்கி விடுகிறது - நீலாம்பரி ராகத்தில் பாடினால். ஆன்மிகம் கலந்த புராதனக் கலையாகும் நம் இசை. ஆதலால் இனியாவது மீண்டும் நம் குழந்தை களுக்குப் பாரம்பரிய கர்நாடக இசையை - தெய்வத்துடன் நம்மை இணைக்கும் சங்கீதத்தைப் பாடமாகப் புகட்டி வருதல் மிகமிக அவசியமாகும்.

இது விஷயத்தில் வீட்டிலுள்ள பெற்றோரும் பெரியோர்களும் அலட்சியமாகவோ அல்லது அக்கறையின்றியோ இருக்கக்கூடாது. வாழ்க்கை என்பது அழகான இன்பம்மிக்க ஓர் அனுபவமாகும். அதனை இறைபக்தியுடன் சுவைத்து ரசிக்க கர்நாடக இசை அளவற்ற துணைபுரிகிறது.



அரங்கனின் திருமார்பை அலங்கரிக்கும்
ஸ்ரீ ரெங்கநாயகித் தாயார் - ஸ்ரீரங்கம்

9

குடியைக் கெடுக்கும் குடி!

கடந்த 14.09.2003 ஞாயிறு அன்று காலை மணி 8.00. எனது அன்றாட ஆராதனையை (இறைபூஜை) அப்போது தான் முடித்திருந்தேன். வாயிலிலிருந்த 'அழைப்புமணி' ஒலித்தது.

சென்று பார்த்தபோது சுமார் 40 வயது மதிக்கக்கூடிய பெண்ணும், 20 வயது மதிக்கக்கூடிய இளம்பெண்ணும் நின்றிருந்தனர். கதவைத் திறந்து 'வாருங்கள்' எனக் கூறி உட்காரச் சொன்னேன்.

நான் சற்றும் எதிர்பாராமல் அந்தப் பெண்மணி தடா



லெனக் காலில் விழுந்து என் கால்களைப் பற்றிக்கொண்டாள். எனக்குத் தர்மசங்கடமாகிவிட்டது.

'இறைவனின் இணையடிகள், ஆச்சார்யன் (குரு) திருவடியன்றி வேறு எவரது கால்களையும் பணியவேண்டாம்' என்று அறிவுரை கூறி, அவர்களை உட்காருமாறு பணித்தேன்.

ஆனால் அப்பெண்மணி உட்காரவில்லை. நின்றபடியே கதறி அழுதாள். வெகுநேரம் சமாதானப்படுத்திய பின்பு, தனது குறையைக் கூறியபோது என் நெஞ்சம் அதிர்ந்தது. கால்களின் கீழே பூமியே நழுவி விழுவதைப் போன்று உணர்ந்தேன்.

அப்படியென்ன அப்பெண்ணின் பிரச்சினை?

அவள் கணவர் மாநில அரசில் நல்ல வேலையில் இருக்கிறார். வேலை பார்க்குமிடத்தில் நல்ல பெயர். ஆனால் பெரும் குடிகாரர். சுமார் மூன்று வாரங்களுக்கு முன்பு ஓர் இரவில் குடித்துவிட்டு வந்து தான் பெற்ற மகளையே... அந்தப் பெண்மணி கூறியதை எழுத கை கூசுகிறது. "நான் என்ன பாவம் செய்தேன்...?" "நான் என்ன பாவம் செய்தேன்...?" என்று கதறிக் குமுறி அழுத அந்தப் பெண்மணியை நானும், எனது மனைவியும் சமாதானப்படுத்தினோம்.

அந்த மகளின் முகத்தைப் பார்ப்பதற்கே என் மனம் தயங்கியது. கள்ளம், கபடமற்ற முகம், 'தந்தையே அநீதி செய்துவிட்டாரே...' என்ற வேதனையை அந்தக் கண்கள் எடுத்துக்காட்டின. இனம்புரியாத ஆழ்ந்த வேதனை அது. அந்த வேதனையில் பொங்கி வழிந்த உணர்ச்சிகள் எத்தனை, எத்தனையோ...!

ஜாதகத்தைப் பார்த்து, அந்த மகளுக்குத் திருமண நேரம் வந்துவிட்டதை எடுத்துக்கூறி, உடனடியாகத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும்படி கூறினேன். சென்றதை மறந்துவிடும்படி அந்த இளம் மகளிடம் அறிவுரை கூறினேன். எளிதில் மறந்துவிடக்கூடிய அனுபவமல்ல அது என்பதையும் நான் உணர்ந்திருந்தேன்.

ஓரளவு பிரச்சினை தீர்ந்துவிட்ட நிறைவுடன் என்னிடம் விடைபெற்றனர் அந்த துர்பாக்கியசாலிகள்.

இந்த அதிர்ச்சியிலிருந்து நான் மீள்வதற்குள், 17.9.2003 அன்று இரு சகோதரிகள் என்னை வந்து சந்தித்தனர். ஒருவருக்கு வயது 33. மற்றவருக்கு வயது 30. மூத்த சகோதரி மத்திய அரசிலும், இளைய சகோதரி தனியார் நிறுவனத் திலும் வேலை பார்க்கிறார்கள்.

இவர்களது பிரச்சினையும் 'தந்தையே.' இவரும் பெரும் குடிகாரரே. ஆனால் வேலைக்குச் செல்ல விருப்பமின்றி, பெண்களின் சம்பாத்தியத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர். இரு பெண்களுக்கும் விவாக வயது வந்தும், எங்கு வருமானம் நின்றுபோய்விடுமோ என்ற அச்சத்தில் அவர்களது திருமண முயற்சியில் அக்கறை காட்டாது, வலியவந்து திருமணம் செய்துகொள்ள கேட்போரையும் தடுத்து, ஏதோ காரணம் கூறி, தவிர்த்தும் வருவதாகக் கூறினர்.

தங்கள் தந்தையின் மனமாற்றத்திற்கு ஜாதகப்படி என்ன பரிகாரம் செய்யலாம் என்பதே அவர்கள் என்னிடம் கேட்ட கேள்வியாகும்.

அந்த இரு சகோதரிகளின் ஜாதகங்களைப் பார்த்துப் பதில் கூறி அனுப்பிவிட்டேன். அவர்கள் இருவரும் சென்றபிறகு என் மனம் ஞாயிறன்று வந்த பெண்ணைப் பற்றியும், புதனன்று வந்த இரு சகோதரிகள் பற்றியும் சிந்தித்தது.

பெற்ற மகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டிய தந்தையே இத்தகைய கொடுமையைத் தன் குழந்தைகளுக்கு ஏன் செய்தார்கள்? அவர்கள் மனம் எங்ஙனம் அனுமதித்தது என்று சிந்தித்தேன். பாசம் காட்டிய அவர்களை வெறிபிடித்த மிருகமாக ஆக்கியது 'மது' என்பதை நான் உணர்ந்தேன்.

காலத்தையெல்லாம் கடந்த மிகப் பழைமையான நமது புராதன நூல்களில் ஐந்து வகைத் தவறுகள் 'மகாபாதகங்கள்' என்று வகைபடுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று மது அருந்துவதுமாகும். அந்த தர்ம நூல்களை நமக்கு அளித் துள்ள மகாபுருஷர்கள் எத்தகைய, ஆழ்ந்த தீர்க்கதரிசிகள்

என்பதை மேற்கூறிய இரு குரூர நிகழ்ச்சிகளும் எடுத்துக் காட்டுகின்றன.

ஆனால் இன்றோ அரசாங்கமே பலவகை மதுபானங்களை விற்பனை செய்ய அனுமதி வழங்கியுள்ளது. மக்களின் பணத்திற்காக இவற்றை விற்று ஏழை எளிய மக்களின் வாழ்க்கையையே நாசம் செய்யும் இத்தகைய அரசாங்கங்கள், மக்களுக்காகவே தாங்கள் ஜனநாயக அரசுகளாகச் செயல்பட்டு வருவதாக விளம்பரப்படுத்தி வருகின்றன.

மதுவிலக்கு நம் நாட்டிற்கு அவசியம் என்று வலியுறுத்தி அறிவுரை கூறிய மகாத்மா காந்தியை வருடத்தில் 365 நாட்களில் இரண்டு நாட்கள்தான் நினைக்கின்றனர் - அதுவும் அரசியல் லாபத்திற்காக! ஒன்று மகாத்மாவின் பிறந்ததினம். மற்றொன்று மகாத்மாவின் இறந்ததினம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? சுயநலம் வாய்ந்த அரசியல்வாதிகளால் நடத்தப்படும் அரசாங்கங்களிடமிருந்து மக்கள் எவ்வித நன்மையையும் எதிர்பார்ப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். ஆதலால் ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் நல்வாழ்வு பணி மன்றம் என்ற பெயரில் ஓர் அமைப்பு உடனடியாக அமைக்கப்பட வேண்டும்.

ஜாதி, மதம், இனம் என்ற பாகுபாடின்றி, படித்தவர்கள், அனுபவம் வாய்ந்த பெரியோர்கள், இளைஞர்கள், பெண்கள் ஆகிய அனைவரும் இதில் இடம்பெற வேண்டும். எவ்வித விருப்பு வெறுப்புமின்றி, அவரவரது ஊர்களில் எந்தக் குடும்பத்திலாவது பிரச்சினைகள் ஏற்பட்டால், அத்தகைய பிரச்சினைகளில் நியாயமாகத் தலையிட்டு இந்தச் சேவை மையம் தீர்த்துவைக்க முயற்சி செய்யவேண்டும்.

குடிப்பழக்கம் உள்ளவர்களை இனியும் குடிக்காமல் தடுத்து நிறுத்துவதுடன், அதற்காக உள்ள மருத்துவச் சிகிச்சையும் அளிக்கவேண்டும். ஒவ்வொரு குடும்பத்தையும் ஆன்மிகத்தில் ஈடுபடச் செய்யவேண்டும். கட்டுப்பாடின்றி, வெறிபிடித்து அலையும் மனத்தை ஆன்மிகம் ஒன்றே கட்டுப்படுத்தும்.

ஆதலால் எனது அன்புமிகுந்த சகோதரிகள், சகோதரர்கள், பெரியோர்கள் ஆகியோரை மன்றாடி வேண்டிக்கொள்கிறேன். உங்கள் ஊரில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தின் நலனிலும் நீங்கள் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிறர் துன்பங்கள் அனைத்தும் நம்முடையதே என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். பிறர் துன்பப்படும்போது விலகி நிற்காதீர்கள். ஊராருக்கு நாம் துணை நின்றால், நமக்கு ஊரே துணை நிற்கும்! ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!


இதேபோன்று ஒவ்வோர் ஊரிலும் உள்ள திருக்கோயிலும் அந்தந்த ஊர் மக்களின் பூர்வீகச் சொத்தாகும். அதனையும் நீங்கள்தான் பராமரித்து வரவேண்டும்.

மதுப்பழக்கம் உள்ளவர்கள் மற்றும் இதர பலவீன முள்ளவர்கள் வாரந்தோறும் ஒரு குறிப்பிட்ட நாளில், மாலையில் திருக்கோயிலில் கூடி கூட்டுப்பிரார்த்தனை செய்து வரவும். நல்ல பலன் தெரியும். இதனால் பல குடும்பங்களின் துயர் தீரும்.

10

பெற்றோருக்குப் பெண்களால் பிரச்சினையா? தவிர்ப்பதில் ஜோதிடம் உதவி

திருச்சியைச் சேர்ந்த மிகப் பிரபல தொழிலதிபர் அவர். ஒரு மகன், ஒரு மகள் அவருக்கு. இரு குழந்தைகளுமே படிப்பில் கெட்டிக்காரர்கள். பெண்தான் மூத்தவள். அழகான வள். நல்ல குணநலன்கள் வாய்க்கப்பெற்றவள். சென்ற ஏப்ரல் மாதத்துடன் கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்பை முடித்து விட்டாள்.



பணப்பிரச்சினை இல்லை. அந்தஸ்திற்கேற்றவாறு மும்பையைச் சேர்ந்த மிகப் பிரபல நகை வியாபாரியின் இரண்டாவது பிள்ளையை மேற்கூறிய பெண்ணிற்கு வரனாகத் தேர்ந்தெடுத்தனர் பெற்றோர். பையனைப் பிடித்திருந்ததோ இல்லையோ - அவரது பணத்தை அனைவருக்கும் மிகவும் பிடித்திருந்தது. அரண்மனை போன்ற வீடு, பல கார்கள், எடுபிடி ஆட்கள் எனக் குறுநில மன்னர்போல் இருந்தார் பிள்ளையின் தந்தை. பெண் வீட்டாருக்கு அளவற்ற மகிழ்ச்சி.

பெற்றோர், பெண்ணிடம் தங்கள் விருப்பத்தைக் கூறியபோது - தங்களைவிட அந்தஸ்திலும், ஐஸ்வர்யத்திலும் பல மடங்கு உயர்ந்தவர்களாக இருந்ததால் பெண் தயங்கினாள். பெற்றோரின் வற்புறுத்தலின்பேரில் பெண் பார்க்க இசைந்தாள். பெண் பார்க்கும் படலமும் முடிந்து, பிள்ளை வீட்டினர் தங்கள் திருப்தியை வெளிப்படுத்தினர். பெண்ணிற்கோ குழப்பம். பிள்ளை வீட்டினர் ஒவ்வொரு வரும் கோலார் தங்கச் சுரங்கத்தையே தங்கள் மேல் போர்த்திக்கொண்டு வந்தது போலிருந்தது அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகள். பெண்ணின் மனமோ அச்சத்தினால் எங்கோ வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

பெண் படித்தவள். பண்புள்ளவள். அடக்கமானவள். வாழ்க்கையில் ஒரு பெண்ணின் மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கையை இந்தத் தங்க நகைகளும், அளவற்ற செல்வமும் கொடுக்க முடியாது என்ற உண்மையை அறிந்திருந்தாள் அப்பெண். தன் பெற்றோர் ஏன் இவ்விதம் பணத்தையே பிரதானமாகக் கருத்தில் கொண்டு இந்த வரனைத் தன் மேல் வலுக்கட்டாயமாகத் திணிக்கிறார்கள் என்பதை அனுபவமற்ற அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. தனது நன்மைக்காகத்தான் பணக்கார இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் தன் தந்தை என்பதை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

பையனை ஒருகணம் பார்த்தவுடனேயே அவள் தயங்கியது நியாயமே என்று உணர்ந்தாள். தன் வயதிற்கு அதிகமான அவனது தோற்றத்தை ஒரு விநாடிதான் பார்த்தாள் அந்தப்

புத்திசாலிப் பெண். பார்த்த அந்த ஒரு கணத்திலேயே மின்னலென ஒரு பொறி தட்டியது. பையன் ஒழுக்கமற்றவன் என்பதை அவள் உள்மனம் படம் பிடித்துக் காட்டியது.

பெண்ணின் சம்மதத்தைப் பொதுவாகக் கேட்டபடியே அவளது பெற்றோர் தங்கள் சம்மதத்தைப் பிள்ளை வீட்டினரிடம் கூறி நிச்சயதார்த்தத்திற்கும் நாள் குறித்துவிட்டனர். பெண்ணிற்கோ மனத்தில் குழப்பம். என்ன சொல்வது? எப்படிச் சொல்வது? சொன்னால் தன் பெற்றோர் ஏற்பார்களா? அதனால் தன் தாய்-தந்தையர் மனம் என்ன பாடுபடும்? - மனம் அலை பாய்ந்தது.

இவனை மணந்துகொண்டால் குரங்கு கை பூமாலையாக ஆகிவிடுவோமோ என்ற அச்சம் - பலவித உணர்ச்சி அலைகள் மோதிச் செயலற்றுக் குழம்பிப்போய் தன் அறையில் உட்கார்ந்துவிட்டாள். பிறகு பக்குவமாகத் தன் தாயிடம் சொல்லிக்கொள்ளலாம் என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொண்டாள் உலகமறியாத அந்த அபலைப்பெண். ஆனால் அவள் தந்தையோ விரைவாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். நிச்சயதார்த்தத்துக்கு நாள் குறிப்பிடப்பட்டு, நிச்சயதார்த்தமும் நடந்துவிட்டது, மூன்று மாதங்களுக்கு முன்பு.

இதற்கிடையில் மும்பையிலுள்ள பெண்ணின் உறவினர் மூலம் அந்தப் பையனின் பழக்கவழக்கங்கள் தெரிந்தன. பெண் இறுதி முடிவெடுத்துவிட்டாள். அந்தப் பையனை விவாகம் செய்துகொள்வதில்லை என்று தன் தாயிடமும் கூறிவிட்டாள்.

பெண்ணின் தந்தைக்கு அடக்கமுடியாத கோபம் - நிச்சயதார்த்தமாகிவிட்டதால். திருமண நாள் நெருங்கிக் கொண்டிருக்கையில் இப்போது அதை எவ்விதம் நிறுத்துவது? பிள்ளை வீட்டாரிடம் என்ன காரணத்தைக் கூறுவது? சமாதானமாகவும், சிறிது கோபத்துடனும் பெண்ணிடம் பேசிப் பார்த்தார். பெண் உறுதியாக இருந்தாள் தனது முடிவில். பிள்ளை வீட்டாரிடம் விஷயத்தைக் கூறியபோது எரிமலையாக வெடித்தனர்.

ஏராளமான உறவினர்கள், பிரபல செல்வந்தர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிச்சயதார்த்தம் அது. இத்தகைய நிலையில் இப்போது திருமணத்தை நிறுத்துவதென்றால் பொங்கி எழுந்தனர். தங்களை வேண்டுமென்றே அவமானப்படுத்தியதாக மானநஷ்டம் கேட்டு வழக்குப் போடுவதாகப் பெண் வீட்டி னரை மிரட்டினர். பிரச்சினை இன்றுவரை தீர்ந்தபாடில்லை.

இந்நிலையில்தான் பெண்ணின் பெற்றோர் பெண்ணின் ஜாதகத்துடன் என்னிடம் வந்தனர். எதற்காகத் தெரியுமா? என்ன பரிகாரம் செய்தால் பெண் இந்த வரனையே மணக்கச் சம்மதிப்பாள் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவே. பிள்ளையின் ஜாதகத்தை டிகிரி சுத்தமாக ஆராய்ந்த நான், பெண் அந்த வரனை நிராகரித்தது நியாயம்தான் என்பதையும், ஆபத்திலிருந்து பெண் தக்க தருணத்தில் காப்பாற்றப் பட்டிருக்கிறாள் என்பதையும் அந்தப் பிள்ளையின் ஜாதகம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது என்பதை விளக்கினேன். பரிகாரம் செய்தாவது அந்த வரனுக்கு அந்த நல்ல பெண் ணைத் திருமணம் செய்துகொடுப்பது தவறு என்பதையும் அவர்களுக்கு எடுத்துக் கூறினேன். பரிகாரம் கூறுவதற்கும் மறுத்துவிட்டேன்.

தற்போது பிள்ளை வீட்டார் போட்ட மானநஷ்ட வழக்கு நீதிமன்றத்தில் நிற்கிறது. இந்த உண்மை நிகழ்ச்சியை நான் கூறவேண்டிய அவசியம் என்னவென்றால் பெண்ணிற்கு வரனை நிச்சயம் செய்வதற்கு முன்பு வரனின் ஜாதகத்தை முழுமையாகப் பரிசீலிக்கவேண்டும் என்பதை வலியுறுத்து வதற்காகவே. பிள்ளையின் ஜாதகத்தில் லக்கினம், பூர்வபுண்ணியம், சயனம், ஆயுள் ஆகிய நான்கு ராசிகளையும் ஜோதிடர்கள் மூலம் பிரித்து, ஆராய்ந்த பின்னரே நமது பெண்ணை ஒரு குறிப்பிட்ட வரனுக்குக் கொடுக்கலாமா, கூடாதா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். இத்தருணத்தில் தான் ஜோதிடம் என்ற அதியற்புதக்கலை நமக்குத் தக்க வழிகாட்டி. நமது பெண்ணின் வாழ்க்கையைக் காப்பாற்றி, மலர வைக்கிறது. வரனை நிர்ணயிப்பதில் பணம், அந்தஸ்து, படிப்பு, பதவி ஆகியவற்றை மட்டும் பார்த்தால் போதாது.

பிள்ளையின் ஒழுக்கத்தையும் பார்க்கவேண்டியது மிகவும் அவசியம்.

இந்தப் பிள்ளைக்கு நம் பெண்ணைக் கொடுத்தால் பெண் மகிழ்ச்சியாக இருப்பாளா என்பதைப் பெற்றோர்கள் ஜாதகத்தின்மூலம், முதலில் அறிந்துகொள்ள வேண்டும். அதன்பிறகே பிள்ளையின் ஜாதகத்தில் பாக்கிய, ஜீவன, லாப ஸ்தானங்களைப் பார்க்கவேண்டும். ஜோதிடம் என்ற கலை நமது பெண்களின் நல்வாழ்க்கைக்கு மிக மிக அவசியமாகும்.

தசவிதப் பொருத்தங்களில் வசியம், யோனி என இரண்டு பொருத்தங்கள் இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். இவை இரண்டும் எவற்றைக் குறிக்கின்றன? கணவன், மனைவிக்குள் ஒருவர் மீது ஒருவர் பரஸ்பர ஆசையுடனிருப்பதும், தாம்பத்திய சுகத்தின் உடல், மனநிறைவுகள் ஏற்படுவதையும் இந்த இரு பொருத்தங்களும் குறிப்பிடுகின்றன.

இதனைப் பெண்-பிள்ளை இருவரின் ஜாதகங்களின் மூலம் லக்கினம், பூர்வபுண்ணியம், சயனம் ஆகிய ஸ்தானங்களிலிருந்து மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் முன்கூட்டியே தெரிந்துகொள்ளலாம். அவ்விதம் தெரிந்து கொண்ட பின்தான் வரனை நிச்சயமாக்க வேண்டும். இதனை 'அர்த்த சாஸ்திரம்' மிக அற்புதமாக விளக்கியுள்ளது. முக்கியமாக, பெண்ணைப் பெற்றுள்ள வாசக அன்பர்கள் இதனை நினைவில் வைத்துக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.


எப்போதாவது ஒரு வரனைத் தீர்மானிப்பதில் குழப்ப மிருந்தால் உடனடியாகத் திருக்கோவிலூர், மணம்பூண்டி அருகில் உள்ள ஸ்ரீ ரகோத்தமதீர்த்தர் மகானின் ஜீவ பிருந்தாவனத்தைத் தரிசித்துவிட்டு வரவும். உடனடியாகக் குழப்பம் நீங்கி, மனம் தெளிவு பெற்று, குறிப்பிட்ட அந்த வரனுக்குப் பெண்ணைக் கொடுக்கலாமா, வேண்டாமா என்ற சஞ்சலம் நீங்கும்.

11

அவன் அணைத்தால் அழிப்பவர் யார்? அவன் சினந்தால் காப்பவர் யார்?

தற்போது நடைபெறும் கலியுகத்தில் இறைவனின் கருணையைப் பெறுவது மிகவும் எளிது. அவனது நாமத்தை, ஒருமுறை கூறிவிட்டால் போதும். நமக்கு அடிமையாகி விடுகின்றான்.

இத்தனை எளியவனாகத் தன்னைச் செய்துகொண்டு எந்த விநாடியும் நமக்கு உதவக் காத்திருந்தும் அவனிடம் நாம்



முழு நம்பிக்கையையும் வைப்பதில்லை. மனிதனை நம்பு கிறோம். ஆனால் தெய்வத்தை நம்புவதில்லை.

எத்தகைய கொடிய துன்பமானாலும், அவனது திருவருட்கருணை இருப்பின், நிச்சயமாக அந்தத் துன்பத்தைத் தீர்த்து வைப்பான். இதனை எமக்கு வரும் ஏராளமான கடிதங்கள் உறுதி செய்கின்றன. தீராது என மருத்துவ நிபுணர்கள் கூறிய பல நோய்கள் பூரண குணமாகி, பக்தியின் சக்தியைப் பறைசாற்றி வருகின்றன. எமக்கு வரும் கடிதங்கள், இரண்டு உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. ஒன்று - உலகின் செல்வங்கள் அனைத்தையும் கொடுத்தாலும்கூட மனநிம்மதியையும் மகிழ்ச்சியையும் அந்தச் செல்வத்தினால் எந்தச் சந்தையிலும் விலைக்கு வாங்கமுடியாது! இரண்டாவது உண்மை - பகவானின் கருணையும், துணையும் இருப்பின், தீராது என நினைக்கும் துன்பங்களும்கூட ஒரே விநாடியில் நீங்கிவிடும் என்பதே.

ஆதலால் கிரக தோஷங்களினால் எத்தகைய கொடிய துன்பங்கள் ஏற்பட்டாலும் இறைவனின் மீது நாம் நம்பிக் கையை இழக்கலாகாது. உலகில் எதை இழந்தாலும் இறை வனின் துணையை மட்டும் எத்தகைய நிலையிலும் இழக்கக் கூடாது. எவ்விதம் வாழ்ந்தால் இறைவனின் கருணையை இழக்காமல் நல்வாழ்வினைப் பெறமுடியும் என்று மிகப் புராதனமான அரிய நூல்களில் நமது முன்னோர்கள் கூறி யுள்ளனர். சுருக்கமாகக் கூறவேண்டுமென்றால், இறைவனுக் குப் பிடித்ததை மட்டுமே செய்யவேண்டும். அவனுக்குப் பிடிக் காததைத் தவிர்க்கவேண்டும் என்பதே நம் முன்னோர்களின் அறிவுரையாகும்.

நமது நாட்டின் மகா புருஷர்கள் அருளியுள்ள தர்ம நூல்களே (வாழ்க்கை நெறிமுறை நூல்கள்) தர்மசாஸ்திரம் எனப்படுகிறது. இது ஏதோ ஒரு வைதீக சம்பந்தமான புத்தகம் என்று பலர் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். உண்மை என்னவென்றால், இந்த ஒழுக்க விதிமுறைகளை நாம் ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால் வாழ்க்கையில் பெரும்பாலான துன்பங்களை அடியோடு தவிர்க்கமுடியும் என்பதே.

"வாடிய பயிரைக் கண்டு வாடினேன்!"

அனைத்து உயிர்களுக்கும் அன்பு காட்டி அருளிய வள்ளலார் ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிகள், ஒருசமயம் புவனகிரி

வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது சாலையின் இருமருங்கிலும், மழையில்லாததால், பூமி வறண்டு, பயிர்கள் வாடி வதங்கியிருந்தன. நமக்கு உயிர் அளிக்கும் செழுமையான இப்பயிர்கள், அவற்றிற்கு இன்றியமையாததான தண்ணீர் கிடைக்காததால் வாடி வதங்கித் துன்புறுவதைக் கண்டு மனம் வருந்தினார் வள்ளலார். சாதாரணப் பயிர்கள் வாடி வதங்கித் துன்புறுவதைக்கூட காணச் சகியாத அன்புள்ளம் கொண்டவர் அவர். அன்பினால் பெறமுடியா தது எதுவும் இல்லை. அன்பில்லாத வாழ்க்கை, உயிரில்லாத உடல் போன்றதாகும். அன்பு இருக்குமிடத்தில் ஆண்டவன் இருப்பான். ஆதலால் அனைத்து உயிர்களிடத்திலும் அன்புடன் இருப்பின் ஆண்டவன் நம்மைத் தேடி வருவான்.

'வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்;
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என் நேர்உறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்(சு) இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்'

- வள்ளலார்

சாதாரண பயிர்கள் வாடுவதைக் கண்டபோதே வள்ள லாரின் மனம் துடித்துப்போயிற்று. அவ்விதம் என்றால், நமக்குப் பலவகைகளிலும் உழைத்துப் பயனளித்து வரும் பிராணிகளிடம் நாம் அன்பு கொள்ள வேண்டியது கடமையல்லவா! மற்ற உயிரினங்களிடம் அன்பு காட்டு வதனால் ஆண்டவன் திருவுள்ளம் மகிழ்கிறான்.

உடலாலும் உள்ளத்தாலும் தூய்மை!

அன்பிற்கு அடுத்தபடியாக நாம் இறைவனின் திருவருளைப் பெற மனத்தில் தூய்மையான எண்ணங்கள் மட்டுமே வளரவேண்டும். உள்ளத்தின் தூய்மை உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும். உள்ளத்தில் களங்கமேற்பட்டால் ஆரோக்கியம் கெடும். உடல் வலுவாக இருந்தால்தான் இறை வனுக்குப் பணியாற்ற முடியும். திருத்தலங்களுக்குச் சென்று வரமுடியும். சிறுவயது முதற்கொண்டே குழந்தைகளின் மனத்தில் நல்ல கருத்துகளைப் பதியவைத்தல் அவசியம். துருவன், பிரகலாதன், ஞானசம்பந்தன், சண்டேஸ்வரன்

போன்ற குழந்தைகளின் பக்திக் கதைகளைக் குழந்தைகளுக்குச் சொல்லித்தருவது அவசியம். சிறு வயதிலேயே நம் குழந்தைகளின் மனத்தில் பக்தி என்ற விதையை ஊன்றிவிட வேண்டும். அவர்கள் வளரும்போது பக்தியும் ஒரு மிகப்பெரிய விருட்சமாக அவர்கள் மனத்தில் வேரூன்றி வளர்ந்துவிடும்.

இத்தகைய பக்தி என்னும் விருட்சத்தைத் தீய எண்ணங்களாகிய நச்சுப்பூச்சிகள் பாதித்துவிடாமல் பார்த்துக் கொள்வது பெற்றோர்களின் கடமையாகும். தற்காலத்தில் பல பெற்றோர்கள், பல காரணங்களினால், அதிகச் சிரத்தை எடுத்துக்கொள்வதில்லை. முக்கியமாக, கணவன்-மனைவி இருவருமே வேலைக்குச் செல்லும் குடும்பங்களில், அவர்களது அறிவுரைகளும் வழிகாட்டுதலும் குழந்தைகளுக்குக் கிடைக்காமலேயே போய்விடுகின்றன. இத்தகைய சூழ்நிலையைக் கூடியவரையில் பெற்றோர்கள் தவிர்க்கவேண்டியது அவசியமாகும்.

தினமும் செல்லுங்கள் திருக்கோயிலுக்கு!

தினமும் காலை அல்லது மாலை, வசதிக்கு ஏற்ப ஒரு முறையாவது குழந்தைகளுடன் அருகில் உள்ள திருக்கோயிலுக்குச் சென்று தரிசித்துவிட்டு வருவது மிகவும் அவசியம். நமது மனத்திலும், நம் குழந்தைகளின் உள்ளங்களிலும் வேரூன்றித் தழைத்துவரும் ஆன்மிகச் சிந்தனைகளுக்குத் திருக்கோயில் தரிசனம் உரம் போன்று உதவும்.

கட்டுப்பாடான வாழ்க்கை

தற்காலத்தில் ஏராளமான இளைஞர்கள், தாங்கள் கைப்பிடித்த மனைவியுடன் சேர்ந்து வாழ்வதற்கு விருப்பப்படுவதில்லை. அவர்களை ஏதாவது காரணத்தைக் காட்டி பிறந்தகத்திற்கு அனுப்பிவிடுகின்றனர். இத்தகைய மனப்பான்மை தற்கால இளைஞர்களிடையே வெகு வேகமாகப் பரவி வருகிறது. இதற்குக் காரணம், மேலைநாடுகளின் கட்டுப்பாடற்ற பழக்கவழக்கங்களே காரணமாகும். இளம் வயதில் கட்டுப்பாடாக இருந்தால் வாழ்க்கையின் சுகங்களை முழுமையாகவும், நீண்டகாலமும் அனுபவிக்கலாம். உடல் கெட்டால் சுகம் ஏது?

துன்பம் வரும்போதுதான் துணிவும் வேண்டும்!

சமீபத்தில் சென்னை பொதுமருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஒரு நோயாளியைப் பார்க்கச் சென்றிருந்தேன்.

அவர் சேலத்தைச் சேர்ந்தவர். இளைஞர். சிறுதொழில் ஒன்றை சேலத்தில் நடத்தி வருகிறார். மனைவியும் மூன்று வயதில் குழந்தையும் உள்ளனர்.

'குமுதம் ஜோதிடத்'தின் மீது தீவிரப் பற்று உடையவர். என்னைப் பார்க்கவேண்டுமென்று மருத்துவமனையிலிருந்து நண்பர் மூலம் சொல்லி அனுப்பியிருந்தார். நோயுற்ற நிலையிலும் அன்புடன் அழைக்கும்போது நான் எவ்விதம் மறுப்பது? ஆதலால் சென்றிருந்தேன். எனது இருகைகளையும் பற்றிக்கொண்டு, 'ஐயா! நான் பிழைத்துவிடுவேனா?' என்று கண்ணீர் விடுத்துக் கேட்டார். 'மனம் தளர்ச்சி அடைய வேண்டாம். விரைவில் குணமடைந்து வந்துவிடுவீர்கள்' என்று பரிகாரமும் கூறி விடைபெற்றேன். அவர் மனம் நிறைந்ததை, அவரது பார்வை எடுத்துக்காட்டியது. தற்போது அவர் பூரண குணமாகி வீடு திரும்பிவிட்டதாக என்னிடம் தெரிவித்தார்.

எத்தகைய துன்பத்திலும் இறைவன் மீது நாம் நம்பிக்கை வைக்கவேண்டும். கந்துவட்டிக் கடனா? உத்தியோகத்தில் பிரச்சினையா? கணவனால் கொடுமையா? தீராதென்று தோன்றும் நோயா? - எதுவானாலும் மனம் கலங்க வேண்டாம்.

தாயும் தந்தையுமாகி சிந்தையெல்லாம் நிறைந்து, சுற்றமும் சொந்தமுமாகி துணை நிற்பவன் இறைவன்.

அந்தப் பரம்பொருள் அணைத்தால் நம்மை யாரால் அழிக்க முடியும்? அவன் சினந்தால் காப்பவர்தான் யார்? ஆதலால் நல்வாழ்க்கை பெற அவன் துணையைப் பற்றிக்கொள்ளுங்கள். போதும். இன்பம் 'நம்' வீடுதேடி வரும்.

12

உயர்ந்தவன் யார்? தாழ்ந்தவன் யார்?

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்துப் பிராணிகளிலும் மனிதன் ஒருவனுக்கே 'தான்' என்ற அகம்பாவம் உள்ளது. அனைவரிலும் தானே உயர்ந்தவன் என்று ஒவ்வொருவரும் நினைக்கின்றனர். ஆனால், அனைவருமே உயர்ந்தவர்களாக இருந்துவிட முடியுமா? கோடிக்கணக்கான மக்களில் ஒரு சிலரே, உயர்ந்தவர்களாக ஆகமுடியும். அப்படியானால், இவ்வுலகில் உயர்ந்தவர் யார், தாழ்ந்தவர் யார் என்ற சர்ச்சையும் ஏற்படுகின்றது அல்லவா?





கண்டவர் மனதைக் கொள்ளை கொள்ளும் கோகுல பாலன் - ஸ்ரீ கண்ணன்

படித்தவன், தானே உயர்ந்தவன் என நினைக்கிறான்.

பணக்காரன், தான்தான் உயர்ந்தவன் என நினைக்கிறான்.

பலசாலி, தான் மட்டுமே உயர்ந்தவன் என நினைக்கிறான்.

முதலாளி, தான் வைத்ததே சட்டம் என நினைக்கிறான்.

அரசியல்வாதி, தன்னைவிட உயர்ந்தவன் இல்லை என இறுமாப்பு கொள்கிறான்.

அழகான மங்கை, உலகில் தானே உயர்ந்தவள் என எண்ணுகிறாள்.

மாவீரன், உலகங்கள் அனைத்துமே தன் காலடியில் என்று கர்வம் கொள்கிறான்.

இப்படி ஒவ்வொருவருமே தான் மட்டும்தான் உயர்ந்தவர் என்று எண்ணுகிறார்கள்.

ஆனால், உண்மையிலேயே இவ்வுலகில் உயர்ந்தவன் யார்?

உயர்ந்தவன் யார் என்ற கேள்வி எழுந்தவுடன், தாழ்ந்தவன் யார் என்ற வினாவும் எழுகின்றது அல்லவா!

இதற்கு பதில் கூறுகின்றன மிகப் பழைமையான நமது நீதி, தர்ம நூல்கள்.

நமது பாரத புண்ணிய பூமியை புனிதமாக்கிய மகான் களும், மகாபுருஷர்களும் தங்களது சீரிய நடத்தையினால் இவ்வுலகில் எதனால், எவ்விதம் மனிதன் உயர்ந்தவனாக ஆகமுடியும் என்பதையும் காட்டி அருளியிருக்கிறார்கள்.

மகாத்மாவான வியாஸர், ஒரே வரியில், எவன் உயர்ந்தவன் என்பதைக் கூறியிருக்கிறார். 'எவன் 'மமதை' (கர்வம்) இல்லா மல் இருக்கிறானோ, அவனே உயர்ந்தவன்' என அருளி யுள்ளார்.

ஒவ்வொரு மனிதனும் தனது ஒழுக்கம், பண்பு, தூய்மை, பக்தி, அடக்கம் ஆகியவற்றால் மட்டுமே உயர்ந்தவனாகிறான். பதவியினாலோ, பணத்தினாலோ, செல்வாக்கினாலோ, அதிகாரத்தினாலோ, பிறப்பினாலோ எந்த மனிதனும் உயர்ந்தவனாக ஆகமுடியாது. இதற்கு ஏராளமான உதாரணங் கள் நமது இதிகாசப் புராணங்களிலும், நீதி நூல்களிலும் உள்ளன.

வைணவ மகாபுருஷரான ஸ்ரீமத் ராமானுஜர், எப்பொழு தெல்லாம் திருப்பதி மலையில் வேங்கடவனைத் தரிசிப்பதற்

காகத் தங்கியிருந்தாரோ, அப்பொழுதெல்லாம் அத்திருத் தலத்திற்குத் தரிசனம் செய்யவரும் அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் செய்வதுண்டு.

இவ்விதம் அவர் ஒரு சமயம் தினமும் அன்னதானம் செய்து வேங்கடவனையும் பூஜித்து வந்தார். சில காலம் திருவேங்கடத்தில் தங்கியிருந்த பிறகு, அவர் க்ஷேத்திராடன மாக வேறொரு திருத்தலத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந் தார். புறப்படுவதற்கு முன்பு அன்னதானத்திற்குத் தேவையான பொருட்களைக் கொடுத்தவர்களுக்கு அந்தப் பொருட்களுக் காகக் கொடுக்க வேண்டிய பொற்காசுகளைக் கொடுத்தார்.

அவர் அன்னதானம் செய்தபோதெல்லாம், திருமலையில் தயிர், மோர் விற்கும் மூதாட்டியொருவர் அவர்பால் கொண்டி ருந்த பக்தியினால் இலவசமாகவே மோர், தயிர், பால் ஆகியவற்றைத் தன் சக்திக்கு இயன்றவாறு தினமும் கொடுத்துவந்தார்.

ஸ்ரீமத் ராமானுஜர் அனைவருக்கும் அவரவர்களுக்கு அளிக்க வேண்டிய பணத்தைக் கொடுத்தபிறகு புறப்படத் தயாரானார். அப்போது, அந்த மூதாட்டி வந்து ஸ்ரீமத் ராமானுஜரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நின்றாள்.

அவளைக் கண்ட ஸ்ரீமத் ராமானுஜர், ‘அம்மணி! தங்களுக்குச் சேர வேண்டியது என்ன?’ என்று கேட்டார். உடனே அந்த மூதாட்டி, ‘ஐயனே! எனக்குப் பணம் எதுவும் வேண்டாம். எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் பரமபதம்தான் வேண்டும். அதனைத் தாருங்கள்’ என்றாள்.

ஸ்ரீமத் ராமானுஜரோ, ‘தாயே! அதனைத் தரவல்லவன் இந்தத் திருக்கோயிலின் உள்ளே எழுந்தருளியிருக்கிறான். அங்கு போய்க் கேளுங்கள்’ என்று கூறினார். அவரது திருவாக்கினை அப்படியே ஏற்று, அந்த மூதாட்டியும் திருக்கோயிலினுள் சென்று எம்பெருமானைப் பார்த்து, தனக்குப் பரமபதத்தை அளிக்கும்படி வேண்டினாள். அதுவரையில் மௌனமாகத் தரிசனம் அளித்துவந்த வேங்கடவன், ‘அம்மையாரே! பரமபதத்தைத் தருவதற்கு எனக்குச் சக்தியில்லை! இந்தச் சந்நிதிக்கு வெளியே இருக்கும் ராமானுஜனே அதனை அளிக்க வல்லவன். அவனிடமே போய்க் கேளுங்கள்’ எனத் திருவாய் மலர்ந்தருளினான்.

வெளியே வந்த அந்த மூதாட்டி, ஸ்ரீமத் ராமானுஜரின் திருவடிகளை வணங்கி, எம்பெருமான் கூறியதை எம்பெருமானாரிடம் கூறினாள். எம்பெருமானார் ஸ்ரீமத் ராமானுஜர், ஈரேழு பதினான்கு உலகிற்கும் பிரபுவான அந்தத் திருவேங்கடமுடையான் தனக்களித்த ஏற்றத்தைக் கண்டு மனம் நெகிழ்ந்து திருச்சந்நிதியினுள் ஓடிச் சென்று, அவனது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, கண்களில் கண்ணீர் பெருக, 'ஐயனே! இந்த ஏழைக்கா இத்தகைய ஏற்றத்தைத் தந்து அருள் புரிந்தாய்? யானும் இதற்குத் தகுந்தவன் ஆவேனோ?' என்று உள்ளம் நெகிழ்ந்து, தன் கண்ணீரினால் திருவேங்கடத்து இன்னமுதனின் திருப் பாதங்களுக்குத் திருமஞ்சனம் (அபிஷேகம்) செய்து, உள்ளம் பரவசமானார்.

அப்போது வேங்கடவனும், 'ராமானுஜரே! என்னைவிட என் பக்தனே உயர்ந்தவன் என்பதை உலகிற்கு காட்டுவதற்காகவும் ஆச்சாரியன் (குரு) மூலமே என்னை எளிதில் அடைய முடியும் என்பதைக் காட்டுவதற்காகவுமே இவ்வாறு நிகழ்த்தினேன்' எனக் கூறி அருளினார்.

ஸ்ரீமத் ராமானுஜரும் அந்த மூதாட்டிக்கு வைகுண்டப் பதவி அளிக்கும்படி வேங்கடவனை வேண்ட, அந்த மூதாட்டியும் பிறவித்துயர் நீங்கி முக்தியடைந்தாள். தன்னிடம் வந்து பலவற்றையும் பெற்றுச் சென்ற நூற்றுக்கணக்கான பேரில் ஒரு சாதாரண பால், தயிர், மோர் விற்கும் மூதாட்டி, இறைவனின் திருவருள் பெற்று, எந்த அளவிற்கு உயர்ந்து விட்டாள் என்பதை நினைத்து நினைத்து ஸ்ரீமத் ராமானுஜரின் உள்ளம், பகவானின் ஸௌலப்யத்தை (கருணையும் எளிமையும்) நினைத்து நினைத்துப் பூரித்தது.

தனது நூற்றியிருபதாவது வயதில் ஸ்ரீமத் ராமானுஜரின் திருமேனி (உடல்) வயோதிகத்தினால் பலவீனமடைந்து தளர்ந்தது. இருப்பினும், தினமும் தென் திருக்காவிரியில் நீராடி, அரங்கனையும், தாயாரையும் தரிசிப்பதற்குத் தவறியதில்லை. அவ்விதம் தினமும் அவர் காவிரி நதியில் நீராடப் போகும்போது, பிறவியினால் உயர்ந்தவராக அக்காலத்தில் கருதப்பட்ட ஒரு பெரியவரின் தோளைப் பற்றிக்கொண்டு செல்வார்.

நீராடி, தனது சந்தியாவந்தனம் போன்ற கடமைகளை முடித்துக்கொண்டு, அரங்கனின் திருக்கோயிலுக்கு வரும்போது, அக்காலத்தில் பிறப்பினால் தாழ்ந்தவர் எனக்

கருதப்பட்ட ஒரு பெரியவரின் தோளைப் பற்றிக்கொண்டு வருவார். அந்த இருவருமே அரங்கனிடமும், ஸ்ரீமத் ராமானுஜரிடமும் அளவற்ற பக்தி பூண்டவர்களாக இருந்தனர். அனைவரும் உயர்ந்தவர்களே என்பதைக் காட்டுவதற்காகவே ஸ்ரீமத் ராமானுஜர் இவ்விதமான நடைமுறையைக் கடைப்பிடித்து வந்தார்.

ஆதலால், ஒழுக்கம், பண்பு, நேர்மை, மனம், வாக்கு, சரீரம், தூய்மை, இறைபக்தி ஆகியவற்றில் உயர்ந்தவர்கள் மட்டுமே உண்மையில் உயர்ந்தவர்களாக ஆகமுடியும் என்பதை ஸ்ரீமத் ராமானுஜர், சமர்த்த ராமதாசர், பக்தை மீரா போன்ற மகான்களும், பக்தைகளும் தங்கள் உபதேசங்களில் கூறி அருளியுள்ளனர்.

ஆதலால் ஒவ்வொருவரும் இந்த மானிடப்பிறவியின் உண்மையான நோக்கத்தை உணர்ந்து கொள்வது அவசியம். நம் ஒவ்வொருவருக்கும் இறைவன் இப்பிறவியை அளித்திருப்பது நற்செயல்களைச் செய்து அவனது திருவருளுக்கு பாத்திரர்களாக ஆக வேண்டும் என்பதற்காகத்தான். ஆதலால், பாவச் சிந்தனைகளை விட்டு, அனைவரும் தர்மநெறியிலிருந்து வழுவாது வாழவேண்டும். ஆச்சார்யனின் (குரு) பெருமை அளவற்றது. தூய்மையான நடத்தையின் மூலம் ஆச்சார்யனின் கருணையைப் பெற்று, அதன்மூலம் இறைவனின் திருவருளைப் பெற்றவர்களே உயர்ந்தவர்கள்.

தான்தான் உயர்ந்தவன் என்ற எண்ணம் எவருக்கும் கூடாது. அகந்தை அழிக்கும். அடக்கம் உயர்த்தும்.

13


நாளும் கோளும் நன்மையே செய்யும் – நாம் நாடினால்!

காலையில் கதிரவனின் கதிர் பட்டதும் கமலம் மலர்கிறது.

மாலையில் மதிமுகம் கண்டதும் குமுதம் இதழ் விரித்து, புன்னகை பூக்கிறது!

பூக்கள் பூத்துக் குலுங்கி, வசந்த காலத்தை வரவேற்கின்றன!

அலைகள் ஆர்ப்பரித்து எழுகின்றன - வானத்தில் வெண்ணிலவு எழும்போது!



கார்காலத்தில் வானம் பொழிகின்றது மழையை - அமுதமாக!

பருவங்கள் நிகழ்வது கிரகங்களின் சுழற்சியினாலேயே!

எங்கோ கோடிக்கணக்கான மைல்களுக்கப்பால் வானவெளியில் சுழன்று கொண்டிருக்கும் கிரகங்களுக்கும், நாம் வாழ்ந்துவரும் பூமிக்கும் எத்தகைய நெருங்கிய தொடர்பு! இந்த அதிசயத்தைத்தான், வானியலை அடிப்படையாகக் கொண்ட ஜோதிடக் கலையும் விளக்குகிறது.

நமது அன்றாட வாழ்க்கையின் மிக நுணுக்கமான அம்சங் களைக் கூட நவக்கிரகங்கள் கட்டுப்படுத்துவதை, சரியான அளவோடு அறிந்து கொள்ளவும், அதற்கேற்ப நமது அன் றாடச் செயல்பாடுகளைத் திட்டமிட்டு வகுத்துக்கொள்ளவும் உதவுகிறது இம்மாபெரும் கலை. அந்தக் காலத்தில், தினமும் காலையில் எழுந்தவுடன் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு ஸ்நானம் செய்தபிறகு அன்றாட இறைபூஜையைச் செய்துவிட்டு, பித்ருக்களை மனத்தால் வணங்கி அவர்களது ஆசியைப் பெற்ற பின், முதலில் பார்ப்பது பஞ்சாங்கத்தின் மூலம் அன்றைய கிரக நிலைகளையே!

ஒரு குறிப்பிட்ட தினத்தில் கிரகநிலைகள் அனுகூலமாக இருப்பின், அவர்களது முக்கியமான காரியங்களை அன்றே வைத்துக்கொள்வார்கள். அன்றைய கிரகநிலைகள் பாதகமாக இருப்பின் மிக முக்கிய முயற்சிகளையும் முடிவுகளையும் ஒத்திப்போட்டு விடுவார்கள். இதற்குக் காரணம், முக்கியமான கிரகங்களின் சுபபலம் இல்லாமல் நம்மால் எதையும் சாதிக்கமுடியாது என்ற உண்மையே ஆகும்.

ஒவ்வொரு கிரகமும் நமது வாழ்க்கையில் குறிப்பிட்ட அம்சங்களின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. உதாரணமாக, சந்திரன் மனோகாரகராகும். அதாவது நமது சுபாவம்(Nature), இயற்கை குணம், கொள்கை, அறிவுத்திறன், கிரகிப்புச் சக்தி, மனநிலை ஆகியவற்றை அளிப்பவரும் நிர்ணயிப்பவரும் சந்திரனே.

மேலும் சில கிரகங்களும் தமது வீர்யத்தினால் இந்தச் சந்திரனின் பலத்தை அதிகப்படுத்தவோ அல்லது குறைக்கவோ முடியும். ஓர் இளைஞன் பெண்களின் பின்னால் அலைகிறான். மற்றொருவன் 'சம்சாரமே வேண்டாம், சந்நியாசியாகப் போகிறேன்' என்று கூறுகிறான். இது ஏன்? ஒரு மாணவன்

பாடத்தைப் பார்த்தவுடனேயே கிரகித்துக் கொண்டு விடுகிறான். மற்றொருவனுக்குப் புத்தகம் என்றாலே 'அலர்ஜி!' இந்த முரண்பாடுகள் ஏன்? இதைத்தான் ஜாதகத்தில் சந்திரனின் நிலை எடுத்துக்காட்டுகிறது. சந்திரனுக்குச் சுக்கிரனின் சேர்க்கை அல்லது ஆதிக்கம் பலமாக இருப்பின் அத்தகைய ஜாதகர்களுக்கு உடல் உணர்ச்சி சம்பந்தமாக அளவிற்கு மீறிய விருப்பம் ஏற்படும். இதேபோன்று ஜாதகத்தில் சூரியன் உச்சநிலையில், சுப ஆதிபத்யம் பெற்று, பாவக்கிரகங்களின் சேர்க்கை இல்லாமலிருந்தால் அத்தகைய அன்பர்களுக்கு ஆத்மபலம் சிறப்பாக இருக்கும்.

மனிதனின் அனைத்துத் திறமைகளும் இரண்டிற்குள் அடங்கியுள்ளன. ஒன்று உடல், மற்றொன்று மனம்.

இந்த உடல், மனம் இரண்டும் நவக்கிரகங்களின் கட்டுப் பாட்டிற்குள் இயங்குவதுடன் அன்றாடக் கிரகநிலைகளின் அடிப்படையில் இந்தத் திறன்கள் குறைந்தோ அல்லது அதிகரித்தோ அவ்வப்போது நிகழ்கின்றன.

இவ்விதம் நமது உடல் மற்றும் மனநிலைகளின் திறன்கள் எந்த அளவிற்கு ஒரு குறிப்பிட்ட தினத்தில் குறைந்திருக் கிறதோ அல்லது அதிகரித்திருக்கிறதோ, அதனை நாம் தெரிந்துகொண்டால் அதற்கேற்ப குறிப்பிட்ட தினத்தில் முக்கிய முடிவு அல்லது முயற்சிகளை மேற்கொள்ளலாமா அல்லது கூடாதா என்பதைத் தீர்மானித்துக்கொள்ளலாம். ஏனெனில் மனத்திறன் அதிகமாக இருக்கும்போது நாம் எடுக்கும் முடிவுகள் சரியாக இருக்கும்.

இவ்விதம் மாறி மாறி வரும் திறமைகளுக்கேற்பவே நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் வெற்றியும், தோல்வியும் அவ்வப்போது ஏற்படுகின்றன. சில தருணங்களில் மிகக் கடுமையான பொறுப்புகளையும் எளிதாக நிறைவேற்றி விடுகிறோம்.

சில சமயங்களில் மிகவும் சாதாரணமான விஷயங்களுக் குக் கூடக் கடின உழைப்பும், வீண் அலைச்சலும் ஏற்படு கின்றன. நாம் நாமாகத்தான் இருக்கிறோம் என்றும். ஆனால் நமது திறமைகள் மட்டும் சில தருணங்களில் குறைந்தும், மற்ற தருணங்களில் அதிகரித்தும் விடுகின்றன. கல்வி அறிவு அற்றவன் கோடிக்கணக்கில் பணம் சம்பாதிப்பதும், கல்வி அறிவும், திறமையும் கொண்டவன் வறுமையில் வாடுவதற்கும்,

ஒரு மாவீரன் போரில் தோற்பதற்கும், கோழை யுத்தத்தில் வெற்றி காண்பதற்கும் கிரகநிலைகளே காரணமென சாணக்கியரின் 'அர்த்த சாஸ்திரம்' விளக்கியுள்ளது.

ஜெனன காலத்தில் தன, பாக்ய, லாப ஸ்தானங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் தொழிலில் எத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டாலும் மிகக் கடினமான பண நெருக்கடியும், கடன் தொல்லைகளும் ஏற்படும் என ஜோதிடக்கலை விளக்கி யுள்ளது.

ருண ஸ்தானமான 6-ம் இடத்திற்கு தோஷம் அமைந்திருப்பின் இவர்கள் வாங்கும் கடன் எளிதில் தீராது. அதுமட்டுமா? அது வளரவும் வளரும்! இவற்றை முன் கூட்டியே அறிந்து எந்தெந்தச் சமயங்களிலெல்லாம் கிரகநிலைகள் அனுகூலமாக இல்லையோ அப்போதெல்லாம் நாம் எச்சரிக்கையாக இருப்பதுடன் தகுந்த, எளிய பரிகாரங்களும் செய்தால் அந்தத் துன்பங்களை எளிதில் கடந்துவிடலாம்.

இதுபோன்றே, விவாகத்திற்கு, பெண் அல்லது பிள்ளை களுக்குத் தக்க வரனைத் தேர்ந்தெடுப்பதற்கு ஜோதிடம் உதவுகிறது. உதாரணமாக, லக்கினம், பூர்வபுண்ணியம், புத்திரம், சயனம், ஆயுள் ஆகிய ஐந்து இடங்களையும் ஜோதிடக் கலையின் விதிகளின் மூலம் ஆராய்ந்து பார்த்தால் இந்தப் பிள்ளைக்கு இந்தப் பெண்ணைக் கொடுத்தால் இல்லற வாழ்வு இனிக்குமா அல்லது கசக்குமா என்பது தெரியும். குழந்தைகள் பிறப்பது, குழந்தைகள் ஆரோக்கியமாக இருப்பது, குழந்தைகளால் குடும்பத்திற்கு அபவாதம் ஏற்படாமல் பெருமை சேர்ப்பது ஆகியவற்றை ஜாதகத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். முக்கியமாக, லக்கினம் புத்திர, பூர்வ புண்ணியம், சயனம், ஆயுள் ஸ்தானம் ஆகியவற்றிற்கு தோஷமில்லாமல் பார்த்துக்கொள்வது அவசியம்.

வாழ்க்கையில் ஒரு பாக்கியம் கிடைப்பதைவிட அந்தப் பாக்கியத்தை அனுபவிப்பதே முக்கியமென 'அர்த்த சாஸ்திரம்' கூறுகிறது. ஆதலால் நமது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியிலும் நவகிரகங்களின் ஆதிக்கம் இடைவிடாது இருந்துகொண்டே இருக்கிறது. என்பது விஞ்ஞானபூர்வமான ஓர் உண்மையாகும். ஆதலால்தான் நம் முன்னோர்கள் ஜோதிடத்திற்கு முக்கியத்துவம் அளித்து வந்துள்ளனர்.

தினமும் அன்றாட கோள்நிலைகளை அறிந்துகொள்வது நல்வாழ்க்கைக்கு அவசியம்.

தினமும் காலையில் நீராடி இறைவனைப் பூஜித்த பின்பு ஒவ்வொருவரும் அன்றைய தினத்தின் திதி, நட்சத்திரம், யோகம் மற்றும் முக்கியக் கோள்களின் சஞ்சார நிலைகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்வது அவசியம். அறிவிலும் ஆத்ம ஞானத்திலும் சிறந்த நம் முன்னோர்கள் கடைப் பிடித்து வந்த வழக்கமும் இதுவே.

இவற்றைத் தெரிந்து கொண்டபின்தான் அன்றாடம் நாம் செய்யவேண்டிய காரியங்களைத் திட்டமிடுதல் வேண்டும். இதனால் பல தவறான முடிவுகளையும், தோல்விகளையும், ஏமாற்றங்களையும், பண விரயத்தையும் நம்மால் தடுக்க முடியும். உதாரணமாக, சந்திராஷ்டம தினங்களில் விசேஷ முடிவுகள் எடுப்பதையும், முக்கிய மனிதர்களை ஏதோ ஒரு உதவி வேண்டி பார்க்க வேண்டியிருப்பதையும் தவிர்த்தல் வேண்டும்.

ஏனெனில் சந்திராஷ்டம தினங்களில் மனோகாரகரான சந்திரன் பலம் குறைவாக இருப்பதனால் நமது முடிவுகளில் தவறுகள் ஏற்படக்கூடும். இதேபோன்று திதி, யோகம், நட்சத்திரம் ஆகியவை சுபமாக இல்லாவிடில், அதனால் பல விபரீதமான விளைவுகள் நமக்கு ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

நண்பர்களும், அன்பு காட்டும் உறவினர்களும் உதவாதபோது நாளும் கோளும் நமக்குத் துணை நிற்கும் - நாம் அதை நாடினால்! ஜோதிடம் நமது நலன்களை ஒவ்வொரு விநாடியும் பாதுகாக்கும் துணைவனாகும்.

நமது முன்னோர்கள் நமக்குக் காட்டிய வழியும் இதுவே!

14

வாழ்க்கையில் சுகமும் சோகமும்!

சென்னை கடற்கரையில் ஒருநாள் மாலை.

அமைதியாக ஒரு கட்டுரை எழுதுவதற்காகச் சாலை ஓரத்தில் இருந்த ஒரு மரத்தடியில் அமர்ந்து எழுதிக்கொண்டிருந்தேன். எனக்குச் சிறிது தூரத்தில் இளைத்துத் துரும்பாகி இருந்த நாய்க்குட்டி ஒன்று என்னையே பார்த்துக்கொண்டு ஏக்கத்துடன் நின்று கொண்டிருந்தது.

அது ஏன் அப்படி என்னையே பரிதாபமாகப் பார்த்துக்கொண்டு நின்றது? அது என்னிடம் எதையோ



எதிர்பார்க்கிறது என்பது புரிந்தது. இவனாவது உதவமாட்டானா என்று கூறாமல் கூறியது அதன் கூரிய கண்கள்!

திருவிடைமருதூர் திவ்ய திருத்தலத்தில் பட்டினத்தடிகளின் சீடர் பர்த்ருஹரியின் நினைவு வந்தது எனக்கு அப்போது. அதில் ஒரே வித்தியாசம்! அவருக்கு ஏற்பட்ட அனுபவம், திருவிடைமருதூர் கிழக்கு கோபுர வாசலில். எனக்கு ஏற்பட்ட அனுபவம் கடற்கரையில்!! அவ்வளவுதான். என்னையுமறியாமல் அதன்மீது ஒரு பரிதாபம்!

சிறிது நேரம் யோசித்தேன். எனக்கு நாயின் மனம் ஓரளவு புரிந்தது. அது என்னிடம் ஏதோ ஒன்றை எதிர்பார்க்கிறது என்பதைப் புரிந்துகொண்டேன். என் உள்மனம் அந்த நாயின் எதிர்பார்ப்பினை உணர்த்திக் காட்டியது.

ஆம்! அந்த நாய்க்குப் பசி. சற்று தூரத்தில் ஒரு தள்ளுவண்டியில் ஒரு சிறு பையன் சுண்டல் விற்றுக் கொண்டிருந்தான். நான் எழுந்து சென்று ஒரு காகிதத்தில் அந்தச் சுண்டலை வாங்கி அந்த நாய்க்கு வைத்தேன்.

உடல் முழுவதும் புண்ணாகியிருந்த அந்த நாய், ஆவலுடன் வேகம் வேகமாக அந்தச் சுண்டலை ரசித்துச் சாப்பிட்டது. பேசுவதற்கு வாயில்லாத அந்த ஜீவன் தனது நன்றியைப் பலமுறை தனது வாலை ஆட்டி ஆட்டித் தெரிவித்தது. நன்றியுள்ள பிராணி ஆயிற்றே அது!

என் உள்மனத்தில் சிறு திருப்தி. வாயில்லா அந்த ஜீவனுக்குச் சிறுஅளவுச் சுண்டலையாவது அளிக்க முடிந்ததே என்ற மனநிறைவு எனக்கு.

அதன்பின் நான் உட்கார்ந்திருந்த சாலையோரத்திலிருந்த அந்த மரத்தடிக்கே திரும்பினேன். சிறிது நேரத்திற்கெல்லாம் படகு போன்ற ஒரு பெரிய கார் ஒன்று சற்று தூரத்தில் வந்து நின்றது. அதிலிருந்து கைத்தடியை ஊன்றிக்கொண்டு ஒரு பெரியவர் இறங்கினார். அவருக்குப் பின்னால் அவர் மனைவியும் இறங்குவதைப் பார்த்தேன். மிகவும் வசதி உள்ளவர்களாகத் தோன்றியது.

சற்று வியப்புடன் அவர்களையே பார்த்துக்கொண்டிருந் தேன். அப்போது அந்த வெளிநாட்டுக் காரிலிருந்து, கொழுகொழு நாய் ஒன்று வெளியே குதித்துக் குதூகலத்துடன் அந்தக் கடற்கரைக் காற்றில் மகிழ்ச்சி தாங்காமல் தன் வாலை ஆட்டிக்கொண்டு அந்தப் பெரியவரைச் சுற்றிச் சுற்றி வந்தது.

அந்தப் பெரியவரும் அவரது மனைவியும் அருகிலிருந்த சிமெண்ட் இருக்கையில் அமர்ந்தார்கள் - காற்று வாங்கு வதற்காக. அவர்களது அந்தச் சொகுசு நாய், மணலில் வீழ்ந்து, புரண்டு விளையாடிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்தாலே வசதியாகவும் செல்லமாகவும் வளர்ந்துவரும் நாய் அது என்பது தெரிந்தது.

என்னையுமறியாமல் என் மனம், சற்றுமுன் நான் சுண்டல் வாங்கிப்போட்ட அந்தச் சொறி நாயிடம் தாவிச் சென்றது. உடல் முழுவதும் புண்ணாகி, இளைத்து அந்தக் கடற்கரைக்கு வந்த ஒவ்வொருவரின் முகத்தையும் ஏக்கத்துடன் பார்த்து ஏங்கிய அந்த நாயின் முகம் என்னை என்னவோ செய்தது. என்னையுமறியாமல் என் கண்களில் கண்ணீர் சுரந்தது.

இறைவனின் படைப்பில் இரண்டுமே நாய்கள்தான். ஒன்று சுகப்படுகிறது; மற்றொன்றிற்கோ உடல் உபாதையும், பசியும்; சில சமயங்களில் சிறுவர்களால் கல்லடியும்!

ஏன்...? இது ஏன்...?

என் உள்மனம் அந்த ஏழை நாய்க்காக இரங்கியது. ஒரு நாய்க்கு இன்பம். மற்றொரு நாய்க்குத் துன்பம். இது ஏன்? கண்ணீரைத் துடைத்துக்கொண்டேன். மேலும் கட்டுரை எழுத என்னால் முடியவில்லை.

ஏக்கத்துடன் அந்த நாய் என்னைப் பார்த்த பார்வை மீண்டும் மீண்டும் எனது மனக்கண் முன்னே வந்து நின்றது. அந்த நாயின் துன்பத்திற்குக் காரணமென்ன? விடை தேடினேன்.

ஜோதிட, தர்ம, நீதி நூல்களைத் தஞ்சமடைந்தேன். புரட்டினேன்... புரட்டினேன், புரட்டினேன் - அவற்றின்

பக்கங்களை. விலைமதிப்பற்ற அந்நூல்களில் என் மனவேதனைக்கு விடை கிடைத்தது.

ஒரு நாய், உடலெல்லாம் புண்ணாகி, பசியினால் துடித்து, பல சிறுவர்களால் கல்லடிபடுவதற்கு அந்த ஜீவன் முற்பிறவிகளில் செய்துள்ள பாவங்களே காரணம் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

மற்றொரு நாய், குளிர்சாதன வசதியுள்ள காரில் சொகுசுப் படுக்கையில் ஏ.ஸி. ரூமில் படுத்துச் சுகப்படுவது, முற்பிறவிகளில் அந்த நாய் செய்த புண்ணியச் செயல்களே என்பதை வாழ்க்கையின் உண்மையான தத்துவங்களை உள்ளபடி வெளிப்படுத்தும் ஈடிணையற்ற அந்த வடமொழி நூல்கள் விளக்கியுள்ளன.

வாழ்வின் சூட்சுமத்தை அறிந்துதான் ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்ரீமத் ராமானுஜர், ஸ்ரீமத்வர், ஸ்ரீராகவேந்திரர் போன்ற மகாபுருஷர்கள் 'பாவம்' என்ற தீயை விட்டு விலகி நில்லுங்கள் என்று நம்மை அறிவுறுத்தினர் என்பதை உணர்ந்து கொண்டேன்.

இப்பிறவி மட்டுமின்றி இனிவரும் எப்பிறவிகளிலும் பாவம் என்ற அந்தப் பெருந்தீ ஒவ்வொருவரையும் தொடர்ந்துச் சுட்டெரிக்கும் என்பதையும் தெரிந்துகொண்டேன்.

'பாவச்செயல்களிலிருந்து விலகியிருங்கள்' என்று நமது பாரத மகாபுருஷர்களும் மகரிஷிகளும் நம்மை வற்புறுத்தியது ஏன் என்பதை நிதர்சனமாக அந்த இரு நாய்களிடமும் கண்டேன்.

மீண்டும் ஒருமுறை சோகமே உருவாக கடற்கரையில் பசியால் வாடிய அந்த் நாயின் முகம் என் கண்முன் வந்து நின்றது. 'அதர்மத்தையும் அதற்கான தண்டனையையும் என்னைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்' என்று அது கூறுவது போலிருந்தது.

மீண்டும் பொங்கிவந்த என் கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன். அன்று இளங்கோவடிகள் கூறினாரே, 'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்' என்று!

அதைத்தான் தனது ஏக்கம் நிறைந்த பார்வையினாலேயே அந்த நாய் எனக்கு மீண்டும் நினைவூட்டியது. ஆயிரம், ஆயிரம் நீதி நூல்களைப் புரட்டிப் புரட்டி படித்தாலும் புரியாத - புரிந்துகொள்ளமுடியாத - வாழ்க்கையின் உண்மையை, ஓர் எளிய நாய் தனது ஒரே பார்வையின் மூலம் எத்தனை எளிதாகப் புரிய வைத்துவிட்டது!!

மீண்டும் என் கண்களில் கண்ணீர் கசிந்தது.

ஆம்! வரப்போகும் பிறவிகளை நாம்தான் நிர்ணயித்துக் கொள்கிறோம் - நமது நற்செயல்களாலும் தீச்செயல்களாலும்!

புரிந்துகொள்வானா மனிதன்?


15

நவீன விஞ்ஞானம் நம்மை எங்கே அழைத்துச் செல்கிறது?

இது கம்ப்யூட்டர் யுகம்.

கம்ப்யூட்டர் இல்லாமல் எதுவும் இல்லை. கம்ப்யூட்டர் இல்லாத வீடு இல்லை. அலுவலகம் இல்லை. மருத்துவமனை இல்லை.

மனிதன், நான்தான் பிரம்மதேவன் என்று மார்தட்டிக் கொள்ளும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு இந்த கம்ப்யூட்டர். இதன் சக்தியும் உபயோகமும் அளவற்றவை. ஆதலால் மனிதனின் அன்றாட வாழ்க்கையுடன் கம்ப்யூட்டர்



முழுமையாக இணைந்துவிட்டது. கம்ப்யூட்டர் இல்லாமல் மனிதன் இல்லை என்ற அளவிற்கு அது நம்முடன் ஐக்கிய மாகிவிட்டது. சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை கம்ப்யூட்டரின் முன்பு மணிக்கணக்காக அமர்ந்துவிடுவது இன்று சகஜமான காட்சியாகும்.

ஏராளமான நன்மைகளை அளிக்கும் இந்தக் கம்ப்யூட்டர் என்ற மனிதன் சிருஷ்டித்துள்ள மூளை, நமது நல்வாழ்வைப் பாதிக்கவும் கூடும் என்பது எமக்கு வரும் ஏராளமான கடிதங்களிலிருந்து அறிந்து திடுக்கிட்டோம்.

உதாரணமாக, சென்ற சில வாரங்களுக்கு முன்பு, மும்பையில் மிகப் பிரபல நிறுவனம் ஒன்றில் கம்ப்யூட்டர் என்ஜினியராகப் பணியாற்றும் 34 வயதே ஆன ஒரு தமிழ் இளைஞர், அலுவலகத்திலிருந்து தமது காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அலுவலகத்தை விட்டுப் புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் அவரது கண்பார்வை சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்தது. மும்பையிலுள்ள செம்பூர் என்ற இடத்தில் அவர் வீடு இருந்தது. தனது வீட்டிற்குச் சிறிது தூரத்தில் வந்து கொண்டிருந்தபோது அவரது பார்வை முற்றிலும் போய்விட்டது.

அவரது மனைவியின் வயது 28. குடும்பமே நிலைகுலைந்து விட்டது. அந்த இளைஞனுக்குக் கண்பார்வை பறிபோனதால் மிகவும் பிரசித்திபெற்ற மருத்துவமனையில் அவரைப் பரிசோதித்ததில், அவர், தொடர்ந்து பல மணி நேரம், தினமும் கம்ப்யூட்டர் திரைக்கு வெகு அருகில் அமர்ந்து, கூர்ந்து பார்த்து வந்ததால் கண்கள் அதிக அளவில் கதிர்வீச்சிற்கு ஆளாகியுள்ளது (Exposure) என்று தெரிவித்தனர். அந்த இளைஞருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மற்றொரு நிகழ்ச்சி. நன்றாகப் படித்துக்கொண்டிருந்த 21 வயதான மாணவர் திடீரென்று மூர்க்கமாகிக் கத்துவது, முரட்டுத்தனமாக நாற்காலி போன்றவற்றை வீசி எறிவது என்று ஆரம்பித்து, கடைசியில் தன் தந்தையையே காரணமின்றித் திடீர், திடீரென்று அடிப்பதால் அந்தக் குடும்பமே நிலைகுலைந்துள்ளது.

பிரசித்திபெற்ற மனோதத்துவ நிபுணரிடம் காட்டியதில் அவர் சுமார் மூன்று மணி நேரம் அந்த மாணவரைப்

பலவிதங்களிலும் பரிசோதித்ததில், அவர் கல்லூரிக்குச் செல்லும் வேளை தவிர, வீட்டில் மற்ற நேரங்கள் அனைத்திலும் தொலைக்காட்சி, கம்ப்யூட்டரில் 'சாட்' செய்தல் ஆகியவற்றிலேயே இடைவிடாமல் இரவில் வெகுநேரம் வரை தினமும் அவரது நேரத்தைச் செலவிட்டதாகவும் தெரியவந்தது. மேலும், பலாத்காரம், உடலுறவு போன்ற மேலைநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள சி.டி. ஆகியவற்றையும் இந்த மாணவர் தன் அறையில் இடைவிடாது பார்த்துக் கொண்டிருந்ததாகவும் தெரியவந்தது. ஆதலால்தான் அவரது மனம் பாதிக்கப்பட்டுள்ளது என அந்தப் பிரபல மனோ தத்துவ நிபுணர் கண்டுபிடித்தார். அதற்கான சிகிச்சையும் நடைபெற்று வருகிறது.

இதுபோன்ற ஏராளமான கடிதங்கள் எமக்குத் தினமும் வந்த வண்ணம் உள்ளன. இதில் மிகவும் வருத்தப்படக் கூடிய உண்மை என்னவென்றால் இளம் பெண்களும் இத்தகைய பாதிப்பிற்குப் பெருமளவில் ஆளாகி வருகின்றனர். பல குடும்பங்களில் இன்று இந்தப் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளது. பல மாணவ - மாணவியரும் பாடங்களில் மனத்தைச் செலுத்தாமல் மணிக்கணக்காக இன்டர்நெட்டை கம்ப்யூட்டரின் திரைக்கு வெகு நெருக்கமாக அமர்ந்து பார்க்கின்றனர். அவ்விதம் மிக அருகில் உட்கார்ந்து பார்க்கும்போது ஒவ்வொரு விநாடியும் அவர்களது இரு கண்களும் தொடர்ந்து கதிர்வீச்சிற்கு இலக்காகிக் கொண்டே இருக்கின்றன. இது மருத்துவரீதியில் அனுமதிக்கப்பட்ட கதிர்வீச்சின் அளவைச் சிறிது சிறிதாகத் தாண்டி விடுகிறது. அதன் விளைவுதான் பல குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் கண்பார்வை இன்று பாதிக்கப்படுகிறது.

இதுபற்றி சென்ற ஆண்டு பிரபல ஆங்கில தினசரியான 'இந்தியன் எக்ஸ்பிரஸில் விஞ்ஞானபூர்வமான ஓர் அரிய கட்டுரை வெளிவந்திருந்தது. அதில் கம்ப்யூட்டரை மிக அருகில் தொடர்ந்து பல நாட்கள் பார்த்துக் கொண்டே இருப்பதால் கண், மூளை ஆகியவற்றிற்கு ஏற்படும் விபரீத விளைவுகளைப் பற்றி அற்புதமாக விளக்கப்பட்டிருந்தது. கம்ப்யூட்டரில் தினமும் வேலை செய்துதான் ஆக வேண்டும் என்ற நிலை ஏற்படும்போது கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கையைக் கையாளும்படியும் அந்தக் கட்டுரை வற்புறுத்தியது.

1. கண்ணில் கறுப்புக் கண்ணாடி (SMOKE TINTED) அணிதல்.

2. பல மணி நேரங்கள் தொடர்ந்து தொலைக்காட்சி, கம்ப்யூட்டர் ஆகியவற்றைப் பார்ப்பதைத் தவிர்ப்பது அல்லது குறைத்துக் கொள்வது.

3. திரைக்கு மிக அருகில் (Screen) உட்கார்ந்து கொண்டு பார்ப்பதைத் தவிர்த்தல்.

4. நீண்ட நேரம் அலுவலகங்களில் கம்ப்யூட்டர்களில் வேலை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்போது மாலையில் வீடு திரும்பியதும் கண்களுக்கு ஓய்வுகொடுப்பது அவசியம்.

5. முக்கியமாக, சிறுவர்கள் கம்ப்யூட்டர் விளையாட்டு களைப் பார்ப்பதைக் கண்டிப்பாகக் குறைத்துக் கொள்வது மிகவும் அத்தியாவசியமாகும்.

கதிர்வீச்சு அபாயம் தவிர வேறு சில ஆபத்துகளும் (Health Hazard) தொடர்ந்து பல மணி நேரம் கம்ப்யூட்டரை நெருங்கிப் பார்ப்பதனால் ஏற்படுகின்றன. நமது மூளை நரம்புகளுக்கு அந்த கம்ப்யூட்டரில் மிக நுணுக்கமான மின் இணைப்புகளுடன் தொடர்பு ஏற்பட்டுவிடுகிறது. கம்ப்யூட்டரும் ஒருவகையில் மனித மூளைக்குச் சமமான இயந்திர மூளையாகும். தொடர்ச்சியாக கம்ப்யூட்டரை இயக்கும்போது நம்மையும் அறியாமல் நமது மூளையும் அந்த இயந்திர மூளையும் நெருக்கமான செயல்பாட்டினால் ஒன்றோடு ஒன்று இணைந்து விடுகின்றன.

இந்த இணைப்பையும், தொடர்பையும் அவ்வளவு எளிதாகப் பிரித்துக் கொள்ள இயலுவதில்லை - பல தருணங்களில். ஆதலால்தான் ஏராளமானவர்கள் இந்த கம்ப்யூட்டர் தொடர்பிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள இயலாமல் மீண்டும் மீண்டும் அந்த கம்ப்யூட்டர் எதிரிலேயே போய் அமர்ந்து விடுகின்றனர். சமீபத்தில் நான் அமெரிக்கா சென்றிருந்தபோது அங்கு நான் சந்தித்த மிகப் பிரபல கம்ப்யூட்டர் நிபுணர் ஒருவரும் இதே கருத்தினைத் தெரிவித்த துடன் கம்ப்யூட்டரால் ஏற்படும் பல நன்மைகளை விட மனித குலத்திற்கு இந்த கம்ப்யூட்டர் சிஸ்டம் ஏற்படுத்தும் பிரச்சினைகளே அதிகமாக இருக்கும் என்ற கருத்தைத்

தெரிவித்தார். மேலும், இந்த மூளை பாதிப்பு எதிர்காலத்தில் ஒருநாள் கட்டுப்படுத்த இயலாமல் விஸ்வரூபம் எடுத்து விடக்கூடும் என்றும் கூறினார் அவர்.

அவ்விதம் என்றால், கம்ப்யூட்டரே கூடாதா என்ற கேள்வி எழக்கூடும். அது சாத்தியமல்ல. அதனால் பலபல நன்மைகளும் நமக்குக் கிடைக்கின்றன. ஆதலால் கம்ப்யூட்டரை அறவே விட்டுவிடவும் முடியாது. ஆதலால், நமது சிறுவர்களும், இளைஞர்களும் அவசியமான தருணங் களைத் தவிர, தொடர்ந்து பல மணி நேரங்கள் கம்ப்யூட்டர் பார்ப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும். கருநாகங் களை வளர்த்துப் பிழைப்பு நடத்தி வரும் பாம்பாட்டி அவற்றை விட முடியாது!

ஆனால் ஒவ்வொரு விநாடியும் விழிப்புடன் அவற்றுடன் இருக்க வேண்டுமல்லவா? அதே போன்றுதான் நாம் கம்ப்யூட் டரைப் பயன்படுத்துவதிலும் அதிஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும். பொழுதுபோக்கிற்காக தொலைக்காட்சி, கம்ப்யூட்டர் ஆகியவற்றை மிக நெருக்கமாகவும், மணிக்கணக் காகவும், இரவு நேரங்களில் நீண்டநேரம் கண்விழித்துப் பார்ப்பதும், நமது உடல், மனநிலைகளைப் பாதிக்கும் என்பதை மேல்நாட்டு நிபுணர்களே ஒப்புக்கொண்டுள் ளார்கள்.

சென்ற ஆண்டு தொலைக்காட்சிப் பெட்டியின் திரை முன் ஒரு பச்சைக்கிளியைத் தொடர்ந்து 14 மணி நேரம் மிக நெருக்கமாக வைத்திருந்தனர் - ஆராய்ச்சிக்காக. 11-வது மணியில் அந்தப் பச்சைக்கிளி இறந்து விட்டது. பரிசோதித்ததில் அதிக அளவு கதிர்வீச்சினால் அது இறந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் பரிசோதனை இத்தாலி நாட்டில் நடத்தப்பட்டது.


ஆதலால் நாமும், முக்கியமாக, நம் குழந்தைகளும் தொலைக்காட்சி, கம்ப்யூட்டர் ஆகியவற்றைப் பார்ப்பதைக் குறைத்துக் கொள்வதும் மிக நெருக்கமாகப் பார்ப்பதைத் தவிர்ப்பதும் மிகவும் அவசியமாகும்.

16

வெல்லலாம் வயோதிகத்தை!

எமக்கு வாரந்தோறும் வரும் ஏராளமான வாசகர்களின் கடிதங்களை அவர்களது வயதின் அடிப்படையில் கீழ்கண்ட வாறு பிரித்து, அதன்பிறகே அவர்களின் ஜாதகங்களை அவர்களது துன்பங்களின் அடிப்படையில் கணித்து ஆராய்ந்து பதிலளித்து வருகிறோம். அந்த வயது அடிப்படையைக் கீழே தந்திருக்கிறோம்.

1. வயது 1-15 வரை. 2. வயது 16-25 வரை. 3. வயது 26-42 வரை. 4. வயது 43-60 வரை. 5. வயது 61 அதற்கு மேல்.



இவற்றில் சுமார் ஐம்பது வயது முதல், வயோதிகத்தை எட்டும்வரை உடல்ரீதியிலும், மனரீதியிலும் பல கடும் பிரச்சினைகள் ஏற்படுவது பற்றி எமக்கு நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்தவண்ணம் உள்ளன. அவர்களது பிரச்சினை களுக்குக் காரணம் என்ன? அந்தப் பிரச்சினைகள் தீர என்ன பரிகாரம் எனப் பல பெரியவர்கள் எம்மைக் கேட்டு எழுதியிருக்கின்றனர்.

ஐம்பது வயது வரை ஏற்படும் பிரச்சினைகளுக்கும், அதன்பிறகு ஏற்படும் பிரச்சினைகளுக்கும் நிறையவே வித்தியாசங்களும், காரணங்களும் உள்ளன. அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜோதிடக்கலை மிகவும் உதவி புரிகின்றது. தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும் ஓய்வில்லாது உழைத்து, உழைத்து இறுதியில் சோர்வு ஏற்பட ஆரம்பித்து விடுகிறது, இந்த ஐம்பதாவது வயதில். ஆதலால்தான் பெரும்பான்மையான உலக நாடுகளில் சுமார் 58 வயதிற்கு மேல் கட்டாயமாக ஊழியர்களுக்கு ஓய்வு கொடுத்து விடுகின்றனர்.

இந்த 50க்கு மேற்பட்டு, அறுபதையும் தாண்டி வயோதி கத்தைத் தொடும்போதுதான் பலருக்கும் ஒரு வித்தியாசமான அனுபவமும் சோதனையும் ஏற்படுகின்றது. எமக்கு வயதானவர்களிடமிருந்து வரும் கடிதங்களில் ஏதாவது நூறு கடிதங்களை ஜோதிடரீதியில் எடுத்துக்கொண்டால் அதில் 80 கடிதங்களிலாவது, 'எங்களுக்கு நிம்மதி இல்லை; எங்களைப் பிள்ளைகள் சரியாகக் கவனிப்பதில்லை' என்றெல்லாம் குறைபட்டுக்கொண்டு எழுதியுள்ளதைக் காணலாம். இதற்கு என்ன காரணம்? இக்குறையை எவ்விதம் நிவர்த்திப்பது? வயோதிகக் காலத்தில் முக்கியமாக நமக்கு வேண்டுவது மனநிம்மதியே ஆகும். மனித வாழ்க்கையின் இறுதிக்கட்ட மாகிய வயோதிகம் மிக மிக முக்கியமானதாகும். அந்த வயதில் தான் நாம் மன அமைதியுடன் இறைவன் மீது கவலை களின்றி முழுமனத்தையும் செலுத்தவேண்டிய காலமாகும்.

ஒருவரது வயோதிகக் காலத்தில் என்னென்ன பிரச்சினை கள், எப்போது எவர், எவர் மூலம் ஏற்படும் என்பதை அவரது ஜாதகத்தின் ஜெனன கால கிரகநிலைகள், நடைபெறும் தசா, புக்திகள் ஆகியவற்றை ஆராய்ந்து மிகச் சரியாகக்

கண்டுபிடிக்க முடியும். வயதான காலத்தில் ஒருவரை மிகவும் பாதிப்பது, முக்கியமாக அவரது தாழ்வு மனப்பான்மையே! அந்தத் தாழ்வு மனப்பான்மை காரணமாக அவர்கள் மனத்தில் பல கற்பனையான குறைபாடுகள் தோன்றுகின்றன.

தாங்கள் உத்தியோகத்தில் இருந்தபோது தங்களைக் கவனித்த அளவிற்கு மனைவி, மக்கள் தங்களைக் கவனிப்ப தில்லை. தங்கள் வார்த்தைகளை மதிப்பதில்லை. குடும்பத்தில் அனைவருமே தங்களைப் புறக்கணிக்கிறார்கள். உத்தியோகத் திலிருக்கும் தன் மகன் தனது மாதச் சம்பளத்தை அவன் மனைவியிடம் கொடுக்கிறான். முக்கிய விஷயங்களில் தன்னைக் கலந்தாலோசிப்பதில்லை என்றெல்லாம் அவர்களாகவே கற்பனை செய்துகொள்கிறார்கள்.

இவற்றில் ஓரளவு சில குடும்பங்களில் உண்மையாகவே இருக்கக்கூடும். அத்தகைய சூழ்நிலையில் அவர்கள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் என்பதே முக்கியம். வராகமிஹிரர் தனது இணையற்ற நூல்களில் ஜோதிடக்கலையின் அடிப்படையில், அன்றாட வாழ்க்கைக்குச் சம்பந்தப்பட்ட அரிய பல விஷயங்களைப் பற்றியும் விளக்கியுள்ளார். அவற்றில் வயோதிகத்தின் உயர்வைப் பற்றியும், வயோதிகம் என்ற அரிய சந்தர்ப்பத்தைத் தன் இக, பர சுகத்திற்காக மனிதன் எவ்விதம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் விளக்கியுள்ளார். அவற்றை நாம் படித்துப் புரிந்து கொண்டோமானால் வயோதிகம் இனிக்கும்! தாழ்வு மனப்பான்மை அகலும். மனநிம்மதி வீட்டின் கதவைத் தட்டும்.

வயோதிகத்தின் உயர்வு!

"தெரியேன் பாலகனாய் பல தீமைகள் செய்துவிட்டேன்

பெரியேன் ஆயினபின் பிறர்க்கே உழைத்து ஏழை யானேன்" - என்று அருளியுள்ளார் திருமங்கை ஆழ்வாரும், தனது பெரிய திருமொழியில். விவரம் தெரிந்த நாள்முதல் உடல் தளரும்வரை தனக்காகவும், தனது மனைவி, மக்களுக்காகவும், நண்பர்கள், சுற்றத்தார் ஆகியோருக்காக வும் உழைத்து, உழைத்து வேறு எதிலும் சிந்தனையின்றி நம் வாழ்நாட்களில் பெரும்பகுதி கழிந்துவிடுகிறது. அதிலும்

பாதி நேரம் உறக்கத்தில் செலவழிந்து விடுகிறது. ஆதலால் சிறிது நேரம் விருப்பு-வெறுப்பின்றிச் சிந்தித்தோமானால் வயோதிகம் என்பது அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் (குடும்பம், உத்தியோகம், பணம்) நம்மை விடுவித்துக்கொண்டு இறைவனின் மீது முழுமையாகச் சிந்தனையைச் செலுத்தி அமைதியாக இருந்து, இறைவன் அழைக்கும்போது மகிழ்ச்சியுடன் அவனிடம் செல்ல நம்மைத் தயார்படுத்திக் கொள்வதற்கு அந்த இறைவனே மனமுவந்து அளித்த வாய்ப்பு என்பதை உணர்ந்து அதனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற உண்மை புரியும்.

ஆனால் இன்று பெரும்பான்மையான வயதானவர்கள், வயோதிகம் என்பது எந்த அளவிற்கு உயர்ந்தது; பெருமை வாய்ந்தது என்பதை அறிந்துகொள்வதில்லை. சென்ற காலத்தில் சிறுவர்களுக்கு பெரியவர்கள் அறிவுரைகள் கூறிக்கொண்டும், தெய்வீகக் கதைகள் சொல்லிக்கொண்டும், அவர்களுக்கு ஆசி கூறிக்கொண்டும், தெய்வ பூஜைகளிலும் தங்கள் இறுதிக்காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்துக் கொண்டிருந்தனர். ஊரும் மக்களும் அவர்களை மதித்து, மரியாதை காட்டி வந்தனர்.

ஆனால் இன்று வயோதிகத்தை மறைத்து, இளைஞர் களாகவே தோற்றமளிக்கப் பலரும் முயல்கின்றனர். குடும்ப விவகாரங்களில் அறிவுரை கூறுவதை விடுத்து, அவசியமில் லாது தலையிடுகின்றனர். அதனால் தங்கள் சுதந்திரமான நடவடிக்கைகளில் அவர்கள் தலையிடுவதைக் குடும்பத்தில் மகன், மருமகள் ஆகியோர் விரும்பாததால் அவர்கள் மீது வெறுப்பு ஏற்படுகிறது. இதுவே பல பிரச்சினைகளுக்கும், மனநிம்மதி பாதிக்கப்படுவதற்கும் காரணமாகிறது. வயதாக, வயதாக, தாமரை இலைத் தண்ணீர் துளிபோல் கூடியவரை யில் குடும்ப விஷயங்களிலிருந்து விலகி நிற்கும் மனப்பக்கு வத்தை வளர்த்துக்கொள்வதே விவேகமாகும். அதற்காக, குடும்ப நலன்களிலிருந்து தங்களை அடியோடு பிரித்துக் கொள்ள வேண்டும் என்று அர்த்தமில்லை. தாங்கள் பெற்று வளர்த்த குழந்தைகள் பற்றிய கவலை ஒருபுறம், வயதான காலத்தில் பேரன், பேத்திகள் ஆகியோர் மீது ஏற்படும் அபார மான பாசம் ஆகியவற்றிலிருந்து முற்றிலுமாக விலகியிருப்பது அவ்வளவு எளிதல்ல. ஆனால் எந்த அளவிற்கு வைராக்கி


யத்தை வளர்த்துக்கொள்கிறோமோ, அந்த அளவிற்கு நாம் நிம்மதி பெறலாம்.

நாம்தான் நம் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறோம் என்று நினைப்பது முற்றிலும் தவறாகும். பொறுப்பு நம்முடையதாக இருப்பினும் அந்தப் பொறுப்பை உண்மையிலேயே நிறைவேற்றி வைப்பது நம்மைப் படைத்துக் காத்தருளும் இறைவனே!

வயோதிக காலத்தை நிம்மதியாகவும், பிறருக்குப் பயன்படும்படியாகவும் இருப்பதற்குக் கீழ்க்கண்ட பணிகளைச் செய்து வரலாம்:

1. ஏழைச் சிறுவர்களுக்குக் கல்வி புகட்டுவது. 2. திருக்கோயில்களைச் சுத்தமாக வைப்பதற்கு, இளைஞர்களை ஒன்றுதிரட்டி, அவர்கள் உதவியுடன் இந்தப் பணியைச் செய்து வரலாம். 3. வயதானவர் ஒவ்வொருவருக்கும் தனித் திறன் என்று ஏதாவது இருக்கக்கூடும். அதை சமூகநலனுக் காகப் பயன்படுத்தலாம்.

ஆதலால், 'வயதாகிவிட்டதே; பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டோமே; விருப்ப ஓய்வுத் திட்டத்தின் மூலம் வெளிவந்து விட்டோமே' என்றெல்லாம் வருந்தவேண்டிய அவசியமில்லை. நம் மனைவி, குழந்தைகள் நமது சம்பாத்தியத்திற்காகத்தான் இதுவரை நம்மிடம் மதிப்பும், மரியாதையும் காட்டியுள்ளார்கள் என்று நினைப்பதும் மாபெரும் தவறாகும். வயோதிகம் நம்மை இறைவனுக்கு மிக அருகில் அழைத்துச்செல்கிறது. ஆதலால் வயோதிகத்தைக் கண்டு ஏன் வருந்தவேண்டும்? எதற்காக வருந்தவேண்டும்? வெல்லலாம் வயோதிகத்தை! நிச்சயமாக! நமது மனத்தை மட்டும் கட்டுப்பாடாக வைத்துக் கொண்டால் வயோதிகம் நமக்குப் பெருமை சேர்க்கும்.



"பக்தர்களுக்கு நான் அடிமை"
கருணையே உருவான ஸ்ரீ பாண்டுரங்கன் - பண்டரீபுரம்



கண்ணன் திருவுள்ளத்தைக் கவர்ந்த ஸ்ரீ ருக்மணி - பண்டரீபுரம்

17

எவர்க்கு எது தர்மம்?

தர்மம் என்றால் என்ன?

'தர்மம்' என்றால் என்னவென்று பலரது உள்ளங்களிலும் அவரவர் மனப்பக்குவத்திற்கேற்றவாறு அர்த்தம் செய்து கொள் கிறார்கள். இது ஏதோ ஒரு குறிப்பிட்ட மதத்தினரின் கொள்கை சம்பந்தமான சொல் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல.



தர்மம் என்பது இறைவனால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு வாழ்க்கை ஒழுங்குமுறைச் சட்டமாகும் (Divine law of human behaviour). இந்தச் சட்டத்தின்படி வாழ்ந்தால் வாழ்க்கை இன்பமயமாகும். இதனை மீறினால் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாக ஆகிவிடும்.

இந்தத் தர்மம் என்ற சட்டம் பாரதப் புண்ணிய பூமியில் பிறந்த அனைத்து மக்களுக்கும் மட்டுமன்றி, மானிடராகப் பிறந்துள்ள உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும். தர்மம் என்ற இந்தச் சட்டம், ஒவ்வொருவரின் நல்வாழ்க்கைக்கும் இன்றியமையாததாகும்.

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, இன்று நமக்குக் கிடைத்துள்ள வசதிகள் அன்று இல்லை. பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பல வசதிகளைப் புதிது புதிதாக நமக்கு வழங்கியுள்ளன. இருப்பினும் அன்று இருந்த மனநிம்மதியும், மனநிறைவும், மகிழ்ச்சியும் இன்று இல்லை.

அது ஏன்?

வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தண்ணீர், அரிசி மற்றும் இதர உணவுப் பண்டங்களுக்கும் பஞ்சமில்லை அன்று. கிருஷ்ணா, கோதாவரி, கங்கை, யமுனை, நர்மதை போன்ற ஜீவநதிகள் பாய்ந்தோடும் பாரதத் திருநாட்டில் இன்று குடிநீர் காசு கொடுத்து வாங்கப்படுகிறது. என்றாவது இத்தகைய அவலநிலை ஏற்பட்டிருந்ததா கடந்த காலத்தில்?

முன்பு ஒருமுறை ஈரோடு நகரசபை கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டிருந்தது.

'காவிரி வறண்டு, நிலத்தடி நீரும் கிடைக்காததால் ஈரோடு நகரத்திற்கு விநியோகம் செய்யப்படும் குடிநீர் வசதி உடனடியாக நிறுத்தப்படுகிறது.'

இதன் பொருள் என்ன?

"மக்களே! எங்களால் இயலவில்லை. இனி உங்கள் பாட்டை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" - எனத் தமது கையாலாகாத்தனத்தை அதிகாரிகள் வெளியிட்டுவிட்டனர். செல்வாக்கு மிகுந்தவர்களுக்கு எப்படியோ குடிநீர் கிடைத்துவிடும். ஆனால் பாமர மக்கள் என்ன செய்வார்கள்? இந்நிலை ஏன்? இதற்கு என்ன பரிகாரம் செய்வது?

நாவறண்டு இன்று மக்கள் தவிக்கும் நிலைக்குக் காரணம் என்ன? அதற்கு யார் பொறுப்பு? தமிழகத்திற்கே சோறு வழங்கிய சோழ நன்னாடு இன்று வறண்டு கிடப்பது ஏன்? இதற்கெல்லாம் ஒரே காரணம் -அரசன் செய்யும் பாவம் மக்களின் தலையில்! என்பதே ஆகும்!

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு மத்திய அரசிலும் சரி, தமிழகம் உட்பட இதர மாநிலங்களிலும் சரி, தங்கள் சுயநலமே பெரிது என்று கருதிய பல அரசியல் கட்சிகள் ஏற்பட்டன. நாட்டிற்காகக் கட்சிகள் அல்லாமல், தனிப்பட்ட தலைவர்களுக்காகவே கட்சிகள் ஏற்படும் நிலை உருவாகியது. சமஸ்தான மன்னர்கள் நீக்கப்பட்டுவிட்டாலும், அதற்குப் பதிலாக, அரசியல் தலைவர்களே குறுநில மன்னர்களைப் போல் ஆடம்பர வாழ்க்கை நடத்த ஆரம்பித்தனர்.

சில ஆண்டுகளிலேயே அரசியல் ஒரு வியாபாரமுறையாக (Business System) வளர்ந்துவிட்டது. மக்களின் பிரதிநிதிகள் வியாபாரப் பொருட்களாகி, எந்தக் கட்சியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டார்களோ அதை விட்டுப் பிற கட்சிகளுக்கு மாறும் அவலநிலை ஏற்பட்டு, மத்திய அரசும் அந்நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

படித்தவர்கள், ஒழுக்கத்தினால் சிறந்தவர்கள், தேசபக்தி மிகுந்தவர்கள் ஆகியோர் புறக்கணிக்கப்பட்டனர். நாட்டின் நலனும் அடியோடு புறக்கணிக்கப்பட்டது. எவர் வேண்டுமானாலும் பேசலாம், என்ன வேண்டுமானாலும் செய்யலாம், கேட்பாரில்லை என்ற நிலை நாட்டின் ஒவ்வொரு மாநிலத்தையும் பீடித்துக் கொண்டது. எந்த அளவிற்கு மக்களைப் பிரிக்கிறார்களோ அந்த அளவிற்குத் தாங்கள் சுகமாக வாழலாம் என்பதை அரசியல் கட்சியினர் கண்டு கொண்டார்கள்.

அரசு அலுவலகங்களில் மட்டுமன்றி, தனியார்துறை களிலும் லஞ்சம் வாங்குவது என்பதில் அதிகாரிகள் அனைவரும் முனைந்துவிட்டார்கள். லஞ்சம் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஒவ்வோர் அம்சத்திலும் புகுந்துவிட்டதால் மக்களும் வேறுவழியின்றி இதனைத் தவிர்க்க முடியாத ஒன்றாக ஏற்றுக் கொண்டுவிட்டனர்.

திருக்கோயில்களில் பூஜைகள் புறக்கணிக்கப்பட்டு விட்டன. அரசாங்க உடமையாக்கப்பட்டு திருக்கோயில்கள் கொள்ளையடிக்கப்பட்டன. தெய்வத்திடம் கூட பயமில்லாமல் போய்விட்டது.

இன்று மக்கள் தண்ணீரின்றித் தவிப்பதற்கும் புதிய, புதிய நோய்களினால் அவதிப்படுவதற்கும் எங்கு பார்த்தாலும் வறுமை, ஏழ்மை, பட்டினி, துயரம் - ஒவ்வோர் இல்லத்திலும் ஒவ்வொரு வகை சோதனை, இளம் உள்ளங்களில் தவறான எண்ணங்கள், ஒழுக்கமின்மை என்ற துயரமான சூழ்நிலை பரவி வருகின்றது.

எதிர்காலத்தில் நம் நாட்டின் நிலை கண்டு நல்லோர் அனைவரும் கலங்கி நிற்கின்றனர். இவை அனைத்திற்கும் காரணம் தர்மம் ஒன்றே உயிர்மூச்சாக இருந்த இந்தப் பாரதத் திருநாட்டில் இன்று அதர்மமே அன்றாட தர்மமாக நிலவி வருவதே ஆகும்.

தர்மம் மக்களுக்குக் கட்டுப்பாடான வாழ்க்கை முறையையும், ஒழுக்கம், நேர்மை, இறைபக்தி ஆகியவற்றையும் போதிக்கிறது. ஆதலால் தர்மம் என்ற வாழ்க்கை நெறிமுறை அனைவருக்கும் பொதுவானதே. மக்களின் நல்வாழ்க்கைக்குத் தர்மநெறி ஒன்றே உத்தரவாதமளிக்கும். தர்மம் என்றால் கடமை என்பதே பொருள். கடமையைச் செய்தால் சுகம் தேடி வரும். கடமையை மறந்தால் கஷ்டம்தான் வரும்.

லஞ்சம் வாங்கிச் சேர்த்த பணம் புற்றுநோய் என்ற முத்திரையில் வைத்தியரைச் சென்றடையும். அரசியல் ஆணவத்தினால் ஆலயங்களை அழிக்கும் பாவம், குலத்தை வேரோடு நாசமாக்கும். கைப்பிடித்த மனைவியைத் துன்புறுத்தும் கணவன் வயோதிகத்தில் கவனிப்பாரின்றி அனைவராலும் புறக்கணிக்கப்பட்டு, மரணமும் உதவிக்கு வராமல் ஒவ்வொரு விநாடியும் என்றாவது 'மரணம் நம்மை இந்த நரகத்திலிருந்து விடுவிக்குமா?' என்று கதறுவான்.

நம் ருசிக்காகவும், தன் உடலை வளர்த்துக் கொள்வதற்காகவும் ஜீவவதை புரிபவர், விபத்திலோ அல்லது அறுவை சிகிச்சை மூலமாகவோ தனது முக்கியமான அவயவங்களில்

ஒன்றை நிச்சயமாக இழப்பார்கள். பிறர் மனைவியுடன் தகாத தொடர்பு கொள்பவன், மறு பிறவியில் ஆண் குதிரை அல்லது பன்றி அல்லது காளையாகப் பிறந்து பீஜம் அறுபட்டு ஆணாகப் பிறந்தும் ஆண்மை அற்றுப் பயனற்று வாழ்வான்! கணவனுக்குத் துரோகம் செய்யும் மனைவி தன் இறுதி நாட்களில் கொடிய நோயால் பீடிக்கப்பட்டு, அல்லலுறுவாள். (ஆதாரம், கருடபுராணம், நாரதபுராணம், புராதன நீதி நூல்கள்). மேற்கூறியவை அனைத்தும் ஆத்மசக்தி, ஞானத்தில் சிறந்த மகரிஷிகளால் கூறப்பட்ட உண்மைகளாகும்.


கலியுகத்தில் நம்மைக் காப்பது ஒழுக்கம், நேர்மை, இறைபக்தி, ஜீவகாருண்யம் ஆகியவை மட்டுமே. ஆதலால் தான் அனைவரின் நல்வாழ்விற்காகவும், மகிழ்ச்சிக்காகவும் இப்பிறவியைவிட உயர்ந்த பிறவிகளை இனி எடுப்பதற்கும் தர்ம நெறிகளை 'குமுதம் ஜோதிடம்' இதழ் மூலம் வற்புறுத்தி வருகிறோம். தர்மத்தைக் கடைப்பிடித்தால் இப்பிறவியிலேயே உடனுக்குடன் துன்பங்கள் தீர்வதை அனுபவத்தில் காணலாம்.

நமக்குத் துணை நிற்பது இறைபக்தியும், அவனது திருநாமமும் மட்டுமே! இன்பமான வாழ்க்கைக்கு இது ஒன்றே உறுதியான வழியாகும். இதுவரை தவறு செய்தவர்கள், தங்கள் தவறுகளுக்காக வருந்தி, இனி நேர்மையாக வாழ்ந்தால், இறைவன் துணை நிற்பது நிச்சயம்.

18

நல்ல மனைவியின் நெஞ்சத்தையும் நஞ்சாக்கும் களத்திர தோஷம்!

எமக்கு வந்த ஏராளமான கடிதங்களில், சற்று வித்தியாசமான கடிதம் ஒன்றும் வந்திருந்தது. சுமார் எட்டுப் பக்கங்களில் எழுதப்பட்டிருந்த நெஞ்சைத் தொடும் அந்தக் கடிதத்தில் ஏழு பக்கங்கள் காதலித்து மணந்து கொண்ட தன் மனைவி பற்றி வானளாவப் புகழ்ந்து எழுதியிருந்தார் அந்த இளைஞர்.



கடிதத்தின் சாராம்சம் இதுதான்: அந்த இளைஞரும், அவரது மனைவியும் ஒரே அரசு அலுவலகத்தில் நல்ல பணியில் இன்றும் இருந்து வருகின்றனர். சுமார் ஆறு வருடங்களாக ஒருவரை ஒருவர் காதலித்து வந்துள்ளனர். சாதாரணமாகப் பேச்சளவில் ஆரம்பித்த நட்பு, நாளடைவில் பரஸ்பர அன்பு ஏற்பட்டு, பிறகு தீவிரக் காதலாக மாறியது. ஒருவரில்லாமல் மற்றொருவர் இல்லை என்ற அளவிற்கு அவர்களது காதல் தீவிரமாகியது. ஆனால், எத்தருணத்திலும் அவர்கள் கட்டுப்பாட்டை மீறவில்லை.

ஆறு வருடங்களாக வளர்ந்த காதல், இருவரது பெற்றோர்களின் சம்மதம், ஆசியுடன் 4.5.2003 ஞாயிறன்று திருமணம் நடைபெற்றது. அந்தத் திருமணம் நடைபெற்று இருவாரங்கள்தான் ஆயிற்று. காரணம் எதுவும் கூறாமல் தன் தாய் வீடு சென்றுவிட்டார் மணப்பெண். கணவனும் அவரது பெற்றோரும் பெண்ணின் வீட்டிற்குச் சென்று வற்புறுத்தி அழைத்தும், 'உன்னுடன் நான் வாழமுடியாது' என்று திட்டவட்டமாகக் கூறி, கணவருடன் செல்ல மறுத்து விட்டார். காரணமெதுவும் கூறவும் அவர் மறுத்துவிட்டார்.

ஏமாற்றத்தோடு திரும்பிய கணவனுக்கு மற்றோர் அதிர்ச்சியும் காத்திருந்தது. வழக்கறிஞர் மூலம் விவாகரத்துக் கோரி நோட்டீஸ் அனுப்பியிருந்தார் மனைவி. இதுதான் அந்தக் கடிதத்தின் சாராம்சம்.

அந்த எட்டுப் பக்கக் கடிதத்தின் மூலம், அந்தக் கணவன் தன் மனைவி மீது வைத்திருக்கும் ஆழ்ந்த அன்பு தெளிவாகத் தெரிந்தது. எங்களுக்கும் ஆச்சரியம்தான். ஆறு வருடங்கள் மிக ஆர்வமாகக் காதலித்துக் கைப்பிடித்த இளைஞன், விவாகமான ஒரிரு நாட்களிலேயே கசந்துவிட்டான்! இருவர் ஜாதகங்களும் கடிதத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. மீண்டும் ஒன்று சேர்ந்து அந்தப் பெண்ணுடன் வாழ வேண்டும் என்று துடிக்கிறான் அந்த இளைஞன். அவன் எழுதியிருந்த கடிதம் முழுவதிலுமே அவளது புகழைத்தான் பாடியிருந்தான் அவன். என்ன ஆச்சரியம்! எத்தனை ஆசையுடன், ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்து கொண்டுள்ளனர். அதற்குள்ளாகவா இந்த முறிவு?

கணவன்-மனைவி ஆகிய இருவரின் ஜாதகங்களையும் டிகிரி சுத்தமாக ஆராய்ந்து பார்த்தோம். காரணம்

விளங்கியது. கணவனின் ஜாதகத்தில் சயன, களத்திர ஸ்தானமான சப்தம (7) ராசியில் பாவக்கிரகங்களின் சேர்க்கையும், அதனால் கடினமான தோஷமும் ஜெனன காலத்தில் ஏற்பட்டிருந்தது. இந்தக் குறை மிகவும் சூட்சுமமானது! மனோதத்துவ, உடல்ரீதியில் இது ஒரு கடினமான தோஷம் எனப் புராதன ஜோதிட நூல்கள் விவரித்துள்ளன. கண்ணால் பார்த்து, வாயால் பேசி, மனத்தால் விரும்பி, திருமணம் நடந்ததில் மறைவான இக்குறை அந்த இளைஞனிடம் இருந்ததை அந்தப் பெண் அறிந்து கொள்ளவில்லை.

திருமணம் முடிந்து இருவருக்கும் இடையே அன்னியோன்யம் ஏற்பட்டபோது இந்தக் குறையைக் கண்ட அந்தப் பெண்ணால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மனத்தில் ஏற்பட்ட கற்பனைகளினால் அவள் எதிர்பார்த்ததற்கும், விவாகத்திற்குப் பிறகு அவள் அடைந்த ஏமாற்றத்திற்கும் இடையே இதுவரை தான் அறியாத உண்மை வெளிப்பட்டபோது, தனது காதலின் பின்னால் எத்தகைய அறியாமை இருந்துள்ளது என்பதை உணர்ந்தாள், எதிர்காலத்தைப் பற்றிய அவளது கனவுகள் அனைத்தும் தூள்தூளாகி விட்டன. இனி அறியாது தான் காதலித்த அந்தக் கணவனுடன் மனைவியாக வாழ்வதில் அர்த்தமில்லை என்ற உண்மை, கற்பனையிலிருந்து அவளைத் தட்டி எழுப்பியதும் ஒரு முடிவுடன் தாய்வீடு சென்று விட்டாள்.

காதலிப்பதற்கும் ஜோதிடத்தின் வழிகாட்டுதல் அவசியம்!

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும், பேராபத்துகளிலிருந்தும், பெரிய ஏமாற்றங்களிலிருந்தும் நம்மைக் காப்பாற்றும் சக்தி, ஜோதிடம் என்ற வானியல் கலைக்கு உள்ளது. ஆதலால் மணமகன் அல்லது மணமகள் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பும், ஓர் இளைஞனும், பெண்ணும் காதலிப்பதற்கு முன்பும், ஜாதகத்தில் லக்கினம், பூர்வ புண்ணியம், புத்திரம், சயனம் (7) மற்றும் ஆயுள் (8) ஆகிய ஐந்து ஸ்தானங்களை ஆராய்ந்த பின்னரே அதற்கேற்ப முடிவெடுப்பது பல பிரச்சினைகளிலிருந்து நம்மைக் காப்பாற்றும். இவற்றிலும் ஏழு, எட்டு இரு ராசிகள் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.

கணவனானாலும் சரி, மனைவியானாலும் சரி, மனம் நிறைந்த வாழ்விற்கும், நோயற்ற நீண்ட ஆயுளுக்கும் இந்த சப்தம, அஷ்டம ஸ்தானங்களைத் தகுந்த ஜோதிடரைக் கொண்டு ஆராய்வது முக்கியம்.

சயன ஸ்தானமாகிய 7-ம் இடத்திற்கு ஏற்படும் தோஷத்தையே களத்திர தோஷம் என்று ஜோதிடக்கலை விளக்கியுள்ளது. களத்திரம் என்றால் மனைவி என்று அர்த்தம். ஆண்களுக்கு இது மனைவியைக் குறிக்கும் ராசியாகும். ஆண், பெண் ஆகிய இருவருக்குமே சயன சுகத்தை (தாம்பத்திய சுகம்) நிர்ணயிக்கும் ராசியும் ஆகும் இது. இதற்கு மிகப் புராதனமான ஜோதிட நூல்கள் அதிக முக்கியத்துவத்தை அளித்துள்ளன.

இந்த சப்தம ஸ்தானம் ஜெனன காலத்தில் பாவக் கிரகங்களால் பாதிக்கப்பட்டிருந்தால் திருமணமான பின்பு கணவன்-மனைவியரிடையே உடலுறவு சம்பந்தமான பிரச்சினைகள் எழக்கூடும். ஆண், பெண் இருவரின் ஒழுக்கத்தையும் இந்த 7-ம் இடத்திலிருந்து கண்டுபிடித்துவிட முடியும். கூடா ஒழுக்கம், பிறர்மனை நயத்தல் ஆகிய பலவீனங்கள் உள்ளனவா, அதனால் அவர்களது ஆரோக்கியம் பாதிக்கப்படுமா என்பதையும் ஜாதகத்தின் 7, 8-ம் இடங்களை (லக்கினத்திலிருந்து) டிகிரி சுத்தமாகப் பிரித்துப் பார்த்தால் மிகச் சரியாகவும், துல்லியமாகவும் கண்டுபிடித்துவிட முடியும்.

இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், கரு அணு குறைபாடு கணவன்-மனைவியரில் ஒருவருக்கோ அல்லது இருவருக்குமே இருக்குமானால், அதனையும் இந்த சப்தம ஸ்தானத்திலிருந்து கண்டுபிடித்து விடமுடியும். இந்தக் குறையை மருத்துவரீதியில் குணப்படுத்த இயலுமா என்பதையும் அந்த சப்தம ஸ்தானத்திற்கு குரு, புதன், சுக்கிரன் ஆகிய கிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வை ஏற்பட்டிருந்தால் அதன்மூலம் அந்தக் குறையின் அளவு குறையும் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். இவை மட்டுமன்றி, பலருக்குத் தேய்பிறையில் இந்தக் குறை அதிகமாகவும், வளர்பிறையில் குறைந்தும் காணப்படும்.

ராகு, கேது, செவ்வாய், சுக்கிரன் ஆகியவை மூலம் 7-ம் இடத்திற்கு ஏற்படும் தோஷம்.

சுபக்கிரகங்களின் பார்வை அல்லது சேர்க்கை இல்லாமல் 7-ம் இடத்திற்குக் கேதுவினால் ஏற்படும் தோஷம் தாம்பத்திய சுகத்தைக் குறைக்கும். சுபக்கிரகப் பார்வை அல்லது சேர்க்கை இல்லாமல் ராகு, செவ்வாய், சுக்கிரன் ஆகியவற்றால் ஏற்படும் சப்தம ஸ்தான (7) தோஷம் தாம்பத்திய சுகத்தில் அளவிற்கு அதிகமான விருப்பத்தை ஏற்படுத்தும்.

ஆதலால் இந்த சப்தம (7), அஷ்டம (8) ஸ்தான தோஷங்கள் அளவோடு இருத்தல் வேண்டும். மேலும் வரனைத் தேர்ந்தெடுக்கும்போது சப்தம, அஷ்டம ஸ்தானங்கள், மணமகன், மணமகள் ஆகிய இருவர் ஜாதகங்களிலும் கூடியவரையில் சம பலத்துடன் இருக்கும் படிப் பார்த்துக்கொள்வது அவசியம். அவ்விதம் சேர்ந்தால் இருவர் வாழ்வும் மகிழ்ச்சியுடன் மனம் நிறைந்ததாக இருக்கும்.

சப்தம, அஷ்டம ஸ்தானங்களுக்குப் பரிகாரங்கள் உண்டு!

ஒரு சில மிகக் கடினமான தோஷங்களைத் தவிர மற்ற சப்தம, அஷ்டம ஸ்தான தோஷங்களுக்கு எளிய, அதே சமயத்தில் சக்தி வாய்ந்த பரிகாரங்கள் மிகப் பழைமையான, மிக அரிய ஜோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளன. சில தோஷங்களுக்கு ஆயுர்வேத சிகிச்சை பலனளிக்கும். ஜோதிடத்தைப் போன்றே ஆயுர்வேதமும் வேதத்தின் ஓர் அங்கமே ஆகும். ஜோதிடமும் ஆயுர்வேதமும் ஒன்றுடன் ஒன்று நெருங்கி இணைந்தவை ஆகும்.


ஆதலால் கண்டதும் காதல் கொள்வதைவிட ஜாதகத்தை ஆராய்ந்து பெண் அல்லது பிள்ளையைத் தேர்ந்தெடுப்பதே சந்தோஷமான இல்லற வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும்.

19

உலகமே கைவிட்டாலும் அவன் கைவிடமாட்டான்!

நமது வாழ்க்கையில் சில தருணங்களில் முக்கிய சம்பவங்கள் நிகழ்கின்றன. காலம் செல்லச் செல்ல அந்தச் சம்பவங்களில் பெரும்பான்மையானவற்றை நாம் மறந்து விடுகிறோம். ஆனால் அவற்றிலும் ஒருசில நிகழ்ச்சிகள் மட்டும் நம் நெஞ்சில் காலத்தினாலும் அழிக்கமுடியாத, என்றும் நீங்காத நினைவுகளாகப் பதிந்துவிடுகின்றன.

அத்தகைய இரு நிகழ்ச்சிகள்தான், என் வாழ்விலும் சென்ற 30.05.2003 வெள்ளிக்கிழமை அன்றும், 01.06.2003 சனிக்கிழமை அன்றும் நிகழ்ந்தன. இன்று இக்கட்டுரையை



எழுதும்போதும் அந்த இரு நிகழ்ச்சிகளையும் நினைத்து என் உடலும் உள்ளமும் சிலிர்க்கின்றன.

மே 30-ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு சுமார் 7 மணி அப்போது.

சென்னை வண்ணாரப்பேட்டையில் ஒரு சாதாரண வியாபாரம் செய்துவரும் அன்பர் ஒருவர் எனது வீட்டிற்கு வந்து என்னிடம் 'லிஃப்கோ' நிறுவனத்தார் வெளியிட்டுள்ள ஸ்ரீமத் ராமாயணம் - சுந்தரகாண்டம் நூலின் இரு பிரதிகளை, மலர்களை அவற்றின்மீது வைத்து என்னிடம் கொடுத்து வணங்கினார். எனது ஆசியுடன் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காகவே என்னிடம் கொடுத்து வணங்கியதாக நினைத்து, அவருக்கு ஆசி கூறி அந்த இரு பிரதிகளையும் அவரிடமே திரும்பத் தந்தேன். 'இந்த இரு பிரதிகளும் உங்களுக்குத்தான்' என்று கூறிய அவர், அதன் காரணத்தைக் கூறியபோது என்னையுமறியாமல் என் கண்களில் நீர் பெருக்கெடுத்தோடியது.

அவர் கூறிய வாசகங்கள் இவைதான்:-

"எனது குழந்தை இரண்டு வயதாகும்வரை சாதாரணமாக மற்ற குழந்தைகளைப் போல் பேசிக்கொண்டிருந்தது. இரண்டாவது வயதில் சில நாட்கள் காய்ச்சல் ஏற்பட்டு அதற்காகச் சிகிச்சை அளித்தோம். சிறிது நாட்களில் காய்ச்சல் நின்றுவிட்டது. ஆனால் குழந்தையால் பேச முடியவில்லை. அடியோடு ஊமையாகிவிட்டது. இப்போது குழந்தைக்கு 5½ வயதாகிறது. இந்த இடைப்பட்ட மூன்றரை வருட காலத்தில் அனைத்துச் சிகிச்சைகளும் செய்து பார்த்து விட்டோம். ஆனால் குழந்தையால் பேசமுடியவில்லை.

இந்நிலையில்தான் 'குமுதம் ஜோதிடம்' மூலம் தாங்கள் பலருக்கும் கூறிவரும் அறிவுரையை ஏற்று, சென்ற ஆறு நாட்களாக ஸ்ரீமத் ராமாயணம் - சுந்தரகாண்டம் படித்து வருகிறேன். 30-ம் தேதி வெள்ளிக்கிழமை காலையில் சுந்தர காண்டம் 7-வது சர்க்கம் (அத்தியாயம்) படித்துக்கொண்டிருந்தேன். சென்ற மூன்று ஆண்டுகளாகப் பேசாதிருந்த என் குழந்தை என் முதுகின் பின்னால் வந்துநின்று, என்னைக் கட்டிக்கொண்டு, 'அப்பா' என்று அழைத்தது. திடுக்கிட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்தபோது குழந்தை மேலும்

தட்டுத்தடங்கலின்றித் தெளிவாகப் பேசியது. சற்று நேரம் பிரமித்துக் கல்லாய்ச் சமைந்து போனேன். என்னால் நம்ப முடியவில்லை. குழந்தையைக் கட்டி அணைத்துக்கொண்டு கதறி அழுதேன். அதற்குள் என் மனைவியும் மற்றவர்களும் ஓடிவந்து விட்டார்கள். எவர் வாயிலிருந்தும் எந்த வார்த்தையும் வெளிவரவில்லை. ஒவ்வொருவரும் தாங்களே குழந்தையைப் போன்று அழுதனர். அது உணர்ச்சிப் பெருக்கா அல்லது அளவற்ற ஆனந்தமா அல்லது இறைவனின் கற்பனைகளையும் மீறிய கருணைப் பிரவாகமா?

ஒவ்வொருவரும் குழந்தையை எடுத்துக் கொஞ்சி, முத்தமிட்டு மகிழ்ந்தனர். எதிரிலிருந்த ஸ்ரீராமபிரான் பட்டாபிஷேகப் படத்தை அவரவர் மனத்திற்குத் தோன்றிய படியெல்லாம் விழுந்து விழுந்து வணங்கினோம்.

இந்தக் குழந்தை.. பெண்.. தற்போது தொடர்ந்து நன்றாகப் பேசிக்கொண்டிருக்கிறாள். எனது நன்றியைத் தெரிவிப்பதற் காகச் சுந்தரகாண்டம் இரண்டு பிரதிகளை இப்போது தந்திருக்கிறேன். பணம் கொடுத்து சுந்தரகாண்டம் வாங்க வசதியற்ற இருவருக்கு உங்கள் கைகளாலேயே ஆசீர்வதித்து நீங்களே கொடுத்துவிடுங்கள். எனது நன்றியை இறைவனுக்குக் காட்டுவதற்காக ஒவ்வொரு மாதமும் இனி ஒரு பிரதியை (சுந்தரகாண்டம்) ஒருவருக்கு இலவசமாகக் கொடுப்பதாக நேர்ந்து கொண்டிருக்கிறேன். இப்போது உங்கள் ஆசி வேண்டி வந்துள்ளேன்." இதுதான் அந்த அன்பர் கூறிய நிகழ்ச்சி.

இதேபோன்று மறுநாள் 01.06.2003 சனிக்கிழமையன்று, ஒரு கணவன்-மனைவி வந்து என்னைச் சந்தித்தார்கள். சுமார் 21 மாதங்களுக்கு முன்பு அந்த இளம் மனைவியின் பெற்றோர், அப்போது நான் எழுதிக்கொண்டிருந்த தினமணி - வெள்ளிமணி மூலம் அந்தக் கணவன்-மனைவியின் ஒற்றுமையின்மை பற்றியும், தங்கள் பெண் அப்போது அனுபவித்து வந்த கொடுமைகள் பற்றியும் எமக்கு எழுதியிருந் தனர். அவர்கள் இருவர் ஜாதகங்களிலும் ஏற்பட்டிருந்த கிரக தோஷத்திற்குப் பரிகாரமும் கூறியிருந்தோம். அப்போது அவளது கணவர் அமெரிக்காவிலும், அந்த இளம் பெண் சென்னையில் தனது பெற்றோரிடமும் பிரிந்து வாழ்ந்து

வந்தனர். அந்த எளிய பரிகாரத்தை நம்பிக்கை வைத்துக் கடைப்பிடித்ததன் பலனாகத் தாங்கள் இப்போது ஒன்று சேர்ந்துவிட்டதாகவும் தங்கள் நன்றியைத் தெரிவித்து ஆசி பெற வந்திருப்பதாகவும் என்னிடம் கூறினார். அந்தப் பெண்ணின் கணவனிடம் நான் கேட்டபோது, "நான் ஏன் அப்படியெல்லாம் நடந்துகொண்டேன் என்று எனக்கே தெரியவில்லை..." என்று வருத்தத்துடன் கூறினார்.

அவர்களுக்கு ஆசி கூறி அனுப்பிவிட்டு இறைவனின் கருணையை நினைத்து நினைத்து நான் கண்ணீர் வடித்தேன். 21 மாதங்களுக்கு முன் அந்த இளம் பெண் எனக்குக் கடிதம் எழுதியபோது தற்கொலைக்கு முயற்சி செய்து, கடைசி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, சென்னை மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த தருணம் அது. என்னிடம் சென்ற சனிக்கிழமை வந்திருந்தபோது, தான் மூன்று மாதங்களாகக் கருவுற்றிருப்பதாக மகிழ்ச்சியுடன் அந்தப் பெண் கூறினார்.

மூன்றரை ஆண்டுகள் பேசாதிருந்த குழந்தை பேசியதும், புக்ககத்தினராலும் எந்தக் கணவனால் தற்கொலைக்கு முயற்சி செய்யும் அளவிற்குக் கொடுமைப்படுத்தப்பட்டாளோ அந்தக் கணவரின் அன்பை அப்பெண் பெற்றதையும் தெய்வீக அதிசயம் (Miracle) என்பதா அல்லது மனித அறிவுக்கு எட்டாத மாயை (Mystery) என்பதா? இரண்டுமே இல்லை. உண்மையில் அது அந்தப் பரமனின் மீது அவர்கள் வைத்த நம்பிக்கைதான்! பொய்க்காத அவன் கருணையின் மீது நம்பிக்கை! உலகமெல்லாம் உதவிக்கு வரமுடியாத தருணத்தில்கூட 'இதோ நானிருக்கிறேன்' என ஓடோடிவரும் அவன் நம்மீது கொண்டுள்ள கருணைதான்.

என் மனம், அந்த அகிலாண்ட நாயகியை நினைத்தது. கல்வி அறிவற்ற காளிதாசனை காவியநாயகனாக - அருட்கவிஞனாக ஆக்கி, அருள்செய்தவள் அவள்.

அடுத்த கணம் என் கண்ணனை நினைத்தேன். மாபெரும் சபையில் எந்த விநாடியும் நிர்வாணமாக்கப்படும் நிலையில் கதறிக் கூவியபோது, தயங்காது திருவருள்புரிந்து திரௌபதியின் மானம் காத்த அந்தக் கண்ணனை நினைத்தேன்!

சபலத்தினால் ஒரு விநாடி, தவறு செய்து கல்லாக உருமாறிய அகலிகையின் களங்கம் போக்கிய, கருணையே உருவான அந்தக் காகுத்தன் ஸ்ரீ ராமபிரானை நினைத்தேன்.

இறைவனின் கருணைக்கு எல்லை ஏது?

எனக்குத் தினமும் ஆயிரக்கணக்கான கடிதங்கள் வந்தவண்ணம் உள்ளன - கடன் தொல்லை, பெண்ணின் கண்ணீர், மழலைச்செல்வம் இல்லாமை, நண்பர்களால் வஞ்சிக்கப்படுவது, தொழிலில் தோல்வி, நோயினால் துன்பம் என்று. 'இத்தனைத் துன்பங்களா இவ்வுலகில்...!' என்று மனம் வேதனைப்படும் நிலையில் பலரும், 'எங்களுக்கு உதவ யாரும் இல்லை. வாழ்வை முடித்துக்கொள்ள நினைக்கிறோம்' என்றே பலரும் எழுதி வருகிறார்கள்.

அவர்கள் இந்த அளவிற்கு மனம் தளரவேண்டாம். 'உலகமனைத்தும் கைவிட்டாலும் நான் கைவிடமாட்டேன்' என்று இறைவன் வாக்களித்திருப்பதை நிரூபிப்பதற்காகவே மேற்கூறிய இரு நிகழ்ச்சிகளையும் எனக்குத் தெரிவித்தான் போலும்!

ஆதலால் உங்களை நான் வேண்டிக் கொள்வதெல்லாம் எத்தகைய துன்பமானாலும் மனம் தளரவேண்டாம் என்பதே. படைத்தவனுக்கல்லவா காக்கும் பொறுப்பு! அவன் மீது நம்பிக்கை வையுங்கள் - அதுவும் முழுமையாக. அவனிருக்க எவரும் அனாதையில்லை. நம்புங்கள். உலகமே கைவிட்டாலும் அவன் கைவிடமாட்டான்! அவன் திருவருள் இருந்தால் பட்ட மரமும் துளிர்த்துவிடும்.

20

விளையும் பயிர் முளையிலே!

உண்மைதான்! குழந்தைகள் சிறுவர்களாகவும், சிறுமியராகவும் வளரும்போதுதான் அவர்களது மனம் பசுமையான விளைநிலம் போன்றது ஆகும். அந்த இளம் மனங்களில் நாம் ஊன்றும் உணர்ச்சிமயமான விதைகள் தான் பிற்காலத்தில் அவர்கள் பெரியவர்களாக வளரும் போது அவர்களது மனநிலையைச் சீராக்கி, ஒழுங்குபடுத்தி உருவாக்குகிறது.





எத்தனை, எத்தனை கோடி பக்தர்களைத் தன்பால் ஈர்க்கிறாள்
அன்னை கங்கா! - ஹரித்வாரில் கும்பமேளா



"நம்பியவர் பாவங்களை நான் தீர்ப்பேன்"
அன்னை பாகீரதி கங்கா - ஹரித்வார்

ஆதலால்தான் இளமைப்பருவம் ஒவ்வொரு குழந்தையின் எதிர்காலச் சிறப்பிற்கும் உண்மையான அஸ்திவாரமாக அமைந்து விடுகின்றது. ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் அதிமுக்கியமான இந்த இளமைப் பருவத்தை நல்லபடி உருவாக்குவது பள்ளி ஆசிரியர்களும் கல்லூரிப் பேராசிரியர்களுமே ஆகும்.

ஆதலால் பள்ளி, கல்லூரி ஆகியவற்றின் ஆசிரியர்கள், நிர்வாகிகள் ஆகியவர்களின் பொறுப்பு மகத்தானது. நம் பாரத நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன் ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்தபோதுகூட ஒவ்வொரு தினமும் பள்ளி தொடங்குவதற்கு முன்பு தெய்வப் பிரார்த்தனை ஒன்று நடைபெறும். அதில் தெய்வீக கீதம் ஒன்றும் இசைக்கப்படும்.

இவ்விதம் கூட்டாக இறைவணக்கம் செய்த பிறகு மாணவர்களும், மாணவியரும் அவரவரது வகுப்புகளுக்குச் சென்று கல்வி கற்கத் தொடங்குவார்கள். இந்த இறைவணக்கம் அனைத்துக் கல்லூரிகளிலும் 'School Prayer' என்று கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

ஒவ்வொரு வாரமும் ஒரு வகுப்பு (Period) ஆன்மிகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வகுப்பு 'Moral Science Class' என்று அழைக்கப்பட்டு வந்தது. இந்த வகுப்பில் ஆன்மிகப் பெரியோர்களின் அறிவுரைகள், வாழ்க்கை நெறிமுறைகள், நீதி நெறிமுறைகள் ஆகியவை போதிக்கப்பட்டு வந்தன. இவற்றால் வாழ்க்கை நெறிமுறைகள் சிறுவர் - சிறுமியரின் மனங்களில் பசுமையாக, ஆழமாகப் பதிந்தன. இவ்விதம் இளம் வயதில் ஊன்றப்பட்ட ஆன்மிக விதையே இவர்கள் பெரியவர்களான பிறகு மிகப்பெரிய விருட்சமாக வளர்ந்தது.

ஆனால், இந்தியா சுதந்திரமடைந்த பின்பு, அரசியல் கட்சிகளின் பிரசாரத்தினால் மக்களிடையே பரஸ்பர வேற்றுமை, விரோத மனப்பான்மை ஏற்பட்டன. அரசியலால் பாதிக்கப்படாத அம்சம் எதுவுமே நம்நாட்டு மக்களின் வாழ்க்கையில் இல்லை என்ற அளவிற்கு அரசியல் என்ற விஷம் நம் சமூகத்தில் பரவிவிட்டது இன்று.

இதன் பலனாக பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இறைவணக்கம் மற்றும், ஆன்மிகப் போதனைகள் (Moral

Science) ஆகியவை நிறுத்தப்பட்டு விட்டன. இது தவிர, நாத்திகப் பிரசாரமும், துவேஷப் பிரசாரமும் தீவிரமடைந்தன.

இதன் விளைவு? இளைஞர்களின் மனம் தவறான வழிகளில் செல்லத் தொடங்கியது. நமது விலை மதிப்பற்ற கலாசாரம், பண்புகள், ஒழுக்கங்கள் ஆகியவற்றிலிருந்து நமது மக்கள் - முக்கியமாக நமது இளைஞர்கள் விலகிச் சென்றுவிட ஆரம்பித்தனர்.

காலம் செல்லச் செல்ல மேலை நாட்டு நாகரிகம் (அநாகரிகம்...?) நம் இளைஞர்களின் மனத்தைக் கவர்ந்தது. அதன் பயனாக நமது புராதனச் சொத்து என நாம் போற்றிப் பாதுகாத்து வந்த கலாசாரம், பண்பு, ஆன்மிகம், கொள்கைகள் ஆகியவற்றை நம் இளைஞர்கள் அவற்றின் பெருமை அறியாது புறக்கணித்து விட்டனர்.

இந்தக் கலாசாரச் சீர்கேடு இன்று கிட்டத்தட்ட ஒவ்வொரு குடும்பத்தையும் பாதித்திருப்பதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

பெற்றோர்கள் முன் உட்காரவே பிள்ளைகளும், பெண்களும் தயங்கிய காலம் மறைந்து விட்டது. அதற்கு மாறாகப் பெற்றோர்களையும், பெரியோர்களையும் எடுத்தெறிந்து பேசி நிந்திப்பதும், தங்களுக்கு எல்லாம் தெரியும், நண்பர்களே முக்கியம் என்று நடந்து கொள்வதும் பல குடும்பங்களில் இன்று பெரும் பிரச்சினையாக விஸ்வரூபமெடுத்து அமைதியைப் பாதித்துள்ளது.

இதற்காக, தற்கால இளைஞர்கள் அனைவரையுமே நாங்கள் குற்றம் சாட்டுவதாக நினைத்து விட வேண்டாம். ஆனால், இன்றைய உண்மை நிலை நாங்கள் கூறியபடிதான் உள்ளது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள். பெற்றோர்களின் பெருங்கவலையும் இன்று இதுவே.

குழந்தைகள் வளர்ந்து இளைஞர்களாவதற்கு முன்பு அவர்களைப் பண்புள்ளவர்களாகச் செய்வதில் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றிற்கும் மிகப் பெரிய பொறுப்பு உள்ளது. ஆசிரியைகளும், ஆசிரியர்களும் குழந்தைகளின் தாய், தந்தையர்களுக்குச் சமமானவர்களே.

இவர்கள் நம் குழந்தைகளுக்குப் பாடம் மட்டும் சொல்லிக் கொடுத்தால் போதாது. நமது பாரதப் புண்ணிய பூமியின் கலாசாரம், பண்பு, ஒழுக்கம், பக்தி, ஆகியவற்றைக் குழந்தைப் பருவத்திலிருந்தே பள்ளியில் ஊட்டி வருவதும் மிக மிக அவசியமானதாகும். இளைஞர்கள் தரத்தில் உயர உயர சமூகமும் உயரும். சமூகம் உயர நாடும் பலம் பெறும்.

இன்னும் சில நாட்களில் பள்ளிகளும், கல்லூரிகளும் கோடை விடுமுறைக்குப் பின்பு மீண்டும் திறக்கப்பட உள்ளன. திறக்கும்போதே ஆன்மிக உணர்வுடன் குழந்தை கள் பள்ளியிலும் கல்லூரிகளிலும் நுழைய வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவை திருக்கோயில்களுக்குச் சமமாகும்.

அவற்றில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களும் தெய்வத்திற் குச் சமானமானவர்களே. இதனை நாங்கள் கூறவில்லை. வேதம் கூறுகிறது. ஆச்சார்ய தேவோ பவ: (கல்வி அளிக்கும் குரு தெய்வத்திற்குச் சமம்). ஒழுக்கமே உயர்விற்கு அடிகோலும். ஒழுக்கமின்மை நாசத்திற்கு வழிவகுக்கும்.

பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் இந்தக் கல்வி யாண்டு முதல் கீழ்க்கண்டவற்றை அவற்றின் நிர்வாகிகள் கடைப்பிடிக்க வேண்டுமென வேண்டுகிறோம்.

அவ்வாறு கடைப்பிடித்தால் மாணவ, மாணவியர் அனைவரும் இந்தியாவிலேயே சிறந்த மாணவர்களாக ஆண்டுத் தேர்வுகளில் தங்கள் கல்வி நிறுவனங்களுக்குப் பெருமை சேர்ப்பார்கள். அது மட்டுமல்ல; பல குடும்பங் களுக்கும் நம் சமூகத்திற்கும், நம் நாட்டிற்கும் உயர்ந்த குண நலன்களைப் பெற்றவர்களாக இளைஞர்களை உருவாக்கித் தந்த பெருமையும், உங்களுக்குக் கிடைக்கும்.

1. பள்ளி, கல்லூரி ஆகியவை திறக்கப்படுவதற்கு முன்பு நீங்களே ஏற்பாடு செய்து மாணவ, மாணவியரைச் செட்டிப் புண்ணியம் அல்லது திருவஹிந்திரபுரம் (ஸ்ரீ ஹயக்ரீவமூர்த்தி), கூத்தனூர் (சரஸ்வதி) ஆகிய திருத்தலங்களுக்கு அழைத்துச் சென்று தரிசனம் செய்துவிட்டு வந்து பின்பு இந்த ஆண்டுக் கல்வியை ஆரம்பிக்கவும். இது அளவற்ற கிரகிப்புச் சக்தியையும், ஞாபகத் திறனையும் மன ஒருமைப்பாட்டினை

யும் (Concentration) தவறாது அளிக்கும் எனப் புராதன நூல்கள் உறுதி அளித்துள்ளன.

2. தினமும் வகுப்புகள் தொடங்குவதற்கு முன்பு கூட்டாக இறை வணக்கம் செய்வது அவசியம். சுமார் பத்து நிமிடங்களே போதும். இதில் மத, இன வேறுபாடு எதுவும் கிடையாது. இந்தப் பத்து நிமிட இறைபக்தி குழந்தைகளின் மனத்தைத் தூய்மைப்படுத்தும். அதனால் Ragging, ஒழுக்கமின்மை, தவறான எண்ணங்கள் ஆகியவற்றில் மாணவர்களின் மனம் ஈடுபடாது.

3. வாரம் ஒருமுறை ஆன்மிக வகுப்பு (Moral Science) நடத்துவதும் அவசியமாகும்.

பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் மாணவர்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அல்ல. அவை அனைத்தும் நம் நாட்டின் இளைஞர்களையும் யுவதிகளையும் சிறந்த, உத்தமக் குடிமக்களாக உருவாக்கும் திருக்கோயில்களாகும். குழந்தைகளின் பெற்றோர்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். இது உங்கள் கடமை.

21

இறைவனை நாம் எவ்விதம் தரிசிக்க வேண்டும்?

திருக்கோயில்களுக்குச் சென்று இறைவனைத் தரிசிப்பது எல்லையற்ற ஓர் ஆனந்த, ஆத்ம அனுபவமாகும்.

கடமைக்காகவும், நமது மன சமாதானத்திற்காகவும் கோயிலுக்குச் செல்வதற்கும், பக்திபூர்வமாக நாம் அத்திருச்



சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் இறைவனை அனுபவிப்பதற்கும் வித்தியாசம் உண்டு.

பக்திபூர்வமாகக் கருவறையில் உள்ள விக்கிரகத்தையோ அல்லது சிவலிங்கத்தையோ நாம் பார்க்கும்போது இறைவனையே அங்கு காண்கிறோம். அவ்விதம் இறைவனை அனுபவிக்கும்போது அதனால் ஏற்படும் அதிர்வலைகள் (Vibration) நமது உள்ளத்தையும், உணர்ச்சியையும் பண்படுத்துகின்றன.

எமக்குச் சென்னையிலுள்ள, சமீபத்தில் விவாகமான ஓர் இளம்பெண்ணிடமிருந்து நெஞ்சைத் தொடும் கடிதம் ஒன்று வந்துள்ளது. பல ஆசைகளுடனும், எதிர்பார்ப்புக் கனவுகளுடனும் புக்ககம் புகுந்த அந்தப் பெண் எழுதியுள்ள நான்கு பக்கக் கடிதத்தின் கீழ்க்கண்ட வரிகளை இப்போது நாம் இங்கு குறிப்பிட்டுக் காட்டவேண்டியுள்ளது.

"எனது மாமியார் எனக்கு இழைத்துவரும் கொடுமைகளை உள்ளபடி எழுதுவதற்கு வார்த்தைகள் இல்லை. நான் என்ன பாவம் செய்தேன்? என் மீதுதான் தவறா? என் கணவர் வீட்டினரை நான் மிகவும் நேசிக்கிறேன். ஆனால், அவர்கள் மனம் மாறவில்லை. அளவற்ற கொடுமைகளுக்கு என்னை ஆளாக்கிவரும் என் மாமியார், தினமும் அருகிலுள்ள கோயிலுக்குச் சென்றுவரத் தவறுவதில்லை.

எனக்கு என்று, எவ்விதம் இக்கொடுமையிலிருந்து விடுதலை கிடைக்கும்?"

வீட்டிலுள்ள மருமகளை இவ்விதம் கொடிய துன்பங்களுக்கு ஆளாக்கிவிட்டு, திருக்கோயிலுக்குச் செல்வதில் என்ன பலன் இருக்க முடியும்? தினமும் கோயிலுக்குச் செல்வதனால் அந்த மாமியாருக்குத் தெய்வ நம்பிக்கை இருப்பது தெரிகிறது. ஆனால், அதில் பக்தி இல்லை. நேர்மை இல்லாத தெய்வ வழிபாட்டினால் எவ்வித பிரயோஜனமும் கிடையாது. அது ஒரு வீண் சடங்கே ஆகும்.

ஒவ்வொருவரும் தினமும் படுக்கைக்குச் செல்லும்முன், 'இறைவா! இன்று நான் உனது திருவுள்ளம் புண்படும்படியான காரியம் எதையாவது செய்திருக்கிறேனா?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்வது அவசியம். அதற்குக்

கிடைக்கும் பதிலுக்கேற்ப நமது மறுநாள் வாழ்க்கையை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் படிப்படியாக நமது மனம் பண்படும்.

திருமலையில் ஸ்ரீமத் ராமானுஜர்

ஸ்ரீமத் ராமானுஜர், திருமலை வேங்கடவனின் தரிசனத் திற்காக அவனது கருவறையில் நுழையும்போது, அவரது உடல் அவரையும் அறியாது நடுங்குமாம்! தான் எத்தகைய மகத்தான ஒரு சக்தியின் முன்பு நிற்கிறோம் என்பதை உணர்ந்தே அவரது உடலும் உள்ளமும் நடுங்கின.

(ஆதாரம்: ஸ்ரீ அஹோபில மடத்தை அலங்கரித்து வரும் ஸ்ரீ ந்ருஸிம்ம திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மகாதேசிகன், திருமலையில் நடந்த அன்னமாச்சாரிய விழாவின்போது திருவாய் மலர்ந்து அருளியது.)

ஸ்ரீமத் ராமானுஜர் போன்ற ஒரு மகாபுருஷரே வேங்கடவனின்முன் நிற்கும்போது உடலும் உள்ளமும் நடுங்கினார் என்றால், நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் எம்மாத்திரம்?

ஆனால், தற்காலத்தில் நடப்பது என்ன? திருமலை செல்லும்போது ஏதோ உல்லாசப்பயணம் செல்வதுபோல் டிரான்சிஸ்டர்களிலும், 'வாக்மேன்'களிலும் திரைப்படப் பாடல்களைக் கேட்டுக் கொண்டு குதூகலமாகப் பேசிச் சிரித்துக்கொண்டு செல்கிறோம். முன்பெல்லாம் திருமலையில் பெண்கள் பூ வைத்துக் கொள்ளக்கூடாது என்ற ஒரு நியமம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

இதுபற்றிய திருமலை தேவஸ்தானத்தாரின் அறிவுரைப் பலகை ஒன்றை வைகுண்ட நுழைவாயிலில் இன்றும் காணலாம். ஆனால், இன்று அங்கு வரும் பெண்கள் பலர் தலை நிறைய பூக்கள் வைத்துக்கொண்டும், வெளிநாட்டு வாசனைத் திரவியங்களைப் போட்டுக்கொண்டும் வருகின்றனர்.

வேங்கடவனின் கருவறையில் இருப்பதோ, எவரும் முழுமையாக அறிந்துகொள்ள முடியாத ஒரு சூட்சுமமான மகாசக்தியாகும். இவ்விதம் கண்டபடியெல்லாம் பலரும்

வருவது கருவறையில் உள்ள மூலாதார சக்தியை நெருப்பென தகிக்க வைக்கும்.

ஆதலால் திருமலை உள்பட அனைத்துத் திருக்கோயில் களுக்கும் நாம் செல்லும்போது நம் மனம் போனபடி யெல்லாம் பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் செல்லாமல் பக்தியுடனும் ஆன்மிகக் கட்டுப்பாட்டுடனும் செல்வது அவசியம்.

காஞ்சி மகாப்பெரியவரின் உதாரணம்

ஒருமுறை காஞ்சி மடத்தில் மகாப்பெரியவர் எழுந்தருளி யிருந்தபோது, முற்பகல் சுமார் 11 மணிக்குத் திருமலை யிலிருந்து வேங்கடவனின் பிரசாதம் அனுப்பியிருந்தார்கள். சுமார் 40 வயது மதிக்கக்கூடிய ஒருவர், தனது தலையின் மீது வெள்ளித்தட்டு ஒன்றில் திருமலை தேவஸ்தானம் அனுப்பியிருந்த வஸ்திரம், லட்டு போன்ற பிரசாதங்களை எடுத்துக்கொண்டு வந்தார்.

பலரும் எதிர்பார்க்காத நேரத்தில் அனைவரும் வியக்கும்படியான அந்த அற்புத நிகழ்ச்சி அப்போது நடந்தது. சிலருக்கு அதிர்ச்சியும்கூட!

மகாப்பெரியவர் திடீரென்று எழுந்திருந்து தனது வயதில் பாதி வயதேயான, பிரசாதங்களை எடுத்துவந்த அந்த நபரை நமஸ்கரித்து, அந்த வெள்ளித்தட்டை வாங்கித் தனது சிரசில் (தலையில்) வைத்து, பின்பு தனது கண்களில் ஒற்றிக்கொண்டு, அவற்றை ஏற்றுக்கொண்டார்.

அந்தப் பிரசாதங்களைக் கொண்டு வந்தவரை திருமலை எம்பெருமானாகவே பாவித்து வணங்கி, பிரசாதங்களை ஏற்றுக்கொண்டார் அந்த மகானுபாவர். இதன்மூலம் திருக்கோயில் பிரசாதங்களுக்கு உள்ள தெய்வீக மதிப்பையும், அவற்றை நாம் எவ்வாறு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் காஞ்சி மகாப்பெரியவர் அனைவருக்கும் உணர்த்திக் காட்டி அருளினார்.

ஆனால், இன்று நாம் எவ்விதம் நடந்துகொள்கிறோம்? நமது அலுவலகத்தில் சக ஊழியர் எவராவது திருப்பதி சென்று தரிசித்துவிட்டு வந்து பிரசாதமாக லட்டினைக் கொடுக்கும்போது, 'ஓஹோ! திருப்பதி லட்டா?' என்று



"என் குழந்தைகளை என்றும் நான் கைவிடேன்"
ஸ்ரீ கமலாம்பிகை - திருவாரூர்

உட்கார்ந்தபடியே அது ஏதோ ஓர் இனிப்புப் பண்டம் போல வாயில் போட்டுக் கொள்கிறோமே... இந்த அறியாமையை என்னவென்று கூறுவது?

ஆதலால் எப்போதெல்லாம் நாம் திருக்கோயிலுக்கோ அல்லது மகான்களின் பிருந்தாவனங்களுக்கோ அல்லது உண்மையான துறவிகளின் ஆசிரமங்களுக்கோ செல்கிறோமோ, அப்போதெல்லாம் சரீர சுத்தத்துடனும், உள்ளத் தூய்மையுடனும் முழுமையான பக்தியுடனும் சென்று தரிசிக்க வேண்டும். வாழ்க்கையிலும் அதர்மமான செய்கைகளைக் கண்டிப்பாகத் தவிர்த்தல் அவசியம்.

அதர்மமான காரியங்களைச் செய்துகொண்டு திருக்கோயில்களுக்குச் செல்வது, அடியில்லாத பாத்திரத்தில் தண்ணீர் பிடிப்பதைப் போலாகும்.

ஆதலால் திருக்கோயில்களுக்குச் செல்லும்போது நம் மனத்தைப் பக்தியுடனும், பரிசுத்தமாகவும் வைத்துக் கொள்வது அவசியம். அத்துடன் வாழ்க்கையிலும் நேர்மை, ஒழுக்கம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் இறைவனின் திருவருள் நமக்குக் கிடைக்கும். பகவானையும் உண்மையாக அனுபவிக்க முடியும்.

22

கோடை விடுமுறை கொடுக்கும் அரிய வாய்ப்பு!

அநேகமாக, எல்லாப் பள்ளிகளிலும், கல்லூரி களிலும் ஆண்டுத்தேர்வுகள் முடிந்துவிட்டன.

குழந்தைகளுக்குக் கொண்டாட்டம். வெளி யூர்களில் இருக்கும் நெருங்கிய உறவினர்களிடமிருந்து



அழைப்பும் வந்துவிடுகிறது. குடும்பமே கிளம்பி விடுகிறது உல்லாசப் பயணத்திற்கு.

ரயில்வே துறையும், 'ஹாலிடே ஸ்பெஷல்' (Holiday Special) என்று அதிக ரயில்களை இயக்குகிறது. ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் என்று, எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம்தான் - மூட்டை முடிச்சுகளுடனும், தங்கள் குஞ்சு குழுவான்களுடனும்!

எங்கு பார்த்தாலும், க்யூ வரிசைதான். அதில் கால்கடுக்க நின்று, டிக்கெட்டும் வாங்கி, ரிஸர்வேஷனும் கிடைத்து விட்டால், அதிர்ஷ்டம்தான். வசதி உள்ளவர்கள் டில்லி, மும்பை, கொல்கத்தா என்று, தங்கள் உறவினர்களுடன் தங்கிவிட்டு வருவதற்காகச் செல்கிறார்கள். ஒரு சிலர் தங்கள் வசதிக்கேற்ப வெளிநாடுகளுக்கும் சென்று வருகின்றனர்.

மலை வாசஸ்தலங்களான நீலகிரி, உதகை, கொடைக் கானல் போன்றவை குளிர்ந்த இன்முகம் காட்டி "வாருங்கள்... வாருங்கள்" என்று நம்மை அழைக்கின்றன.

ஆக, கோடை விடுமுறை என்றால், மனித மனம் ஒரு மாறுதலை விரும்புகிறது. அலுப்புத் தட்டும் அன்றாட வாழ்க்கையிலிருந்து தப்பித்து, சில வாரங்கள் அல்லது சில நாட்களுக்காவது, நிம்மதியாக, ஓய்வெடுக்க மனம் விழைகின்றது. ஆதலால், கோடை விடுமுறை என்றால், உல்லாசப் பயணங்கள் நிச்சயம் என்ற வழக்கம் ஏற்பட்டுவிட்டது. வசதி உள்ளவர்களுக்கு இது ஒரு Picnic Season ஆகிவிட்டது.

பல பள்ளிகள், கல்லூரிகளிலும்கூட, இந்த சந்தர்ப்பத் தைப் பயன்படுத்திக் கொண்டு உல்லாசப் பயணங்கள், Excursions என்று நிர்வாகங்களே நடத்தி வருகின்றன. கோடை விடுமுறையின்போது, பெரும்பாலும், பலரும் உல்லாச நகரங்களுக்குச் சென்று, பொழுதைக் கழிப்பதையே விரும்புகின்றனர்.

இவ்விதம் உல்லாசமாகப் பொழுதைக் கழிப்ப துடன், நம் குழந்தைகளுக்கு ஆன்மிகத்தைச் சேர்த்து, இந்த விடுமுறை நாட்களை ஒரு மகிழ்ச்சி, மனநிறைவு, ஆன்மிக, தூயசிந்தனைகள் நிரம்பிய அனுபவமாகச் செய்யலாமே!

நமது தாய்நாடான பாரதப் புண்ணிய பூமியில் ஆன்மிகமும் இயற்கை அழகு கொஞ்சும் நதி திரங்களும் எத்தனை எத்தனையோ இருக்கின்றனவே.

அவற்றில் ஒன்றை நாம் தேர்ந்தெடுத்து, ஏதோ ஒரு நகரத்திற்கு உல்லாசப் பயணம் சென்று, விளையாட்டிலும், பொழுதுபோக்கிலும் நாட்களை வீணடிப்பதை விட, இத்தகைய புனித ஊர்களுக்குக் குழந்தைகளையும், குடும்பத்தினரையும் கூட்டிச் செல்லலாமே!

அதனால், பல புதிய இடங்களையும், புனித நதி களையும், திருக்கோயில்களையும் பார்க்கும் வாய்ப் புடன் நம் தாய்த் திருநாட்டின் சரித்திரத்தை அறியும் சந்தர்ப்பமும் நமது குழந்தைகளுக்குக் கிடைக்கு மல்லவா? செலவிடும் பணம் உல்லாசங்களில் விரயமாகாமல், நம் குழந்தைகளின் அறிவுத்திறனை விருத்தி செய்துகொள்ளும் அரிய வாய்ப்பும் கிடைக்குமே!

உதகை, கொடைக்கானல் போன்ற உல்லாச மலைவாசஸ்தலங்களுக்குச் செல்வதனால் உடல் மட்டுமே குளிரும். ஆனால், ஆன்மிகச் செல்வங்கள் நிறைந்து கிடக்கும் நமது நாட்டின் பல இடங்களுக்கு இந்த விடுமுறை நாட்களில் நம் குழந்தைகளை அழைத்துச் சென்றால், அவர்கள் உள்ளங்களும் குளிருமல்லவா?

உதாரணமாக, ஆண்டு விடுமுறைக் காலத்தில், ஹரித்வார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், துவாரகா,

பூரி, திருச்செந்தூர், பழநி, ஸ்ரீரங்கம், நவதிருப்பதிகள், தாரமங்கலம், மதுரை, கன்னியாகுமரி போன்ற அதியற்புத தலங்களுக்குச் சென்று வரலாமே.

அதனால், பொழுதும் சந்தோஷமாகக் கழியும். ஆன்மிக அனுபவமும் கிட்டும். குழந்தைகளுக்குத் தெய்வபக்தி, ஒழுக்கம், ஆகியவற்றிலும் அசையாத பற்றுதல் ஏற்படும்.

சிறு வயதும், வாலிப வயதுமே, ஒழுக்கம், தூய்மை, இறைபக்தி, நேர்மை ஆகியவற்றை விதைக்கும் விளை நிலங்கள் ஆகும். இத்தருணத்தைப் பெற்றோர்கள் நழுவவிட்டால், பின்பு நமது பிள்ளைகள், பெண்கள் ஆகியோரின் மனமும் உணர்ச்சியும் காட்டாற்று வெள்ளம்போல், கட்டுப்பாடற்றுப் பெருகி ஓடும்.

இறைபக்தி ஒன்றே, நம் குழந்தைகளின் மனத்தைக் கட்டுப்படுத்தி, ஓர் ஒழுங்குமுறையில், அழகாகச் செல்ல, அணைபோன்று உதவும். அவர்கள் வாழ்க்கையும் மலரும்.

விடுமுறைப் பயணங்களில் செல்ல வசதியற்ற வர்கள், விடுமுறையின்போது, குழந்தைகள் தினமும் காலையில் சீக்கிரமே எழுந்து, குளித்து, அவரவர் மத, குல வழக்கப்படி, இறைவனுக்குப் பூஜை செய்து, அவரவரதுஊரில் உள்ள திருக்கோயில் ஒன்றிற்குத் தினமும் சென்றுவரும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

விடுமுறைக் காலங்களில் தங்கள் நேரத்தை திருக்கோயில்களைச் சுத்தம் செய்வது, சமூக சேவைகளில் ஈடுபடுவது, புனித நூல்களைப் படிப்பது ஆகியவற்றில் நம் இளைஞர்கள் செலவிட வேண்டும். இவற்றால் மனம் பண்படும்.

பெரியவர்களாக வளர்ந்தவுடன் இக்குழந்தைகள் சமூகத்திற்கும், நாட்டிற்கும் கிடைத்தற்கரிய


பொக்கிஷங்களாகத் திகழ்வார்கள். அதனால் பெற்றவர்கள் மனம் குளிரும். குலத்திற்கும், குடும்பத்திற்கும் பெருமை உண்டாகும். ஆதலால், ஆண்டு விடுமுறையை உல்லாச விடுமுறையாக (Picnic Holiday) வீணடிக்காமல், ஆன்மிக விடுமுறையாகச் (Spiritual Picnic) செலவிடுங்கள்.

அதனால், மனம் நிறையும். உள்ளம் தூய்மை அடையும். நம் நாட்டின் அருமை, பெருமைகளை நம் குழந்தைகள் அறிந்துகொள்ளும் வாய்ப்பும் உண்டாகும்.

23

சரும நோய்களுக்குப் புஷ்ப கைங்கர்யம்!

இறைவனுக்கு நாம் செய்யும் ஒவ்வொரு தொண்டிற்கும் ஓர் அர்த்தமும் பலனும் உண்டு. உதாரணமாக இனிமையான குரல்நயத்தைப் பெற வேண்டுமானால் இறைவனுக்குச் சுத்தமான தேன் கொண்டு அபிஷேகம் செய்வது சிறந்த பலனைத் தரும்.



அதேபோன்று இறைவனுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்வதன் சக்தியைப் பற்றி மிகப் புராதனமான நூல்கள் விளக்கியுள்ளன.

புஷ்ப கைங்கர்யம் என்றால் என்ன? நல்ல மலர்களை மாலையாகத் தொடுத்து இறைவனுக்கு அணிவிக்கும்படி கொடுப்பதே புஷ்ப கைங்கர்யம் எனப்படுகிறது.

இதில் துளசி, வில்வம் ஆகியவையும் அடங்கும். தொண்டரடிப் பொடியாழ்வார், திருவரங்கத் திருத்தலத்தில் நந்தவனம் அமைத்து அதில் நறுமணம் வீசும் பலவகையான புஷ்பச் செடிகளையும், துளசியையும் வைத்து அவற்றைப் பறித்து மாலைகளாகத் தொடுத்து அரங்கனுக்குத் தினமும் அணிவிப்பதற்காக அர்ப்பணித்து வருவதையே தனது கடமையாகச் செய்து வந்தார். அதன் பலனாக அரங்கனின் திருவருள் அவருக்குக் கிடைத்தது.

இதேபோன்று திருமலையில் அனந்தாழ்வார் என்ற மகான் நந்தவனம் அமைத்து, அவற்றில் நறுமணம் கமழும் மலர்ச்செடிகளை வளர்த்து, அவற்றைக் கொண்டு மாலை தொடுத்து, திருவேங்கடமுடையவனுக்குத் தினமும் சாற்றி வந்தார்.

அனந்தாழ்வாருக்கு ஏற்ற உத்தமியான மனைவி இந்த நந்தவனத்தைச் செப்பனிடுவது, புதுச்செடிகளை நடுவது, நட்ட செடிகளுக்கு நீர் ஊற்றுவது என்று அனைத்திலும் தன் கணவருக்கு உதவி செய்து வந்தார்.

ஒரு சமயம் கோடைக்காலம். சூரியன் உக்கிரமாகக் காய்ந்தான். அப்போதுதான் அனந்தாழ்வாரும் அவரது மனைவியும் தங்களது நந்தவனத்தைச் சீரமைத்துக் கொண்டிருந்தனர்.

அனந்தாழ்வார் மண்வெட்டியால் மண்ணை வெட்டி, கூடையில் கொடுப்பதை அவரது மனைவி தனது தலையில் சுமந்து சென்று சிறிது தூரத்தில் அந்த மண்ணை கொட்டிக் கொண்டிருந்தார்.

அப்போது அங்கு ஒரு சிறுவன் வந்தான். பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் சுட்டிப்பயலாகவும் இருந்தான். அனந்தாழ்வாரின் மனைவியிடம் சென்று 'இக்கடும் வெயிலில் நீங்கள் மண் சுமப்பதா? என்னிடம் கொடுங்கள் அதை' என்று பற்றினான். வேண்டாம் என்று எத்தனை முறை கூறியும் அந்தச் சிறுவன் விடுவதாக இல்லை.

கோபமுற்ற அனந்தாழ்வார், கீழே கிடந்த ஒரு பெரிய கல்லை எடுத்து அந்தச் சிறுவனை நோக்கி வீசி எறிந்தார். சிறுவனின் நெற்றியில் பட்டு, வலி பொறுக்கமுடியாமல் அவ்விடத்தை விட்டு ஓடினான் அச்சிறுவன் - நெற்றியில் கைவைத்தபடி.

மறுநாள் காலை சுப்ரபாதம் சொல்லி வேங்கடவனின் மணிக்கதவம் தாள் திறந்தனர். எம்பெருமானின் திருமுகத்தைக் கண்ட அர்ச்சகர்கள் ஒருகணம் பதறிப்போயினர். எம்பெருமானின் நெற்றியிலிருந்து ரத்தம் பெருகி வடிந்து கொண்டிருந்தது. அனந்தாழ்வாருக்குச் செய்தி எட்டியது.

'அய்யோ! நேற்று நான் கல்லால் அடித்த சிறுவன் எம்பெருமான்தான் என்பதை அறியாமல் போனேனே' என்று கதறி அழுதார். ஓடோடி வந்து வேங்கடவனின் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு கதறினார். 'உன்னையடித்த எனக்கு உய்வு ஏது?' எனக் கதறினார்.

பச்சைக்கற்பூரம் மற்றும் பல மூலிகைகள் சேர்த்து அரைத்த மருந்தைத் திருவேங்கடவனின் நெற்றிக் காயத்தில் இட்டார். வடிந்த ரத்தமும் நின்றது. அதுதான் இன்று திருமலைத் திருமாலின் நெற்றியில் விளங்கும் 'ஸ்ரீபாதரேணு' ஆகும். இந்த ஸ்ரீபாதரேணு பல மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். பல சரும வியாதிகளைப் போக்கும் சக்தி கொண்டது.

அன்றிரவு அனந்தாழ்வாரின் கனவில் வேங்கடவன் வந்து, 'ஆனந்தாழ்வாரே! தங்களது புஷ்ப கைங்கர்யத்தினால் மிகவும் மனம் மகிழ்ந்தோம். ஆதலால்தான் நந்தவனத்திற்கே வந்து தரிசனம் தந்தோம். இந்தச் சிறு திருவிளையாடல் எனது

திருவுள்ளத்திற்கு உகப்பானதே. இனியும் இந்தப் புஷ்ப கைங்கர்யத்தைச் செய்து வாருங்கள்' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இதேபோன்று சிவனடியார்களும் புஷ்பக் கைங்கர்யம் செய்வதைப் பிறவியில் கிடைத்தற்கரிய பெரும்பேறாகக் கருதிச் செய்து இறைவனின் திருவருளைப் பெற்று உய்ந்தனர். முருகநாயனார் பரம சிவபக்தர்.

'புண்ணியம் செய்வார்க்குப் பூ உண்டு' என்ற சொல்லுக்கு ஏற்ப நந்தவனம் அமைத்து, முல்லை, சம்பங்கி, தாமரை, செண்பகம், கொன்றை போன்ற தூய மலர்களைப் பறித்து, மாலைகளாகத் தொடுத்துச் சிவமணம் கமழ வர்த்தமானேசுரம் என்ற திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குச் சாற்றி மனநிறைவு பெற்று வந்தார்.

திருஞான சம்பந்த சுவாமிகளின் திருவருள் பெற்ற இந்த நாயனார், இறைவனுக்குத் திருமலர்த் தொண்டு புரிந்து, இறுதியில் சிவானந்த ஜோதியில் கலந்து முக்தி அடைந்தார்.

பல பிறவிகளில் செய்திருக்கும் புண்ணிய பலன்களின் பலனாகவே இறைவனுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்யும் மனமும் வாய்ப்பும் கிடைக்கும்.

எவ்வித மருந்திற்கும் குணமாகாத மிகக் கடுமையான சரும நோய்கள், இறைவனுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்வதனாலும், மலர்களைச் சூடுவதனாலும், மலர்களினால் அர்ச்சனை செய்வதனாலும் குணமாகும் எனப் புராதன நூல்கள் விளக்கியுள்ளன.

புஷ்ப கைங்கர்யம் ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டு களில் மிகச் சிறந்ததாகும்.

எப்போது இறைவனைத் தரிசிப்பதற்குச் செல்வதானாலும் வசதிக்கு உட்பட்டு நல்ல புஷ்பங்களை வாங்கிச் செல்லுங் கள். அவனது திருவுள்ளத்திற்கு மிகவும் உகந்தவை நறுமண மலர்களே.

சிலரது உடலில் ஏற்படும் துர்நாற்றம் மற்றும் கடுமையான தோல்வியாதிகள் ஆகியவை கடவுளுக்குச் செய்யும் புஷ்ப கைங்கர்யத்தினால் பூரணமாகக் குணமாகும்.

புஷ்ப கைங்கர்யம் மற்ற கைங்கர்யங்கள் அனைத்தையும் விட மிகவும் சிறப்பானது. இம்மைக்கும் மறுமைக்கும் பயனளிப்பது.

24

எளிமையாக வாழ்ந்தால் இன்பம் காணலாம்!

சென்ற ஆண்டு, சென்னையில் நடந்த திருமண மொன்றிற்குச் சென்றிருந்தேன்.

பெரிய இடத்து சம்பந்தம். பெண் வீட்டார், பிள்ளை வீட்டினர் இருவருமே பெருஞ்செல்வந்தர்கள். திருமணத் தன்று முகூர்த்தம் காலையில் 9 மணியிலிருந்து 10 மணி வரை என்று போடப்பட்டிருந்தது. அவர்கள் மிகவும்



வற்புறுத்தியதால் சென்றிருந்தேன். ஊரே திரண்டு வந்திருந்தது. வராத உறவினர் இல்லை என்பது பின்பு தெரிந்தது. பெரிய இடத்துத் திருமணமல்லவா!

காலை 6 மணியிலிருந்து சிற்றுண்டி இனிப்பில் நான்கு வகை. இவை தவிர இட்லி, வடை, இடியாப்பம், தோசை - சாதாரண தோசை அல்ல, மசாலா தோசை! திணறினர் விருந்தினர். 'அப்பாடா' என்று திருமணக்கூடத்தில் வந்து மின்சார விசிறிகளின் கீழ் உட்கார்ந்தவர்களில் பலர் உண்ட களைப்பில் தூங்கவும் ஆரம்பித்தனர். சிறந்த சமையல்காரர்களை நியமித்திருந்ததால், ஒவ்வொரு பலகார வகையும் மிக உயர்தரமாக இருந்தது. முழுவதையும் சாப்பிட முடியாமல் விழித்த உறவினர்களின் இலைகளில் ஏராளமான பதார்த்தங்கள் சாப்பிடமுடியாமல் மீதம் வைக்கப்பட்டிருந் தன. முகூர்த்தம் முடிந்தவுடன் விருந்தினர்களைச் சாப்பிட அழைத்தனர். காலையில் சிற்றுண்டி பலமாக இருந்ததால், விருந்துச் சாப்பாட்டைச் சாப்பிட முடியாமல் உறவினர்கள் திணறினர். சுமார் 17 பந்திகளில் அந்த மிகப்பெரிய ஹாலில் சாப்பிட்டனர். ஒவ்வோர் இலையிலும் ஏராளமான இனிப்புகளும், காரவகைகளும் மற்ற பிற உணவு வகைகளும் அப்படியே சாப்பிடமுடியாமல் வீணாக்கப்பட்டிருந்தன.

என் கண்ணில் நீர் வடிந்தது. பெண் வீட்டாரை இவ்விதம் வீணாகச் செலவழிக்கச் செய்வதில் பிள்ளை வீட்டார் அடையும் நன்மைதான் என்ன? பிறர் செலவில் அடையும் வீண் பெருமையைத் தவிர? இத்தனை உணவுப் பொருள் களையும் வீணாக்காமல் ஏழை, எளியவர்களுக்குக் கொடுத் திருந்தால், எத்தனை வயிறுகள் நிறைந்திருக்கும்! எத்தனை வயிறுகள் அந்த மணமக்களை வாழ்த்தியிருக்கும்! என்றுதான் நாம் எளிமையாக இருக்கக் கற்றுக்கொள்ளப் போகிறோம்?

நமது கடன்களுக்கும், பொருளாதாரத் துன்பங்களுக்கும் நமது அறியாமையும், அகந்தையுமே காரணமாகும். எத்தனை வசதி இருப்பினும், ஒவ்வொரு திருமணத்தையும் எளிமை யாகச் செய்யலாமே! விவாகம், சீமந்தம், குழந்தைகளுக்கு ஆண்டு நிறைவு போன்ற நிகழ்ச்சிகளில் ஏழைக் குழந்தை களுக்கும், வறியவர்களுக்கும் உணவளிக்கலாமே! இனிப்பு

என்றால் என்ன என்பதையே ருசி பார்த்தறியாத எத்தனை ஏழைக் குழந்தைகள் நம் நாட்டில் ஏங்கி இருக்கின்றனர். அந்த ஏழைச் சிறுவர்களையும், சிறுமியரையும் இத்தகைய தருணங்களில் நாம் நினைவுகொள்ளலாமே!

செல்வம் என்பது இறைவனால் அளிக்கப்படும் பேறு ஆகும். அதனைக் கவனமாகவும், சிக்கனமாகவும் செல விட்டால், பல தலைமுறைகளுக்கு அச்செல்வம் தலைகாக்கும். செல்வம் ஓரிடத்தில் நிலையாக நிற்பதில்லை. 'செல்வோம்,' 'செல்வோம்' என்று சென்றுகொண்டேயிருக்கும் செல்வம். அதனை எந்த அளவிற்குப் பாதுகாப்பாக வைத்துக் கொள்கி றோமோ, அந்த அளவிற்கு அது நம்மிடம் தங்கியிருக்கும். கையில்தான் இருக்கிறதே என்று கண்மூடித்தனமாக விரயம் செய்தால் என்றாவது ஒருநாள் அது நம்மை மீளமுடியாது பாதித்துவிடும்.

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

என்றனர் பெரியோர்.

தற்காலத்தில் பல குடும்பங்களில், முக்கியமாக, இளைஞர் கள் தாங்களாகவே சம்பாதிப்பதற்கு முன்பு, விலையுயர்ந்த ஆடைகளையும், கைக்கடிகாரங்களையும் அணிவதில் நாட்ட மாக உள்ளனர். வீடியோ, விளையாட்டுப் பொருள்கள் காசெட்டுகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டவை. விலையோ அதிகம். இவற்றிலும் நாட்டம் கொள்கின்றனர்.

பணத்தைச் சம்பாதிப்பதற்குத் தங்கள் பெற்றோர் எந்த அளவிற்கு அரும்பாடுபடுகிறார்கள் என்பதை அந்த இளைஞர்கள் உணர்ந்து கொள்வதில்லை. பெற்றோர்களை வற்புறுத்தித் தேவையில்லாமல் இரு சக்கர வாகனங்களைப் பலர் வாங்குகின்றனர். தங்கள் குழந்தைகள் கேட்பதை மறுக்கமுடியாமல், பெற்றோர்கள் கடன் வாங்கியோ அல்லது வேறு வழிகளிலோ ஏற்பாடு செய்து தங்கள் குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றுகின்றனர்.

சில குடும்பங்களில் பெண் குழந்தைகள், திருமணத்திற்குக் காத்திருக்கும்போது, பிள்ளைகள், ஆடம்பர ஆடைகளுக்கும், இதர வசதிகளுக்கும் தங்கள் பெற்றோரை வற்புறுத்து கின்றனர். இதனால் பெற்றோர்கள் பெரும் பிரச்சினைகளுக்கு ஆளாகி விடுகிறார்கள். பல பெற்றோர்கள் மீளமுடியாத கடனில் மூழ்கியும் விடுகிறார்கள்.

ஆடம்பர விவாகங்கள்

பல குடும்பங்களில் பெண்களின் திருமணத்தைக் கடன் வாங்கியாவது அதிகப் பொருட்செலவில் செய்துவிட்டு, பின்பு குடும்பமே நீண்ட காலத்திற்குத் தத்தளிக்கிறது. இதற்கிடையில், குடும்பத்தையும் நடத்த வேண்டியுள்ளது. நிலைமையைச் சமாளிக்க முடியாமல் போகும்போது, சிலர் நேர்மையிலிருந்து தவறி, தவறான வழிகளில் செல்ல முயன்று, நல்ல உத்தியோகத்தைக்கூட இழந்துவிடும் சூழ்நிலை உருவாகிவிடுகிறது. அதனால், குடும்பத்திற்கு அவமானமும், சோகமும் ஏற்பட்டு விடுகிறது. பல குடும்பங்களில் இத்தகைய விபரீதத்தைத் தாங்கமுடியாமல் தற்கொலை செய்து கொள்ளும் முடிவுக்கும் வந்துவிடுகின்றனர்.

என்றுமே இன்றுபோல் வருமானம் வந்து கொண்டி ருக்கும் என்ற கற்பனையான துணிவு பலரிடம் உள்ளது. தற்காலத்திலோ, எதையுமே நிலையாகக் கூறமுடியவில்லை. தொழிற்சாலைகளில் திடீரென்று ஆட்குறைப்பு. சில நிறு வனங்கள் பல காரணங்களினால் திடீர் என்று மூடப்பட்டு விடுகின்றன. சில தருணங்களில் மிகப்பெரிய மருத்துவச் செலவுகளும் ஏற்பட்டு விடுகின்றன. அத்தகைய சூழ்நிலை ஏற்படும்போது, நிதிநெருக்கடியால் குடும்பமே நிலைகுலைந்து விடுகிறது.

எத்தருணத்திலும் எத்தகைய சூழ்நிலையும் உருவாகலாம் என்ற எதிர்பார்ப்பில், சிக்கனமாகச் செலவு செய்தால், எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படும்போது, பணக்கஷ்டம் ஏற்படாமல் இருக்குமல்லவா?

ஆதலால், உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும், சொந்தத் தொழில் செய்பவர்களாக இருந்தாலும், வியாபாரி களானாலும், தங்களது மாத வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கையாவது 'இது நமது பணமல்ல' என்று சேமிப்பதற்காக

ஒதுக்கி வைத்துவிட வேண்டியது அவசியம். நம்மை அறியாமலேயே சிறிது காலத்திலேயே அது கணிசமான அளவிற்குச் சேர்ந்துவிடும். ஆபத்திற்கு அமுதம் போன்று அந்தச் சேமிப்புப் பணம் நமக்கு உதவும்.

நெருக்கடியான தருணங்களில், பிறரிடம் கையேந்த வேண்டிய அவசியமோ அல்லது அநியாய வட்டிக்குக் கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தமோ ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அந்தப் பணம் தக்க சமயத்தில் ஆபத்பாந்தவனாகக் காப்பாற்றும். தலைகுனிவை இதன்மூலம் தவிர்க்கலாம்.

குடும்பத்திற்கு வசதியான வீடு இருந்தால் போதும். ஆனால், கையில் பணமிருக்கும்போது, பலர் ஏராளமான பொருட்செலவு செய்து பெரிய அளவில் ஆடம்பரமான பங்களாக்களை அவசியமில்லாமல் கட்டிவிடுகின்றனர். 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்று பெரியோர்கள் அறிவுறுத்தியது, எளிமையாக இருப்பதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காகவே.

சிலர் கஷ்டப்பட்டு, வியர்வை சிந்தி உழைத்துச் சம்பாதித்த சிறுசேமிப்பை அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, நம்பக்கூடாத நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து விடுகிறார்கள். கொடிய ஏமாற்றத்திற்கு ஆட்பட்டு, பின்பு நிலைகுலைந்து வருந்துகிறார்கள்.

நமது பல துன்பங்களுக்கு நமது ஆசைகளே காரணம் என மிகப் புராதனமான நீதி நூல்கள் கூறுவது எத்தகைய உண்மை! வெள்ளம் வருமுன் தடுப்பவனே புத்திசாலி. துன்பம் வருமுன் காப்பவனே வாழ்க்கையில் நிம்மதியாக வாழமுடியும். ஆதலால், திருமணமாக இருந்தாலும், சொந்த வீடு கட்டுவதாக இருந்தாலும், வேறு எதுவாக இருப்பினும், எளிமையாக வாழ்வது என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். அதுவும் இன்றே செய்யுங்கள். அதனால் பல துன்பங்களைத் தவிர்க்கலாம் - நிச்சயமாக!



"அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!"

25

பாவிகள் என்று எவரும் இல்லை பரமனுக்கு!

'குமுதம் ஜோதிடம்,' தனக்கென்று நிர்ணயித்துக் கொண்ட குறிக்கோள் - மக்கள் அனைவரும் நல்வழியில் நடந்து, நல்வாழ்வு பெற வழிகாட்ட வேண்டுமென்பதே. அந்தக் குறிக்கோளில் குமுதம் ஜோதிடம் ஓரளவு வெற்றி பெற்றுவிட்டது.

ஜாதி, மதம் அனைத்து வேறுபாடுகளிலிருந்தும் விலகி நின்று, அறியாமல் தாங்கள் செய்துள்ள பல தவறுகளுக்காக



வருந்தி, தங்களைத் திருத்திக்கொண்டு, அதனால் துன்பம் நீங்கி, நிம்மதி அடைந்துள்ளதாக ஏராளமான வாசக அன்பர்கள் எமக்கு எழுதி வரும் கடிதங்களைக் கண்டு மனம் நெகிழ்ந்திருக்கிறோம். நமது முன்னோர்களின் அறிவுரைகள் எவ்விதம் உடனுக்குடன் துன்பங்களைப் போக்குகின்றன என்பதைத் தங்களது அன்றாட வாழ்க்கையில் கண்ட மக்கள் நெஞ்சுருகி, எழுதும் கடிதங்கள் எமக்கு மனநிறைவைத் தருகின்றன.

மனச் சஞ்சலத்தினாலும், பலவீனத்தினாலும் இதுவரை பல தவறுகளைச் செய்த பலர் தங்களைத் திருத்திக் கொண்டதுடன் 'செய்த பாவங்களுக்கு நாங்கள் என்ன பரிகாரம் செய்வது?' எனக் கலங்கி எமக்கு எழுதியிருக் கின்றனர். முக்கியமாக, ஏராளமான அன்பர்கள் தங்கள் வாழ்க்கையையே திருத்தி அமைத்துக்கொண்டுள்ளனர். ஏராளமான சகோதர, சகோதரிகள் மனஉறுதியுடன் அசைவ உணவை விடுத்து, சைவ உணவிற்கு மாறி உள்ளதாகவும் அதனால் குடும்பத்தில் ஆச்சரியகரமான நல்ல மாறுதல்கள் ஏற்பட்டு வருவதாகவும் எழுதியுள்ளனர். இவர்களில் ஹிந்துக்கள் மட்டுமல்லாமல் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய அனைவரும் அடங்குவர்.

பல ஒழுக்கம் தவறிய இளைஞர்கள் தங்கள் இழிச் செயல்களுக்காக வருந்தி, 'இனி நாங்கள் என்ன செய்வோம்? செய்துள்ள பாவங்களின் விளைவுகளிலிருந்து எங்களை விடுவித்துக் கொள்ள நாங்கள் என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டவண்ணம் உள்ளனர்.

தவறு செய்பவர்களை மன்னித்து, காத்து ரட்சிப்பதற் காகவே இறைவன் காத்திருக்கிறான். பண்டிதர்களைப் பற்றிப் பரமனுக்குக் கவலையில்லை. ஏனெனில் அவர்களுக்குத்தான் அவனைப் பற்றி நன்றாகத் தெரியுமே! அறியாதவர்களுக்குத் தானே ஆண்டவனை அறியச் செய்யவேண்டும். ஆதலால் செய்த தவறுகளுக்காகத் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டுமே தவிர, வாழ்வு பூராவுமே அத்தவறுகளை மனத்தில் நினைத்து, நினைத்துத் தங்களை வருத்திக் கொள்ளவேண்டிய அவசியமில்லை.

ஒரு காலத்தில் ஸ்ரீ விஜயவிட்டலதாசர் என்ற ஒரு மகான் இருந்தார். அவர் ஒரு துறவி. இறைவனிடம் இணையற்ற பக்தி பூண்டவர். அவர் ஒரு சமயம் கண்ணன் எழுந்தருளி யுள்ள உடுப்பி திருத்தலத்திற்கு எழுந்தருளினார். அவரை வரவேற்பதற்கு ஊரே கூடியிருந்தது. படித்தவர்கள், பண்டிதர்கள், பணக்காரர்கள், பெரியோர்கள் என்று ஏராள மானவர்கள் அங்கு கூடியிருந்தனர்.

ஆனால் விஜயவிட்டலதாசர் உடுப்பி க்ஷேத்திரம் வந்து சேர்ந்தது, நேராக அங்கிருந்த ஒரு கசாப்புக்கடைக்காரரின் இல்லத்திற்குச் சென்றார் - அவனுடைய வேண்டுகோளுக் கிணங்கி. பலருக்கும் ஏமாற்றம். பண்டிதர்களுக்கோ கோபம். 'இவருக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?' என அங்கலாய்த்தனர் பலரும். அந்தக் கசாப்புக்கடைக்காரனின் இல்லத்திற்குச் சென்ற விஜயவிட்டலர் அவனை நோக்கி, 'இனியும் இந்தக் கசாப்புத் தொழில் அவசியம்தானா?' எனக் கேட்டார்.

அப்போது அந்த கசாப்புக்கடைக்காரனின் குழந்தை நோய்வாய்ப்பட்டு இறக்கும்தறுவாயில் இருந்தது. 'உன் குழந்தை பிழைக்க வேண்டுமானால், உன் குழந்தைக்கு உயிர் வேண்டுமானால் பிற உயிர்களைக் கொல்வதை நிறுத்துங்கள்' என்று அவனுக்கும் அவன் மனைவிக்கும் உபதேசித்து வெளியே வந்தார் விஜயவிட்டலர்.

கசாப்புக்கடைக்காரனும் அவன் மனைவியும் அவரது கால்களில் விழுந்து, அந்த இழிதொழிலை உடனடியாக விட்டுவிட்டு அவரது சீடர்களாக ஆனார்கள். அவனது வீட்டை விட்டு வெளியே வந்த விஜயவிட்டலரைப் பண்டிதர்கள் சூழ்ந்து கொண்டார்கள். 'எத்தனையோ ஆச்சார, அனுஷ்டானங்களுடன் வாழ்ந்துவரும் எங்களை விட்டுவிட்டு அந்தக் கசாப்புக்கடைக்காரன் வீட்டுக்குச் சென்றது ஏன்?' என்று வினவினார்கள். அம்மகான், 'தர்மத்தின் உயர்வை உணர்ந்த உங்களிடம் எனக்கு என்ன வேலை? எனது பணி தவறு செய்பவர்களைச் சீர்திருத்தி, அவர்களுக்கு நன்மையை அளிப்பதே ஆகும்!' என்று பதிலளித்தார். தலைகுனிந்தனர் பண்டிதர்கள்.

வாழ்க்கையில் தவறு செய்துவிட்டோமே என்று எவரும் மனம் வருந்தவேண்டாம். ஆனால் தங்கள் தவறுகளுக்காக வருந்தி, தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்பதையே இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கிறான். அவ்விதம் நம்மை நாமே திருத்திக்கொண்ட பிறகு மீண்டும், மீண்டும் நாம் தவறுகளைச் செய்யக்கூடாது. பாவங்களைப் போக்கிக் கொள்வதற்காக கங்கையில் புனித நீராடுபவன் கரையேறி வந்து, மீண்டும் தவறான பாதையில் செல்லலாமா?

குருக்ஷேத்திரப் புண்ணிய பூமியில் அர்ஜுனனுக்கு வாழ்க்கை நெறிமுறைகளை (தர்மத்தை) வெளிப்படையாக கண்ணன் உபதேசித்தது ஏன்? அர்ஜுனனுக்கு மட்டும் தனியாக கீதையை உபதேசித்திருக்கலாமே? ஏன் அப்படிச் செய்யவில்லை? இதற்குக் காரணம் அர்ஜுனனுக்கு உபதேசிப்பது போல் உலகிற்கே திருவாய்மலர்ந்தருளினான் கண்ணன் - கீதையை!

கங்கை இருப்பது புண்ணியம் செய்பவர்களுக்காக அல்ல! உலக பந்தங்களினாலும், மனச் சஞ்சலங்களினாலும் இதர சூழ்நிலைகளினாலும் பாவச் செயல்களில் ஈடுபட்டுத் துன்பம் என்ற நரகத்தில் விழுந்து, உழன்று துன்பப்படுகிறார்களே அவர்களை அந்தப் பாவச் சுமைகளிலிருந்து விடுவித்து, நல்வாழ்வு தருவதற்காக அல்லவா தேவருலகை விட்டுப் பூவுலகில் அவதரித்திருக்கிறாள் - கங்கை.

ஆதலால் வாழ்க்கையில் இந்தச் சரீர சம்பந்தத்தினாலும், மனச் சஞ்சலங்களினாலும் இதுவரை எத்தகைய பிழைகள் செய்திருந்தாலும், அதற்காக மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்புப் பெற்று இனியும் அவ்வாறு தவறுகளைச் செய்யாமல் இருப்பின் வாழ்க்கையே இன்பமயமாகும். இதனை அனுபவத்தில் பார்க்கலாம்.

இவ்விதம் பாவம் என்ற பாதையிலிருந்து உங்கள் மனத்தை மீட்டு, நல்வழியில் நடத்திச் செல்லவே ஏராளமான திருக்கோயில்களை நமது ஆன்றோர்களும், சான்றோர்களும் அளித்துச் சென்றுள்ளனர்.

தாய், தந்தையரை வணங்குதல் என்பது சாதாரண கடமை என்று நினைக்க வேண்டாம். இதன் அதிர்வு அலைகள்

(Vibration) மகத்தான சக்தி பெற்றதாகும். நீங்கள் வணங்கும்போது உங்கள் தாய், தந்தையர் மனத்தில் ஏற்படும் உணர்ச்சிகள் அவர்கள் ஆசியாக உங்களை உடனுக்குடன் வந்தடையும். அது உங்கள் உள்ளத்தைப் பண்படுத்தி, மனத்தைக் கட்டுப்படுத்தி, நல்வழியில் நடத்திச்செல்லும். தற்போது பிள்ளைகள் மட்டுமின்றி, பல பெண்களும் வயதிற்கு வந்து, படித்து, உத்தியோகமும் பெற்ற பிறகு, தங்கள் பெற்றோர்களை மதிக்காமல், தூக்கி எறிந்து பேசுவதும், தங்கள் இச்சையாக முடிவெடுப்பதும், தவறான வழிகளில் செல்வதும் அதிகமாகிக்கொண்டு வருகின்றன.

சிறுவயது முதற்கொண்டே அவர்களைக் கட்டுப்பாடாகப் பெற்றோர்கள் வளர்க்காததே இதற்குக் காரணமாகும். பல இல்லங்களில் பெரியோர்களும் செயலிழந்து, செய்வதறியாது நிற்கிறார்கள். குழந்தைகள் பிறந்தபிறகு முதன்முதலில் அறிந்துகொள்ளும் தெய்வம் தாய்-தந்தையரே! பெற்றோர்கள் மூலமாகத்தான் தெய்வத்தையே பின்பு அறிந்துகொள்கிறார்கள் குழந்தைகள். ஆதலால் பெற்றோர்களின் பெருமையையும், தெய்வத்தின் கருணையையும், தர்மத்தின் உயர்வையும் குழந்தைப் பருவம் முதலே ஊட்டி வளர்ப்பது அவசியம்.

ஆதலால், எவரும் தங்கள் சென்றகாலத் தவறுகளுக்காக வருந்துவதை விட்டுத் தங்களை இறைவன் தண்டிக்க மாட்டான் - கருணையுடன் காப்பாற்றுவான் - அவனது இணையடிகளைச் சரணடைவது ஒன்றே துன்பங்களைத் தவிர்க்கும் வழி என்பதை உணர்ந்து வாழ்ந்தால் வாழ்வே இன்பமயமாகும்.


26

திருக்கோயில்களும் உலக அதிசயங்களே!

உலக அதிசயங்கள் எத்தனை என்று கேட்டால்,

இன்றைய பள்ளி மாணவர்கள், ஏழு என்று கூறுவார்கள். அவற்றில் இந்தியாவில் எது உள்ளது என்று கேட்டால், "தாஜ்மஹால்" என்று பதில் வரும்.

ஆனால், நமது பாரதப் புண்ணிய பூமியிலேயே உள்ள திருக்கோயில்கள் பல, உலகில் வேறெங்கும் காணமுடியாத அதிசயங்களாகத் திகழ்வதை நாமே அறியவில்லையே!



ஒவ்வொரு திருக்கோயிலிலும் ஒவ்வொரு அதிசயமும், அற்புத சூட்சுமங்களும் மறைந்துள்ளன.

அரும்பெரும் பொக்கிஷங்களான இத்திருக்கோயில்களின் பெருமை நம்முள் எத்தனை பேருக்குத் தெரியும்? நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, நவீன கருவிகள் எதுவும் இல்லாத காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட, மிகப் பெரிய திருக்கோயில்கள் பலவற்றில், பல பொறியியல் அதிசயங்கள் (Engineering Marvel) பொதிந்துள்ளன.

உதாரணமாக, தஞ்சை பெருவுடையார் திருக்கோயிலின் நிழல் கீழே விழாமல் அதன் மீதே விழும்படி நிர்மாணிக்கப்பட்டுள்ள அற்புதம், தற்போதைய பொறியியல் நிபுணர்களுக்கே புரியாத திறமையாக உள்ளது. இவ்விதம் இத்திருக்கோயிலை வருடம் பூராவும், உத்தராயணம் - தக்ஷிணாயனம் காலத்தில், சூரியனின் கதியில் மாறி, மாறி வரும் நிலைகளை ஆராய்ந்தல்லவா இத்திருக்கோயிலைக் கட்டியிருக்கிறார்கள் அக்காலத்தில்!

இதுபோன்றே, மேலும் பல திருக்கோயில்கள், நவகிரகங் களின் சஞ்சார பாதைகளை ஆராய்ந்து அவற்றின் அடிப் படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை உதாரணமாக இங்கு விளக்க இருக்கிறோம். இனிமேலாவது, நமது திருக்கோயில்களின் ஈடிணையற்ற உயர்வை நாமும், முக்கியமாக, நமது இளைய தலைமுறையினரும் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

1. சூரியனார் கோயில் - சூரியன்.

2. ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில், தாரமங்கலம் - சிவபெருமான்.

3. ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி திருக்கோயில் திருவல்லிக்கேணி, சென்னை.

இம்மூன்று திருக்கோயில்களிலும், குறிப்பிட்ட மாத, தேதிகளில் சூரியனின் கிரணங்கள், ராஜகோபுரம், பலிபீடம், கொடி மரம் (துவஜஸ் தம்பம்), நந்தி அல்லது கருடன், உள்

மண்டபம் ஆகியவற்றைத் தாண்டி, கர்ப்பக்கிரகத்தில் எழுந்தருளியுள்ள மூலவரின் திருப்பாதங்களில் ஆரம்பித்து, இறைவனின் திருமேனியில் படர்ந்து, பின்பு மறைந்து விடுகின்றன. காணற்கரிய, இத்தகைய அற்புத, அபூர்வ நிகழ்ச்சி ஒவ்வோர் ஆண்டும் தவறாது ஏற்படுவதற்கு இத்திருக்கோயில்களை நிர்மாணிப்பதற்குத் தக்க இடத்தை (Location) சூரியனின் பாதையை ஆராய்ந்தல்லவா தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் - நமது முன்னோர்கள்.

ஸ்ரீ வைகுண்ட நாராயணர் திருக்கோயில், திருப்பெருவேளூர் (சுக்கிரக்ஷேத்திரம்)

கும்பகோணம் - குடவாசல் - திருவாரூர் நெடுஞ்சாலையில் உள்ள இத்திருத்தலம் தற்போது மணக்கால் அய்யம்பேட்டை என வழங்கப்படுகிறது. சுக்கிரன் இங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமானைப் பூஜித்து, தனது சாப விமோசனம் நீங்கி, இழந்த நவநிதிகளையும் திரும்பப் பெற்ற திவ்யதலம் இது. இங்கு தொடர்ந்து சில மாதங்கள் (தை, மாசி) சுக்கிரன் ராஜகோபுரத்திற்கு எதிர் நேராக உதயமாகி, கர்ப்பக்கிரகத்தில் எழுந்தருளியுள்ள மூலவருக்கு நேர் எதிரில் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதைச் சமீபத்தில் காணும் பேறு பெற்ற பலர், அந்தக் காட்சியைக் கண்டு, மெய்சிலிர்த்து நின்றனர்.

ராமப்பா திருக்கோயில், வாரங்கல் (ஆந்திரப்பிரதேசம்)

இது ஓர் அற்புதமான திருக்கோயிலாகும். கற்பனைகள் அனைத்தையும் மீறிய கலைச்செல்வம் இது. கடினமான கற்களைக் கலைப்பொக்கிஷங்களாக எவ்விதம் மாற்றினார்கள் என்று வியக்காதவர்கள் கிடையாது. சில ஆண்டுகளுக்கு முன்பு, ஜெர்மனி நாட்டிலிருந்து, இவற்றைப் பார்க்க வந்திருந்த சுற்றுலாப் பயணிகளில் ஒருவர், "இவற்றை மனிதன் உருவாக்கி இருக்கமுடியாது. அதனுள் உள்ள தெய்வங்கள்தான் இதனைச் சாதித்திருக்க முடியும்" என்று கூறி, வியந்தார். அந்த அளவிற்கு அற்புதமான படைப்பு ராமப்பா திருக்கோயில்கள்.

அதில் ஒன்று - கர்ப்பக்கிரகத்தில் ஒரே இடத்திலிருந்து, சிவபெருமான், மஹாவிஷ்ணு, பிரும்மா மூவரையும் தரிசிக்கலாம். இத்திருக்கோயிலின் விமானத்தில் உள்ள ஒரு சிறு துவாரம் மூலம், ஆண்டுதோறும், ஒரு குறிப்பிட்ட பௌர்ணமி தினத்தில் சந்திரனின் கிரணங்கள் விழுகின்றன - சிறிதளவும் தவறாமல் சந்திரன் மேலே செல்லச் செல்ல, இந்தக் கிரணமும் நகர்ந்து சென்று, கடைசியில் மறைந்து விடுகின்றது.

இத்திருக்கோயிலை நிர்மாணித்தவர்கள், வான் இயல் நிபுணர்களாக அல்லவா இருந்திருக்க வேண்டும்? இல்லா விடில், இத்தனை துல்லியமான, சந்திரனின் சஞ்சாரத்தைக் கணித்து, இந்தக் குறிப்பிட்ட இடத்தை அவர்கள் எவ்விதம் தேர்ந்தெடுத்திருக்க முடியும்?

இத்திருக்கோயில்கள், அலாவுதீன் கில்ஜியின் இரண்டாவது தட்சிணப் படையெடுப்பின்போது இடித்து, அழிக்கப்பட்டது. அதில் சிறிய சேதத்துடன் தப்பியது, சந்திரனின் கிரணங்கள் ஊடுருவும் குறிப்பிட்ட இந்தக் கோயில். இன்றும் இதனைக் காணலாம்.

ஸ்ரீ சோமநாதர் திருக்கோயில் -
சோம்நாத் (குஜராத்)

உலகப் பிரசித்திபெற்ற திருக்கோயில் இது. ஏழுமுறை முகமது கஜினியால் அழிக்கப்பட்டது.

இத்திருக்கோயிலில், கர்ப்பக்கிரகத்தினுள், ஒரு சிறு மண்டபம். அதில், அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் ஓர் அழகிய ஸ்ரீ சோமநாதர் சிவலிங்கம். எத்தகைய பொறியியல் சூட்சுமத்தை வைத்து, அந்தச் சிவலிங்கம் எவ்விதம் அந்தரத்தில் வீற்றிருக்கும்படி அமைக்கப் பட்டிருந்தது என்று இன்றுவரை எவராலும் கண்டுபிடிக்க இயலவில்லை.

கஜினி முகமதுவின் உத்தரவினால், அந்தச் சிவலிங்கம் தொங்கிக்கொண்டிருந்த மண்டபத்தை இடித்தவுடன்,

அந்தச் சிவலிங்கம் கீழே விழுந்துவிட்டது. பின்பே, அவனது ஆட்கள், அதனை உடைத்தனர்.

இவ்விதம், உலகத்தையே பிரமிக்க வைக்கும் பல அதிசயங்கள் நம் திருக்கோயில்களிலேயே இருந்தும், அவற்றின் பெருமையை நாம் உணரவில்லை.

அதைவிட வருத்தப்படக்கூடிய உண்மை, இத்தகைய அரிய திருக்கோயில்கள் மேலும் அழிந்து கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோமே!

இதனைக் காலம் மன்னிக்குமா? இனியாவது நாம் இவற்றின் பெருமையை உணர்ந்து, இவற்றைப் பாதுகாக்க வேண்டாமா? சிந்தியுங்கள்!

27

இதற்கு ஜோதிடம் பொறுப்பல்ல!

நமக்கு அளவற்ற வேதனை அளித்த செய்தி ஒன்றைப் பற்றி விளக்கம் அளிக்கவேண்டியது எமது கடமை என நினைக்கிறோம்.

09.03.2003 (ஞாயிறு) தேதியிட்ட 'தினமலர்' நாளிதழில் "ஜோதிடம்: இடி விழுந்தது என் குடும்பத்தில்" என்ற தலைப்பில் அப்பத்திரிகை வாசகர் ஒருவர் எழுதியிருந்த கடிதம் ஒன்றைப் படித்துத் திடுக்கிட்டோம். அளவற்ற



வேதனையும் அடைந்தோம். நமது நல்வாழ்விற்கு அன்றாட வழிகாட்டியாகத் திகழும் ஒப்பற்ற ஜோதிடம் என்ற தெய்வீகக் கலைக்குச் சிறிதளவும் நியாயமில்லாத, இத்தகைய வீண் பழியா என்பதை நினைத்து நினைத்து நெஞ்சம் துடித்தது.

அப்படி என்ன அந்தச் செய்தியில் இருந்தது? அதிலிருந்தபடியே பிரசுரித்திருக்கிறோம்.

"அவர் ஓர் ஏழைப் புரோகிதர். அவர் மகனுக்குத் திருமணமாகி 5 ஆண்டுகளாகக் குழந்தைப் பாக்கியம் ஏற்படவில்லை. கடந்த 7 மாதங்களுக்கு முன்பு அழகிய பெண் குழந்தை பிறந்துள்ளது. இந்நிலையில், மார்ச் மாதப் பத்திரிகை ஒன்றுடன் இலவசமாகக் கொடுக்கப்பட்ட ஜோதிட இதழ் ஒன்றில், '4-ல் சனி, செவ்வாய், ராகு, கேது போன்ற அசுபர்கள் அமையப்பெற்றால், அத்தகைய பெண்கள் ஒழுக்கம் கெட்டவர்களாகவும், கணவனுக்குத் துரோகம் செய்வார்கள் என்றும் 9-ம் வீட்டிற்கு அதிபதி 5-ல் அல்லது 8-ல் அமையப் பெற்றால் தன்னுடைய வீட்டில் வேலை செய்யும் ஏவலாளியுடன் இணைந்து பிள்ளை பெற்றுக்கொள்வாள்' என்றும் பிரசுரிக்கப்பட்டிருப்பதாக அந்த வாசகர் எழுதியிருக்கிறார்.

இதைப் படித்துவிட்டு அந்தப் புரோகிதரின் மகன், அற்புதமான நற்குணங்கள் அமைந்த தன் மனைவி மீது சந்தேகப்பட்டு அவளையும், அவளது குழந்தையையும் கொடுமைப்படுத்துகிறார்" என்று அந்த வாசகரின் கடிதத்தில் கண்டிருந்தது.

'குடும்பமே இடிவிழுந்தது' போன்ற நிலைமை ஏற்பட்டிருக்கும்போது அந்த வாசகர், அது எந்த மாத இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது என்பதையும் எழுதியிருக்க வேண்டும். அதை ஏன் மறைக்க வேண்டும் அந்த வாசகர்?

நமது பாரதப் புண்ணிய பூமியின் கலாசாரம், பண்பு, விஞ்ஞானபூர்வமான கலைகள், ஆன்மிகம், தர்மநெறி ஆகியவற்றைக் குறை கூறுவதும், எள்ளி நகைப்பதும், அவற்றைக் கேவலமாகப் பேசுவதும் பல அரசியல்

வாதிகளுக்கும், சில சமூகத்தினருக்கும் பொழுதுபோக்காக இருக்கிறது.

ஜோதிடத்தில் பெண்களின் கற்பு

பொதுவான கிரகநிலைகளைக் கொண்டு ஒரு பெண்ணின் கற்பை எடை போடுவது ஜோதிடக்கலை விதிகளின்படி அடியோடு தவறாகும். ஒவ்வொரு பெண்ணின் ஜாதகமும் ஒரு தனிப்பட்ட வித்தியாசமான ஜாதகமாகும். பெண்ணின் கற்பு, ஒழுக்கம் ஆகியவற்றை நிர்ணயிப்பது லக்கினம், குடும்பம், பூர்வபுண்ணியம், புத்திரம், சயனம் ஆகிய இடங்களே. இவை அனைத்தும் லக்கினத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பெண்ணிற்கும் மாறி வரும். மேலும் சனி, செவ்வாய் ஆகிய இரு கிரகங்களும் நிரந்தர அசுப கிரகங்கள் அல்ல.

எந்தப் பெண்ணின் ஜெனனகால ஜாதகத்தில் சனியும் செவ்வாயும் சுபபலம் பெற்றிருக்கிறார்களோ, அத்தகைய பெண்களுக்கு அளவற்ற யோக பலன்களை குறைவில்லாது வழங்குவார்கள், இவ்விரு கிரகங்களும். ஆதலால் அந்த ஜோதிட இதழில் சனி, செவ்வாய் ஆகிய இரு கிரகங்களும் நிரந்தரமான அசுபர்கள் எனப் பிரசுரித்திருப்பது ஜோதிட உண்மைக்குப் புறம்பானதாகும்.

ஜோதிடர்களின் புனிதக் கடமை

நோயுற்றவர்கள் எப்படித் தங்கள் உயிரையே வைத்திய நிபுணர்களிடம் நம்பிக்கை வைத்து ஒப்படைத்து விடுகிறார்களோ, அதுபோன்றே மக்கள் அனைவரும் ஜோதிடர்களிடம் தங்கள் வாழ்க்கையையே ஒப்படைத்து விடுகிறார்கள். தங்கள் பெண்களை எந்த வரனுக்குக் கொடுத்தால், மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும் என்பதை ஏராளமானோர் ஜோதிடர்களின் முடிவிற்கு விட்டுவிடுகிறார்கள். அறுவை சிகிச்சை செய்துகொள்ளுமாறு வைத்தியர் கூறினால், அதைச் செய்துகொள்ளலாமா என முடிவுசெய்ய ஜோதிடரையே அணுகுகின்றனர், பலரும்.

பலர் தங்களது வாழ்க்கையையே நிர்ணயிக்கும் பல மிக முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு, ஜோதிடத்தின் உதவியையே

நாடுகின்றனர். ஆதலால், ஜோதிடரின் பொறுப்பு மகத்தானது.

இன்று பலருக்கும் வேதத்தின் அங்கமான ஜோதிடம் என்ற உயர்ந்த இக்கலையின் மீது நம்பிக்கை குறைந்து வருவதற்குக் காரணம், ஜோதிடம் என்றால் என்னவென்றே அறியாதவர்கள்கூட, ஜோதிடப் பலன்களைக் கூறுவதே யாகும். பல குடும்பங்களில் பெண்களே பஞ்சாங்கத்தை வைத்துக்கொண்டு ஜாதகப் பொருத்தம் பார்க்க ஆரம்பித்து விடுகிறார்கள். டாக்டருக்கே படிக்காத ஒருவர், புத்தகத்தை மட்டும் படித்துவிட்டு சாதாரண கத்தி ஒன்றை எடுத்து, அறுவை சிகிச்சை செய்ய முயன்றால், அந்த நோயாளியின் கதி என்னவாகும்?

அதேபோன்றுதான் ஜோதிடத்தை முறையாகவும், முழுமையாகவும் கற்காதவர்கள் பலன்கள் கூறுவதும், கிரகங்களைப் பற்றி எழுதுவதுமாகும்.

கற்பதற்கு உள்ளன பல அரிய நூல்கள்

ஜோதிடம் என்ற உயர்ந்த கலை, புராதன காலத்து உலகப் பிரசித்திபெற்ற நாளந்தா சர்வகலாசாலையில் முறையாகப் போதிக்கப்பட்டு வந்தது. அதில் கிரேக்க, சீன மாணவர்களும், இந்திய மாணவர்களுடன் இணைந்து இக்கலையைக் கற்று வந்தனர். இதனைப் புகழ் பெற்ற சீன, எகிப்திய யாத்ரீகர்கள் தாங்கள் எழுதியுள்ள நூல்களில் போற்றிக் கூறியுள்ளனர்.

மீண்டும் மீண்டும் ஏராளமான அன்னியர்களால் படையெடுக்கப்பட்டு நம் நாடு சீரழிந்து வந்ததால், ஜோதிடம் போன்ற பல அரிய கலைப்பொக்கிஷங்களின் பெருமை நமது மாணவர்களுக்குத் தெரியாமலேயே போய்விட்டது. அன்னியர்களும் நமது கலைச்செல்வங்களைச் சூறையாடியும், அழித்தும் நமது பண்டைய நாகரிகத்தை உருக்குலைத்தனர்.

அன்னியர்கள்தான் அப்படியென்றால், இன்று நமது அரசியல்வாதிகளும் ஆன்மிகம், ஜோதிடம், ஆயுர்வேதம்

என்றாலே வெறுக்கின்றனர். இது எவ்விதத்தில் நியாயமாகும்? இவற்றின் உயர்வை அறியாமல் ஏன் இந்த வெறுப்பு அவர்களுக்கு?

எமது பணி

ஜோதிடத்தின் பெருமையையும், நம்பகத்தன்மையையும், வானியல் அடிப்படையையும் மக்கள் உணர்வதற்காகவே, அதன்மூலம் அவர்கள் துன்பம் தீர்ந்து நல்வாழ்வு பெறுவதற்காகவே 'குமுதம் ஜோதிடம்' மூலம் இச்சிறு பணியை ஊணுறக்கமில்லாது இலவசமாகச் செய்து வருகிறோம். மேற்கூறிய கடிதம் எந்த அளவிற்கு உண்மை என்பது தெரியவில்லை. அது உண்மையாக இருந்தாலும், அதற்கு ஜோதிடம் எள்ளளவும் பொறுப்பல்ல.

பெண்ணானாலும், ஆணானாலும் அவர்களது ஒழுக்கத்தைத் துல்லியமாகக் கண்டறிய வேண்டுமானால் அவர்களது தனிப்பட்ட ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்தே கண்டறிய வேண்டும். மேற்கூறிய கடிதம் உண்மையானால், அந்தப் புரோகிதரின் மகனுக்கு ஜோதிடம் என்ற கலையின் சார்பில் ஓர் அறிவுரை கூற முன்வருகிறோம்.

எவரோ ஏதோ எழுதியிருப்பதை நம்பி, ஐந்தாண்டு காலமாகத் தனக்கென உள்ள அனைத்தையும் தங்களுக்கென அர்ப்பணித்துள்ள உத்தம மனைவியின் கற்பைத் தயவுசெய்து சந்தேகிக்காதீர்கள்! திருக்கோயிலினுள் ஒருவன் தவறு செய்தால் அதற்கு அத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள தெய்வம் எவ்விதம் பொறுப்பேற்க முடியும்?

ஆதலால், கவர்ச்சிகரமான தலைப்புகளினால் ஜோதிடத் திற்கு இழுக்கு ஏற்படுத்த வேண்டாம் என்று அன்புகூர்ந்து கேட்டுக்கொள்கிறோம்.


28


தெரியாமல் செய்யும் தவறும், அறியாமல் செய்யும் பிழையும்!

தமிழகத்தின் பிரபல தொழிலதிபர் அவர். என் மீது அளவு கடந்த அன்பு கொண்டவர்.

சமீபத்தில் புதிதாகச் சொந்த வீடு ஒன்று கட்டி, கிரகப்பிரவேசமும் விமரிசையாகச் செய்தார். அலுவலகப் பொறுப்புகள் காரணமாக அவர் அழைத்தும், அந்தக் கிரகப்பிரவேசத்திற்கு என்னால் செல்ல முடியவில்லை.

நான் வராதது அவரது மனத்தில் குறையாகவே இருந்து வந்தது - என்மீது கொண்ட பேரன்பின் காரணமாக.





"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே"
இம்மையில் "ராமா" என்ற இரண்டு எழுத்தினாலே!
ஸ்ரீராமபிரான் பட்டாபிஷேகத் திருக்கோலம்

மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறவே, அவர் வீட்டிற்குச் சென்றேன். வீட்டைப் பார்த்ததும் வியப்பும் பிரமிப்பும் என்னுள் மேலோங்கின. அந்த அளவிற்கு ஒவ்வொரு சிறு பகுதியையும் கவனத்துடன் பார்த்துப் பார்த்து அந்த வீட்டைக் கட்டியிருந்தார் அவர். வீடு முழுவதும் சலவைக் கற்களால் இழைக்கப்பட்டிருந்தது. தேக்கு மரத்தாலான கதவுகள், ஜன்னல்கள், வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப் பட்டிருந்த - பளிச்சென்று மின்னும் - கைப்பிடிகள் பொருத்தப்பட்டு, ஒரு சிறு அரண்மனை போன்றே காட்சி அளித்தது அந்த இல்லம். ஒவ்வொன்றும் வாஸ்து நிபுணர்களின் ஆலோசனையின்படியே அமைக்கப்பட்டிருந் ததை எனக்குச் சுட்டிக்காட்டி விளக்கினார் என் நண்பர்.

அற்புதமான வீடு, அழகான வீடு, விசாலமான வீடு, கண்கவர் இல்லம் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், எனது கண்களுக்குத் தென்படாத ஒன்றை என் உள்மனம் தேடியது. 'இத்தனை பெரிய வீட்டில் ஸ்வாமி அறை எங்கிருக்கிறது?' என்று கேட்டேன் அவரை. 'இதோ இங்கிருக் கிறது. வாருங்கள்' என்று அழைத்துச் சென்றார் அந்தத் தொழிலதிபர். உணவு அருந்தும் ஹாலிலிருந்து முதல் தளத்திற்குச் செல்வதற்கு அழகான சுருள்படிகளுக்குக்(Spiral steps) கீழே இருந்த இடத்தைச் சிறு பூஜை அறையாக நிர்மாணித்திருந்தார். ஏதோ இவ்வளவு பெரிய வீட்டில் பூஜை அறையும் இருந்தாக வேண்டும் என்று கட்டியது போல என் மனத்துக்குப் பட்டது.

அந்தப் புதிய வீட்டில் விருந்தினர்கள் வந்தால் தங்குவதற் காக இரண்டாவது தளத்தில் குளியலறையுடன் கூடிய மூன்று அறைகள் மற்றும் ஒரு ஹால் ஆகியவை குளிர்சாதன வசதியுடன் மிகவும் சொகுசாகக் கட்டப்பட்டிருந்தன. சுமார் ரூ. 1½ கோடியில் கட்டப்பட்ட அந்த வீட்டில் இறைவனுக் கென்று மாடிப்படியின் கீழ் ஒரு சிறு அறை இறைவன் அமர்ந்திருக்கும் இடமாக ஒதுக்கப்பட்டிருந்தது கண்டு நான் மிகவும் வேதனை அடைந்தேன். எனது நண்பரிடம் என் மனத்தில் பட்ட குறையை விளக்கினேன். அவரும் அதனைத் தவறாகப் புரிந்துகொள்ளாமல், உடனடியாக மற்றொரு நல்ல பெரிதான அறையைப் பூஜை அறையாக மாற்றிவிடுவதாக எனக்கு உறுதி அளித்தார்.

எப்போதோ, என்றோ, ஓரிரு நாட்கள் வரப்போகும் விருந்தினருக்காக இரண்டாவது தளத்தையே வசதிகளுடன் ஒதுக்கி வைத்த அவருக்கு, இந்த அனைத்துப் பாக்கியங்களையும் அளித்தருளிய இறைவனுக்கு ஒரு நல்ல பூஜை அறையை ஏற்பாடு செய்ய ஏனோ மனம் வரவில்லை. மாடிப்படியின் கீழ் இருக்கும் இடத்தை வீணடிக்காமல் பூஜை அறையாக மாற்றியிருக்கும் தனது புத்திசாதுர்யத்தை அவர் என்னிடம் விளக்கியபோது மிகவும் மனவேதனை அடைந்தேன்.

பலரும் இத்தகைய தவறைச் செய்கிறார்கள். சிலருக்குப் பொருளாதார வசதிக் குறைவினால் வீடு சிறியதாக அமைந்துவிடுகிறது. ஆதலால் இருக்குமிடத்தைச் சரிசெய்து கொண்டு அதற்குள் பூஜை அறையையும் நிர்மாணிக்க வேண்டியுள்ளது. ஆனால், பொருள் வசதி இருந்து பெரிய வீடாகக் கட்டுபவர்களுக்கும் தங்கள் வீட்டின் பூஜை அறையைச் சிறப்பாக அமைத்துக்கொள்ளும் ஆர்வம் இல்லை.

நமது வீட்டில் இறைவனுக்கு இடம் தந்திருக்கிறோம் எனக் கருதுவது முற்றிலும் தவறாகும். இதற்கு மாறாக, உண்மை என்னவென்றால் அவனது திருச்சந்நிதியில்தான், அளவற்ற கருணையுடன் அவன் நமக்கு இடம் தந்தருளியுள்ளான். நமது விடு என்பதை விட அவனது திருக்கோயில் அது. அதில் நமக்கு இடம் தந்திருக்கிறான் என்பதே உண்மையாகும். என்னதான் வாஸ்து சாஸ்திர விதிகளின்படி விட்டைக் கட்டியிருந்தாலும், அவன் அருளின்றி நாம் அந்த வீட்டில் சந்தோஷமாக இருக்கமுடியாது. ஆதலால் சொந்த விடு கட்டும்போது வரைபடத்தில் பூஜை அறைக்கு இடம் ஒதுக்கிய பிறகே பாக்கி இடத்தை நாம் வசதியாக வசிப்பதற்கு ஏற்றதாக அமைத்துக்கொள்ளல் வேண்டும். அவனது திருச்சந்நிதியில் நாம் இருப்பதாக நினைத்துக்கொண்டால், நம்மையும் நம் குடும்பத்தையும் எவ்விதத் தீங்கும் அணுகாது என்பது நிச்சயம்.

குளியலறை

தற்காலத்தில் பெரும்பாலான வீடுகளில் குளியலறையும் கழிப்பறையும் ஒன்றாகவே அமைக்கப்பட்டு வருகின்றன.

வாஸ்து, ஆயுர்வேதம் ஆகியவற்றின் விதிகளின்படி இவ்வித அமைப்பு முற்றிலும் தவறாகும்.

இத்தகைய தவறுகள் ஏற்படுவதற்கு அறியாமையே காரணமாகும்.

உதாரணமாக, நமது முன்னோர்களைப் பூஜிக்கும் வருடாந்தரத் திதி, அமாவாசை, மாதப்பிறப்பு, கிரகண காலம் ஆகிய பித்ரு தினங்களில் பித்ருக்களுக்காகச் செய்யும் திதி, தர்ப்பணம் ஆகியவற்றை நீராடிய பின்பே செய்யவேண்டும். மலஜலம் கழிக்கும் இடத்தில் ஸ்நானம் செய்வதால் நமது உடலுக்கு முழுமையான தூய்மை கிடைப்பதில்லை. ஆதலால்தான் குளியலறையும், கழிப்பறையும் வெவ்வேறாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனை உள்ளது.

திருக்கோயில்களில் எவ்விதம் வழிபடுவது?

பலருக்கும் திருக்கோயில்களில் வழிபடும் முறைகள் பற்றி முழுமையாகத் தெரிந்திருக்கவில்லை. முறையான வழிகளைப் பின்பற்றினால் திருக்கோயில் சக்திகளின் முழுமையான பலனையும் நாம் பெறமுடியும். முறை தவறி வழிபட்டாலும் பலனுண்டு. ஆனால் அந்தப் பலன் சற்று குறையும். அறியாமையினால் இந்த நற்பலனை நாம் ஏன் இழக்க வேண்டும்? ஆதலால் கீழ்க்கண்ட திருக்கோயில் வழிமுறை களைச் சுருக்கமாக இங்குக் கூறி உள்ளோம். இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் திருக்கோயில் சென்று வழிபடும்போது அந்தந்த இறைசக்தியின் பூரண நற்பலனையும் நாம் பெற்று, துன்பங்கள் நீங்கி, நன்மைகளைப் பெறலாம்.

1. திருக்கோயிலில் த்வஜஸ்தம்பம் (கொடிமரம்), பலிபீடம் இவற்றின் முன்புதான் கீழே விழுந்து வணங்க வேண்டும். இந்தக் கொடி மரத்தையும், பலிபீடத்தையும் தாண்டி விட்டால் உள் பிராகாரத்திலும், கருவறையின் முன்னும், மற்ற இடங்களிலும் கீழே விழுந்து வணங்கக்கூடாது. ஏனெனில் கொடிமரத்தைத் தாண்டியபின்பு கருவறை வரையிலும் சக்தி நிறைந்த பல தேவதைகள் மந்திரப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. அவ்விடத்தில் நாம் கீழே விழுந்து வணங்கினால் அந்தத் தேவதைகளின் மீது நமது கால்கள் படக்கூடும்.

2. திருக்கோயில்களில் அபிஷேகம் அல்லது திருமஞ்சன தீர்த்தம் வாங்கிக் கொள்ளும்போது இடதுகையின் மேல் சிறு வஸ்திரம் (இடுப்புத்துண்டு) வைத்து, அதன்மேல் வலது கை உள்ளங்கையைக் குவித்து வைத்துக்கொண்டு அந்தத் தீர்த்தத்தை வாங்கிக் கொள்ளவேண்டும். இதற்குக் காரணம் அபிஷேகத்தினால் புனித சக்தி வாய்ந்த அந்த ஜலம் கீழே விழுந்து, பக்தர்களின் கால்களால் மிதிபடக்கூடாது என்பதே.

3. திருக்கோயிலினுள் செல்லும்போது கைலி மற்றும் கால்சட்டை (Pant) ஆகியவற்றை அணிந்து செல்லக்கூடாது. கேரள ஆலயங்களில் இவ்விதிமுறைகள் கண்டிப்பாக அமல் செய்யப்படுகின்றன.

4. எக்காரணத்தைக் கொண்டும் ஈரத் துணியுடன் திருக்கோயிலுக்குள் சென்று வழிபடக்கூடாது (திருப்பதி-திருமலை திருக்கோயிலினுள் அங்கப் பிரதட்சிணம் செய்பவர்களுக்கு மட்டும் இவ்விதிமுறையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

4. திருக்கோயிலில் இறைவனைத் தவிர வேறு எவராக இருந்தாலும் அவர்களை வணங்கக்கூடாது.

5. திருக்கோயிலினுள் ஆத்மப் பிரதட்சிணம் (தன்னைத் தானே சுற்றிக்கொள்வது) கூடாது.

6. பிரசாதமாகக் கொடுக்கும் குங்குமம், விபூதி, துளசி, வில்வம் ஆகியவற்றைப் பலர் திருக்கோயில்களிலேயே போட்டுவிட்டு வந்துவிடுகின்றனர். இது மிகவும் தவறாகும். வீட்டில் ஒரு சிறு குடுவை வைத்து அதில் அவற்றைச் சேர்த்து வைத்துக்கொள்வதே சரியானதாகும்.

இவற்றைக் கடைப்பிடித்தால் கஷ்டங்கள் தீரும். நன்மைகள் பெருகும்.

29

எப்படி வாழ்ந்தால் நிம்மதி பெறலாம்?

வேதத்தின் ஓர் அங்கமே ஜோதிடமாகும். இந்த உயர்ந்த கலையை அன்றாட வாழ்க்கையின் வெற்றிக்கும், நலனுக்கும் எவ்விதம் பயன்படுத்திக் கொள்வது என்பதைக் காட்டி அருளியவர் பாரத ஜோதிடத்தின் தந்தை எனப் போற்றப்படும் வராக மிஹிரர் ஆவார். இவரது நூல்களான 'பிருஹத் ஜாதகம்,' 'பிருஹத் சம்ஹிதை' ஆகியவை உலகப் பிரசித்தி பெற்றவை ஆகும்.



நமது அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் பல ஜோதிட அறிவுரைகள் இந்நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றை உணர்ந்து கடைப்பிடித்தால் நிம்மதியான வாழ்க்கையைப் பெறலாம்.

இன்றைய சூழ்நிலையில், செல்வந்தர்கள், வறியவர்கள், வசதியானவர்கள், ஆண்கள், பெண்கள், படித்தவர்கள், கல்வியறிவில்லாதவர்கள் என்று எவராக இருப்பினும் அவர்களுக்குக் கிடைக்காதது மன நிம்மதியே ஆகும். மன நிம்மதி இல்லாததால் இறைவன் அளித்துள்ள நலன்கள் எதையும் அவர்களால் முழு மனத்துடன் அனுபவிக்க முடிவதில்லை.

மற்ற சுகங்கள் அனைத்தையும் முழுமையாக அனுபவிக்க வேண்டுமென்றால் நமக்கு வேண்டிய அடிப்படைத் தேவை மனநிம்மதியேயாகும். இந்த உண்மையைத்தான் வராக மிஹிரர் தமது நூல்களில் வற்புறுத்தி விளக்கியிருக்கிறார்.

குருக்ஷேத்திரப் புண்ணிய பூமியில் எம்பெருமானான கண்ணன் எழுநூறு ஸ்லோகங்களில் கீதையை அர்ஜுன னுக்கு உபதேசிக்கிறான். மனநிம்மதி இல்லாததால் மகாபாரத யுத்தத்தைப் பற்றித் தக்க முடிவு எதையும் எடுக்க இயலாமல் மனப்போராட்டத்தில் தத்தளித்த அர்ஜுனனுக்கு, மன நிம்மதியையும் மன உறுதியையும் ஏற்படுத்துவதற்காக, கண்ணன் திருவாய்மலர்ந்து அருளியதே ஸ்ரீமத் பகவத்கீதை யாகும். அனைத்தையும் கண்ணனின் திருவாக்கினால் கேட்ட அர்ஜுனன், ஒரே வார்த்தையில் கண்ணனின் உபதேசத் திற்குப் பதிலளித்து விட்டான். அந்த வார்த்தைதான் என்ன? ‘கரிஷ்யே வசனம் தவ.’ அதாவது ‘கண்ணா! உன் சொல்படி நடக்கிறேன்’ என்பதே ஆகும்.

இதுதான் கீதை நம் ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்தும் உண்மையாகும். ஆண்டவன் சொல்கிறபடி நாம் ஒவ்வொரு வரும் நடக்க வேண்டும் என்பதே இதன் பொருள். அவன் சொல்படி வாழ்ந்தால் நிம்மதியான வாழ்க்கை நம்மைத் தேடி வரும்.

தனது நூலில் ஜோதிடத்தின் தந்தை எனப் போற்றப் படும் வராகமிஹிரர், எந்த ஒரு கிரகமும் அளவோடு சுபபலம் அல்லது அசுபபலம் பெற்றிருக்க வேண்டும்

எனவும், அளவிற்கு மீறிய பலம் பெற்றிருக்கக் கூடாது எனவும் கூறியிருக்கிறார். இதற்கு உண்மையான பொருள், அளவிற்கு மீறிய செல்வம், பொறுமை, கோபம், அழகு ஆகியவை துன்பத்தையே தரும். அதனால் மன அமைதி கெடும். இன்று ஏராளமானவர்கள் அனைத்து வசதிகளும் இருந்தும் மனநிம்மதிக்காகவே ஏங்குகின்றனர்.

ஒருவருடைய ஜாதகத்திலிருந்து அவருக்கு எந்தக் காரணத்தினால், எந்தக் காலகட்டத்தில் மன நிம்மதி பாதிக்கப்படும் என்பதை அறிந்துகொள்ளலாம். அவற்றை முன்கூட்டியே அறிந்துகொண்டால் அதற்கேற்றபடி நாமும் எச்சரிக்கையாக நடந்துகொள்ளலாம். சர்க்கரை நோய் உள்ள ஒருவர் அளவிற்கு மீறி இனிப்புப் பண்டங்களைச் சாப்பிட்டால் அவரது ஆரோக்கியம் பாதிக்கப்படும் அல்லவா! அதேபோன்றுதான் நமது வாழ்க்கையில் எதுவும் அளவிற்கு அதிகமாக நாம் சேர்த்துக்கொண்டால், அதுவே நமக்குப் பிரச்சினையாக மாறி நம் மனநிம்மதியைப் பாதித்துவிடும்.

கோவையிலிருந்து எமக்கு வந்த ஒரு கடிதம் இது. எழுதியவர் ஒரு தொழிலதிபர். பல ஆண்டுகளுக்கு முன்பு இவரது தந்தை மிகவும் ஏழ்மை நிலையில் கோவைக்கு வந்து, அரும்பாடுபட்டு, பல இன்னல்களை ஏற்று, பொறுமையுடன் உழைத்து, தனது தொழிற்சாலையை முன்னுக்குக் கொண்டு வந்தார். அவர் காலமானவுடன் லாபகரமாக நடந்து கொண்டிருந்த அந்தத் தொழிற்சாலையின் நிர்வாகப் பொறுப்பை அவரது மகன் ஏற்றார். மகனுடைய உழைப் பினால் லாபம் படிப்படியாக அதிகரித்து, கோவையின் பிரபல தொழில் அதிபர்களில் ஒருவராக விளங்கினார். அதிக செல்வம் அவர் மனத்தைத் தவறான வழிகளில் செல்ல வைத்தது. லாபகரமாக, தந்தை விட்டுச் சென்ற அந்தத் தொழிற்சாலை இவரது கைகளுக்கு மாறியபின்பு நல்லபடி அபிவிருத்தி அடைந்து, அதிக லாபத்தையும் பெற்றுத் தந்தது.

திருமணம் நடந்து, குழந்தைகள் பாக்கியமும் குறை வில்லாது அவருக்கு இறைவன் தந்தருளினார். அழகான மனைவி, பாசமுள்ள குழந்தைகள், வசதியான வீடு, செல்வம் தரும் சுகபோகங்கள் அனைத்துடனும் கோவையில்

கௌரவமுள்ள டும்பமாக விளங்கியது அவரது குடும்பம். இந்நிலையில்தான் சகவாச தோஷத்தினால் அவர் பல தவறுகளைச் செய்ய ஆரம்பித்தார். சுமார் பதினொரு ஆண்டுகளில் தந்தை சேர்த்த செல்வம், தன் உழைப்பினால் சேர்த்த செல்வம் அனைத்தையும் இழந்தார். இன்று அவர் படும் துன்பம் விவரிக்க இயலாதது. தனது குடும்பத்தின் அனைத்து ஜாதகங்களையும் எம்மிடம் கொடுத்து, அவர் கேட்ட ஒரே கேள்வி: 'என்று எனக்கு நிம்மதி கிடைக்கும்?'

நிம்மதி என்பது நமது ஒழுக்கத்திற்கும், மனக்கட்டுப் பாட்டிற்கும், தூய்மைக்கும், இறைபக்திக்கும் இறைவன் அளிக்கும் ஒப்பற்ற பரிசாகும். ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை ஒன்றே மனநிம்மதியைத் தரும். மனைவி தரும் சுகத்தை வேசியால் கொடுக்கமுடியாது! தன்னைத் தன் கணவனுக்கு முழுமையாக அர்ப்பணிக்கிறாள் மனைவி. அவள் தரும் சுகம் தூய்மையானது. வேசி தரும் சுகம் தன்னுள் விஷக் கிருமிகளை அடக்கிக்கொண்டு நம் உடலையும், உள்ளத்தை யும் அழித்துவிடும்.

ஆதலால் மனநிம்மதி பெற வேண்டுமென்றால் - நம் வாழ்க்கையை நீண்டகாலம் சுவைத்து அனுபவிக்க வேண்டுமென்றால் - மனநிம்மதியுடன் நாம் இருக்க வேண்டுமென்றால், கட்டுப்பாடான வாழ்க்கை அடிப்படை அவசியமாகும்.

எவருடைய ஜாதகத்தில் லக்கினாதிபதி பலவீன மடைந்தோ அல்லது ஜென்ம ராசி பாவக்கிரகங்களினால் பாதிக்கப்பட்டோ அல்லது சயன, களத்திர ஸ்தானம், ராகு, சுக்கிரன் ஆகிய கிரகங்களினால் அதிக பலம் பெற்றிருந் தாலோ அவர்கள் மனநிம்மதி அவர்களது தவறான செயல் களாலேயே பாதிக்கப்படும் எனப் புராதனமான ஜோதிட நூல்கள் விளக்கியுள்ளன.

இத்தகைய கிரகநிலைகளின் தீய விளைவுகள் ஜாதகத்தில் எப்போது விளையும் என்பதை அறிந்து அதற்கேற்ற பரிகாரம் செய்து கொண்டால் தோஷம் விலகும். இத்தகைய கிரக தோஷத்திற்குப் புராதன ஜோதிட நூல்களில் மிக எளிய பரிகாரங்கள் கூறப்பட்டுள்ளன.

ஆதலால் தங்களுடைய ஜாதகத்தில் இவ்விதம் மனநிம்மதி பாதிக்கப்படக்கூடிய காலமும் நேரமும் ஏற்படும் என்று இருப்பின், அந்தக் காலநேரத்தை முன்கூட்டியே தெரிந்துகொண்டு மனத்தைக் கட்டுப்பாட்டுடன் வைத்துக்கொண்டு அந்த எளிய பரிகாரங்களையும் செய்தால், தோஷம் விலகி மனநிம்மதி பெறலாம். ஆதிசேஷனின் அவதாரமாதலால் ஸ்ரீபெரும்பூதூர் சென்று ஸ்ரீமத் ராமானுஜரை நெய்தீபம் ஏற்றி, தரிசிப்பதும் சிறந்த பரிகாரமாகும்.

கீழ்க்கண்ட ஸ்லோகம், இத்தகைய தோஷங்களைப் போக்கி மனநிம்மதியை அளிக்கவல்லது.

ஆதித்யாயச ஸோமாய மங்களாய புதாயச
குருசுக்கிர சனிப்யஸ்ச ராகவே கேதவே நம;

இது மிக மிக சக்தி வாய்ந்த ஸ்லோகம் ஆகும். காலையில், நீராடிய பின்பே 24 அல்லது 48 அல்லது 108 தடவை, தினமும் பாராயணம் செய்யவேண்டும். அசைவ உணவு உண்பவர்கள் கூறக்கூடாது.

30

தீராத கடனா? தவிர்க்கலாம் – ஜோதிடம் மூலம்

காடுகளில் திரியும் யானைகளைப் பிடிப்பதற்குக் காட்டிலாகா ஒரு வழியை வைத்துள்ளது. அதாவது மிகப் பெரிய பள்ளம் ஒன்றை வெட்டி வைத்து, அதனை இலைகள், தழைகள் ஆகியவற்றால் மூடி வைத்திருப்பார்கள். வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அந்த இலைகளுக்கும் தழைகளுக்கும் அடியில் ஆழ்ந்த, அகண்ட பள்ளம் இருப்பது



தெரியாது. பசுமையாக இருக்கும் அந்தத் தழைகளை உண்பதற்காக முயற்சி செய்யும்போது யானைகள் அந்தப் பள்ளத்தில் விழுந்துவிடும்.

இதேபோன்றுதான் தொழிலதிபர்கள், வியாபாரிகள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோர் கடன் என்ற ஆழ்ந்த பள்ளத்தில் விழுந்து மீளும் வழி தெரியாமல் தவிக்கின்றனர். பல குடும்பங்களை இன்று நாசம் செய்வது கடன் பிரச்சினையே என்பதை எமக்கு வரும் ஏராளமான கடிதங்கள் வெளிப்படுத்துகின்றன. பலர் கடன் தொல்லை தாங்காமல் தற்கொலையை நாடி விடுகின்றனர். சயனைட் என்ற விஷம் நெஞ்சில் இறங்குவதற்குள்ளேயே அது மனிதனைக் கொன்றுவிடும். ஆனால் கடன் என்ற கொடிய விஷம் இருக்கிறதே அது வாங்குபவரை அணுஅணுவாக உருத்தெரியாமல் சிதைத்துவிடும்.

ஒருவரின் வாழ்க்கையில் அனைத்து அம்சங்களிலுமே வழிகாட்டும் ஜோதிடம் இந்தக் கடன் பற்றியும் கிரகநிலைகளின் அடிப்படையில் விளக்கியுள்ளது. மற்ற துன்பங்களைப் போன்றே, கடன்களினால் ஏற்படும் துன்பங்களும் முற்பிறவிகளில் செய்துள்ள பாவங்களின் விளைவே.

அவ்விதம் என்றால் ஒருவரது வாழ்க்கையில் கடன் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது அல்லவா? அதற்கும் ஜோதிடம் என்ற விஞ்ஞானபூர்வமான கலை விடையளிக்கிறது. கடன் சம்பந்தப்பட்ட விஷயங்களை ஜாதகத்தில் கீழ்க்கண்ட ராசிகளைக் கொண்டு நிர்ணயிக்க முடியும்.

1. பூர்வ புண்ணியம்: இதனைக் கொண்டு, கடன் ஏற்பட்டுத்தான் ஆகுமா? அது எந்த அளவிற்கு ஏற்படும்? எந்தக் காலத்தில் ஏற்படும்? அதிலிருந்து விடுதலை உண்டா? உண்டு என்றால் எப்போது? அது ஒரு நபரை எதில் கொண்டுபோய் விடும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

2. லக்கினத்திலிருந்து ஆறாம் இடம்: இதனை ருண(கடன்), ரோக (வியாதி), சத்ரு(பகை) என்று ஜோதிடம் கூறுகிறது. கடன் ஏற்படுவதைப் பற்றிய அனைத்து விவரங்களையும் காலங்களையும் மிகச் சரியாக நிர்ணயிப்பதற்கு இந்த ராசி மிகவும் அவசியம்.

3. பாக்கியம்: பாக்கிய ஸ்தானமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே கடனால் வீடு, வாசல், நகைகள், பொருட்கள் பூர்விகச் சொத்துக்கள் ஆகியவை விரயமாகும். கடனின் தரத்தை அறிந்துகொள்வதற்கு ஜாதகத்தில் பாக்கிய ஸ்தானத்தையும் ஆராய்வது அவசியம்.

4. லாப, ராஜ்ய ஸ்தானம் (11-ம் இடம்): ஒருவருக்கு தான் பட்ட கடனால் கௌரவத்திற்கும், நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுமா, இல்லையா என்பதை இந்த ராசியைக் கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

ஆதலால் ஒருவரது ஜாதகத்தில் கடன் தொல்லைகள் பற்றி முழுமையாக அறிந்துகொள்வதற்குப் பூர்வ புண்ணியம், ருணம், பாக்கியம், ராஜ்ஜியம் ஆகிய ராசிகளை டிகிரி சுத்தமாக ஆராய்ந்து பார்த்தல் மிகவும் அவசியம்.

இவை மட்டுமின்றி ஒரு சில கிரகநிலைகள் அமைந்திருக்கும்போது வாங்கும் கடனை எளிதில் தீர்க்க முடியாது எனவும், வட்டியுடன் இது வளரும் எனவும் மிகப் புராதனமான ஜோதிட நூல்கள் விளக்கியுள்ளன.

வாழ்க்கையில் கூடியவரையில் கடன் வாங்காமல் இருப்பதே விவேகமாகும். சிலருக்குக் கடன் வாங்கித்தான் ஆகவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அவர்கள் அளவோடு வாங்குவதில்லை. கிடைக்கிறதே என்று அதிகமாக வாங்கிவிட்டு, பின்பு துன்பப்படுபவர்கள் பலர். மேலும் சிலர், ஆசைகள் காரணமாகக் கடன் வாங்கிச் செலவு செய்கின்றனர். வருமானத்திற்குள் வாழ்க்கை நடத்த மன உறுதி வேண்டும். சில தொழிலதிபர்கள் கடன் வாங்காமல் தொழிலை நடத்த முடியாது என்ற கருத்தையும் கொண்டிருக்கின்றனர்.

ஒரு சில தருணங்களைத் தவிர பல தருணங்களில் கடன் வாங்குவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கலாம் - மன உறுதி மட்டுமிருந்தால்.

"ஜாதகத்தில் ருண (கடன்) ஸ்தானமான 6-ம் இடம் பாதிக்கப்பட்டிருந்து, பாக்ய ஸ்தானத்திலும் (9-ம் இடம்) பாவக் கிரகங்கள் இருந்து, தசா, புக்திகளும் அனுகூலமில்லாமல் உள்ளபோது கோள்சாரத்திலும் சனி அல்லது குரு அல்லது இருவருமே நீச்சம் பெற்றோ அல்லது பலவீனமாகவோ இருக்கும்போது மிகக் கடுமையான கடன்

தொல்லைகளினால் அவதியுறுவார்கள்" என ஜோதிடக்கலை விளக்குகிறது.

மேலும் இந்த ருண ஸ்தானம் பாதிக்கப்பட்டு, அந்த 6-ம் இடத்திற்கு அதிபதிக்கிரகம் அல்லது 8-ம் இடமாகிய அஷ்டம ஸ்தான கிரகத்தின் தசை ஒருவருக்கு வருமானால் அவர்கள் மன உறுதியுடன் கடன் வாங்குவதைத் தவிர்ப்பது மிகவும் அவசியம். ஏனெனில் இத்தகைய கிரகநிலைகள் அமையும்போது கடனால் மிகக் கொடிய துன்பத்திற்கு ஆளாகக்கூடும். அதுவும் அஷ்டமாதிபதியின் தசை வருமானால் விபரீத முடிவைக்கூட ஏற்படுத்தக்கூடும்.

ஆதலால் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காகவோ அல்லது வியாபாரத்திற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ கடன் வாங்குவதற்கு முன்பு, கடன் வாங்கலாமா, கூடாதா என்பதைத் தக்க ஜோதிடரைக் கொண்டு முன்கூட்டியே அறிந்துகொள்ளவேண்டும். அதுமட்டும் போதாது. கடன் வாங்கவேண்டிய நாள், நேரம் ஆகியவற்றையும் பார்த்தே கடனை வாங்கவேண்டும். இது தவிர அந்தக் கடனைத் தீர்ப்பதற்கு எந்தக் காலகட்டம் உகந்தது என்பதையும் ஜாதகத்தைக் கொண்டு அறிந்துகொள்ளலாம். இதனை ஏன் வலியுறுத்துகிறோம் என்றால் பலர் தொழில் லாபகரமாக நடக்கும்போது கூட, வாங்கிய கடனைத் தீர்ப்பதை ஒத்திப்போட்டு விடுகின்றனர். "வட்டிதானே, கொடுத்துவிட்டால் போகிறது" என்று வசதி இருக்கும்போதுகூட கடனைத் திருப்பிக் கொடுக்க மனம் வருவதில்லை பலருக்கு! பல தொழிலதிபர்கள் செய்யும் மாபெரும் தவறு இது.

ஏனெனில் பல காரணங்களினால் கடனை அடைப்பதற்கு வசதியான காலம் மீண்டும் வருவதில்லை. நல்ல சந்தர்ப்பம் அமையும்போது கடனைத் தீர்க்காமல் விட்டுவிட்டோமே என்று பலரும் பின்னால் வருந்துகின்றனர். ஆதலால் கடன் வாங்கும் முன்பே எவர் பெயரில் கடன் வாங்கப் படுகிறதோ அவர்களது ஜாதகத்தின் பூர்வ புண்ணியம், ருணம், பாக்கியம், ராஜ்ஜியம் மற்றும் அஷ்டம ஸ்தானங்களையும் கடன் வாங்க நினைக்கும்போது நடைபெறும் தசா. புக்திகளையும் ஆராய்ந்து பார்ப்பது மிகவும் அவசியம்.

கடன் தீர பரிகாரம்

ஒரு சில கடன்களைத் தவிர, மற்ற கடன் துன்பங்கள் அனைத்திற்கும் சிறந்த பரிகாரங்கள் உள்ளதை மிகப் புராதனமான நூல்கள் கூறியுள்ளன. மிகக் கொடிய கடன் தொல்லைக்கு ஸ்ரீ யோக நரசிம்மரைப் பூஜிப்பதும், மற்ற கடன் தொல்லைகளுக்கு ஸ்ரீ லட்சுமிநரசிம்மரைப் பூஜிப்பதும், திருவாரூர் அருள்மிகு ஸ்ரீகமலாம்பிகை சமேத தியாகேசன் திருக்கோயிலினுள் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ள ஸ்ரீ ருண விமோசன ஈஸ்வரரைத் தரிசித்துப் பூஜிப்பதும் தக்க பரிகாரங்களாகும்.

வீட்டில் ஸ்ரீ லட்சுமிநரசிம்மர், ருண விமோசன ஈஸ்வரர் ஆகிய படங்களை வைத்து, காலையில் நீராடி, இந்தப் படங்களுக்கு முன் தீபம் ஏற்றி வைத்து ஸ்ரீ லட்சுமிநரசிம்ம கராவலம்பம், கனகதார ஸ்தோத்திரம் ஆகியவற்றைப் பாராயணம் செய்து வரவும். கடனின் அளவு, தன்மைக்கேற்ப இவற்றை நீடித்த காலத்திற்குச் செய்துவந்தால் நிச்சயம் எத்தகைய கொடிய கடன் தொல்லையானாலும் அதிலிருந்து பூரண நிவாரணம் ஏற்படும்.

ஒரு சில கடன்களுக்குப் பித்ருக்களைப் பூஜிப்பதன் மூலம் உடனடியாக நிவாரணம் ஏற்படும். விவாகம், தவிர்க்கமுடியாத குடும்பச் செலவுகள், தாய், தந்தையர் ஈமச்சடங்குகள், நோய்க்குச் சிகிச்சை ஆகியவற்றினால் ஏற்படும் கடன்கள் பக்தியுடன் செய்யும் பித்ரு பூஜையினால் நிச்சயம் நிவர்த்தியாகும். மூதாதையரின் கருணையில் சந்தேகம் வேண்டாம்.


அனுபவத்தில் இதைக் காணமுடியும்.

31

நோய்க்கு ஏற்ற மருந்தும் தோஷத்திற்கு ஏற்ற பரிகாரமும்!

வைத்தியர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். எல்லோருக்குமே வருமானம் வந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால், அவர்களில் ஒரு சிலரே 'கை ராசி' உள்ளவர் - 'இவர் வந்தால் நிச்சயம் குணமாகிவிடும்' - என்றெல்லாம் புகழ் பெறுகிறார்கள்.

இந்தக் கைராசி என்பது ஒரு கற்பனையே. உண்மை என்னவென்றால் இந்தக் கைராசிக்காரர்கள் எனப் பெயர் பெற்றுள்ள வைத்தியர்கள் சரியான சிகிச்சை அளிப்பதில்



தனித்திறன் பெற்றிருகின்றனர். இந்தத் தனித்திறன் என்பதுதான் என்ன?

ஆம்! இவர்கள் நோயாளியின் நோயைப் பற்றி மிகத் துல்லியமான இரண்டை சரியாகக் கண்டுபிடித்து விடுகிறார்கள். அவை:-

(1) நோயின் அடிப்படைக் காரணம் என்ன?

(2) அந்த அடிப்படைக் காரணத்தை அடியோடு அகற்றுவதற்குரிய சரியான மருந்து அல்லது மூலிகை என்ன? என்பவையே ஆகும்.


நோய் ஒன்றாக இருக்க, மருந்து வேறொன்றாக இருந்தால் எவ்விதம் நோய் குணமாகும்? நோய் ஒன்றாக இருக்க, சிகிச்சை அதற்குச் சம்பந்தமில்லாமல் இருக்கும் பல உண்மை அனுபவங்களைத் தற்காலத்தில் கண்டு வருகிறோம்.

இவ்விதம் நான் எழுதுவது கண்டு பல மருத்துவர்கள் கோபப்படலாம். ஆயினும், உண்மையை மறுக்கமுடியாது. திருச்சி மருத்துவமனை ஒன்றில் 26 வயது இளைஞர் ஒருவருக்குச் சிறுநீரகங்கள் இரண்டும் வேலை செய்யவில்லை என்றும், உடனடியாக மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சை செய்தே ஆகவேண்டும் என்றும் கூறி உள்ளனர்.

அந்த இளைஞரின் பெற்றோர், சென்னையில் உள்ள பிரசித்திபெற்ற மருத்துவமனையில் காண்பித்ததில், அவருக்கிருந்த சிறுநீரகக் கோளாறு அடியோடு வேறுவிதமான ஒன்று எனக் கூறி, அதனை மருந்தினாலேயே குணப்படுத்தி விடமுடியும் எனவும் கூறி, சிகிச்சை அளித்துள்ளனர்.

தற்போது அந்த இளைஞர் பூரண குணம் அடைந்து, ஆரோக்கியத்துடன்தான் இருந்து வருகிறார். மேலும் மூன்று மாதங்களுக்குப் பிறகு மருந்துகளையும் நிறுத்திவிடலாம் என்று அந்த இளைஞருக்குச் சிகிச்சை அளித்த மருத்துவ நிபுணர் கூறி உள்ளார்.

இதே நிலைதான் ஜோதிடர்கள் கூறிவரும் கிரக தோஷப் பரிகாரங்களுக்கும். ஜாதகத்தின் பன்னிரண்டு ராசிகளும்,



'தேனாய் இன்அமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து என் உளம்புகுந்து அடியேற்கு அருள் செய்தான்'
ஸ்ரீ சொக்கநாதப் பெருமான்



மனித வாழ்க்கையின் பல அம்சங்களைக் கட்டுப்படுத்து கின்றன. அவற்றிற்குப் பல சுபபலன்களும், தோஷ பலன்களும் ஏற்பட்டு விடுகின்றன - நாம் பிறக்கும்போதே.

இந்தச் சுப, தோஷ பலன்களைக் கண்டறிய, ஜாதகத்தின் மூன்று இடங்களை ஆராய வேண்டும் என மிகப் புராதனமான ஜோதிட நூல்கள் விதித்துள்ளன:-

(1) ஜெனன லக்கினம்.

(2) ராசி - பிறக்கும்போது சந்திரனின் நிலை.

(3) பூர்வ புண்ணியம்.

இப்போது நமது ஆராய்ச்சிக்குக் கிரக ராசி, தோஷ பலன்களை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

உதாரணமாக, குழந்தை பாக்கியம் ஏற்படாத ஜாதகத்தைப் பார்க்கலாம்.

குழந்தை பாக்கியம் தடைபடுவது இரண்டு தோஷங் களினால்:-

(1) புத்திர தோஷம்.

(2) சயன தோஷம்.

இரண்டு தோஷங்களுமே நமது பாவச் செயல்களினால் ஏற்படுபவையே. புத்திர தோஷம் என்பது, பிற பிராணிகளின் குழந்தைகளான குட்டிகள், முட்டைகள், குஞ்சுகள் ஆகியவற்றை வியாபாரத்திற்காகக் கொல்வது, புசிப்பது ஆகிய காரணங்களினால் ஏற்படுவது.

சயன தோஷம் என்பது, ஜாதகத்தின் சப்தம (7), அஷ்டம (8) ஸ்தானங்கள் பாதிக்கப்படுவதால் ஏற்படுவது. கணவன்-மனைவியின் தாம்பத்திய அன்னியோன்யமும், உடல் உறவுச் சுகமும் இந்த தோஷத்தினால் கடுமையாகப் பாதிக்கப்படும். ஆயுர்வேத மற்றும் தற்கால மருத்துவரீதியில் கணவன்-மனைவியருக்கு ஏற்படும் உயிரணுக் குறைவு ஆகும் இது.

குதிரை, காளை மாடு ஆகியவற்றை வண்டியில் பூட்டுவதற் காகவும், இதர வேலைகளுக்காகவும், அவற்றின் உயிரணு

விதையைச் சிதைப்பது, கணவன்-மனைவியரிடையே கோள் சொல்லி அவர்களைப் பிரிப்பது, மருமகள்-மகன் சேராமல் தடுக்கும் புக்கக வீட்டினர், புலால் உண்பவர்கள் ஆகியோருக்குச் சயன தோஷம் ஏற்படும்.

ஆனால், இவ்விரு தோஷங்களுமே குழந்தை பாக்கியம் ஏற்படுவதைத் தடை செய்யும். ஆதலால், ஒவ்வொரு ஜாதகத்தையும் டிகிரி சுத்தமாக ஆராய்ந்தால் அந்த தோஷம் எதனால் ஏற்பட்டுள்ளது என்பதும், அதன் தீவிரமும் (கடுமை) தெரியும்.

அதற்கான சரியான பரிகாரங்கள் நம் புராதன நூல்களில் கூறப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட சாய்மான கோணத்திற்கு மேல் (டிகிரிக்கு மேல்), புத்திர தோஷம் அல்லது சயன தோஷம் இருப்பின், அதற்கு மட்டும் பரிகாரம் கிடையாது. மற்ற புத்திர, சயன தோஷங்களுக்குப் பரிகாரம் உண்டு.

இதேபோன்றே ருண(கடன்), ரோக(நோய்கள்), சத்துரு(விரோதிகள்), அமைதிக்குறைவு, நிரந்தரமற்ற உத்தியோகம், தொழில் அல்லது வியாபாரம், நியாயமில்லாத அவதூறு, நற்பெயருக்குக் களங்கம் ஆகியவற்றை மிக மிகச் சரியாகக் கண்டுபிடிக்கும் சூட்சும கணிதமுறைகள் நம் பண்டைய நூல்களில் உள்ளன.

நாம் 'குமுதம் ஜோதிடம்' இதழ் மூலம் கூறி வரும் வார ராசி பலன்களும், தோஷ பரிகாரங்களும், சாதாரணமாகக் கூறப்படுபவை அல்ல.

மேற்கூறிய சூட்சும கணிதமுறைகளின்படி கணிக்கப் பட்டே கூறப்படுபவை ஆகும். ஆதலால்தான் அவை தவறாமல், உடனுக்குடன் பலன் அளித்து வருகின்றன என் பதை எமக்கு வரும் ஏராளமான கடிதங்கள் நிரூபிக்கின்றன.

புத்திர தோஷத்திற்குத் திருக்கருகாவூர் ஸ்ரீகர்ப்ப ரட்சாம்பிகை, சயன தோஷத்திற்கு ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதன், நோய், குடும்பத் தொல்லைகள், மனவியாதிக்கு ஸ்ரீ பெரும்பூதூர் ஸ்ரீ ராமானுஜர், கால-சர்ப்ப

தோஷத்திற்குத் திருநாகேஸ்வரம் ராகு, காளஹஸ்தி எம்பெருமான், புத்திர-சயன இரு தோஷங்களுமே உள்ளவர்களுக்குத் தொட்டமளூர் ஸ்ரீ நவநீதகிருஷ்ணன்... என நோய்க்கு ஏற்ற மருந்தைப் போல, தோஷத்திற்கு ஏற்ற பரிகாரங்களையே கூறி வருகிறோம்.

ஆதலால், 'குமுதம் ஜோதிடம்' ஜோதிடர் மட்டும் அல்ல. மருத்துவரும் கூட.


உங்கள் நல்வாழ்விற்கு அது தொடர்ந்து வழிகாட்டி வரும்.

32

திருடியவர்களுக்கா சொந்தம் திருக்கோயில் சொத்துகள்?

மற்றொருவர் பொருட்கள் அல்லது பணம் அல்லது சொத்துகள் ஆகியவற்றைத் திருடுபவர்களைத் திருடர்கள் என்று கூறுகிறோம். அவர்களுக்குத் தண்டனை வழங்க சட்டமும் உள்ளது. காவல்துறையும், நீதித் துறையும் உள்ளன.

ஆனால், சீரும்சிறப்புமாய்ச் செல்வச் செழிப்



புடன் வருடாந்திர உற்சவங்களையும் குறைவில்லாது கண்ட, பல்லாயிரக்கணக்கான தமிழகத் திருக்கோயில்கள் இன்று விளக்கேற்றுவதற்குக் கூட நிதி வசதி இல்லாமல், இருட்டில் மூழ்கி உள்ளன.

மிகப் பெரிய பல திருக்கோயில்கள் பலவற்றில் மூலவர், உற்சவர் இருவருமே, எண்ணெய்க் கறைபட்ட, கிழிசல் வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, தரிசனம் அளிப்பதைக் காணும்போது நெஞ்சத்தைப் பிழிகிறது. இப்பெருமான் களுக்கும், அம்பிகை, தாயார்களுக்கும், பல்லாண்டு பல்லாண் டாகப் பல மாமன்னர்களும், பக்தர்களும், தனவான்களும் சமர்ப்பித்த விலை உயர்ந்த ஆபரணங்கள் அனைத்தும் மாயமாய் மறைந்துவிட்டன இப்போது.

பல திருக்கோயில்களுக்குச் செழிப்பான விளை நிலங்களும், நல்ல வீடுகளும் விஜயநகர மன்னர்களாலும், பல பக்தர்களாலும் இலவச மான்யங்களாக அளிக்கப் பட்டுள்ளன. முற்காலத்தில் எந்தக் குடும்பத்திலாவது குழந்தை கள் இல்லாமல் போனால், தங்களது சொத்துகளைத் திருக்கோயில்களுக்கு எழுதி வைத்துவிடும் பழக்கமும் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது.

புராதனமான திருக்கோயில்களின் கல்வெட்டுக்களில் இத்தகைய மான்யங்களைப் பற்றிச் செதுக்கி வைக்கப் பட்டுள்ளதை இன்றும் காணலாம்.

விஜயநகர சாம்ராஜ்ஜியம் அதன் மகோன்னத நிலையில் இருந்தபோது, சைவ-வைணவ பேதம் சிறிதளவும் இல்லாமல், தமிழகத் திருக்கோயில்கள் அனைத்தும் விஸ்தரிக்கப்பட்டன. திருப்பதி, திருமலை, திருவரங்கம் (ஸ்ரீரங்கம்), மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரர் திருக்கோயில், ஸ்ரீ வில்லிபுத்தூர் போன்ற புகழ்பெற்ற திருக்கோயில்களில் புதிய ராஜகோபுரங்களும் நிர்மாணிக்கப்பட்டன. அவற்றில் ஒன்றுதான் ஸ்ரீரங்கம். தெற்குப் பக்கத்திலுள்ளது ராயர் கோபுரம்.

தலைக்கோட்டை யுத்தத்தில், தக்காணத்து சுல்தான் களுடன் (அகமது நகர், கோல்கொண்டா, பீஜப்பூர்) நடை பெற்ற போரில் விஜயநகரம் தோற்று வீழ்ந்ததால், இந்த ராஜகோபுரம் மற்றும் மீனாட்சித் திருக்கோயில் ராஜகோபுரம் (இதன் பிரம்மாண்டமான அஸ்திவார

கல்தூண்களை இன்றும் காணலாம்) ஆகியவை பாதியில் நின்று போய்விட்டன.

இந்த ராயர் கோபுரம்தான், ஸ்ரீ அஹோபில மடத்தின் 44-வது பட்டம் ஸ்ரீமத் அழகிய சிங்கரால் கட்டி முடிக்கப் பட்டது.

விஜயநகரமும், தேவகிரி (தற்போதைய வாரங்கல் - ஆந்திரப் பிரதேசம்) கோட்டையும், டில்லி படைகளினால் விழ்ச்சியுற்ற பிறகு இரண்டுமுறை தமிழகத் திருக்கோயில்கள் சூறையாடப்பட்டும் அழிக்கப்பட்டும் விட்டன. சுமார் 68 வருடகாலம் பல திருக்கோயில்களில் எவ்வித பூஜையும் இல்லாமல் கழிந்தபின்பு, ஊர்களை விட்டு ஓடிப்போனவர் களின் சந்ததியினர், ஒருவர்பின் ஒருவராக ஊர்களுக்குத் திரும்பினர்.

பல திருக்கோயில்கள் ஒருவாறு மீண்டும் திறக்கப்பட்டு, பூஜைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இந்தச் சுமார் 68 ஆண்டு காலத்தைப் பெரியவர்கள் 'பிரளய காலம்' என்று கூறுவார்கள். அப்போது பல ஊர்கள் அழிந்தன. ஏராளமான பெரியோர்களும் கொல்லப்பட்டுவிட்டதால், பல திருக்கோயில்களின் சொத்துகளைப் பற்றி அறிந்தவரும் இல்லை. கூறுவோரும் இல்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுதுதான் முதல்முறையாகப் பல கோயில் நிலங்களும், சொத்துகளும் பலரது கைகளுக்கு மாறின.

ஏனெனில், விஜயநகர சாம்ராஜ்ஜியம் பலமாக இருந்த வரையில் கோயில் சொத்துகளையும், பொருட்களையும் திருடியவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை விதிக்கப் பட்டது. அந்தப் பயம் நீங்கிவிட்டதால், பலரும் துணிவுடன் கோயில் சொத்துகளைத் தங்கள் சொத்தாக எடுத்துக் கொண்டனர்.

இருப்பினும் தெய்வ பக்தி, ஆன்மிகம், ஒழுக்கம் ஆகியவை தமிழ் மக்களின் ரத்தத்தில் ஊறியிருப்பதால் பல திருக்கோயில்களில் மீண்டும் பூஜைகள், நைவேத்தியங்கள், வருட உற்சவங்கள் ஆகியவை ஆரம்பிக்கப்பட்டன. அற்புத மான சிற்ப வேலைப்பாடுகளுடன் மிகப்பெரிய அளவில், அளவற்ற மந்திர சக்தியும், வீர்யமும் ஊட்டப்பெற்ற

திருக்கோயில்களைத் தமிழகத்தில் மட்டுமே அதிக அளவில் காணமுடியும். வடஇந்தியாவில் ஆன்மிக விசேஷத்தலமும், புண்ணியத் தீர்த்தமும் மட்டுமே. ஆனால், திருக்கோயில்களின் பெருமை தமிழகத்திற்கே உரித்தான தனிப்பெருமை ஆகும்.

வெளிநாட்டினர்கூட இந்தியா வரும்போது, நமது தமிழகத்தின் திருக்கோயில்களைக் காணும் ஆவலுடன்தான் வருகின்றனர். நான் சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்தபோது, பல அமெரிக்க அரசியல், வர்த்தக, தொழில் அதிபர்கள் தமிழகத்தின் திருக்கோயில்களைப் பற்றித்தான் என்னிடம் விசாரித்தனர்.

ஆனால், 'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' - என்ற மூதுரைக்கு ஏற்ப, தமிழகத்தின் ஆன்மிகச் செழிப்பிற்கு மீண்டும் அரசியல் என்ற விஷக் கிருமிகளால் சோதனை ஏற்பட்டது. எவர் எவரோ காணிக்கையாக இறைவனுக்கென்று சமர்ப்பித்த தர்மச் சொத்துகள், அரசியல் கட்சிகளின் கண்களை உறுத்தின.

மக்களிடையே நாத்திகப் பிரசாரம் பரப்பப்பட்டது. ஆங்கிலேய அரசாட்சியின்கீழ், திருக்கோயில்களுக்குக் கிடைத்த பாதுகாப்புக்கூட நமது சுதந்திர இந்தியாவின் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கவில்லை. இதனை மறுக்கமுடியாது எவராலும்.

இதன் விளைவாக இன்று ஏராளமான திருக்கோயில் களின் நிலங்களும், இதர சொத்துகளும், பல தனி மனிதர்களிடமும், அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களிடமும், அவர்களது சொந்த சொத்தாக மாறி உள்ளன. 'சிவன் சொத்து குல நாசம்' என்று பெரியோர்கள் கூறுவார்கள். ஆனால், இன்று தெய்வத்தினிடம்கூட இவர்களுக்குப் பயமில்லை.

தற்போது தமிழக அரசு இவ்விஷயத்தில் அக்கறை கொண்டிருப்பது இறைவனின் திருவருளே. தமிழக அரசின் அறநிலையத்துறையின் தெய்வ பக்தியும், நேர்மையும், ஒழுக்கமும் கொண்ட பல அதிகாரிகளைச் சந்திக்கும் வாய்ப்பு சமீபகாலத்தில் எனக்குக் கிட்டியது. ஒரு சிலரைத் தவிர பெரும்பான்மையான அதிகாரிகள் மிக மிக தெய்வபக்தி உடையவர்களாக இருப்பதைக் கண்டு, மனம்

நெகிழ்ந்து போனேன். என் மனத்தில் மீண்டும் நம்பிக்கை துளிர்த்தது.

மீண்டும் திருக்கோயில்கள் அவற்றின் மகோன்னத நிலைக்கு வரவேண்டும். தனிப்பட்ட மனிதர்களால், பக்தர்களால் மட்டும் இதனைச் சாதிக்கமுடியாது. அந்தக் காலத்தில் மாமன்னர்கள் செய்ததை இன்று அரசாங்கம் செய்யவேண்டும். அதனால் தமிழகம் மட்டும் இன்றி, நாடே நன்மை பெறும்.

எவர் கையில் இன்று இருந்தாலும் அந்தந்த திருக்கோயில் களுக்கு அந்தந்தச் சொத்துகள் திரும்ப அளிக்கப்படுவதுடன் அவை தகுந்தபடியும் நிர்வகிக்கப்பட வேண்டும். அதனால், வேலை இல்லாதவர்களுக்கும் வேலையும் கிடைக்கும். ஆன்மிகமும் செழிக்கும்.

இறைவனைக் குழந்தைபோல் பரிவும், பாசமும் காட்டி ஆராதிக்க (பூஜிக்க) வேண்டும் என்பதை மகா புருஷரான ஸ்ரீமத் ராமானுஜர் திருவாய் மலர்ந்து அருளியிருக்கிறார்.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது தமிழ் மக்களின் வாழ்க்கை நெறிமுறை. 'அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்!' என்பதைக் காலம் ஒருமுறை அல்ல, பலமுறை நிரூபித்துள்ளது.

ஆதலால், எவரிடம் இருந்தாலும் அவர்களாகவே முன்வந்து திருக்கோயில் சொத்துகளைத் திரும்பக் கொடுத்துவிடுவது அவர்களது குடும்பத்திற்கும், குலத்திற்கும் நன்மை தரும். இவ்விஷயத்தில் தமிழக அரசு காட்டிவரும் அக்கறை பாராட்டுதலுக்கு உரியது. இறைவனின் திருவருள் நிச்சயமாகத் தமிழக அரசுக்குக் கிடைக்கும்.

33

பெற்றோர் பெருமை அளவிடற்கு அரியது!

வேதங்கள் எவராலும் இயற்றப்படவில்லை. அவை எப்பொழுதுமே இருப்பவையாகும். இறைவன், 'மனிதன்' என்று ஒருவனைச் சிருஷ்டிக்கும் முன்பே அந்தப் பரப்பிரும்மமான ஆண்டவனால் 'மனிதன்' என்று ஒரு ஜீவன் படைக்கப்படப் போகிறான் என்பதை உணர்ந்த வேதம், அவன் எவர்களுக்கெல்லாம் கடமைப்பட்டவன் ஆகிறான்



என்பதை, இனி பிறக்கப்போகும் மனித ஜீவனுக்காகக் கூறி யுள்ளது. அவர்கள் யார்?

இதோ இவர்கள்தான் அவர்கள்:

(1) முதலில் மனிதனைப் பெறும் தாய்.

(2) அவனது வளர்ச்சி முதலிய நலன்களை அளிக்கப் போகும் தந்தை.

(3) அவனது நல்வாழ்விற்கு அவசியமான கல்வி, ஒழுக்கம், நேர்மை, சத்தியம், தர்மநெறி ஆகியவற்றை அவனுக்குப் போதிக்கும் குரு.

"மாத்ரு தேவோ பவ: பித்ரு தேவோ பவ:

ஆச்சார்ய தேவோ பவ" - எனக் கூறிய வேதம், மனிதனைப் படைத்த தெய்வத்தையே இவர்களின் வரிசைக்குக் கடைசியில்தான் வைத்தது.

ஆதலால், தாய், தந்தையர்தான் நாம் தினமும் முதலில் வணங்க வேண்டிய தெய்வம்.

படித்து, நல்ல வேலையும் கிடைத்தவுடன், இனி பெற்றோர் தயவு நமக்கு எதற்கு என்ற மனப்பான்மை, தற்காலத்தில் இளைஞர்களிடையே அதிகரித்து வருவதால், உண்மை நிகழ்ச்சி ஒன்றை இங்கு கூறுகிறோம்.

அந்த தாய், அவர் பிள்ளை ஆகியோரின் சம்மதத் துடனும், அனுமதியுடனும் இந்த உண்மை நிகழ்ச்சி வெளியிடப்படுகிறது.

சென்ற சில மாதங்களுக்கு முன்பு எமக்கு வந்த ஏராள மான கடிதங்களில் ஒன்றுதான் இக்கட்டுரையை எழுதத் தூண்டியது. என் நெஞ்சைப் பிழிந்த ஒரு தாயின் சோகத் துடிப்பைத் தாங்கி வந்திருந்தது, திருச்சியிலிருந்து வந்த அந்த 11 பக்க நீண்ட கடிதம். இக்கடிதத்தை நேரில்தான் கொண்டு வந்து கொடுத்தனர்.

எழுதியிருந்தது ஒரு பெண்மணி. கணவர் காலமாகி 14 ஆண்டுகளாகியிருந்தன. ஒரே மகன்தான். அவன் முகத்தைப் பார்த்து, கணவரை இழந்த துக்கத்தைத் தாங்கிக் கொண்டார்

அந்தத் தாய். கணவர் விட்டுச் சென்ற கடமையை ஏற்றுக்கொண்டார்.

ஆண் துணை இல்லாது அப்பெண்மணி தன் மகனை வளர்த்துப் படிக்க வைக்க பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. கணவர் விட்டுச் சென்ற பணம், சிறு வீடு, தனது நகைகள் ஆகிய அனைத்தையும் விற்று, சென்னை ஐ.டி.ஐ.யில் படிக்க வைத்து, தன் கனவுகள் அனைத்தும் நிறைவேறிவிட்ட பூரிப்பில் திளைத்துப் போனார் அந்தத் தாய்.

இன்னமும், ஒரு கடமை மட்டும் பாக்கி இருந்தது. தன் அன்பு மகனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டிய கடமையே அது. பல இடங்களிலும் விசாரித்து, அலைந்து, தேடி, நல்ல குடும்பத்திலிருந்து ஒரு பெண்ணையும் தேர்ந்தெடுத்துவிட்டார் அவர். பெண், பிள்ளை ஒருவரை ஒருவர் பார்த்து, நிச்சயதார்த்தமும், எளிமையான முறையில் சென்னையில் நடந்தது - பெண் வீட்டினர் சென்னையில் இருந்ததால்.

இதற்கிடையில் அவரது மகனுக்கு வெளிநாடு ஒன்றில் வேலை கிடைத்து, உடனடியாக வந்து பணியை ஒப்புக் கொள்ளும்படி உத்தரவும், தேவையான 'விசா' ஆகியவையும் அனுப்பியிருந்தனர் அந்த நிறுவனத்தினர். தாயின் மகிழ்ச் சிக்கு அளவே இல்லை.

மகனும் புறப்பட்டுச் சென்றுவிட்டான் வெளிநாட்டிற்கு. தனிமை, தாயை வாட்டியது. எனினும், பிள்ளைக்கு வெகு விரைவில் திருமணம் நடக்கப் போவதையும் வெளிநாட்டில் நல்ல வேலை கிடைத்திருப்பதையும் எண்ணி, மனத்தைத் தேற்றிக்கொண்டார், உலகமே தன் பிள்ளைதான் என்று வாழ்ந்து வந்த அந்த உத்தமி.

அந்தத் தருணத்தில்தான் ஒருநாள், வெளிநாட்டில் இருந்த பிள்ளையிடமிருந்து அவருக்குக் கடிதம் வந்தது. பிரித்துப் படித்த தாய்க்கு ஒரே சமயத்தில் ஆயிரம் தேள்கள் கொட்டியது போல் துடித்துப் போனார்.

அப்படி என்ன எழுதியிருந்தான் அவர் பிள்ளை? தாய் பார்த்து, தானும் பார்த்து, நிச்சயதார்த்தமும் நடந்துள்ள பெண் தனக்கு வேண்டாம் என்றும், தன்னுடன் வேலை

பார்க்கும் வெளிநாட்டுப் பெண் ஒருத்தியைத் தான் விரும்புவதாகவும் எழுதியிருந்தான் அந்தப் பிள்ளை.

அதனை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஜீரணிக்க இயலவில்லை. அந்தப் பெண்ணின் வீட்டாருக்கு என்ன சொல்வது? எப்படிச் சொல்வது? வானமே இடிந்து தன் தலையின் மீது விழுந்துவிட்டதைப் போல் தவித்துத் துடித்தாள் அவள்.

'இதற்காகவா இத்தனை நாள் வாழ்ந்தோம்? 'அம்மா,' 'அம்மா' என்று எதற்கெடுத்தாலும் கூப்பிடும் தன் மகனா இப்படிச் செய்தான்? என்னாயிற்று அவனுக்கு? இதற்காகத் தான் அந்த நாளில் பெரியவர்கள் வெளிநாடு செல்லக்கூடாது என்பதில் அத்தனை உறுதியுடன் இருந்தார்களோ? பிள்ளையை மணமாலையுடன் பார்த்து ஆனந்திக்க எத்தனை ஆவலாய் இருந்தோம்?

ஆயிரம் எண்ணங்கள், அன்பும், தியாகமுமே உருவான அந்தத் தாயின் உள்ளத்தைத் தாக்கின. அன்று பூராவும் எதுவும் சாப்பிடவில்லை. அந்தி மயங்கி, இரவு வந்ததும் அவள் மனம் இறுகிவிட்டது. இனி பந்தம் எதற்கு? பாசம் எதற்கு? துக்கத்தின் எல்லையைத் தாண்டிவிட்ட அந்தத் தெய்வத்தாய், பூஜை அறையில் உள்ள கணவரின் படத்தைச் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினாள். கடிதத்தை நினைத்து, நினைத்து மருகினாள். இனியும் இருக்கவேண்டுமா?

ஒரு கணம் கணவரின் படத்தை வெறித்து நோக்கினாள். "வேண்டாம்" என்று கூறுவது போல் மனத்திற்குத் தோன்றியது! மனதில் ஒரு பொறி! நிச்சயம் செய்துள்ள பெண் வீட்டாரிடம் கூறி, பிள்ளை மனத்தை மாற்ற முயற்சி செய்தால் என்ன?

நிச்சயம் செய்திருந்த பெண்ணின் தந்தையும், தாய் மாமனும் அந்தத் தாய் எமக்கு எழுதியிருந்த அந்த 11 பக்க கடிதத்தைக் கொடுத்து, ஜாதகங்களையும் காட்டினர். எமது அறிவுரைப்படி வெளிநாடு சென்று அந்தப் பிள்ளையைச் சந்தித்து, தாயின் மனநிலையை விளக்கியதும், தன் தவறை உணர்ந்துகொண்டு விட்டான், மற்றபடி நல்லவனான அந்தப் பிள்ளை.

தான் நிச்சயித்த அதே பெண்ணுடன், தை மாதத்தில் தன் மகனுக்குத் திருமணம் நடத்த நிச்சயமாகி உள்ளதை அந்தத் தாய் 15.12.2002 அன்று தொலைபேசி மூலம் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இதை நான் எழுதுவதற்குக் காரணம், தற்காலத்தில் - முக்கியமாக வெளிநாடுகளில் வேலை பார்க்கும் பெண்களும், பிள்ளைகளும் வரன் விஷயத்தில் தன்னிச்சையாகவும் பெற்றோர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பு அளிக்காமலும் நடந்துகொள்வதே ஆகும்.

அதற்காக வெளிநாடு சென்று படிக்க வேண்டாம் என்றோ அல்லது வேலை பார்க்கவேண்டாம் என்றோ நாம் கூறவில்லை. 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது ஔவை மூதாட்டியின் வாக்கு.

ஆனால் எங்கு சென்றாலும் எந்நிலையில் இருந்தாலும் நமது கலாசாரம், பண்பு, ஒழுக்கம், ஆன்மிகம் ஆகியவற்றை விடக்கூடாது என்பதைத்தான் வலியுறுத்துகிறோம்.

எங்கு சென்றாலும் அமெரிக்கன், அமெரிக்கனாகவே இருக்கிறான். ஆங்கிலேயனும் அப்படியே. ஆனால் நாமோ...?


பெற்றோர் சம்மதமும், ஆசியும் இல்லாத விவாகம், விவாகம் ஆகாது. தந்தை சொல் காப்பாற்ற ராஜ்ஜியத்தையே துறந்த ஸ்ரீ ராமபிரான் அவதரித்த புண்ணிய பூமியில் நாம் பிறந்துள்ளோம் என்பதை நம் நாட்டு இளைஞர்களும், பெண்களும் எங்கிருந்தாலும் மறந்துவிடக் கூடாது.

பெற்றோரின் தெய்வீகப் பெருமை அளவிடற்கரியது.

34

கிரக தோஷங்களைப் போக்குவதில் இணையற்ற ராமநாமம்!

சென்ற சில ஆண்டுகளாக எமது ஜோதிட, ஆன்மிகக் கட்டுரைகளின் மூலம் பல கிரக தோஷப் பரிகாரங்களைக் கூறிவருவது, எமது வாசக அன்பர்கள் அறிந்ததே. இத்தகைய பரிகாரங்களை நம்பிக்கையுடன் கடைப்பிடித்துப் பயனடைந்த வர்கள் ஏராளம் என்பதை, எமக்குத் தினம்தோறும் வந்து குவியும் கடிதங்கள் தெரிவிக்கின்றன.



எப்படி பல்வேறு நோய்களுக்குப் பல்வேறு நாடுகளில் தயாரிக்கப்பட்ட மருந்துகளையும், நோயின் தன்மைக்கு ஏற்றபடி உபயோகித்து வருகின்றோமோ, அதேபோன்ற கிரக தோஷங்களுக்கு ஏற்ற, எளிய பரிகாரங்களை மிகப் பழைமையான, ஈடிணையற்ற பல தெய்வீக நூல்களிலிருந்து தேர்ந்தெடுத்துக் கூறி வருகிறோம்.

இந்நூல்களில் பல தற்போது கிடைப்பதற்கு அரியவை. பல ஆஸ்ரமங்களிலும், மகாபுருஷர்களின் தியான மண்டபங்களிலும், ஆன்மிக நிறுவனங்களிலும், பெறற்கரிய பொக்கிஷம் எனப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன - மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத செல்வங்களான இந்நூல்கள்.

அதிகப் பணவசதி இல்லாத மக்கள்கூட சுலபமாக, அதிகப் பொருட்செலவில்லாமல் செய்யக்கூடிய இப்பாரிகாரங்கள் அனைத்தும் இத்தகைய புராதனமான, விலைமதிப்பற்ற நூல்களிலிருந்து தேடித் தேடி, அலைந்து, மிக கடின உழைப்பினால் நான் அறிந்து, சேகரித்தவை ஆகும்.

இப்பரிகாரங்கள் அனைத்தும் ஆதாரபூர்வமானவை. மகரிஷிகளாலும், மகாபுருஷர்களாலும் முக்காலத்தையும் முழுமையாக உணர்ந்த சித்தர்களாலும், நாம் நல்வாழ்வு பெற வேண்டும் என்ற மகத்தான நல்லெண்ணத்தினால், கூறப்பட்டவை ஆகும். இவ்விதம் நாங்கள் கூறிவரும் பரிகாரங்களில், கீழ்க்கண்ட நான்கு பரிகாரங்களைச் சில, மிகக் கடுமையான கிரக தோஷங்களுக்கு வலியுறுத்திக் கூறிவருகிறோம். அவை:-

(1) ஸ்ரீமத் ராமாயணம் - சுந்தரகாண்டப் பாராயணம் - ஸ்ரீராம நாம பாராயணம். (2) ஸ்ரீ மிருத்யுஞ்ஜய ஸ்தோத்திரம் - ஸ்ரீ மார்க்கண்டேய மகரிஷி அருளியது. (3) கங்கையில் புனித நீராடுவது. (4) ஸ்ரீ லட்சுமிநரசிம்மரைப் பூஜிப்பது.

மகாபாவச் செயல்களினால் ஏற்படும் கிரக தோஷங்களுக்கும், அவற்றால் நாம் அனுபவிக்க நேரிடும் மிகக்கொடிய துன்பங்களுக்கும், மேற்கூறிய பரிகாரங்கள் அத்தியாவசியமாகும். இவை அனைத்தும் மகத்தான வீர்ய சக்தி பெற்றவை.

உதாரணமாக, எமது ஜோதிட அறிவுரைகளில் விருச்சிக ராசியினருக்கு ஸ்ரீ லட்சுமிநரசிம்மரைப் பூஜித்து வரும்படி

தொடர்ந்து வலியுறுத்தி வருவதை நீங்கள் கவனித்திருக்கலாம். இந்த ராசியினருக்கு மட்டும், இந்த ஒரே பரிகாரத்தையே மீண்டும், மீண்டும் கூறிவருவது ஏன் எனப் பலருக்கும், அதிலும் முக்கியமாக விருச்சிக ராசியினருக்குமே வியப்பை அளித்திருக்கலாம். இதற்குச் சூட்சுமமான ஒரு காரணம் உள்ளது.

கிரக நிலைகளின் அடிப்படையில், சென்ற சுமார் 18 மாதங்களில், மற்ற 11 ராசியினரைவிட விருச்சிக ராசியினரே கொடிய துன்பங்களை அனுபவித்துள்ளனர். விபத்துகளினால் இளம் வயதில் மரணம், கடன் தொல்லை தாங்காது தற்கொலை, உத்தியோகம், ஜீவனம் ஆகியவை கடுமையாகப் பாதிக்கப்படுதல், குடும்பப் பிரச்சினைகள், புக்ககத்தினர் கொடுமை ஆகியவற்றினால், விருச்சிக ராசியினர் பட்ட துன்பங்கள் அளவற்றவை. (அதற்கு அடுத்தபடியாகச் சிரமப் பட்டவர்கள் துலா ராசியினர்.) ஆதலால்தான், உடனுக்குடன் நிவாரணம் அளிக்கும் ஸ்ரீ லட்சுமிநரசிம்மர் பூஜையை விருச்சிக ராசியினருக்குத் தொடர்ந்து கூறி வந்துள்ளோம்.

இனியும், எந்தெந்த ராசியினருக்கு மிகக் கடுமையான கிரக தோஷங்கள் எப்பொழுதெல்லாம் ஏற்படுகின்றனவோ, அப்பொழுதெல்லாம் இத்தகைய சக்தி உள்ள - ஆனால், எளிய, விசேஷப் பரிகாரங்களைக் கூறிவருகிறோம்.

மேற்கூறிய நான்கு பரிகாரங்களுமே, மிகக் கடுமையான பாவங்களுக்கும், அவற்றால் விளையக்கூடிய கிரக தோஷங்களுக்கும் உடனடியாக நிவாரணம் அளிக்கக்கூடிய பரிகாரங்களாகும். இவற்றில் ராமநாம பாராயணமும், ராமாயணத்தில் சுந்தரகாண்டப் பாராயணமும் மகத்தான சுப பலன்களை அளிப்பவையாகும். அவற்றின் மகத்தான, விசேஷ சக்தியை அனைவரும் அறிந்துகொள்வது மிகவும் அவசியம்.

மகாத்மா காந்தியடிகள் தன் உயிர் பிரியும் அந்த மரண வேதனையிலும்கூட, மின்னலைப் போன்று மறையப்போகும் அந்தக் கடைசி விநாடியில் உச்சரித்தது 'ஹே! ராம்' என்ற சொற்களே ஆகும். அதில் பொதிந்திருக்கும் வேதனையும், அர்த்தமும் எழுத்தால் விளக்க முடியாதவை.



"நம்பியவர் துயர் தீர்ப்பதில் நாளை என்பதில்லை நரசிம்மனிடத்து"
ஹிரண்ய சம்ஹாரமூர்த்தி நரசிம்மன்

'ரா', 'ம' - என்ற இந்த இரண்டு எழுத்துகளுக்கு மட்டும் ஏன் இத்தகைய பெருமை?

எத்தனை, எத்தனை மகான்களும், மகரிஷிகளும், திரிகால ஞானிகளும் வாழ்க்கை நெறிமுறைகளை அறிவுறுத்தியும் கூட, திரேதா யுகத்தை அடுத்து வரப்போகும் துவாபர யுகத்திலும், கலியுகத்திலும் மக்கள் தெய்வ சிந்தனைகள் குறைந்து, பாவச்செயல்களில் ஈடுபடப் போவதைத் தன் திருவுள்ளத்தில் நினைத்த சர்வேஸ்வரனான எம்பெருமான், தானே அவதரித்து, மனிதன் எவ்விதம் வாழ்க்கையைச் சத்தியம், தர்மம் நிறைந்ததாக நடத்தவேண்டும் என்பதைத் தானே கடைப்பிடித்து நடந்துகாட்ட திருவுள்ளம் கொண்டான். அதன்படி ஸ்ரீராமபிரானாக அவதரித்தான்.

ஒரே சொல், ஒரே மனைவி என்ற நெறிமுறைகளைக் கடைப்பிடித்து, மகன், சகோதரன், கணவன், நண்பன் என்ற பல உறவுமுறைகளில் ஒருவர் எவ்விதம் நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதைத் தனது மானிட அவதார வாழ்க்கையில் ஏராளமான துன்பங்களுக்கும், வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும், அநீதிகளுக்கும் ஆளாகிய நிலையிலும், சத்தியத்திலிருந்து வழுவாது வாழ்ந்து காட்டி, 'தேவரை மானிடம் வென்றது' என்று மனிதகுலத் திற்கே பெருமையாக வாழ்ந்து காட்டினான் ஸ்ரீராமன்.

உதாரணமாக சிற்றன்னை கைகேயி, "மன்னன் உன்னை மாவுரிதரித்து, 14 ஆண்டுகள் கானகம் செல்லப் பணித்திருக்கிறான்" எனக் கூறியபோது, அந்த அன்பு மகன் கூறியவை என்ன தெரியுமா? "மன்னவன் பணியென்றாகில், நும்பணி மறுப்பனோ?'' என்பதுதான். அதாவது, "சிற்றன்னையே, மன்னன் பணித்திருக்கிறார் என்றால்தான், இந்த ஆணையை நிறைவேற்றுவேனா? தாங்களே கூறியிருந்தால்கூட, அதனை மறுத்திருப்பேனா?" என்ற பொருள்.

'ராம்' என்பது மகத்தான சக்திபெற்ற மந்திரம் ஆகும். நாம் என்ன வேலை செய்துகொண்டிருந்தாலும், மனத்தால் இந்தத் தாரக மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே இருக்க வேண்டும். இதனை நினைக்கும் இடத்தில், உச்சரிக்கும் இடத்தில் அனுமன் இருப்பான். அனுமன் இருக்கும்

இடத்தில், கிரக தோஷங்களால் என்ன செய்துவிட முடியும்? இதனைத்தான், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளும் "கிரக பலமேமி?" ('ராம நாமம் உள்ள இடத்தில், கிரகங்களுக்கு என்ன பலம் இருக்கும்?') என்ற தனது கீர்த்தனையில் கூறியிருக்கிறார்.

ஸ்ரீமத் ராமாயணம், காயத்ரி மந்திரத்தைத் தன்னுள் கொண்டுள்ள மகா காவியமாகும். கயிலைப் பதியான பரமேஸ்வரனின் திருவுள்ளத்திற்கு உகந்தது 'ராம்' என்ற பவித்ரமான சொற்களாகும். காசித் திருத்தலத்தில் மரணம் அடையும் அதிபாக்கியத்தைப் பெற்றவர்களை, மரண வேதனை திரும்படி, அன்னை பார்வதி தன் மடிமேல் வைத்துத் தன் புடவையின் முந்தானையினால் வீசுகிறாள். அப்போது அகில உலகங்களையும் ஆண்டருளும் அந்த ஐயன், குனிந்து, அந்த ஜீவனின் காதில் 'ராம்', 'ராம்' என்ற தாரக மந்திரத்தை உபதேசித்து அருள்புரிகிறான். (ஆதாரம்: காசி மகாத்மியம், கந்தபுராணம், கங்கா மகாத்மியம்).

மகா புருஷர்களான ஸ்ரீ துளஸிதாசர், ஸ்ரீ புரந்தரதாசர், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், ஸ்ரீ பத்ராசலம் ராமதாஸர், கபீர்தாஸர் ஆகியோர், ராமநாமத்தினால் அந்தப் பிரபுவையே அடையும் பாக்கியத்தைப் பெற்றனர்.

தற்காலத்தில், எமது அறிவுரையை ஏற்று, ராமநாமத்தினாலும், சுந்தரகாண்டப் பாராயணத்தினாலும் பயன் பெற்று எமக்கு எழுதியிருப்பவர்கள் ஏராளம். இவற்றால் துன்பம் நீங்கி, தற்கொலை செய்து கொள்ளும் முடிவிலிருந்து மீண்ட குடும்பங்கள் 47. புற்றுநோயிலிருந்து பூரண குணம் பெற்றவர்கள் : 31.

ராமநாமம், சுந்தரகாண்டம் ஆகியவற்றின் பிரபாவம் அளவற்றது. மிகவும் எளிய, சர்வதோஷ நிவாரணமாகிய இவற்றைத் தினமும் ஜெபித்தும், பாராயணம் செய்தும், துன்பங்கள் நீங்கி, நன்மை பெற வாசக அன்பர்களை வேண்டுகிறேன்.


'நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
துன்பமும் தீமையும் சிதைந்து தேயுமே
ஜென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையில் ராமா என்ற இரண்டெழுத்தினால்.'

35

பூஜைக்கு உரிய மலர் வாடி வதங்கத்தான் வேண்டுமா?

கடந்த 2002ம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் விவாகமான பெண்களின் பெற்றோர்களிடமிருந்து எமக்கு வந்த 84 கடிதங்களில், 14 கடிதங்கள் நெஞ்சைப் பிழிவதாக இருந்தன.

இவற்றில் ஆச்சரியப்படக்கூடிய ஓர் ஒற்றுமை



என்னவென்றால், இந்த 14 கடிதங்களில் சம்பந்தப்பட்ட பெண்கள் அனைவரும் வெளிநாடுகளில் வேலை பார்க்கும் கணவர்களுக்கு வாழ்க்கைப்பட்டவர்களே. மேலும், அனைவரும் நடுத்தர வர்க்கத்தினர் ஆவர்.

இந்த அளவிற்குப் பெண்களைக் கொடுமைக்கு ஆளாக்கு வதைக் கேட்பதற்குச் சட்டத்தினாலும் இயலவில்லை. சமூக மும் இதனைப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருக்கிறதே என்பதை நினைக்கும்போது, நெஞ்சே பிளந்துவிடும்போல் இருக்கிறது.

இந்த 14 பெண்களும் நல்ல கல்வித் தகுதி பெற்றவர்களே. இவர்களில் 8 பெண்கள் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேரில் உயர்ந்த படிப்பு படித்துப் பட்டம் பெற்றவர்கள். அனைவருமே நல்ல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இதில் சம்பந்தப்பட்ட கணவர்கள், கீழ்க்கண்ட நாடுகளில் பணிபுரிப வர்கள்:

(1)	அமெரிக்கா	**: 9**
(2)	ஆஸ்திரேலியா	**: 1**
(3)	துபாய்	**: 3**
(4)	இங்கிலாந்து	**: 1**
	மொத்தம்	**: 14**

இக்கணவர்களின் பெற்றோர்கள் தமிழகத்திலும் (11); கர்நாடகத்திலும் (2); ஆந்திரத்திலும் (1) வசித்து வரும் தமிழ்க் குடும்பத்தினரே. அனைவருமே சென்ற ஐந்தாண்டு காலகட்டத்திற்குள் விவாகம் ஆனவர்கள்.

திருமணமானதிலிருந்தே, புக்ககத்தினரின் கொடுமை களுக்கு ஆளாகி, மனம் தளர்ந்து போயிருக்கின்றனர் இப்பெண்கள். விசா கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தினாலும், வேறு சில காரணங்களினாலும் கணவர் வெளிநாட்டிலும், மனைவி புக்ககத்திலும் இருந்தாக வேண்டிய நிர்ப்பந்தம் இப்பெண்களுக்கு.

இத்தகைய தருணங்களில் மருமகளை மகளாகப் பாவித்து ஆறுதல் கூறவேண்டிய புக்ககத்தினர், மருமகளைப் பல

விதங்களிலும் கொடுமைப்படுத்தி உள்ளனர். பல தருணங்களில் மகன் வெளிநாட்டிலிருந்து தொலைபேசி மூலம் பேசும்போதுகூட, மருமகளைப் பேச அனுமதிக்கவில்லை. அது மட்டுமல்லாமல், பல தருணங்களில் மருமகள் தன் இஷ்டப்படி வெளியே செல்வதாகவும், தங்கள் சொற்படி கேட்பதில்லை எனவும் மகனிடம் கூறி, தன் மனைவியைப் பற்றி தங்கள் மகனின் மனத்தில் சந்தேகம் என்ற விஷ விதையையும் ஊன்றியிருக்கின்றனர் (6 கடிதங்களில்).

பெண்களைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கி, திருமணமும் செய்து கொடுத்த பெற்றோர்களைப் பார்ப்பதற்குக் கூடச் சில பெண்களை அனுமதிக்கவில்லை புக்ககத்தினர் (5 கடிதங்களில்).

இதற்கிடையில், 'பட்டகாலிலே படும்' என்ற முதுமொழிக்கு இணங்க, தற்போது அமெரிக்காவில் நிலவிவரும் பொருளாதாரச் சரிவினால் பல கணவன்மார்களுக்கு வேலையும் போய்விட்டது. சுமார் 13,700 தமிழர்கள் வேலை இழந்திருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. இதில் பலர் தாய்நாடு திரும்பி உள்ளனர்.

மற்றவர்கள், வேறு வேலைகளுக்கு முயற்சி செய்து கொண்டுள்ளனர். நல்ல நிலைமையில் இருந்த தன் மகனுக்கு, மருமகள் வந்த பிறகுதான் வேலை போய்விட்டது என்ற குற்றச்சாட்டு வேறு - இந்தக் குற்றமற்ற பெண்களுக்கு!

இதுபற்றி நான் எழுதுவதற்கு முக்கியக் காரணம், இந்த 14 பெண்களில் 9 பெண்கள் கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர் என்பதே.

ஆம்! சட்டப்படி கணவனை விட்டுப் பிரிந்து விடலாம். அதனால், சம்பந்தப்பட்ட அந்த ஆணுக்குப் பாதிப்பில்லை - அதிகமாக. ஆனால், பாதிக்கப்படப் போவது பெண்ணும், பெண்ணைப் பெற்றவர்களுமே.

நமது சமூகம், அமெரிக்கச் சமூகம் அல்ல. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேலைநாடுகளிலிருந்து எவற்றைத்

தெரிந்துகொள்ள வேண்டுமோ, அவற்றைத் தெரிந்து கொள்ளாமல், நம் நாட்டு இளைஞர்கள் எவற்றிலெல்லாம் மேல்நாட்டினரைப் பின்பற்றக்கூடாதோ, அவற்றையெல்லாம் கடைப்பிடிக்கத் தொடங்கிவிடுகின்றனர் - வெளிநாட்டில் காலை வைத்தவுடன்.

ஆதலால், விவாகரத்துப் பெறும் பெண்கள் நிலைதான் வேதனைக்கு உரியதாக ஆகிவிடுகிறது. மறுமணம் செய்து கொள்ளும் கணவன், பெருந்தன்மை படைத்தவனாக இருப்பது அவசியம்.

பெண்ணின் இளமைக்காகவோ, அழகிற்காகவோ, படிப்பிற்காகவோ, பார்த்துவரும் உத்தியோகத்திற்காகவோ, அந்தப் பெண்ணை மறுமணம் செய்துகொள்பவனாக இருக்கக்கூடாது. புக்ககத்திலும் அப்பெண்ணை மனிதாபி மானத்துடன், முழு மனத்துடன் ஏற்றுக் கொள்பவர்களாக, பெண்ணின் புண்பட்ட மனத்திற்கு ஆறுதல் அளிப்பவர் களாக அவர்கள் இருத்தல் அவசியம்.

குடும்ப நல நீதிமன்றங்கள் இந்த விஷயத்தில் சிறந்த பணியாற்ற முடியும். பெண்கள் நல சமூக சேவை நிறுவனங் களும் இத்தகைய பெண்களின் பிரச்சினைகளில் நேரிடை யாகத் தலையிட்டு, பிரச்சினை தீர முயற்சிப்பது, சமூக நலனுக்கு நன்மை தரும்.

அதிலும் முக்கியமாக, பெண் வழக்கறிஞர்களும், சமூக சேவையாக வாரத்தில் ஒரு நாளாவது இத்தகைய அபலைப் பெண்களின் நலனுக்காக, புண்ணிய காரியமாக ஒதுக்கலாம்.

கூடியவரையில் விவாகரத்து செய்வதைத் தவிர்ப்பது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நல்லது. புக்ககத்தினரும் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். வீட்டில் மருமகளைக் கொடுமைப்படுத்திக் கொண்டு, கோயிலுக்குச் செல்வதில் எவ்வித புண்ணியமும் இல்லை. தெய்வத்தை ஏமாற்ற முடியாது.

இத்தகைய நிகழ்ச்சிகள் தற்போது அதிகரித்து வருவதை எமக்கு வரும் ஏராளமான கடிதங்கள் நிரூபித்துக் காட்டு

கின்றன. இனியும், சமூகத்தில் உள்ள பெரியவர்களும், படித்த பெண்களும் ஒதுங்கி நிற்காமல், இது விஷயத்தில் தலையிட்டு, இத்தகைய பெண்களின் வாழ்க்கை பாழாகாமல் காப்பது அவர்களின் கடமையும் ஆகும். ஜோதிடமும் இச்சீரிய பணியில் பங்கேற்கும் என உறுதி அளிக்கிறேன்.

இல்லறம் என்பது ஒரு கோயில்.

அதில் பூஜைக்கு உரிய மலர் பெண்.

அந்த மலரைப் போற்றிப் பாதுகாப்பது நம் கடமை.

36

பாண்டம் அமைவது குயவன் கையில்!

பல மாதங்களுக்கு முன்பு, தற்காலத்து இளைஞர்கள் ஒழுக்கம் என்ற தடத்திலிருந்து மாறி, தவறான வழிகளில் செல்வதையும், அதனால் பல குடும்பங்கள் மன நிம்மதி இழந்து தவிப்பது பற்றியும் குமுதம் ஜோதிடம் இதழில் வேதனையுடன் குறிப்பிட்டிருந்தேன்.

இளைஞர்களின் இத்தகைய மனமாற்றத்திற்குக் காரணம், அன்னிய நாடுகளின் நாகரிக (அநாகரிகம்?)த்தின் மேல்



அவர்களுக்கு ஏற்பட்டுள்ள மோகமும், புராதனமான நமது கலாசாரம், பண்பு, ஆன்மிகம் ஆகியவற்றின் பெருமையை அவர்கள் அறியாததுமே ஆகும்.

இத்தகைய இளைஞர்களை, நல்வழியில் திருப்ப வேண்டிய பொறுப்பும், அவர்களை நற்பண்புகள், தேசபக்தி உடையவர்களாக உருவாக்கும் பொறுப்பும் பெற்றோர்களுடையதே என்பதையும் வலியுறுத்தி, விளக்கியிருந்தது எமது வாசக அன்பர்களுக்கு நினைவிருக்கும். ஆம்! பாண்டம் அமைவது, குயவனின் கைத்திறனில்தான் உள்ளது!

எமது அறிவுரைகளைப் படித்த பின்பு, தங்களது பெண்களும், பிள்ளைகளும், நம் பாரத புண்ணிய பூமியின் கலாசார, ஆன்மிகப் பெருமைகளை ஓரளவு உணர்ந்ததுடன், அவர்களது பேச்சிலும், நடத்தையிலும் நல்ல முன்னேற்றமும், பண்பும் ஏற்பட்டுள்ளதாக ஏராளமான பெற்றோர்களிடமிருந்து எனக்குக் கடிதங்கள் வந்துள்ளன. மகிழ்ச்சி.

இது போதாது!

நமது செல்வம் நம் குழந்தைகளே. நம் நாட்டின் எதிர்கால நம்பிக்கையும், பலமும் அவர்களே!

நமது தலைமுறையில் பாரதப் புண்ணிய பூமி சுதந் திரம் பெற்றது பலரது ஈடிணையற்ற தியாகங்களினால். துரதிருஷ்டவசமாக, நாட்டின் நிர்வாகம், சுயநல வாதிகளின் கைகளில் சென்றது. பல சமஸ்தானங்களும், அவற்றில் ஆங்கிலேயரால் அமர்த்தப்பட்ட மகாராஜாக் களும் ஒழிக்கப்பட்டனர்.

அதனால், ஏழை மக்களின் வறுமை ஒழியவில்லை. அதற்குப் பதிலாக, சிறு சிறு மகாராஜாக்களாகப் பல அரசியல்வாதிகள் உருவானார்கள். பணபலம்,

அடியாட்கள் பலம், அதிகார பலம் என்று கேட்பார் இல்லாமல் போகவே, மக்களும் தலைவிதி என்று - சூழ்நிலையைப் பொறுமையுடன் ஏற்றுச் சகித்து வருகின்றனர்.

இந்நிலையில், நமது ஒரே நம்பிக்கை, நமது இளைஞர்களே. நம் தாய்நாட்டின் மகோன்னதமான கடந்த காலம், பல அன்னியர்களின் பிடியில் நாம் பட்ட துன்பங்கள், அவமானங்கள், நமது ஆன்மிகப் பொக்கிஷங்களான திருக்கோயில்களையும், விக்கிரக மூர்த்திகளையும் காப்பாற்ற நமது முன்னோர்கள் சிந்திய ரத்தம், புரிந்து தியாகங்கள், இன்றும் உலக நாடுகள் நமக்கு இழைத்துவரும் அநீதி ஆகியவற்றை நமது இளைஞர்கள் உணர வேண்டும்.

பிரிட்டிஷ் சரித்திரப் பேராசிரியர் ஒருவர், பாரத தேசத்தின் புராதனப் பெருமையை இவ்விதம் கூறியிருக்கிறார்: "இங்கிலாந்து, அமெரிக்கா, போர்ச்சுகல் போன்ற நாடுகளில், மக்கள் அடிமைகளாகச் சந்தைகளில் விற்கப்பட்ட (Slave Trade) அநாகரிகக் கொடுமை மலிந்த அதே காலத்தில், இந்தியாவில் ஆன்மிகம் நிறைந்த ஒரு நாகரிகக் கலாசாரமே உருவாகி இருந்தது.

ஆதலால், இந்தியாவை 'மனித நாகரிகத்தின் தொட்டில்' (Cradle of Human Civilisation) என்று கூற முடியும்.

ஒழுக்கக் குறைவினால், புதிய புதிய பாலியல் நோய்களை சிருஷ்டித்து வரும் மேலைநாடுகளின் மக்கள், வாழ்க்கையில் அலுப்பும், சலிப்பும் அடைந்து, நமது பாரதப் புனித பூமியின் வாழ்க்கை நெறிமுறை களில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

அமெரிக்காவின் இன்றைய கடும் பிரச்சினைகளில் ஒன்று, ஏராளமான இளைஞர்களும், பெண்களும், பெற்றோர்களின் போதுமான பராமரிப்பும், கவனமும், கட்டுப்பாடும், வழிகாட்டுதலும் இல்லாததால், தன்னிச்சையாக நடந்து கொள்வதே.

இத்தகைய நிலை, நமது அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் ஏற்படக் கூடாது. ஆதலால், பெற்றோர்கள் செய்யவேண்டியவை இதோ:

(1) சிறு வயதிலிருந்தே நம் குழந்தைகளுக்கு நமது ஆன்மிகப் பெருமை, இறைபக்தி, ஒழுக்கம், பண்பாடு, சென்ற காலச் சரித்திரம், பெரியோர்கள், அருளாளர்கள் சரித்திரங்கள் ஆகியவற்றைப் போதித்து வரவேண்டும்.

(2) தேசத்திற்காகத் தியாகங்கள் செய்த வீரர்கள் பற்றி அவர்களுக்குச் சொல்லித் தரவேண்டும்.

(3) மாலையில், பள்ளியிலிருந்து திரும்பிய பின்பு, சிறிது ஒய்வுவெடுத்த பின்னர், அருகிலுள்ள திருக்கோயில் ஒன்றிற்குக் கண்டிப்பாகச் சென்று திருப்புகழ், ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாமம், அபிராமி அந்தாதி, திவ்யப்ரபந்தம், தேவாரம் போன்றவற்றைச் சுமார் ஒரு மணி நேரமாவது தினமும் கற்க வேண்டும்.

இவை தெரிந்த பெரியோர்கள், தாமாகவே முன்வந்து இலவசமாக இவற்றைச் சொல்லித் தரவேண்டும். மகத்தான புண்ணிய காரியம் இது. ஓய்வுநேரத்தில் செய்யும் புனிதச் சேவையும் ஆகும். பணியிலிருந்து ஓய்வுபெற்ற பெரியவர்களும் இதில் ஈடுபடலாம்.

(4) பெற்றோர்கள், பெரியோர்கள் - இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.


(5) பள்ளி விடுமுறை நாட்களில் சுற்றுலா செல்வதற்குப் பதிலாக, மாணவ, மாணவியரை, முக்கியமான திருத்தலங்களுக்கு அழைத்துச் செல்லலாம். Excursionக்குப் பதிலாக Spiritual Picnic-ஆக பள்ளி நிர்வாகிகள் நடத்தலாம்.

இன்றைய இளைஞர்களே, நம் நாட்டின் நாளைய சொத்து. அவர்களை நல்லபடி உருவாக்கி, நம் பாரத புண்ணிய பூமியை அவர்களிடம் ஒப்படைப்போம். அது நமது புனித கடமையும் ஆகும்.

37

ஆபத்தில் உதவுவது யார்?

யுகங்கள் நான்கு - கிருதயுகம்; திரேதாயுகம்; துவாபரயுகம்; கலியுகம் என்று. மனிதப் பிறவியில் சுகமும், துக்கமும், இன்பமும், துன்பமும் நமது நற்செயலகள் (புண்ணியம்) மற்றும் தீச்செயல்கள் (பாவம்) ஆகியவற்றின் அடிப்படையிலேயே நிகழ்கின்றன.



இந்த நான்கு யுகங்களிலும், மனிதர்களின் புண்ணியச் செயல்கள் படிப்படியாகக் குறைந்து, பாவச் செயல்கள் அதிகரிப்பதால், சுகம் குறைந்து, துன்பமும் அதிகரிக்கும் என மகாபாரதத்தை நமக்கு அளித்தருளிய மகாபுருஷரான ஸ்ரீ வியாஸ பகவான் தமது அற்புதமான 'பாவிஷ்ய புராணம்' என்ற மகத்தான நூலில் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். அதன்படி:

(1) கிருதயுகம்: இன்பம் மட்டுமே. துன்பமே கிடையாது. மக்கள் பாவச் செயல்களை மனத்தாலும் நினைத்ததில்லை.

(2) திரேதாயுகம்: புண்ணியச் செயல்களே அதிகம். பாவச் செயல்கள் மிகவும் குறைவு. ஆதலால் சுகம் அதிகம். துக்கம் குறைவு.

(3) துவாபரயுகம்: புண்ணியச் செயல்களும், பாவச் செயல்களும். ஏறக்குறைய சமமாகவே இருப்பவை. ஆதலால், சுகமும், துக்கமும் ஏறக்குறைய சமமாகவே இருக்கும்.

(4) கலியுகம்: புண்ணியச் செயல்கள் குறையும். பாவச் செயல்கள் அதிகரிக்கும். ஆதலால், சுகம் குறையும். துன்பங்கள் மேலிடும்.

பகவத் கீதை தோன்றியது ஏன்?

துவாபரயுகத்தில் ஆரம்பித்த மகாபாரத யுத்தம், கலியுகம் ஆரம்பமான முதல் சில தினங்களில் முடிவடைந்தது. கலியுகம் பிறக்கப் போகிறது என்பதையும், அந்த யுகத்தில் மக்கள் பாவச் செயல்களில் தீவிரமாக ஈடுபடுவார்கள் என்பதையும். அதனால் அவர்கள் பல கொடிய துன்பங்களுக்கு உள்ளாவார்கள் என்பதையும், அவதார புருஷனான கண்ணன் அறிவான்.

இதனைத் தனது திருவுள்ளத்தில் கொண்டுதான் அர்ச்சுனனைக் காரணமாகக் காட்டி, ஸ்ரீமத் பகவத் கீதையை அளித்தருளினான். உண்மையில், கீதை கலியுகத்தில் துன்பத்தினால் துயருறும் நமக்காகவே கூறப்பட்ட

தாகும். ஆதலால்தான், மறைந்த மாமேதையான ராஜாஜி அவர்கள், பகவத் கீதையைக் 'கண்ணன் காட்டிய வழி' எனப் போற்றிப் புகழ்ந்தார். "எல்லாவற்றையும் என்னிடம் ஒப்படைத்துவிட்டு, என்னைச் சரணம் அடைவாயாக. அனைத்தையும் நான் பார்த்துக் கொள்வேன்'' எனக் கண்ணன் கூறியதும் நமக்காகவேதான்.

துன்பத்திலும் துணை இருப்பான் இறைவன்!

சென்ற சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு இல்லாத அளவில், இன்று துன்பங்கள் அதிகரித்து வருவது கண்கூடு. சிறு வயதில் மரணம், புதுப்புது நோய்கள், ஜீவவதை, தெய்வத்திடம் பயமின்மை, கள்ளம் கபடமற்ற பெண்களுக்குக் கணவனால் இழைக்கப்படும் கொடுமைகள், கடன் தொல்லைகள், பெற்றோர்களை எதிர்த்துப் பேசும் பிள்ளைகள், பெண்கள், தெய்வ நிந்தனை, வறுமை என்று மனித வாழ்க்கையே போராட்டமாகி வருகிறது. அதனால், வெகு விரைவில் மனித மனம் விரக்தி அடைந்துவிடுகிறது.

இத்தருணங்களில்தான், நாம் ஒன்றை நினைவுகொள்ள வேண்டும். "நாம் தனிமையில் இல்லை. நம்முடன் ஒவ்வொரு விநாடியும், நம் பிறப்பிற்குக் காரணமான இறைவன் துணை இருக்கிறான். காப்பது அவன் கடமை'' என்பதை முழுமையாக நாம் நம்ப வேண்டும். அவ்விதம் நம்மை அவனிடம் ஒப்படைத்துவிட்டால், அவன் எவ்விதம் நம்மைக் கைவிடுவான்?

திரௌபதியைக் காத்தது யார்?

திருதராஷ்டிர மன்னனின் சபை. அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் மகாபுருஷர்கள், மாவீரர்கள். கங்கா புத்திரரான பீஷ்மர், குலகுருவான துரோணர், நீதி நெறியிலிருந்து வழுவாத பாகவத உத்தமர் விதுரர் என்று ஒளிவீசிப் பிரகாசித்துக் கொண்டிருந்தது அந்த ராஜசபை. அவர்கள் முன்னிலையில்தான், காப்பாற்றுவாரின்றி, அபலையாய், அனாதையாய், தலைவிரிகோலத்துடன் கண்ணீர் விட்டுக்

கதறி நின்றாள் திரௌபதி. "இந்த மாபெரும் சபையில், இந்தக் கொடுமையை நிறுத்தி, என்னைக் காப்பவர் ஒருவர்கூட இல்லையா?" என ஓலமிட்டு அலறினாள், நிரபராதியான அப்பெண்.


ஆனால், ஒருவரும் முன்வரவில்லை. பெண்களுக்குப் பெருமை அவர்கள் கற்பே! காப்பாற்றுவாரின்றிக் கூனிக்குறுகி, கதறி நின்ற திரௌபதியின் துகிலைத் தன் ஈனக் கைகளினால் இழுத்து, அவளை அனைவரின் முன்னிலையிலும் நிர்வாணமாக்க முயன்றான் அந்தப் பாவி துச்சாதனன்.

காப்பவர் எவருமில்லாத அந்த விநாடிகளில், தனது இடக்கையினால் புடவை முந்தானையைப் பிடித்துக் கொண்டு, வலது கையை உயரே தூக்கிக் கூவினாள்.

அடுத்த விநாடி, தான் நிர்வாணமாக நிற்கப் போகிறோம் என்ற நிலை அவளுக்கு. அவளும் ஒரு ராஜகுமாரிதான். பராக்கிரமம் வாய்ந்த பஞ்ச பாண்டவர்களின் பத்தினி அவள். தர்மத்தினால் அனைவரும் கட்டுண்டு, செயலற்று, அவளைக் கைவிட்டதால், விதியின் பிடியில் சிக்கித் துடித்தாள் அவள்.

ஒரு சமயம், அவளது குருவான வசிஷ்டரிடம் அவள் கேட்டாள். "துன்பத்தில் துணை இருப்பது யார்?" என்று. அவர் கூறியது, அந்தப் பயங்கர விநாடிகளில், அவள் நினைவுக்கு வந்தது. "துன்பத்தில் துணை இருப்பவன் அந்தப் பரமபுருஷனான இறைவன் ஒருவனே" என்ற குருவின் சத்தியமான மொழிகள் அவள் காதுகளில் ஒலித்தன. தூக்கிய வலது கரத்தினால் மானசீகமாகக் கைகூப்பிக் கதறிக் கூப்பிட்டாள், "கண்ணா! கேசவா! கிருஷ்ணா! உன்னைச் சரணடைந்த இந்த அனாதையைக் காப்பாற்று!" என்று.

அடுத்த விநாடி, அந்த அதிசயம் நிகழ்ந்தது. திரௌபதியின் புடவை வளர்ந்துகொண்டே வந்தது. சுற்றியிருந்த



தன்மீது கொண்ட பக்திக்காக, உப்பை உதறித் தள்ளிய
ஸ்ரீ உப்பிலியப்பன்

மகாபுருஷர்களின் மனம் குளிர்ந்தது. மன்னன் திருதராஷ்டிரனே தனது சிம்மாசனத்திலிருந்து இறங்கி வந்து, அவளைத் தழுவி, “மகளே என்னை மன்னித்துவிடு” என்று மன்றாடினான்.

ஆதலால், எத்தகைய துன்பம் நேரிடினும், மனத்தைத் தளரவிட வேண்டாம். நம்பிக்கை வைத்து அவனது திருவடிகளைப் பற்றிக் கொள்ளுங்கள். அவனது திருநாமத்தைக் கூறுங்கள். கடன் தொல்லையா? மருத்துவர்கள் கைவிட்ட நேரமா? உத்தியோகத்தில் சோதனைகளா? செய்வினைகளா? கணவனின் கொடுமையா? தொழிலில் பெரும் நஷ்டமா? எதுவானாலும், எத்தகைய கொடிய சோதனையானாலும் அந்தப் பரம்பொருளிடம் நம்பிக்கை வையுங்கள்.

அவன் கைவிட மாட்டான். ஆனால் ஒரு நிபந்தனை. அவனது திருவருளுக்குப் பாத்திரமாகும்படி மட்டும் அன்றாட வாழ்க்கையில் ஒழுக்கம், தூய்மை, நேர்மை ஆகியவற்றைக் கண்டிப்பாகக் கடைப்பிடியுங்கள். உங்கள் குடும்பம், தொழிற்சாலை அவனுடையது. உங்கள் பிரச்சினைகளும் அவனுடையதே. மறவாதீர்கள்! ஆபத்தில் உதவுவது அவன் ஒருவனே!!

38

போக பூமியில் செழித்து வளரும் பாரத தர்மம்!

அமெரிக்கா! ஆம்! கலியுகத்தின் போக பூமி. இந்திரலோகம். குபேரனின் செல்வம் அனைத்தும் அங்குதான் வந்துவிட்டனவோ என்று கண்டவர் மயங்கி, மலைத்து நிற்கும் செல்வச் செழிப்பு! எதை எடுத்தாலும், அளவில் பிரும்மாண்டம்தான். சாலைகள், பாலங்கள், கட்டடங்கள், கடைகள் எதுவானாலும் கற்பனை களையும் மீறிய மிகப்பெரிய அளவில்தான் காட்சி அளிக் கின்றன. விஞ்ஞானத்திலும், வானியலிலும், நவீன ஆயுதங்களிலும் தன்னிகரற்று விளங்கும் இந்நாடு, இன்று உலகின் பல நாடுகளின்



தலைவிதியையும் நிர்ணயிக்கிறது - தன்னிச்சையாகத் தனது நலனை மட்டுமே கருத்தில் கொண்டு!

மக்களின் வாழ்க்கைத்தரம் உலகில் எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு உயர்ந்திருக்கிறது. வாழ்க்கையின் வசதிகள் அனைத்தையும் மக்களுக்குக் குறைவில்லாது வாரி, வாரி வழங்கும் நாடு இது.

நம் நாட்டிலோ கேட்கவே வேண்டாம்? படித்த பெண்ணாக இருந்துவிட்டால் போதும்! அமெரிக்காவில் தான் வரன் பார்க்கிறார்கள். அப்படி ஒரு மோகம் அமெரிக்கா மீது! அதில் தவறும் இல்லை. குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே அவ்விதம் பெற்றோர்கள் அமெரிக்காவில் பணிபுரியும் மாப்பிள்ளை யைப் பார்க்கிறார்கள்!

சுகம் அளவிற்கு மீறி இருக்கும் இடத்தில், ஆன்மிகம் விடைபெற்று விலகி விடுகிறது. அதன் உண்மையும், அமெரிக்க நாட்டினைப் பார்த்தால் தெரியும். அளவிற்கு மீறிய சுதந்திரம், கட்டுப்பாடு இல்லாத வாழ்க்கை, கை நிறைய பணம், ஆன்மிக வழியைக் காட்டுவதற்குப் பெரியோர்கள் இல்லாதது ஆகியவை இந்நாட்டினை போக பூமியாக மாற்றியது.

இளைஞர்கள் ஆரோக்கியத்தை இழந்தார்கள். உலகமே நினைத்து நடுங்கும் 'எய்ட்ஸ்' என்ற புதிய, பயங்கரமான நோயை அதிக அளவில் சிருஷ்டி செய்து, உலகங்கள் அனைத்திற்கும் விநியோகம் செய்தது அமெரிக்கா.

'அளவோடு சுகத்தை அனுபவி. கட்டுப்பாட்டுடன் வாழ்க்கையை நடத்து. மனைவியைத் தவிர, மற்ற பெண்கள் உன் தாய்க்கும், உடன்பிறந்த சகோதரிக்கும் சமம். காமம் என்பது உன்னைப் பொசுக்கிச் சாம்பலாக்கும் தீ. இறைவனே உனக்கு உற்ற துணை' என்றெல்லாம் கூறும் ஆன்மிக மகாபுருஷர்கள் அமெரிக்காவில் இல்லை.

சுகத்தை அனுபவித்து அனுபவித்து, அலுத்துச் சோர்ந்து போன அமெரிக்க மக்கள், இன்று சிறிது சிறிதாக

ஆன்மிகத்தை நாடி வருகின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்பு, பாரதத்தின் ஆன்மிக வீரரான ஸ்வாமி விவேகானந்தரின் காலடிகள் பட்ட புண்ணிய பலன், இப்போது அமெரிக்க செனட்டர்கள் (அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள்) உட்பட ஏராளமானவர்கள் ஆன்மிகத்தில் ஈடுபட்டு வருவதுடன், நமது பாரத தர்மத்தின் மீது அளவற்ற மரியாதையும், பக்தியும் காட்டி வருகிறார்கள்.

இதன் பலனாக, இன்று அமெரிக்காவிலும், கனடாவிலும் ஏராளமான திருக்கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டு, பக்தியுடன் நிர்வகிக்கப்பட்டு, குறைவில்லாது திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதில், முக்கியமாக கூறப்பட வேண்டிய உண்மை என்னவென்றால், ஏராளமான அமெரிக்கர்களும் இத்திருக்கோயில்களுக்குப் பக்தியுடன் வந்து செல்கிறார்கள்.

காலணிகளைக் கழற்றி வாயிலிலேயே வைத்துவிட்டு, பக்தி, மரியாதை, மனநிறைவு கலந்த உணர்ச்சிகளுடன் அவர்கள் கோயிலினுள் வந்து தரிசிக்கிறார்கள். சமீபகாலமாக அன்புப் பயிர் செழிக்கும் ஆன்மிக பூமியான தமிழகத்தில், பல ஆண்டுகளுக்குப் பின்பு, மீண்டும் நாத்திகம் என்ற விஷச்செடி முளைவிட ஆரம்பித்துள்ளது. நாம் எதை இழந்து வருகிறோமோ, அந்த ஆன்மிகச் செல்வத்திற்காக அமெரிக்க மக்கள் ஏங்கி நிற்கிறார்கள். அதனால், நமது திருக்கோயில்களை நிர்மாணிப்பதிலும், நிர்வகிப்பதிலும் அவர்கள் தயங்காது, மகிழ்ச்சியுடன் உதவி வருகிறார்கள்.

உதாரணத்திற்கு, நியூயார்க் மாநிலத்தில் உள்ள 'பொமோனா' (Pomona) என்ற அழகான ஊரில் அமைந்துள்ள ஸ்ரீரங்கநாதர் திருக்கோயில் ஆகும். தமிழ்நாட்டின் வைணவத் தலங்களில் வைரம் எனத் திகழ்வதும், மகாபுருஷரான ஸ்ரீமத் ராமானுஜர் திருவுள்ளம் உகந்ததுமான ஸ்ரீரங்கம் திருக்கோயிலின் வடிவமைப்பில் அமைக்கப்பட்டு, பிரணவாகார விமானத்துடன் ஒளிர்விட்டுப் பிரகாசிக்கும், கண்டவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இத்திருக்கோயில், அஹோபிலமடம் 44-வது

பட்டத்தை அலங்கரித்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீவேதாந்த தேசிக யதீந்த்ர மகாதேசிகனின் அருளாணையினாலும், தற்போது 45-வது அழகிய சிங்கராக அலங்கரித்து வரும் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ம திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மகா தேசிகனின் அருளாசியினாலும் நிர்மாணிக்கப்பட்டு, மிகவும் அற்புதமாக, ஆன்மிக, வேத, பிரபந்த விதிமுறைகள் வழுவாது நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இதில் மிகவும் ஆச்சரியம் ஒன்று உள்ளது. ஸ்ரீரங்க திவ்ய க்ஷேத்திரத்தை பக்தி நிரம்பிய உள்ளத்துடன் வர்ணித்த ஆழ்வார்கள், அந்தத் திருத்தலத்தின் சூழ்நிலையிலும், சோலைகளின் அழகிலும் மெய்மறந்து ஆடிப் பாடி துதித்து, பரமானந்தம் அடைந்திருக்கின்றனர்.

அதேபோன்ற ரமணீயமான சோலைகளின் மத்தியில், இந்த அமெரிக்கத் திருவரங்கமும் அமைந்திருப்பது பக்தர்களின் உள்ளத்தைக் குளிர வைக்கிறது. ஸ்ரீ ரங்கநாயகி சமேதனாக சேவை சாதித்தருளும் ஸ்ரீ ரங்கநாதன், "பக்தர்களை நாடி, நான் இங்கு வந்துவிட்டேன். பக்தர்களைப் பிரிந்து என்னால் இருக்கவும் முடியுமோ?" என்று கூறுவது போல் திருமுகத்தில் புன்னகை தவழ காட்சி அளிக்கிறான். கருவறைக்கு நேரே எழுந்தருளியுள்ள கருடன் காணத் திகட்டாத பேரழகு!

வாரம் முழுவதும் ஓடி, ஆடி வேலை செய்து களைத்துச் சோர்ந்துவிடும் அமெரிக்க மக்கள், ஒவ்வொரு வாரமும் ஏங்கி, எதிர்பார்ப்பது வார இறுதி (Week End) என்று கூறப்படும் சனி, ஞாயிறு ஆகிய இரு ஓய்வு நாட்களே ஆகும். இந்த இரு ஓய்வு நாட்களையும் வீணாக்காமல், இறைவனைத் தரிசித்து, உடலுக்கு மட்டும் இல்லாமல் உள்ளத்திற்கும் சாந்தியையும், நிறைவையும், அதே சமயத்தில் நல்ல ஓய்வையும் தருகிறது இத்திருக்கோயில்.

அமெரிக்கா வரும் நம் நாட்டினர் அனைவரும், முக்கியமாக, தமிழ்நாட்டினர் அனைவரும் தவறாமல் தரிசித்து, இன்புற வேண்டிய திருக்கோயில் 'பொமோனா

ஸ்ரீ ரங்கநாதர் சந்நிதி' ஆகும். இதுபோன்ற பல சிறந்த திருக்கோயில்கள் அமெரிக்காவில் ஆன்மிகத்தின் சிறப்பையும், பாரத தர்மத்தின் பெருமையையும் எடுத்துரைக்கின்றன. அவற்றில் மேலும் சில:-

(1) பிட்ஸ்பர்க் : ஸ்ரீ வெங்கடாசலபதி திருக்கோயில் (2) ஸ்ரீ வல்லப விநாயகர் திருக்கோயில், Flushing, நியூயார்க் (3) ஸ்ரீ ராஜராஜேஸ்வரி திருக்கோயில், ராச்செஸ்டர் (4) ஸ்ரீ மீனாட்சி திருக்கோயில், ஹுஸ்டன் (5) ஸ்ரீநிவாஸப் பெருமாள் திருக்கோயில், சிகாகோ (6) ஸ்ரீ வெங்கடேஸ் வரர் திருக்கோயில், நியூஜெர்ஸி.

நியூயார்க் சர்வகலாசாலையில் இந்து மதத்தின் பெருமையையும், மகாபுருஷர்களின் பெருமைகளையும் ஆராய்ந்து, அவற்றின்பால் அளவற்ற மதிப்பும், மரியாதையும் வைத்துள்ள மூன்று பேராசிரியர்கள் உள்ளனர்.


அமெரிக்க நாட்டின் பணமான (Currency) டாலரில் அச்சிடப்பட்டுள்ள முக்கிய வாக்கியம் என்ன தெரியுமா? 'இறைவன் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்' என்பதே. 'IN GOD WE TRUST.' நாத்திகத்தைப் பரப்பும் நம் நாட்டு அரசியல்வாதிகள், டாலரைத்தான் நாடுவார்களே தவிர, அதிலுள்ள இந்தப் பொன்னான, தெய்வீக வார்த்தைகளைக் கண்டுகொள்வார்களா?

39

வாழ்விற்கு ஒளி தரும் தீபம் எது?

தீபாவளிப் பண்டிகை என்றாலே சிறுவர் முதல், வயோதிகர் வரை உள்ளத்தில் குதூகலம்! கவலைகள் அனைத்தையும் தாற்காலிகமாக மறந்து, உற்சாகத்துடன் புத்தாடைகள் அணிந்து, ஒவ்வோர் இல்லமும் புத்தொளி பெற்று விளங்கும் திருநாள் இது.

ஆனால், இத்தகைய, நாடே விழாக்கோலம் பூண்டு, இல்லந்தோறும் தீபங்கள் ஏற்றி, அனைவரும் ஒருமுகமாகக்



கொண்டாடும் இந்நன்னாள், உண்மையிலேயே எதைக் குறிக்கிறது? பண்டிகைகள் ஏன், எவரால், எப்போது ஏற்படுத்தப்பட்டன என்பனவற்றை அனைவரும் அறிந்துகொள்வது மிகவும் அவசியம். பண்டிகைகளின் உண்மையான தத்துவங்களையும், காரணங்களையும் புரிந்துகொண்டு, பண்டிகைகளைக் கொண்டாடுவதே மேலும் சிறப்பாக இருக்குமல்லவா?

மனிதப் பிறவியின் வாழ்வில் ஏற்படும் பல துன்பங்களினாலும், சோதனைகளினாலும், உடல்நலக் குறைவுகளினாலும், வாழ்க்கையில் அலுப்பும், சலிப்பும் இயற்கையாகவே ஏற்பட்டுவிடும் - மனம் தளர்ச்சி அடைந்துவிடுவதால்.

அவ்விதம் அலுப்பும், சலிப்பும், சோர்வும் வாழ்க்கையில் ஏற்படாமல் இருக்க என்ன வழி என, நமது பாரத புண்ணிய பூமியின் மகாபுருஷர்களான மகரிஷிகள் தமது ஆத்ம சக்தியினால் தீவிரமாக யோசித்தனர். அத்தகைய வழிகள் விஞ்ஞான, ஆன்மிகபூர்வமாகவும் இருந்தால்தான் பலன் தரும் என்பதையும் அவர்கள் கருத்தில்கொண்டு, ஆராய்ந்தனர்.

நமது பூமியைக் கட்டுப்படுத்துவது நமது வான மண்டலமான சூரிய மண்டலமும், அதில் வலம் வரும் நவக்கிரகங்களுமே என்ற உண்மை அம்மகாபுருஷர்களுக்குத் தெரியும்.

சுமார் 30 நாட்களுக்கு ஒருமுறை, சூரியன் தனது ஈர்ப்பு, ஆகர்ஷண சக்தியை, ராசிக்கு ராசி மாற்றிச் செலுத்துவதால், மாதங்களும், பருவங்களும் மாறி மாறி வருவதை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொண்டனர். அதற்கு ஏற்ப, பல பண்டிகைகளையும் நிர்ணயம் செய்தனர்.

முதலில், சூரியன் உச்சத்தில் பலம்பெறும் மேஷ ராசியை முதலாகக் கொண்டும், மீன ராசியைக் கடைசியாகக் கொண்டும், புராதன, தெய்வீக நிகழ்ச்சிகளையும் (ஸ்ரீ ராமநவமி, கோகுலாஷ்டமி, சிவராத்திரி, நவராத்திரி போன்றவை) கருத்தில் கொண்டு, ஆன்மிகத்தையும் கலந்து, இப்பண்டிகைகளை அம்மகாபுருஷர்கள் நிர்ணயித்தனர்.

ஆதலால், நமது ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒரு புனித, ஆன்மிக, வானியல், அறிவியல் காரணங்கள் உண்டு. இப்பண்டிகைகளினால், மனத்தில் தெய்வ நம்பிக்கையும், தளர்ந்த மனத்திற்குத் தைரியமும், எத்தருணத்திலும் நம்மைப் படைத்த இறைவன் துணையிருப்பான் என்ற துணிவும் ஏற்படுவது கண்கூடாகக் காணும் உண்மையாகும்.

ஆன்மிகப் பண்டிகைகள் இல்லாததால், மேலை நாடுகள் படும் அவலம்

தூய்மையான எண்ணங்களைத் தோற்றுவிக்கும் இத்தகைய புனிதப் பண்டிகைகள், விஞ்ஞானத்தில் மட்டுமே முன்னேறியுள்ள மேலைநாடுகளில் கிடையாது.

ஆதலால், வெகு விரைவிலேயே அங்கு வாழ்வில் அலுப்பும், சலிப்பும், வெறுப்பும், சோர்வும் ஏற்பட்டு விடுகின்றன. ஆதலால்தான், அவர்கள் ஒவ்வொரு வாரத்தின் இறுதியிலும் (Week End) சனி, ஞாயிற்றுக் கிழமைகளுக்காக ஏங்கிக் காத்திருந்து, இந்த இரு நாட்களையும் கழிப்பதற்குச் சூதாட்ட நிலையங்களையும், கேளிக்கை விடுதிகளையும் நாடிச் செல்கின்றனர். அவற்றால் பணத்தையும், ஆரோக்கியத் தையும் இழந்து, மேலும் சோர்வடைந்து விடுகின்றனர்.

ஆன்மிகம் ஒன்றே நல்வாழ்வைத் தரும் என்பதை அவர்களுக்கு எடுத்துரைக்க, நம் நாட்டு மகான்களைப் போன்ற பெரியோர்கள் அங்கு அவதரிக்காதது அவர்களது துரதிர்ஷ்டமே.

தீபாவளிப் பண்டிகை

இல்லந்தோறும் பல சிறு சிறு தீபங்களை ஏற்றும் முன்பு, பூஜை அறையில் ஏற்றுவது ஐந்து முகங்கள் கொண்ட குத்துவிளக்கே ஆகும். குத்துவிளக்கின் இந்த ஐந்து முகங்களும் எவற்றைக் குறிக்கின்றன? மனித வாழ்க்கையை நிர்ணயிக்கும் பஞ்ச(5) இந்திரியங்களையும், வாழ்விற்கு உண்மையிலேயே ஒளி தருவது இறைபக்தி, ஒழுக்கம், நேர்மை, அன்பு, தியாகம் ஆகியவை மட்டுமே என்பதை யுமே குத்துவிளக்கின் இந்த ஐந்து முகச் சுடர்களும்

குறிக்கின்றன. ஐந்து இந்திரியங்களையும் கட்டுப்படுத்தி, இந்த ஐந்து நற்குணங்களையும் கடைப்பிடித்தால், வாழ்க்கை ஒளி குன்றாது பிரகாசிக்கும் என்பதையே குத்துவிளக்கு உணர்த்துகிறது.

தீபாவளிப் பண்டிகையை ஆன்மிகப் பண்டிகையாக எவ்விதம் கொண்டாடுவது?

"யாம் பெறும் இன்பம், இவ்வையகம் பெறுக" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளனர், தன்னலம் கருதாத நம் சான்றோர்கள்.

ஆதலால், தீபாவளி அன்று, அன்னை கங்கை இல்லந் தோறும் இருப்பதால், மகா புனிதம் வாய்ந்த உஷத் காலமாகிய விடியற்காலையில் நன்னீராடி, புத்தாடை உடுத்தி, பெற்றோர்கள், பெரியோர்கள் ஆகியோரை வணங்கி, அவர்களது ஆசிபெற்று, திருக்கோயில் சென்று இறைவனைத் தரிசித்து, தீபம் ஏற்றிவிட்டு வரவும். இவை, பண்டிகையின் ஒரு பகுதியே ஆகும்.

மற்றொரு பகுதியும், இப்பண்டிகைக்கு உண்டு. ஏழை, எளியவர், வயோதிகர், அனாதைக் குழந்தைகள், பண்டிகை கொண்டாட இயலாத இளம் விதவையர், கண் பார்வையற்றோர் ஆகியோரை நாம் ஒவ்வொருவரும் இப்புனித நன்னாளில் மறவாது நினைக்க வேண்டும்.

நமது ஒவ்வொருவரின் சக்திக்கு ஏற்றவாறு, தின்பண்டங் கள், புத்தாடைகள் ஆகியவற்றை முடிந்தவரையில் நேரிலேயே அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை வாழ்த்த வேண்டும். அவர்களுக்கு மேலாகவே இனிப்புகளும் பலகாரங்களும் தீபாவளி அன்று செய்கிறார்கள். இவற்றை வீணடிக்காமல், ஏழைகளுக்கும் கொடுக்கலாமே.

வாழ்க்கையின் பல கொடிய சோதனைகளினால் துவண்டு, வறண்டு, நம்பிக்கை இழந்து, 'நமன் கூப்பிடும் நாள் நமக்கு வராதா?' என்று ஏங்கித் தவிக்கும் இவர்களுக்கு நாம் தீபாவளிப் பண்டிகை அன்று அன்புக்கரம் நீட்டி, இதயபூர்வமாக அளிக்கும் ஒரு துளி பாசம் இருக்கிறதே,

அது அமுதமெனப் பாய்ந்தோடும் அவர்களது வாடிய நெஞ்சத்தில். அதன் நற்பலன் பல கோடியாய் நமக்கும், நம் குடும்பத்திற்கும் திரும்பக் கிடைப்பதை அனுபவபூர்வமாகக் காணலாம்.

தீபாவளித் திருநாள் நாம் கொண்டாடுவதற்கு மட்டும் அல்ல; 'நமக்கு இனி யாரும் இல்லை' என மனம் துவண்டிருக்கும் அனாதைகளுக்கும், 'இதோ இருக்கிறோம் நாங்கள் உங்களுடன்' என்று அன்புடன் அவர்களை அணைத்து, ஆறுதல் கூற இறைவன் பரம கருணையுடன் நம் அனைவருக்கும் அளித்துள்ள வாய்ப்பும் ஆகும்.

40

புண்ணிய நதிகளைப் பூஜிப்பது ஏன்?

மகிழ்ச்சியான, ஆரோக்கியமான, மனநிறைவை அளிக்கும் வாழ்க்கையைப் பெற வேண்டுமானால், உடல் தூய்மையும், உள்ளத் தூய்மையும் அவசியம். உடல் தூய்மையைச் சுத்தமான நீரில் தினமும் குளிப்பதன் மூலமும், எண்ணெய் தேய்த்துக் குளித்தல் ஆகியவற்றின் மூலமும் பெற்றும், பாதுகாத்தும் கொள்ளலாம்.



உள்ளத் தூய்மையை நல்ல சிந்தனைகளினாலும், ஒழுக்கத்தினாலும், இறை பக்தியினாலும் பெறலாம். பாதுகாத்துக் கொள்ளலாம்.

உடல் தூய்மை, உள்ளத்தின் தூய்மை இரண்டையும் ஒருங்கே, ஒரே சமயத்தில் தருவது புண்ணிய நதிகளில் நீராடுதல். வீட்டில் நீரில் குளிப்பதைக் 'குளியல்' என்று கூறுகிறோம். ஆனால், புண்ணிய நதிகளிலும், தெய்வீகத் தடாகங்களிலும் குளிப்பதை 'ஸ்நானம்' என்று புராதன நூல்கள் குறிப்பிடுகின்றன.

அப்படியானால், குளியலுக்கும், ஸ்நானத்திற்கும் ஏதோ ஒரு வித்தியாசம் இருக்க வேண்டுமே! அந்த வித்தியாசம்தான் என்ன?

ஆம்! வித்தியாசம் உள்ளது. 'குளியல்' உடலில் ஏற்படும் அசுத்தங்களையும் துர்நாற்றத்தையும் போக்கும். ஆனால், புண்ணிய நதிகள், தடாகங்கள் ஆகியவை மனிதனின் மாசு படிந்துள்ள மனத்தைத் தூய்மை ஆக்குகின்றன.

அவ்விதம் தூய்மையடைந்த உள்ளத்தில், ஆன்மிகம் என்ற விருட்சம் (செடி) வேரூன்றி வளர்கிறது.

ஆதலால்தான், புண்ணிய நதிகள், புனிதத் தடாகங்கள் ஆகியவற்றில் நீராடுவது மகத்தான புண்ணிய பலன்களைத் தருவது மட்டும் அல்லாமல், பலவித கிரக தோஷங்களையும் போக்கும்.

பாரத புண்ணிய பூமியின் தெய்வீக நதிகள்

உலகில் உள்ள பல நாடுகளிலும் மிகப்பெரிய நதிகள் ஓடுகின்றன. அமெரிக்காவில் 'ஹட்ஸன்' நதியும் பிரான்சில் 'ஸீன்' நதியும், எகிப்தில் 'அஸ்வான்' நதியும், இங்கிலாந்தில் 'தேம்ஸ்' நதியும் ஓடினாலும் அவற்றை அந்நாடுகளில் எவரும் பூஜிப்பதில்லை. அவை அனைத்தும் 'போக' நாடுகளே.

ஆனால், நம் பாரத புண்ணிய பூமியின் நதிகளான கங்கை, காவிரி, நர்மதை, பிரம்மபுத்திரா, கிருஷ்ணா, துங்கபத்ரா ஆகியவை மகத்தான தெய்வீக சக்தி பெற்றவை ஆகும். இதேபோன்று, 'புஷ்கரம்' (ராஜஸ்தான்), மானஸசரஸ் (திபேத்) ஆகிய தடாகங்களும் அளவற்ற தெய்வீக மகிமை பொருந்தியவை ஆகும்.

இந்த ஒவ்வொரு நதியின் உற்பத்திக்கும் தெய்வீகக் காரணங்களும், பின்னணியும் உண்டு. உதாரணமாக, பகீரதன் என்ற புகழ்பெற்ற மாமன்னன், தனது மூதாதையர் நற்கதி அடையும் பொருட்டு, கடும் தவம் இயற்றி, சிவபெருமானின் கருணையினால் 'பாகீரதி' என்ற பெயருடன், பூவுலகம் வந்தாள் கங்கை.

அதேபோன்று, அகத்திய முனிவரைக் காரணமாகக் கொண்டு தமிழகத்திற்குக் கிடைத்தாள் அன்னை காவிரி. இத்தகைய பரம பவித்ரமான நதிகளும், தடாகங்களும், நமது கடுமையான பாவங்களைப் போக்கி, பாவங்களைப் போக்குவதன் மூலம், கிரக தோஷங்களையும் அகற்று கின்றன.

புண்ணிய நதிகள், தடாகங்களில் புனித ஸ்நானம் செய்வது எப்படி?

புண்ணிய நதிகள், தடாகங்கள் ஆகியவற்றில் உடனடி யாகக் காலை வைத்து விடக்கூடாது. நதியைக் கைகூப்பி வணங்கிவிட்டுச் சிறிது நீரைக் கையினால் எடுத்து, தலையில் தெளித்துக்கொண்டு, அதன்பிறகே நதியில் இறங்க வேண்டும். இறங்கியபின், எந்தத் திசையிலிருந்து அந்த நதி பெருகி வருகின்றதோ, அந்தத் திசையை நோக்கி, ஸ்நானம் செய்யவேண்டும்.

அவ்விதம் ஸ்நானம் செய்யும்போது, மனத்தில் பக்தியுட னும், தூய மனத்துடனும், அடக்கத்துடனும் ஸ்நானம்

செய்யவேண்டும். ஒவ்வொரு புண்ணிய நதியிலும் தீர்த்தமாடும்போது (ஸ்நானம் செய்தல்), இறைவனையும், பித்ருக்களையும் மனத்தால் வணங்குதல் அவசியம்.

ஏனெனில், அவர்களது ஆசி இருந்தால் மட்டுமே, புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்யும் பாக்கியம் கிட்டும்.

குருபகவானும், புண்ணிய நதிகளும்

நவக்கிரகங்களில், பரம சுபக் கிரகமான குருவின் ராசி மாறுதல்களுக்கும், பாரத புண்ணிய நதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

பிரயாகை, ஹரித்வார், கோதாவரி, சிப்ரா (உஜ்ஜயினி) நதிகளில் 'கும்பமேளா' எனக் கொண்டாடப்படும், உலகப் பிரசித்தி பெற்ற விழா, குருபகவானின் சலனத்தை ஒட்டியே நிகழ்கிறது.

புண்ணிய நதிக்கரைகளில் செய்யும் பித்ரு பூஜையும், ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதும்

எப்பொழுதெல்லாம் புண்ணிய நதிகளில் நீராடும் பேறு கிடைக்கின்றதோ, அப்பொழுதெல்லாம் நம் பித்ருக்களைப் பூஜித்து, அவர்களது ஆசியைப் பெறும் மிக அரிய வாய்ப்பு ஆகும்.

இமாலயத்தில் பத்ரி ஆஸ்ரமத்தில் கங்கை (அலகநந்தா) கரையிலும், மானஸசரஸிலும் பித்ருக்களைப் பூஜிக்கும் போது, அந்தப் பூஜையை நம் பித்ருக்கள் நேரிலேயே வந்து பெற்றுக்கொண்டு நம்மை ஆசிர்வதிக்கிறார்கள் எனப் புராதன நூல்கள் விளக்கி உள்ளன.

மிகப் புராதனமான ஜோதிட நூல்களிலும், பல கடுமையான கிரக தோஷங்களுக்கு, புண்ணிய நதிகளில் நீராடுவதைச் சக்தி வாய்ந்த பரிகாரமாக விளக்கப் பட்டுள்ளன.

ஆதலால், உடலில் சக்தி உள்ளபோதே, பண வசதி இருக்கும்போதே புண்ணிய நதிகளிலும், தடாகங்களிலும் நீராடும் வாய்ப்பினைத் தேடிப் பெறவேண்டும்.

வயதான பின்பு பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளிப் போடக்கூடாது. அதனால், அத்தகைய வாய்ப்பே பல காரணங்களினாலும் கிடைக்காமலேயே போய்விடக்கூடும் அல்லவா?



"மனிதன் என்றுமே துன்பக் கடலில் தத்தளித்துதான் ஆக வேண்டும் என்பது இல்லை. எல்லா விஷயங்களிலும் சிறிது எச்சரிக்கையாக நடந்துகொண்டால் வாழ்க்கை இனிக்கும் - நிச்சயமாக."

- இவைதான் நமது பாரதப் புண்ணிய பூமியின் ஆன்றோரும், சான்றோரும், மகாபுருஷர்களும் அருளியவையாகும்.

அவ்விதமென்றால், எவ்வழியில் நடந்தால் இல்லந்தோறும் இன்பம் பொங்கும் என்பதையும் அவர்கள் காட்டியுள்ளனர்.

அவை என்ன என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டாமா? இதோ, புத்தகத்தைப் புரட்டுங்கள். உங்கள் வாழ்வில் ஒளி வீசும் - இல்லறம் இனிக்கும்!

- ஏ.எம். ராஜகோபாலன்